

## எண்டமூரி வீரேந்திரநாத்

ஒரு எழுத்தாளர், மொழிபெயர்ப்புக்கள் மூலமாக, வேறொரு மொழி வாசகர்கள் மனத்தில் இடம் பெறுவது மிகவும் அரிது. அந்த வரிசையில் எண்டமூரி வீரேந்திரநாத் குறிப்பிடத்தக்கவர்.

தொழில் முறையில் இவர் ஒரு சார்ட்டட் அக்கௌண்டண்ட். இவர் ஸ்டேட் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷனில் ஐந்து வருடங்களும், ஆந்திரா வங்கியில் உயர் அதிகாரியாக பத்து ஆண்டுகளும் பணியாற்றி, எழுத்தின் மீதுள்ள ஆர்வத்தால் அதைத் துறந்து, முழு நேர எழுத்தாளராக மாறி விட்டார்.

இவர் நாடகம், நவீனங்கள் பல எழுதியுள்ளார். சினிமா இயக்குனராகப் பணியாற்றியுள்ளார். இவருடைய முதல் திரைப்பட வசனம் ஜனாதிபதி விருதும், நான்கு தொலைக்காட்சி தொடர்கள் பல விருதுகளையும் மற்றும் தொலைக்காட்சி தொடருக்கான 'கோல்டன் நந்தி' விருதையும் பெற்றுள்ளார். இவருடைய எழுத்தை அங்கீகரித்து 'சாகித்திய அகாடமி' விருதும் வழங்கப்பட்டுள்ளது.

மனிதனுடைய திறமையை வளர்த்து, சுய முன்னேற்றமடையச் செய்வதில் தற்போது கவனம் செலுத்தி வருகிறார். இவருடைய 'வெற்றிக்கு ஐந்து படிகள்' என்ற நூல் தெலுங்கில் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் விற்பனையாகி சாதனை புரிந்துள்ளது.

ஆந்திராவில் என்.டி. ராமாராவிற்குப் பிறகு, இரண்டாவது பிரபலமானவராக - 1982 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சுமார் 55 நாவல்கள், 25 திரைக்கதைகள், ஏராளமான சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.

அல்லயன்ஸ்

# எண்டமூரி வீரேந்திரநாத்



# பந்தம் பவித்ரம்

உரிமைப் பதிப்பு
முதற் பதிப்பு - 1998
இரண்டாம் பதிப்பு - 2004
மூன்றாம் பதிப்பு - 2010

© ஆசிரியருக்கு

விலை ரூ. 140.00

அல்லயன்ஸ்
கம்பெனி
ப.எண். 244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
தபால்பெட்டி எண்: 617
மயிலாப்பூர், சென்னை - 600 004.
தொலைபேசி : 24641314
இணைய தளம் : www.alliancebook.com
தொலை நகல் : Srinivasan@alliancebook.com

Typesetting : Chengamalam Enterprises, Chennai - 4.
Printed by : Sekar Graphics, Chennai - 5

# முன்னுரை

இந்த நாவல் தொடர் கதையாக வந்து கொண்டு இருந்த போது, வாசகர்களிடமிருந்து நிறைய விமர்சனக் கடிதங்கள் வந்தன. சில வாசகர்கள் வெளியிட்ட கருத்துக்கள் நேர்மையானவை யாக இருந்தன. அவற்றை கவனத்தில் கொண்டு கதையில் சில மாற்றங்களைச் செய்தேன். சில வாசகர்கள், நான் எழுதியதை வேறு கண்ணோட்டத்தில் படித்ததால், கதையின் போக்குடன் அவர்களால் ஒத்துப் போக முடியவில்லை.

உதாரணமாக இந்தக் கதையின் கடைசியில், ராக்காயி மகள் ஸ்வேதா - இஞ்சினியரிங் படித்துக் கொண்டிருக்கும் பெண் - "நான் வேலைக்குப் போக மாட்டேன். திருமணம் செய்து கொண்டு நல்ல இல்லத்தரசியாக இருப்பதைத்தான் விரும்புகிறேன்" என்று சொல்லுவாள். இதைப் படித்து விட்டு, "சமையல் கட்டில் புழுங்கிப் போவதற்கு இவ்வளவு பெரிய படிப்பு படிப்பா னேன்? நேஷனல் வேஸ்ட்" என்று எந்த வாசகராவது, வாசகி யாவது கொதித்தெழுந்தால் எழுத்தாளரால் என்ன பதில் சொல்ல முடியும்? "யாருக்காகவோ வேலை செய்வதைவிட என் குடும் பத்துக்காக வேலை செய்வதையே விரும்புகிறேன். பொருளா தார ரீதியாய்த் தேவைப்பட்டாலோ, கணவரிடமிருந்து பிரிந்து வாழ நேர்ந்தாலோ வேலைக்குப் போவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை" என்று அந்தப் பெண் சொன்னால் அதில் தவறு என்ன இருக்கிறது? "பெண் சுதந்திரம்" என்றால் ஒரு பெண் தன் னிச்சையாக *(எந்தக் கட்டுப்பாடுகளும் இன்றி)* வாழ்வது என்று அர்த்தமில்லை.

இந்தக் கதையின் முடிவு சுகமாகவோ, துக்கமாகவோ இருக்காது. இரண்டு பெண்களின் வாழ்க்கையை, எண்ணங்களின் மாறுபாடை எடுத்துக் காட்டும் முயற்சி இது. அவ்வளவுதான்.

மனத்தில் ஏற்பட்ட அதிருப்தியானது ஒரு பெண்ணின் வாழ்க்கையைத் தடம் புரளச் செய்துவிட்டது. சமுதாயக் கட்டுப்பாடுகள் என்ற போர்வையில் பெண்ணுக்கு இழைக்கப்படும் அநியாயங்களுக்குப் பலியான ராக்காயி சுயநம்பிக்கை என்ற ஆயுதத்தைக் கொண்டு வாழ்க்கையைச் சீரமைத்துக் கொள்கிறாள்.

கற்பனை செய்து தான் படைத்த ஒரு நிகழ்ச்சி, நிஜமாகவே நடந்தால் எந்த எழுத்தாளருக்கும் த்ரில்லாகத்தானே இருக்கும்!

கடைசியாக ஒரு விஷயம். இது பெண் வாதத்தைச் சப்போர்ட் செய்யும் நாவலா, இல்லை பெண் சுதந்திரத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பழமைவாதிகளின் எதிரொலியா என்ற சந்தேகம் வாசகர்கள் யாருக்காவது வந்தால் - அடியேனை மன்னித்து விடுமாறு கேட்டுக் கொள்கிறேன். திருமணம் செய்து கொள்ளாமல் தனித்து வாழ்வதுதான் "பெண் சுதந்திரம்" என்றால்... அந்தக் கருத்தில் எனக்கு உடன்பாடு கிடையாது.

வித்தியாசமான முறையில் சொல்லப்பட்ட இந்த நாவலுக்கு வாசகர்கள்தான் சரியான முடிவு சொல்ல வேண்டும்.

எண்டமூரி வீரேந்திரநாத்

"அனைத்திகம்" என்ற நாவலை, "பந்தம் - பவித்ரம்" என்ற தலைப்பில் தமிழாக்கம் செய்து வாசகர்களுக்கு முன்னால் வைத்துள்ளேன். மொழி பெயர்ப்புக்கு அனுமதி வழங்கிய எண்டமூரி வீரேந்திரநாத் அவர்களுக்கும், தமிழில் அழகான தலைப்பைக் கொடுத்து, புத்தகமாக வெளியிட்ட அல்லயன்ஸ் நிறுவனத்தாருக்கும் நன்றி.

கௌரி கிருபாநந்தன்

# பந்தம் - பவித்ரம்

## அத்தியாயம் - 1

## சியாமளா சொன்ன கதை

1

ஜார்ஜ் ஸ்கொயரிலிருந்து க்வீன் சர்கிள் பக்கம் திருப்பிக் கொண்டே காரை மெதுவாகச் செலுத்தினேன். தொலைவில், உயரத்தில் நீதிமன்றம் தென்பட்டுக் கொண்டிருந்தது. கிட்டத்தட்ட ஆயிரம் பேருக்குமேல் மக்கள் அங்கே கூடியிருந்தார்கள்.

சுற்றிலும் போலீசார் வளையமாக நின்றிருந்தார்கள். பி.பி.சி. உட்பட இருபது டி.வி. காமெராக்கள், அந்தக் காட்சியைப் படமாக்கிக் கொண்டிருந்தன. மக்களின் கைகளில் "ஸ்லோகன்கள்" எழுதப்பட்ட போர்டுகள் இருந்தன.

''பெண் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்.''

''சுதந்திரம் என்பது பெண்களின் பிறப்புரிமை.''

அங்கே இருந்த பெண்களில், நூற்றுக்குத் தொண்ணூறு பேர் பிரிட்டிஷ்காரர்கள். அவர்களுடைய சார்பில் நான் வாதாடப் போகிறேன்.

ஓர் இந்தியப் பெண்ணாக இருந்து, கடல் கடந்து, அந்நிய நாட்டில், அவர்களுடைய சார்பில் வாதாடப் போகும் நான், பெருமையாக உணருவதில் வியப்பென்ன இருக்கிறது?

காரை விட்டு இறங்கி கோர்ட் படிகளில் ஏறிக்கொண்டிருந்த போது, சுற்றிலும் இருந்த மக்கள் கைகளைத் தட்டினார்கள். பெரிய ரகளை ஏதும் நடக்கப் போவதில்லை என்று தெரிந்து இருப்பதாலோ என்னவோ போலீசாரும் புன்சிரிப்புடன் இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

நான் கோர்ட் ஹாலில் நுழைந்து கொண்டிருந்த போது சுரேஷ் எதிரே வந்தான். என்னைப் பார்த்து நட்புடன் புன்முறுவலித்தான்! பதிலுக்கு நானும் புன்னகைத்தேன். நாங்கள் இருவரும் நல்ல நண்பர்கள். சின்ன வயதிலிருந்து ஒரே பள்ளியில் படித்து வந்தோம்.

என்னுடைய சின்ன வயதிலேயே அம்மா இங்கிலாந்து வந்து விட்டாள். சுரேஷ் வீட்டில் அவனுடைய தாத்தா காலத்திலேயே இங்கே வந்து செட்டில் ஆகிவிட்டார்கள். தொழில் ரீதியில் சுரேஷ் என்னைவிட இரண்டு வருடங்கள் சீனியர்.

சுரேஷ் கோர்ட்டுக்குள் நுழைந்தபோது, அவனுக்கு எதிராக மக்கள் முழக்கமிட்டுக் கொண்டிருந்தார்கள். ஜட்ஜ் தன்னுடைய இருக்கையில் அமரும் வரை அந்த முழக்கங்கள் ஓயவில்லை. ஜட்ஜின் பெயர் பார்பரா ஸ்டார்லண்ட். அவளும் ஒரு பெண்ணாக இருப்பதாலோ என்னவோ இந்தக் கேசில் ஜெயித்து விடுவேன் என்ற தைரியம் எனக்கு ஏற்பட்டது.



ஐந்து நிமிடங்கள் கழித்து வாதப் பிரதிவாதங்கள் ஆரம்பமாயின.

★ ★ ★

## 2

''The Women'' என்ற புத்தகத்தை இங்கிலாந்தில் தடை செய்வதைப் பற்றித்தான் இந்தக் கேஸ் நடந்து கொண்டிருந்தது. இந்தப் புத்தகம் வெளிவந்த மூன்று மாதங்களுக்குள் அரை மில்லியன் பிரதிகள் விற்றுப் போய் விட்டன.

இந்தப் புத்தகத்துக்குத் தடை விதிக்க வேண்டும் என்று பெண் உரிமை இயக்கங்கள் பெரிய அளவில் போராட்டம் நடத்திப் பார்த்தன. 'பப்ளிஷர்ஸ்' ஒப்புக் கொள்ளவில்லை. புத்தகத்தைத் தடை செய்யவும், சட்டப்படி நடவடிக்கை எடுக்கவும், பெண் உரிமை இயக்கங்கள் கோர்ட்டில் கேஸ் போட்டிருந்தார்கள். அவர்கள் சார்பில்தான் நான் வாதாடப் போகிறேன்.

இந்தக் கேசில் நான் ஜெயிக்கப் போவது நிச்சயம். எந்தக் கோணத்தில் பார்த்தாலும் ''The Women'' தடை விதிக்கப்பட வேண்டிய புத்தகம்தான். அதன் முன்னுரையில் எழுதியிருந்த வார்த்தைகளைப் படித்தாலே போதும். இந்த முடிவுக்கு வந்து விடலாம்.

''இறைவனின் சிருஷ்டியிலேயே ஆணுக்கும், பெண்ணுக்கும் வித்தியாசம் இருக்கிறது.

இவ்வளவு குறுகிய காலத்தில் இத்தனை ஆயிரம் பிரதிகள் விற்கப்பட்டன என்றால், மனிதர்களின் மனதில் ஆணாதிக்கம்

எந்த அளவுக்கு ஆழமாகப் படிந்துவிட்டதென்று உணர்ந்து கொள்ள முடியும்.

எது எப்படி இருந்தாலும் ஒன்று மட்டும் நிச்சயம். இந்தக் கேசில் ஜெயிப்பதால், இங்கிலாந்தில் எல்லோருக்கும் என் பெயர் லாயர் என்ற முறையில் அறிமுகம் ஆகும். என் தாய் நாடான இந்தியாவுக்கும் பெருமையைச் சேர்க்கும். அதை நினைவில் வைத்துக் கொண்டு என்னுடைய வாதத்தைக் கவனமாக தயாரித்து வந்தேன். அந்த நேரத்தில்தான் சுரேஷ் இந்தக் கேசில் எதிர்கட்சியின் சார்பில் ஆஜராகப் போகிறான் என்று தெரிந்தது. அதிர்ச்சி அடைந்து விட்டவளாய் உடனே சுரேஷிற்குப் போன் செய்தேன்.

''சுரேஷ்! உனக்கு மூளை கலங்கிவிட்டதா என்ன? நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்! உனக்கு ஏதாவது புரிகிறதா? நீ... நீ...'' கோபம் அதிகமானதில் வார்த்தைகள் வெளிவர மறுத்தன.

''ரொம்ப உணர்ச்சி வசப்படாதே சியாமா! கேஸ் என்றால் வாதி, பிரதிவாதி என்று இரண்டு பேர் இருப்பார்கள் என்றும், அவர்களுக்கு தனித்தனியாக இரண்டு லாயர்கள் இருப்பார்கள் என்றும் உனக்குத் தெரியாதா?'' மறுமுனையில் சுரேஷ் சிரித்துக் கொண்டே கேட்டான்.

''நீ அந்தப் புத்தகத்தைப் படித்தாயா?'' எரிச்சலுடன் கேட்டேன்.

''படித்தேன்.''

''படித்த பிறகுமா பப்ளிஷர்ஸ் பக்கம் வாதாட ஒப்புக் கொண்டாய்?''

''ஆமாம்.''

அந்தப் பதிலை எதிர்பார்க்காததால் ரிசீவரை பிடித்து இருந்த என் கைகள் தன்னிச்சையாய் நடுங்கின, ''உனக்கு... உனக்குத் தனித்தன்மையே கிடையாதா?''



''ஒரு லாயர் என்ற முறையில் கேட்கிறாயா? இல்லை என்னுடைய சிநேகிதி என்ற அக்கறையில் விசாரிக்கிறாயா?''

''புத்திசாலித்தனமாய் பேசுவதாக நினைக்காதே. அப்படிப் பேசுவதற்கு இது ஒன்றும் கோர்ட் இல்லை.''

''தங்களுடைய சார்பில் வாதாடுவதற்கு பப்ளிஷர்ஸ் எனக்குப் பணம் கொடுத்து இருக்கிறார்கள். பெண் உரிமை இயக்கங்களும், மற்றும் சிலரும் உனக்குப் பணம் கொடுத்து, அவர்களுக்காக உன்னை லாயராக நியமித்துக் கொண்டு இருக்கிறார்கள். இதில் ஆவேசப்பட என்ன இருக்கிறது?''

''ஆவேசப்படுவதற்கு ஒன்றுமே இல்லையா? நான் முழுவதுமாக நம்பிய ஒரு தியரிக்கு ஆதரவாக நான் வாதாடப் போகிறேன். நீ நம்பிய தியரிக்கு எதிராக நீயே வாதாடப் போகிறாய் அதுதான் வித்தியாசம்.'' படாரென்று போனை வைத்து விட்டேன்.

இந்தக் கேஸ் விஷயமாக என் பிடிவாதம் மேலும் அதிகரித்தது. ரொம்பக் கவனமாக நோட்ஸை தயாரித்துக் கொண்டேன். இந்தக் கேஸ் பெரிய புரட்சியை ஏற்படுத்தும் என்றும், கோர்ட்டில் நான் பேசப் போகும் ஒவ்வொரு வார்த்தையும், டி.வி.க்களிலும், நாளேடுகளில் வெளிவரும் என்றும் எனக்கு நன்றாகத் தெரியும்.

* * *

## 3

''நாம் பாலுக்காக பசுமாட்டையும், முட்டைகளுக்காகக் கோழிகளையும் வளர்ப்போம். அதனால் பாலின் விலையும், முட்டையின் விலையும் ஒன்

நாக இருக்கவேண்டும் என்று வாதிப்பது முட்டாள்தனம் என்று ஆசிரியர் இந்தப் புத்தகத்தில் குறிப்பிட்டு இருக்கிறார். மை லார்ட்! ஆண்களை மாடுகளுடன், பெண்களைக் கோழிகளுடன் ஒப்பிடுவதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. ஆனால் பொருட்களின் விலையை முடிவு செய்வதற்கு இந்த ஒப்பீடு ரொம்பப் பொருத்தமற்றது என்று என் அபிப்பிராயம். ஒரு ஆண் தன் குடும்பத்துக்காக வெளி உலகில் எந்த அளவுக்கு சிரமப்படுவானோ, அதே அளவுக்கு ஒவ்வொரு பெண்ணும் வீட்டினுள் உழைத்துக் கொண்டுதான் இருக்கிறாள். மேலும் பாலைவிட முட்டைகள் சத்து மிக்க உணவு என்பதை இந்த ஆசிரியர் புரிந்து கொள்ள வேண்டும்'' என்று முன்னுரையுடன் என் வாதத்தைத் துவங்கினேன்.

கோர்ட் ஹாலில் கைத் தட்டல்கள் ஒலித்தன. ஜூரி மெம்பர்களின் இதழ்களில் புன்னகை மலர்ந்தது. முதல் பாயிண்டை நான் ஜெயித்தேன் என்று எனக்குப் புரிந்து விட்டது.

''அப்ஜெக்ஷன் மை லார்ட்'' என்றவாறே சுரேஷ் எழுந்து கொண்டான். ''மதிப்பு மிக்க என் எதிர்தரப்பு வக்கீல் அவர்கள், புத்தகத்தின் முதல் பேராவை மட்டுமே சுட்டிக்காட்டி இருக்கிறார். இரண்டாவது பேராவையும் படித்தால் அந்த எழுத்தாளருக்கு இருக்கும் அபிப்பிராயம் என்னவென்பதை தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். ''மூளையை ஆபரேஷன் செய்யும் போது டாக்டர் ரொம்பக் கவனமாக இருப்பார். அதே கையில் ஆபரேஷன் செய்ய வேண்டிவந்தால் வேறு விதமான ஜாக்கிரதைகளை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும். பெண் என்பவள் சமுதாயத்துக்கு மூளை போன்றவள். அதனால் அவளை ரொம்ப கவனமாகப் பாதுகாக்க வேண்டும்'' என்று எழுதியதில் இருந்தே எழுத்தாளர் பெண் இனத்தை எந்த அளவுக்கு மதிக்கிறார் என்று புரிந்துகொள்ள முடியும்.'' - சுரேஷ் சொல்லி முடித்தான்.



ஒருகணம் நான் கல்லாய் சமைந்து விட்டேன். அவ்வளவு திறமையான அவன் வாதத்திற்காக இல்லை. எந்த பேராவில் என்ன இருக்கு, எங்கே இருக்கு போன்ற விவரங்களை விரல் நுனியில் வைத்துக் கொண்டதற்கு. புத்தகத்தைக் கரைத்துக் குடித்திருந்தால்தான் இது சாத்தியம்.

யோசனைகளிலிருந்து மீண்டவளாக என் வாதத்தைத் தொடர்ந்தேன்:

''பெண்களை தீண்டத் தகாதவர்களாகவும், புனிதமான காரியங்களைச் செய்ய அருகதை இல்லாதவர்களாகவும், இந்தப் புத்தகத்தில் உருவகப்படுத்தி உள்ளார் ஆசிரியர். மத குருக்களும், கோவில்களில், சர்ச்களில் கடவுளுக்குத் தொண்டு ஆற்றுபவர்கள் பெண்களிடமிருந்து விலகியிருக்க வேண்டுமென்று குறிப்பிட்டு உள்ளார். புத்த, ஜைன, இந்து, கிறிஸ்துவ மதங்களைப் பற்றி எழுத்தாளருக்கு இருக்கும் தாழ்வான மதிப்பீடுகளை இந்தப் புத்தகத்தைப் படித்தவர்கள் எளிதாகப் புரிந்து கொள்ள முடியும்.'' - சுரேஷ் பக்கம் பார்வையைச் செலுத்தி விட்டு உட்கார்ந்து கொண்டேன்.

சுரேஷ் எழுந்து கொண்டான்.

''சமுதாயத்தில் நிலவியிருக்கும் நிலைமையைத்தான் எழுத்தாளர் இந்தப் புத்தகத்தில் வெளிப்படுத்தி உள்ளார். நடைமுறையில் இப்படியிருக்கக் கூடாது என்று மதிப்பிற்குரிய வக்கீல் அவர்கள் நினைத்தால்... தடை செய்ய வேண்டியது புத்தகத்தை இல்லை... இந்த உலகிலிருக்கும் எல்லா மதங்களையும்...'' நேர்மையான குரலில் சொல்லி உட்கார்ந்து கொண்டான்.

கோர்ட் ஹாலில் ஊசி விழுந்தாலும் கேட்கும் அளவுக்கு மௌனம் நிலவியது.

நான் இருக்கையை விட்டு எழுந்து கொண்டே சொன்னேன். ''மதங்களை, மனுதர்ம சாஸ்திரங்களை, பைபிளை,

குரானை... இவை எல்லாவற்றையும் தடை செய்ய வேண்டும் இல்லையா என்பதைப் பற்றி விவாதிக்க நாம் இங்கே வரவில்லை மி லார்ட்... ''இ விமென்'' என்ற புத்தகத்தில் பெண் இனத்தைப் பற்றித் தாழ்வாக எழுதி உள்ளதைப் பற்றி விவாதிக்கத்தான் நாம் இங்கே கூடியிருக்கிறோம். கென்னடியின் மனைவி, கணவன் இறந்த பிறகு ஒரு கோமஸ்வரரைத் திருமணம் செய்து கொண்டா ளும், அந்தத் திருமணத்தால் அவளுக்கு எந்த அளவிலும் மகிழ்ச்சி ஏற்படவில்லை என்றும், அதைவிட விதவையாக இருந்திருந் தால் அவள் நிம்மதியாக இருந்திருப்பாள் என்றும் எழுத்தாளர் குறிப்பிட்டு உள்ளார். மர்லின் மன்றோ தன்னுடைய 36-வது வயதில் தற்கொலை செய்து கொள்வதற்குக் காரணம், சரியான ஆண் துணை இல்லாததுதான் என்றும் இந்தப் புத்தகத்தில் குறிப் பிடப்பட்டுள்ளது. முடிவாகச் சொல்ல வேண்டும் என்றால், ஒரு பெண் சமுதாயத்தில் எவ்வளவு உயர்ந்த நிலையில் இருந்தாலும், சரியான ஆண் துணை இல்லாவிட்டால், அவளுடைய வாழ்க் கையே வியர்த்தம் என்ற எண்ணத்தைப் படிப்பவர்களின் மனதில் இந்தப் புத்தகம் ஏற்படுத்துகிறது. இது ஒரு ஸ்லோ பாய்ஸன் மிலார்ட்... இதை இங்கேயே தடுக்கா விட்டால், உடல் முழுவதும் பரவிவிடும்.''

★ ★ ★

அதன் பிறகு எங்கள் கட்சியின் சார்பில் சாட்சியம் சொல்ல வந்தவர்களை விசாரித்தேன்.

''உங்கள் பெயர்?''

''மார்கரெட்.''

''திருமணம் ஆகிவிட்டதா?''

''என்னுடைய இருபதாவது வயதில் எனக்குத் திருமணம் நடந்தது. அதற்குப் பிறகு மூன்று வருடங்கள் கழித்து விவாகரத்து



பெற்றுக் கொண்டேன். அன்றிலிருந்து இன்று வரை... அதாவது கிட்டத்தட்ட முப்பத்து ஐந்து வருடங்களாகத் தனியாகத்தான் வாழ்ந்து வருகிறேன்.''

''தனிமையான வாழ்க்கையில் நீங்கள் சந்தோஷமாக இருக்கிறீர்களா?''

''சந்தோஷமாகத்தான் இருக்கிறேன். என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்.''

''எந்த விதத்தில் சொல்கிறீர்கள்?''

''என் திருமண வாழ்க்கையில், அந்த மூன்று வருடங்களும் நான் பட்ட கஷ்டங்களை யாரும் இதுவரை அனுபவித்து இருக்க மாட்டார்கள். என் கணவன் ஒரு சாடிஸ்ட். அந்த நாட்களை நினைத்தாலே போதும், இப்பவும் அருவெறுப்பில் என் உடல் சிலிர்க்கும். கணவரிடம் இருந்து பிரிந்த பிறகு இரண்டு வருடங் கள் வரை பொருளாதார ரீதியாக நான் கஷ்டப்பட்டது உண்மை தான். ஆனால் இப்பொழுது நான் அனுபவிக்கும் மகிழ்ச்சிகர மான வாழ்க்கைக்கு மூலவிட்டாய் அதை நினைத்துக் கொள் கிறேன்.''

மார்கரெட் சொல்லி முடித்ததும் கோர்ட்டில் கைத் தட்டல் கள் படபடவென ஒலித்தன. ஜட்ஜும் இந்தப் பாயிண்டைக் கவனமாக நோட் செய்து கொண்டதைப் பார்த்து, திருப்தியாக உணர்ந்தேன்.

குறுக்கு விசாரணை செய்வதற்காக சுரேஷ் எழுந்து கொண் டான்.

''மிஸ் மார்கரெட்! தனிமையுடன் இருக்கும் உங்களுடைய வாழ்க்கையில், இதுவரை எத்தனை ஆண்கள் இடம் பெற்று உள்ளார்கள்?'' என்று கேட்டான்.

நான் சரேலென்று எழுந்து கொண்டு, ''அப்ஜெக்ஷன் மி லார்ட்'' என்று கத்தினேன். என் குரல் எனக்கே கிரீச்சென்று கேட்டது

''அப்ஜெக்ஷன் சஸ்பெயின்ட்'' ஜட்ஜ் சொன்னார்.

சுரேஷ் தோற்றுவிட்டவன் போல் தலையைக் குனிந்து கொண்டு ஒரு நிமிடம் கழித்து வேறு கேள்வி கேட்டான்.

''தனியாக இருக்கும் உங்களுக்கு, துணை வேண்டும் என்ற எண்ணம் எப்போதாவது ஏற்பட்டதா?''

''இல்லை'' திடமாக வந்தது பதில்.

''உங்கள் வீட்டில் நாய்கள் இருக்கின்றனவா? எத்தனை?''

அவள் சற்றுத் தயங்கி விட்டு, ''ஆறு'' என்றாள்.

''தட்ஸ் ஆல் மிலார்ட்...'' சுரேஷ் உட்கார்ந்து கொண்டான்.

அதன் பிறகு சாட்சியம் சொல்ல வந்தவள் பெயர் மீனாட்சி. திருமணம் ஆகாதவள், ஐம்பது வயது இருக்கலாம், பிரிட்டிஷ் ரெஸிடெண்ட்.

'' 'தி விமென்' என்ற புத்தகத்தைப் பற்றி உங்களுடைய அபிப்பிராயத்தைச் சுருக்கமாகச் சொல்ல முடியுமா?'' என்று கேட்டேன்.

''அந்தப் புத்தகத்தை எரித்து அந்தச் சாம்பலை காபியில் கலந்து குடிக்கணும் என்று விரும்புகிறேன்.''

''உங்களைப் பற்றிக் கொஞ்சம் சொல்ல முடியுமா?''

''பிறந்து வளர்ந்தது இங்கிலாந்தாக இருந்தாலும், படித்தது முழுவதும் இந்தியன் ஃபிலாசஃபி. எனக்குத் திருமணம் ஆக வில்லை. ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறேன். மதிப்பிற்குரிய வக்கீல் மிஸ்டர் சுரேஷ் சொன்னாற்போல் எங்கள் வீட்டில் நாய்கள் எதுவுமில்லை.'' சுரேஷ் பக்கம் பார்த்தபடியே கூறினாள்.

''இந்தப் புத்தகத்தின் மீது உங்களுக்கு இவ்வளவு வெறுப்பு ஏற்படக் காரணம் என்ன?''

''வாழ்க்கையில் திருமணம் செய்து கொள்ளாத பெண் மிகவும் துரதிர்ஷ்டசாலி என்றும் ஆசிரியர் இந்தப் புத்தகத்தில் சித்



ரித்து உள்ளார். கருவுற்ற நேரத்தில் அதிகமான விடுமுறையை எடுத்துக் கொள்ளும் வசதி பெண்களுக்கு சட்ட ரீதியாக இருப்பதால், சில அமெரிக்கன் நிறுவனங்கள் திருமணம் ஆகாதவர்களை, புதிதாக கல்யாணம் ஆன இளம் பெண்களை வேலைக்கு எடுத்துக் கொள்வதில் தயக்கம் காட்டுவதாகவும் குறிப்பிட்டதோடு, அமெரிக்காவில் திருமணமாகாத பெண்களில் ஆயிரத்துக்குத் தொண்ணூற்றி ஆறு பேர் தாய்மை அடைவதற்குக் காரணம், பெற்றோர்களிடம் இருந்து அவர்களுக்குச் சரியான அன்பு கிடைக்காததுதான் என்றும், பெரும்பாலான தாய்மார்கள் வேலைக்குப் போவதால் அவர்களால் குழந்தைகளின் பராமரிப்பில் சரியாகக் கவனம் செலுத்த முடியவில்லை என்றும் இந்தப் புத்தகத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. இது ரொம்ப முட்டாள்தனமான வாதம் என்று என் அபிப்பிராயம். ஆண்களுக்கு உள்ள நினைவாற்றலுடன் ஒப்பிட்டால், பெண்களுக்கு அதில் பாதி திறன்தான் இருக்கும் என்றும் இப்புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. பெண்களை இழிவாகச் சித்திரிக்கும் இந்தப் புத்தகத்தை நான் புழுவைவிடக் கேவலமாக மதிக்கிறேன்.'' திடமான குரலில் மீனாட்சி சொல்லி முடித்தாள்.

நான் நிம்மதியாக மூச்சை விட்டுக் கொண்டேன். மீனாட்சி சொன்ன கருத்துக்கள் ஜட்ஜ் மட்டும் ஜூரி மெம்பர்களின் மனதில் ஆழமாக பதிந்து விட்டதென்று, அவர்களுடைய முகத் தோற்றங்களிலிருந்து புரிந்துகொள்ள முடிந்தது. என்னுடைய வேலையை எளிதாக்கியதற்கு பாராட்டும் விதமாய் மீனாட்சியைப் பார்த்தேன்.

சுரேஷ் பைலை படிப்பதில் ஆழ்ந்து போயிருந்தான். மீனாட்சியைக் கேள்வி கேட்க அவனிடம் எந்தப் பிடிமானமும் இல்லையென்று எனக்குத் தெரியும். நான் எதிர்பார்த்தது போலவே சுரேஷ் அவளை குறுக்கு விசாரணை செய்யவில்லை.

என் வாதத்தை முடித்துக் கொள்ளும் எண்ணத்தில் எழுந்து நின்றேன்.

''மிலார்ட்! விமென் லிபரேஷன் மூவ்மெண்ட் என்பது கிட்டத் தட்ட இருநூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு முன் தொடங்கியது. 1772-ம் ஆண்டில், ''ஊல் டோன் கிராஃப்ட்'' என்ற பெண் எழுத்தாளர், ''பெண் உரிமைகளின் பாதுகாப்பு'' என்ற புத்தகத்தை எழுதின பிறகுதான் பெண் இனம் விழித்துக் கொண்டது என்று போராட்டவாதிகளால் சொல்லப்படுகிறது. அன்றில் இருந்து இன்று வரை பெண்கள் தங்களுடைய உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அதில் ஓரளவு வெற்றியும் பெற்று வருகிறார்கள். இந்த மாதிரி சமயத்தில் இந்தப் புத்தகம் வெளியில் வருவது மனித இனத்துக்கே தலைகுனிவு. ஆண் இனத்துக்கு அடிமையாக இருப்பதற்காகத்தான் 'பெண் என்பவள் படைக்கப் பட்டிருப்பதாகக் கருத்தைத் தெரிவிக்கும் இந்த எழுத்தாளர்... ஆணாதிக்க மனப்பான்மை கொண்டவர் என்பதில் சந்தேகமே இல்லை. இது போன்ற புத்தகத்தை உடனே தடை செய்யாவிட்டால், பெண் உரிமைகளுக்கு பாதுகாப்பு இல்லாமல் போவதோடு, மேலும் இது போன்ற புத்தகங்கள் வெளிவர வழி வகுத்துக் கொடுப்பது போல் ஆகிவிடும் மிலார்ட்... இந்தப் புத்தகத்தை தடை செய்யும் விஷயத்தில் சரியான முடிவு எடுக்கப்பட வேண்டும் என்று கனம் கோர்ட்டார் அவர்களுக்கு விண்ணப்பித்துக் கொள்கிறேன்.''

உட்கார்ந்து கொண்டே பார்வையாளர் பக்கம் பார்வையை ஓடவிட்டேன். எங்கும் மகிழ்ச்சியின் ஆரவாரம் வெளிப்படையாகத் தெரிந்தது.

பிரகாஷ் கட்டை விரலை உயர்த்தி எனக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தான். அவன் எனக்கு தூரத்துச் சொந்தம். தம்பி முறை ஆகவேண்டும். வெளிநாட்டில் இருந்தாலும் தூய தமிழில் என்னை அக்கா என்றுதான் அழைப்பான்.

நான் சுரேஷ் பக்கம் திரும்பினேன். நெற்றியின் மீது கையை வைத்து ஏதோ யோசனையில் ஆழ்ந்திருப்பவன் போல் காணப்பட்டான். தன் வாதத்தைச் சொல்வதற்காகவும் எழுந்து கொள்ள வில்லை.



ஜட்ஜ் சுரேஷ் பக்கம், ''இனி உங்க வாதத்தைத் தொடங்கலாம்'' என்றாற் போல் பார்த்தான். சுரேஷிடம் எந்தச் சலனமும் காணப்படவில்லை. ஒரு நிமிடம் அப்படியே சென்றது.

சுரேஷின் ஜூனியர் வக்கீல் ஒருவர் அவசர அவசரமாக வந்து சுரேஷிடம் ஏதோ காகிதங்களை, புத்தகங்களைக் கொடுத்தார். அவற்றைப் பார்த்ததும் சுரேஷின் முகம் மலர்ந்தது. ஜட்ஜிடம் அனுமதி பெற்று, மீனாட்சியை மறுபடியும் சாட்சிக் கூண்டில் அழைக்கச் செய்து குறுக்கு விசாரணை செய்யத் தொடங்கினான்.

''நீங்கள் இந்தியன் ஃபிலாசஃபி படித்து இருப்பதாகச் சொன்னீர்கள் இல்லையா?''

''ஆமாம்.''

''மனுதர்ம சாஸ்திரங்களைப் படித்திருக்கிறீர்களா?''

''படித்திருக்கிறேன்.''

''நீ ஸ்த்ரீ ஸ்வாதந்திரிய மர்ஹதி'' என்றால் அர்த்தம் என்ன?''

மீனாட்சி பதில் சொல்ல ஒரு நிமிடம் தயங்கினாள்.

''உங்களுக்கு சமஸ்கிருதம் தெரியும் இல்லையா? தயவு செய்து பதில் சொல்லுங்கள்.''

''பெண்களுக்கு சுதந்திரம் கிடையாது என்று அர்த்தம்.''

''அதாவது பெண்ணாகப் பிறந்தவள் ஒரு ஆணைச் சார்ந்து தான் வாழவேண்டும் என்றுதானே அதில் சொல்லப்பட்டிருக்கிறது.''

''அப்ஜெக்ஷன் மிலார்ட்'' எழுந்து கொண்டேன். ''நாம் இங்கே 'தி விமென்' என்ற புத்தகத்தைத் தடை செய்வது பற்றி

விவாதிக்க வந்து இருக்கிறோமே தவிர மனுதர்ம சாஸ்திரப் பற்றிப் பேசுவதற்காக இல்லை.''

சுரேஷ் அதை ஆமோதிக்கும் வகையில், ''சாட்சி அவர்கள் இந்தியன் ஃபிலாசஃபியைப் படித்திருப்பதாக எதிர்தரப்பு வக்கீல் பிரஸ்தாபித்து இருப்பதால், நான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். ''ஆணின் விலா எலும்பிலிருந்து சிருஷ்டிக்கப்பட்டவள் பெண்'' என்று கிறிஸ்துவ மதத்தில் சொல்லப்பட்டு இருப்பதும் உண்மைதான். பெண் என்பவள் ரொம்ப மென்மையானவள் என்றும், கவனமாக பாதுகாக்கப்பட வேண்டியவள் என்றுதான் அந்த மதத்தில் சொல்ல வந்ததும் அதுதான். மதிப்பிற்குரிய எதிர்தரப்பு வக்கீல் அவர்கள் புத்தகத்தில் எழுதி இருப்பதைத் தவறாகப் புரிந்து கொண்டு இருக்கிறார் என்பதை வருத்தத்துடன் கூறிக் கொள்கிறேன்.

''250 வருடங்களுக்கு முன் பெண் உரிமைகளைப் பற்றி விழிப்புணர்வு தொடங்கியது உண்மைதான். ஆனால் இரண்டு நூற்றாண்டுகள் கடந்த பிறகும் பெண்களின் நிலைமை இன்னும் மோசமாகி இருப்பதைத்தான் எழுத்தாளர் தன்னுடைய புத்தகத்தில் விளக்கி இருக்கிறார். பெண் உரிமைகளுக்காகப் போராடும் போராட்டங்கள் எல்லாமே மேடைப் பேச்சுகளுடன் நின்று போவதைத்தான் சுட்டிக்காட்டி உள்ளார் இந்த ஆசிரியர். ஆண், பெண் இருவரும் ஒருவர் மீது ஒருவர் ஆதாரப்பட்டு வாழ வேண்டியவர்கள் என்று எல்லா மதங்களும் வலியுறுத்துவதாக எழுத்தாளர் குறிப்பிட்டதைத் திருமணம் ஆகாத எதிர்தரப்பு வக்கீல் அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை என்றால் அதில் தவறு எதுவும் இல்லை.''

''அப்ஜெக்ஷன் மிலார்ட்'' என்றபடியே எழுந்து கொண்டேன்.

ஜட்ஜ் இடை புகுந்து சுரேஷிடம் கேட்டாள். ''உங்களுக்குத் திருமணம் ஆகிவிட்டதா?''



''இல்லை மிலார்ட்'' பணிவுடன் சொன்னான் சுரேஷ். ''அதுவரைக்கும் நான் அதிர்ஷ்டசாலி.''

கோர்ட் ஹாலில் சிரிப்பு அலையாய் எழும்பியது. எனக்கு எரிச்சலாக இருந்தது.

சுரேஷ் 'பப்ளிஷர்ஸ்' சார்பில் சில சாட்சி விசாரணை செய்தான்.

முதலில் தந்தவர் டான் பட்லர் - லண்டன் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர்.

''பிரசவ சமயத்தில் பெண்களுக்கு மூன்று மாதங்கள் விடுமுறை அளிக்கப்பட வேண்டும் என்ற சட்டம் அமுலுக்கு வந்த பிறகு, பெண்களை வேலைக்கு எடுத்துக் கொள்வதில் ஏதாவது மாறுபாடு இருந்ததா?'' சுரேஷ் கேட்டான்.

''இளமைப் பருவத்தில் இருக்கும் பெண்களை, புதிதாக திருமணமான பெண்களை, நேர்முகத் தேர்வில் ஏதாவது காரணம் சொல்லி மறுத்து விடுவோம்.''

''அறையில் புதிதாக யாராவது நுழைந்தால், இரண்டு மாத சிசுவின் ரியாக்ஷன் என்னவாக இருக்கும்? நீங்கள் செய்த ஆராய்ச்சியின் அடிப்படையில் பதில் சொல்லுங்கள்.''

''பெண் குழந்தையாக இருந்தால் குடித்துக் கொண்டிருந்த பால் பாட்டிலையும் விட்டு விட்டு, வந்தவன் பக்கம் பார்க்கும். ஆண் குழந்தையாக இருந்தால் எதையும் பொருட்படுத்தாது.''

''வயது ஆக ஆக இந்த வித்தியாசம் கூடுமா? குறையுமா?''

''நான்கு மாதங்கள் இருக்கும் போது, பயமாக இருந்தாலோ, புதிய சூழ்நிலையில் இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டாலோ நூற்றுக்கு முப்பது ஆண் குழந்தைகள் அழும். அதுவே பெண் குழந்தையாக இருந்தால் இந்த எண்ணிக்கை இருமடங்காக இருக்கும்.''

''எந்த அடிப்படையில் நீங்கள் இந்த முடிவுக்கு வந்தீர்கள் என்று சொல்ல முடியுமா?''

''நியூயார்க் யூனிவர்சிடியில் கிட்டத்தட்ட ஆயிரம் குழந்தைகள் மீது பரிசோதனை நடத்தி இருக்கிறோம். 'ஜெரோம்' என்ற மனவியல் நிபுணரும் குரங்குகள் மீது இந்தப் பரிசோதனை செய்து, பாலியல் வித்தியாசத்துக்கும், மனதில் ஏற்படும் சலனங்களுக்கும் ஆழமான தொடர்பு இருக்கும் என்று நிரூபித்து இருக்கிறார்.''

கோர்ட்டாரின் அனுமதியுடன் பன்னிரண்டு வயது பெண் குழந்தையைச் சாட்சியாக அழைக்கச் செய்தான் சுரேஷ்.

''முதல் முறையாக உனக்கு செக்ஸ் அனுபவம் எந்த வயதில் ஏற்பட்டது?''

நான் எழுந்து ஆட்சேபணைத் தெரிவிக்கும் முன் சுரேஷ் முந்திக் கொண்டான்.

''நான் சொல்லப் போகும் விஷயத்துக்கும், இந்தக் கேள்விக்கும் ரொம்ப நெருக்கமான தொடர்பு இருக்கிறது மிலார்ட். 'இன் காமெராவில்' சாட்சியை விசாரிக்கச் சொன்னாலும் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் சாட்சியாக வந்த பெண்ணே, இந்த விவரங்களை உலகத்திற்கு வெளிப்படுத்த வேண்டும் என்று விரும்புகிறாள்.''

''ப்ரொசீட்.''

கேள்வி மீண்டும் ஒரு முறை கேட்கப்பட்டது.

''கிட்டத்தட்ட இரண்டு வருடங்களுக்கு முன்.''

''அதாவது உனக்கு பத்து வயது இருக்கும் போது ஏற்பட்டது. அப்படித்தானே?''

''ஆமாம்.''

கோர்ட்டில் சலசலப்பு ஏற்பட்டது.



''உனக்கு பாய் ஃப்ரெண்ட்ஸ் எத்தனை பேர் இருக்கிறார்கள்?''

''கிட்டத்தட்ட பத்து பேர்.'' தயக்கமே இல்லாமல் சொன்னாள்.

''இந்த வாழ்க்கை அமைதியாக, திருப்தியாக இருப்பது போல் உணருகிறாயா?''

''இல்லை.''

அந்தப் பதிலை கேட்டதும் எனக்கு வியப்பு ஏற்பட்டது. வயதுக்கு மீறிய மெச்சூரிட்டி அந்தக் குழந்தையிடம் இருப்பதாகத் தோன்றியது. ஒருகால் சின்ன வயதிலேயே ஏற்பட்ட அனுபவங்கள் அந்தக் குழந்தையை அப்படி மாற்றி இருக்கக் கூடும்.

''உன்னுடைய அமைதியற்ற இந்த வாழ்க்கைக்கு காரணம் யாரென்று நினைக்கிறாய்?''

''என்னுடைய தாய்.''

சட்டென்று கோர்ட்டில் ஊசி விழுந்தாலும் கேட்கும் அளவுக்கு மௌனம் ஏற்பட்டது.

''உன் தாய்தான் இதுக்குக் காரணம் என்று எப்படிச் சொல்ல முடியும்?''

''என்னுடைய தாய் ஒரு சேல்ஸ் டைரக்டர். மாதத்தில் இருபது நாள் வெளியூர்களுக்குப் போய் விடுவாள். தந்தை ஒரு குடிகாரர். சின்ன வயதிலிருந்து தனிமையில் பாதிக்கப்பட்ட எனக்கு, அடுத்த வீட்டு அங்கிள், ஐம்பது வயது தாண்டியவர் என்னிடம் 'அன்புடன்' பழகியதைத் தவறாக நினைக்கத் தோன்றவில்லை. அதன் பிறகு பதினான்கு வயது ராபர்ட் அவரைவிட நெருக்கமானவனாகத் தென்பட்டான்.''

''தட்ஸ் ஆல் மிலார்ட்.''

குறுக்கு விசாரணை செய்ய எதுவுமில்லை என்பது போல் தலையை அசைத்தான்.

அடுத்த சாட்சி வில்லியம்ஸ்...

''பிரபல சினிமா நடிகை க்ரேட்டா கார்போவுக்கும் உங்களுக்கும் என்ன உறவு?''

''அவளுடைய சுயசரிதையை நான் எழுதுகிறேன்.''

''அந்த நடிகையைப் பற்றி கொஞ்சம் சொல்ல முடியுமா?''

''1930-ம் வருடம் க்ரேட்டா இளைஞர்களின் மனதில் காதல் தேவதையாகக் குடியிருந்தாள். அந்த ஸ்வீடிஷ் நடிகையின் சொத்து நிலவரம் கிட்டத்தட்ட ஆயிரம் மில்லியன் டாலர்களுக்கு மேலேயே இருக்கும். அவளுடைய ஆட்டோ கிராஃப்க்காக ஆயிரம் பவுண்டுகள் செலவு செய்யத் தயாராக இருக்கும் ரசிகர்கள் அவர்களுக்கு இருந்தார்கள்.''

''1980 செப்டம்பர் 18-ம் தேதி என்ன நடந்தது?''

''அவள் தன்னுடைய எழுபத்தைந்தாவது பிறந்த நாளை கொண்டாடினாள். யாருமே இல்லாத ஹாலில், பிறந்த நாள் கேக் மீது 75 மெழுகுவர்த்திகளை ஏற்றி, வாழ்த்துக்கள் கூற ஒருவரும் இல்லாத தனிமையில் பிறந்த நாளைக் கொண்டாடினாள். பிறகு மனமுடைந்து போய் அழத் துவங்கினாள். தன்னுடைய வாழ்க்கையைப் பற்றி என்னிடம் பேசும் போது இந்த நிகழ்ச்சியை அவள் விவரித்தாள். இளமைப் பருவத்தில் இருந்த போது, சுற்றிலும் இருந்த கவர்ச்சியான உலகத்தைப் பார்த்து, அதுதான் வாழ்க்கை என்று எண்ணி திருமணம் செய்து கொள்ளாதது தன்னுடைய தவறுதான் என்று வருத்தப்பட்டுக் கொண்டாள்.''

அடுத்த சாட்சியாக வந்தவள் ஒரு பிரிட்டிஷ் பெண்மணி.

''உங்கள் திருமணம் நடந்து எத்தனை வருடங்கள் இருக்கும்?''



''பத்து வருடங்கள்.''

''எத்தனை வருடங்களாக வேலைக்குப் போகிறீர்கள்?''

''பன்னிரண்டு வருடங்களாக.''

''அதாவது திருமணத்துக்கு முன்னாலிருந்தே வேலை பார்க்கறீங்க இல்லையா... நீங்க இந்த வேலையைத் தொடர்ந்து செய்யக் காரணம் என்ன?''

''வேறு என்ன? பொருளாதார நெருக்கடிதான்.''

''அந்தத் தேவையில்லாவிட்டால் நீங்க வேலைக்குப் போக மாட்டீர்களா?''

''மாட்டேன். என் கணவர், குடும்பம், குழந்தைகள் இவற்றைப் பார்த்துக் கொண்டு வீட்டிலேயே இருப்பதைத்தான் விரும்புவேன். அதைவிட வேறு எதுவும் எனக்கு வேண்டாம்.''

கேள்வி கேட்க எனக்கு ஒரு நல்ல பாயிண்ட் கிடைத்து விட்டது. நேராக அவளிடம் சென்றேன்.

''வேலை பார்ப்பதில் உங்களுக்கு எந்த விதமான சந்தோஷமும் கிடைப்பதில்லையா?''

''முதலில் கிடைத்து வந்தது. இப்போது இல்லை.''

''உங்களுக்கென்று தனியாக வருமானம் இருப்பதில் உங்கள் மனதுக்கு திருப்தி கிடைக்கவில்லையா?''

பதில் சொல்ல அவள் சற்று தயங்கினாள். ''திருப்தி இருப்பது உண்மைதான்'' என்றாள்.

சுரேஷ் பக்கம் பார்க்க வேண்டும் என்ற விருப்பத்தை வலுக்கட்டாயமாக கட்டுப்படுத்திக் கொண்டேன்.

''திருமணம் ஆன உடனே நீங்க வேலையை விட்டு விட்டீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் கணவர் நல்லவராக இருந்து விட்டால் பரவாயில்லை. ஒரு குடிகாரனாக, பிற

பெண்கள் பின்னால் சுற்றுபவராக இருந்திருந்தால் உங்கள் நிலைமை என்ன? கணவர் உங்களை வீட்டை விட்டு வெளி யேற்றினால் என்ன செய்து இருப்பீங்க?''

அவள் பதில் சொல்லவில்லை. நான் மேலும் தொடர்ந் தேன்.

''பத்து வருடங்கள் உங்களுடன் குடும்பம் நடத்தி இரண்டு குழந்தைகளையும் பெற்ற பிறகு கணவர் உங்களைத் தள்ளி வைத்தால், வேலையைத் தவிர உங்களுக்கு என்ன ஆதாரம் இருக்க முடியும்?''

சுரேஷ் எழுந்து கொண்டான். ''இந்தக் கேள்விக்கும், நம் கேஸுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை மிலார்ட்'' என்றான்.

''இருக்கிறது'' ஆவேசத்துடன் சொன்னேன். ''ஆணும் பெண்ணும் திருமணம் என்ற பந்தத்தில் ஒன்றாக இணைவார் கள். கணவன் வேலைக்குப் போய் வருமானம் கொண்டு வந்து வீட்டைக் காப்பாற்றினால், மனைவியாக இருப்பவள் வீட்டுப் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு தன்னுடைய கடமைகளை நிர்வாகம் செய்வாள். பத்து வருட தாம்பத்தியத்துக்குப் பிறகு கணவன் மனைவியை வீட்டை விட்டு வெளியேற்றினால் அவ ளுடைய நிலைமை என்ன? வேலைக்குப் பாதுகாப்பு இருப்பது போல் தாம்பத்திய வாழ்க்கைக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லையே .. பரஸ்பர நம்பிக்கையைத் தவிர.''

பார்வையாளர்கள் படபடவென கைகளைத் தட்டினார்கள். சுரேஷ் எழுந்து போய் ஜட்ஜிடம் ஒரு புத்தகத்தைக் கொடுத்தான்.

''இது என்ன புத்தகம்?'' ஜட்ஜ் கேட்டாள்.

''பெர்ட்லண்ட் ரஸ்ஸெல் எழுதிய சுயசரிதம் மிலார்ட் இதில் 162-வது பக்கத்தில் தன்னுடைய மனைவிகளைப் பற்றி எழுதியிருக்கிறார். தனக்கு நோபல் பரிசு மூலமாய் கிடைத்த பணத்தைத் தன்னுடைய முதல் மனைவிக்கும், இரண்டாவது



மனைவிக்கும் ஆளுக்குப் பாதியாகக் கொடுத்து விட்டு, மூன்றா வது மனைவியுடன் எளிமையாக வாழ்க்கையை நடத்தியதாக எழுதியிருக்கிறார்.''

''மூன்று திருமணங்களைச் செய்து கொண்டதற்கு, அவ ருக்கு அந்தத் தண்டனை வேண்டியதுதான்.'' பின் வரிசையில் இருந்து யாரோ சொன்னார்கள். கோர்ட்டில் சிரிப்பு அலைகளாய் பரவியது. சுரேஷிடம் எந்தச் சலனமும் தென்படவில்லை.

''நான் சொல்ல வந்ததும் அதுதான் மிலார்ட். ரஸ்ஸெலை விட அவனை விவாகரத்து செய்த மனைவிகள்தான் அதிகமாக சம்பாதிக்கிறார்கள்'' என்றான்.

அவன் சொல்வதை பொருட்படுத்தாமல் நான் சாட்சியிடம் அடுத்த கேள்வியைக் கேட்டேன்.

''நீங்க பன்னிரண்டு வருடங்களாக வேலை பார்த்து வரு கிறீர்கள் இல்லையா... ஆண்களிடமிருந்து மானசீகமாகவோ, உடல் ரீதியாகவோ துன்பங்களைச் சந்தித்து இருக்கிறீர்களா?''

''வேலை பார்க்கும் போது இதெல்லாம் தவிர்க்க முடியாது. நாம்தான் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.''

''பெண்கள் எல்லோரும் சேர்ந்து தங்களுடைய உரிமை களுக்காகப் போராட வேண்டும் என்று உங்களுக்கு தோன்றியதே இல்லையா?'' நேரடியாக கேட்டேன்.

''யாருடன் போராடணும்?'' அப்பாவியாக கேட்டாள்.

என்ன பதில் சொல்வதென்று எனக்குப் புரியவில்லை.

''சாட்சிகள் எதிர் கேள்விகள் கேட்கக் கூடாது. கேட்டதற்கு மட்டும் பதில் சொல்ல வேண்டும்'' என்றேன்.

அவள் மௌனமாக இருந்தாள்.

''இப்படி அப்பாவித்தனமாய் இருப்பது பற்றி என்றுமே உங்களுக்கு வருத்தம் ஏற்பட்டதில்லையா?''

''நான் என்ன செய்திருக்க வேண்டும் என்று நீங்களே சொல்லுங்கள்.''

பதில் சொல்ல தெரியாமல் பேச்சை மாற்றினேன்.

''உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?''

''இரண்டு குழந்தைகள்.''

''அவர்களுடைய வயது?''

''பெண்ணுக்கு ஒன்பது, பையனுக்கு ஏழு.''

''உங்கள் மகன் இரவு நேரம் கழித்து வந்தாலும் அவனை ஒன்றும் சொல்ல மாட்டீங்க. அதுவே மகள் வருவதற்கு அரை மணி தாமதம் ஆனால் ஆயிரம் கேள்விகளைக் கேட்பீங்க. அப்படித் தானே.''

''ஆமாம்.''

''குழந்தைகளுக்கு இடையே இப்படி பாரபட்சமாய் நடந்து கொள்வதில் உங்களுடைய எண்ணம்தான் என்ன?''

''பெண்ணுக்கு அபார்ஷன் செய்ய வேண்டி வந்தால் அது ஒரு அனாவசிய செலவு. அதோடு விஷயம் வெளியில் தெரிந்தால் அவளுடைய எதிர்காலம் பாழாகி விடும். என் மகன் விஷயத்தில் இந்த மாதிரி நான் பயப்பட வேண்டியது இல்லை. பெண்கள் தங்களுடைய உரிமைகளுக்காகப் போராட வேண்டும் என்றால் கடவுளிடம்தான் போராட வேண்டும்.'' சுருக்கமாகச் சொன்னாள்.

நேரம் முடிந்து விட்டதால் கோர்ட் கலைந்தது.

* * *

''இண்டர்நேஷனல் மேனேஷ்மெண்ட் க்ரூப்'' நிறுவனத்தின் மீட்டிங் ஹால் மக்களால் நிரம்பி வழிந்தது. வெவ்வேறு நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். ''விமென் ஆஃப் தி இயர்'' பரிசு வழங்கும் விழா அன்று நடைபெற இருந்தது.



வெளிநாடுகளிலிருந்து இங்கு வந்து செட்டில் ஆகி, ஏதாவது ஒரு துறையில் சிறப்பாக விளங்கியவர்களுக்கும் தனியாக பரிசு வழங்குவார்கள். இந்த வருடம் அந்தப் பரிசு எனக்குக் கிடைக்க இருப்பதாக அன் அஃபிஷியலாக எனக்குச் செய்தி கிடைத்தது. ''நியாயம் - சட்டம் - பெண்'' என்ற தலைப்பில் நான் எழுதிய புத்தகத்துக்காக எனக்கு இந்தப் பரிசு கிடைக்கப் போகிறது.

மேடையில் ஒவ்வொரு பெயராக அழைக்கச் செய்து பரிசுகளை வழங்கிக் கொண்டிருந்தார்கள்.

''வெளிநாட்டுப் பெண்மணிக்கு வழங்கப்படும் பரிசை இந்த வருடம் பெற்றுக் கொள்ளப் போகிறவர்...'' ஒரு நிமிடம் தாமதித்தார் அறிவிப்பாளர்.

நாற்காலியிலிருந்து எழப் போனேன்.

''மிஸஸ் அகல்யா...''

தன்னிச்சையாக உட்கார்ந்து விட்டேன். படபடவென்று ஒலித்த பலமான கைத் தட்டல்களுக்கு இடையில் திருமதி அகல்யா மேடைக்குச் சென்று பரிசைப் பெற்றுக் கொண்டாள்.

''பாட்டனி, ஜுவாலஜி பாடப் புத்தகங்களை, சின்னக் குழந்தைகளுக்கு எளிதாகப் புரியும் வகையில் சிறப்பாக எழுதிய திருமதி அகல்யா அவர்களுக்கு இந்தப் பரிசை வழங்குவதில் பெருமைப்படுகிறோம்.'' அறிவிப்பாளர் சொல்லிக் கொண்டு இருந்தார்.

எனக்குப் பின்னால் உட்கார்ந்திருந்த வெளிநாட்டுக்காரர் தனக்கு பக்கத்தில் அமர்ந்திருந்த இந்தியப் பெண்மணியிடம் கேட்டார்.

''அகல்யா என்ற பெயர் வேடிக்கையாக இருக்கு. இதன் அர்த்தம் என்ன?''

உண்மைதான்... எனக்கும் அர்த்தம் தெரியாது. சின்ன வய
லிருந்து வெளிநாட்டில் வளர்ந்து வந்ததால் ஏற்பட்ட விளை
இது.

''இந்து மதப் புராணங்களில் ராமாயணம் என்று ஒரு கா
யம் இருக்கிறது. அதில் வரும் ஒரு கதாபாத்திரத்தின் பெயர்தா
அகல்யா. முனிவரின் மனைவி. இந்திரனால் ஏமாற்றப்பட்
கற்பை இழந்து, கணவர் கொடுத்த சாபத்தால் கல்லாக மா
விடுவாள்...'' விவரமாகச் சொல்லிக் கொண்டிருந்தாள் அந்
மாது.

தேடிக் கண்டுபிடித்து இந்தப் பெயரை எதுக்கு வைத்தா
கள் என்று எனக்குப் புரியவில்லை. அதற்குள் அவளே எ
அருகில் வந்தாள்.

''கங்கிராட்சுலேஷன்ஸ்'' புன்னகையுடன் வாழ்த்து
களைத் தெரிவித்தேன்.

என் பக்கத்திலிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டே
''இந்தப் பரிசு உனக்குக் கிடைக்கும்னு எதிர்பார்த்தேன்'' என்றாள்.

''யாருக்குக் கிடைத்தால் என்ன? அடுத்த வருட
கட்டாயம் எனக்குக் கிடைக்கும் பார். தாய்க்கு முதல் வருடமும்
மகளுக்கு அடுத்த வருடமும் தொடர்ந்து பரிசு கிடைப்பதும் ஒ
புதிய ரிகார்ட்தானே...'' என்றேன்.

திருமதி அகல்யா... தன் மகளை அதாவது என்னை
பார்த்து புன்னகைத்தாள்.

* * *

# 4

சோர்ட்டில் சுரேஷ் தன்னுடைய வாதத்தைத் தொடர்ந்தான்.



''மிலார்ட்... 'தி விமென்' புத்தகத்தை எழுதிய ஆசிரியரின் அபிப்பிராயத்தை, எண்ணங்களை, பெண் உரிமைகளுக்குப் போராடும் இயக்கங்களோ, மதிப்பிற்குரிய வழக்கறிஞரோ சரியாக புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். இயற்கையிலேயே ஆணுக்கும், பெண்ணுக்கும் நிறைய வேறுபாடு இருக்கிறது. பெண்கள் கொடுமைப்படுத்தப்படக் கூடாது என்றுதான் எல்லோரும் எண்ணுவார்கள்.''

''ஒரு குடும்பத்தில் மனைவியும் வேலைக்குப் போகிறவளாக இருந்தால், குழந்தைகளையும் பார்த்துக் கொள்வதற்கு வீட்டு வேலைகளைச் செய்வதற்கு ஊரிலிருந்து தூரத்து உறவுக்காரப் பெண்மணியை வரவழைத்துக் கொண்டு தங்களுடன் வைத்துக் கொள்வார்கள்.

''கணவன் தன்னை விட்டு விட்டால் தனக்கு பாதுகாப்பு யார் தருவார்கள் என்று யோசிக்கும் அந்த இல்லத்தரசி, தங்கள் வீட்டில் சமையல் வேலை செய்யும் அந்த ஏழை விதவைக்கு வயதாகி, வேலைகளைச் செய்ய இயலாமல் போய் விட்டால், எதைப் பற்றியும் யோசிக்க மாட்டாள். உடம்பில் தெம்பு இருக்கும் வரை அவளுடைய உழைப்பைப் பெற்றுக் கொண்டு, வலுவை இழந்ததும் ஏதோ ஒரு சாக்கு சொல்லி வீட்டை விட்டு வெளியேற்றி விடத் தயங்காத அந்த இல்லத்தரசிக்கு, தன்னுடைய பாதுகாப்புக்காகப் போராட்டம் நடத்த என்ன உரிமை இருக்க முடியும்?'' சுரேஷ் ஒரு நிமிடம் நிறுத்தினான்.

''பெண் உரிமைகளைப் பாதுகாப்பது என்றால் உண்மையான அர்த்தம் என்ன? பல ஆண்டுகளாக பெண்கள் பல கொடுமைகளுக்கு உள்ளானது உண்மைதான். ஆனால் இதில் இருந்து விடுபட, பெண்மைக்குரிய இயல்புகளையே துறக்க வேண்டும் என்று வாதாடுவது எப்படி நியாயமாகும்? திருமணம் ஆனபின் பொட்டு வைத்துக் கொள்வதை, மூக்குத்தி, தாலி,

மெட்டி போன்ற ஆபரணங்களை அணிவதை பெண்ணு
இடப்பட்ட விலங்குகளாகக் கருதி, அதற்கு எதிராக முழ
மிடும் பெண் எழுத்தாளர்களை... மன்னிக்க வேண்டும் 'பெ
எழுத்தாளர்கள் என்று குறிப்பிட்டால் என்மீது மான நஷ்
வழக்கு போடுவார்களோ என்னவோ... எழுத்தாளிகளைத்த
ஆசிரியர் இந்தப் புத்தகத்தில் விமர்சித்து இருக்கிறார்.

''சொத்தில் பெண்களுக்கு சம பங்கு கிடைப்பது, விதவை
களின் மறுமணம் போன்ற விஷயங்களை இந்த ஆசிரியர் எதிர்க்
வில்லை. மாறாக ஆதரவு தெரிவித்து இருக்கிறார். கணவனிட
இருந்து துன்பங்களைத் தவிர வேறு எதுவும் பெற்றிராத பெ
ஒருத்தி விவாகரத்து பெற நினைத்தால், அதற்காக சட்டத்தி
வழி இருக்க வேண்டும் என்றும், விவாகரத்துக்குப் பிறகு அ
ளுக்கு மாதா மாதம் கணவனிடமிருந்து கிடைக்க வேண்டி
தொகையை அதிகரிக்க வேண்டும் என்றுதான் ஆசிரியர் குறி
பிட்டு உள்ளார். தனிமையான வாழ்க்கையில் பெண்ணுக்கு ஏ
படக்கூடிய துன்பங்களை, கஷ்டங்களை விவரமாக எடுத்து
சொல்வதோடு, பெண்கள் தங்களுடைய உரிமைகளுக்காக ஆ
களுடன் போராட வேண்டியதில்லை என்றும், தங்களுக்கு
புதைந்திருக்கும் திறமையை, சக்தியை முதலில் உண
வேண்டும் என்பதுதான் ஆசிரியரின் அபிப்பிராயம்.

''இளமைப் பருவத்தில் அடி எடுத்து வைக்கப் போகு
பெண் குழந்தைகளின் மனதில், ஆண் இனத்திடம் துவேஷத்தை
விதைக்க வேண்டாம் என்றுதான் எழுத்தாளர் இந்தப் புத்தகத்தி
குறிப்பிட்டு உள்ளார். கிட்டத்தட்ட இருபத்து ஐந்து வருட
களுக்கு முன் நடந்த ஒரு நிகழ்ச்சியை ஆசிரியர் இந்த நூலி
வெளிச்சப்படுத்தி இருக்கிறார். 4-9-1970 அன்று சைனாவி
இருக்கும் பீஜிங் நகரத்தில், அகில உலக பெண்களின் மாநா
ஒன்று நடைபெற்றது. உலகத்தில் எல்லா நகரங்களிலிருந்து ஆயிர
கணக்கான பெண்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்



''இந்தியாவிலிருந்து ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த பெண்ணும் இதில் கலந்து கொண்டாள். வயலில் வேலை செய்யும் கூலிக்காரப் பெண் அவள். ஒரு நாள் வயலில் களை எடுத்துக் கொண்டு இருந்த போது, அந்த நிலத்தின் சொந்தக்காரர்கள் ஐந்து பேர்கள் ஒன்றாக சேர்ந்து அவளைக் கற்பழித்தார்கள். ஆண் வர்க்கத்து கொடுமைகளுக்குப் பலியாகி விட்ட பெண் இனத்துக்குப் பிரதிநிதியாக அவளை அந்த மாநாட்டில் குறிப்பிட்டதுடன், அந்த நிகழ்ச்சியின் மீது கவிதைகளும், கதைகளும் அரங்கேற்றப்பட்டன. இது போன்ற செயல்களால் பிரயோஜனம் என்ன என்றுதான் எழுத்தாளர் தன்னுடைய புத்தகத்தில் கேள்வியை எழுப்பியுள்ளார்.

''பெண் உரிமையைப் பாதுகாக்க நினைக்கும் இயக்கங்கள் தங்களை நிலைப்படுத்திக் கொள்ளும் முயற்சியாய் இது போன்று போராட்டங்கள் நடத்துவதுடன், மேடை ஏறி முழக்கம் இடுவதுடன் நின்று விடாமல் பிரச்னைகளுக்கு சரியான தீர்வைக் காண வேண்டும் என்று எழுத்தாளர் தன் புத்தகத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதை ஏற்றுக் கொள்ள முடியாமல், இவர்கள் இந்தப் புத்தகத்தை தடை செய்ய வேண்டும் என்று சட்டத்தின் துணையை நாடி வந்துள்ளார்கள். மதிப்பிற்குரிய நீதிபதி அவர்கள் புத்தகத்தைப் படித்து, எல்லாக் கோணங்களிலும் ஆராய்ந்து தீர்ப்பு வழங்க வேண்டும் என்றும், சமுதாயத்தில் ஆண், பெண் இருவருக்குமிடையே நிலவியிருக்க வேண்டிய புனிதமான திருமண பந்தத்தை, மனதளவில் ஒருவரை ஒருவர் சார்ந்து இருக்க வேண்டிய நிலைமை நிலைநாட்டப்பட வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்'' சுரேஷ் தன்னுடைய வாதத்தை முடித்துக் கொண்டான்.

அரை மணி நேரம் கழித்து நீதிபதி தன்னுடைய தீர்ப்பை வழங்கினார்.

* * *

## 5

"எதுக்காக இப்படி முகத்தைத் தொங்கப்
போட்டுக் கொண்டு இருக்கிறாய்? வக்கீல் என்ற
பிறகு வெற்றி தோல்விகள் சகஜம்தானே... நீ ஜெயித்து
இருந்தால் நான் தோற்றுப் போயிருப்பேன். என்
னுடைய வெற்றியில் உனக்கு உரிமையில்லையா?"
தேற்றுவது போல் கூறினான் சுரேஷ்.

சிவந்துவிட்ட கண்களுடன் ஆவேசமாய் அவன் பக்கம்
பார்த்தேன். "இது போன்ற மாயப் பேச்சுக்களைப் பேசிப் பேசித்
தான் அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரை ஆணாக இருப்
பவன் பெண்ணை அடக்கி, பெண்களுக்கென்று தனித்தன்மை
இல்லாமல் செய்துவிடுகிறார்கள்" என் குரல் கோபமாக ஒலித்
தது.

லாயர் சேம்பர் ஆளரவமற்று இருந்தது. தீர்ப்பு வாசிக்கப்
பட்டதும், அதற்கு எதிராக கோஷங்களை எழுப்பிக் கொண்டே
வெளியில் காத்திருந்த மக்கள் கலைந்து போய் அரை மணி மேல்
ஆகிவிட்டது. அவர்களை எதிர்கொள்ள பிடிக்காமல் நான் உள்
ளேயே இருந்துவிட்டேன். சுரேஷ் சொன்ன ஆறுதல் வார்த்தை
கள் எனக்கு மேலும் எரிச்சலைத் தந்தன.

"நான் இதை இப்படியே விடமாட்டேன். ஹை கோர்ட்
டுக்குப் போவேன். அங்கேயாவது நியாயம் கிடைக்கும் வித
மாய் செய்வேன்" - கோபத்தில் என் குரல் நடுங்கியது.

"அந்தப் புத்தகத்தில் நீ நினைக்கும் அளவுக்கு அநியாய
மாக எதுவும் சொல்லப்படவில்லை. ஷியாமா... நீ இருக்கும்
ஆவேசத்தில் அதைச் சரியாகப் புரிந்துகொள்ள மறுக்கிறாய்.
நாணயத்துக்கு மறுபக்கமும் உண்டு என்பதை ஏன் உணர மாட்
டேன் என்கிறாய்?" என நயமாகச் சொன்னான் சுரேஷ்.

"அந்த மறுபக்கம் என்னவாம்?" எகத்தாளமாய் கேட்
டேன்.



"நியூட்டன் போன்ற விஞ்ஞானிகள் ஏ.சி. அறைகளில்
மனம் லயித்து பரிசோதனை செய்யவேண்டும். டைசன் போன்ற
பாக்ஸர்கள் வெய்யிலில் உடற்பயிற்சி செய்யணும். இருவரின்
இடங்களை மாற்றினால் எதுக்கும் பிரயோஜனம் இல்லை. அதே
போல் பெண்களுக்கு என்று சில நியமங்களை, ஆண்களுக்
கென்று சில விதிகளை கடவுள் ஏற்படுத்தியிருக்கிறார்."

"ஓஹோ... நீங்க ஏர்கண்டிஷன்ட் ரூம்களில் இருந்தால்,
நாங்க வெய்யிலில் உடற்பயிற்சி செய்யணுமா?"

"நீ தவறாகப் புரிஞ்சுகிட்ட ஷியாமா... உடல்ரீதியாக
உழைக்க வேண்டியது ஆண் என்றும், அவனுக்குத் துணையாய்
இருக்கவேண்டியவள் பெண் என்றுதான் சொல்லவந்தேன்."

"இதோ பாரு சுரேஷ்... நீயும் நானும் சமமாக படித்திருக்
கிறோம்; சம்பாதித்துக் கொண்டும் இருக்கிறோம். நாளைக்கு நம்
திருமணம் ஆனால் நீ நியூட்டன் அல்லது டைசன் மாதிரி
க...ஷ்...ட...ப்...ப...ட்...டு சம்பாதித்துக் கொண்டு வந்தால்,
நான் சமையல் அறையிலேயே அடங்கியிருக்கணுமா? உனக்கு
மனைவியாக இருப்பதற்காக என் திறமையைப் பெட்டியில்
போட்டு பூட்டு வைக்கணுமா? சில ஆண்டுகள் கழித்து வேறு
பெண்ணிடம் உனக்கு ஈர்ப்பு ஏற்பட்டு, என்னை உதாசீனப்
படுத்தினால், இரவு ஒரு மணி ஆனாலும் உன் வருகைக்காக
வாசலிலேயே நான் தவம் கிடக்கவேண்டுமா? ஒருகால் நீ
என்னை விவாகரத்துச் செய்ய முடிவு பண்ணினாலும், உன்னிட
மிருந்து எனக்குக் கிடைக்கப் போகும் ஜீவனாம்சத்துடன் வாழ்க்கை
நடத்த நான் கற்றுக்கொள்ள வேண்டும், அப்படித்தானே!"

"அப்படியில்லை ஷியாமா! என்னுடைய வருமானம் நம்
இருவருக்கும் போதும் என்ற பட்சத்தில், நாம் இருவரும் சேர்ந்து
புதிய வாழ்க்கையைத் தொடங்குவோம் என்றுதான் சொல்ல வந்
தேன். அப்படி இல்லாமல் வேலைக்குப் போவதையும், உனக்கு

என்று தனியாக வருமானம் இருக்கவேண்டியது அவசியம் என் உணர்ந்தால், எனக்கு ஆட்சேபணை இல்லை. இருவரு யோசித்து எந்த விஷயத்தையும் முடிவு செய்வோம். நம்முடை குழந்தைகளை அன்புடன் வளர்க்க முயற்சி செய்வோம். வேலை களை, கடமைகளைப் பங்கிட்டுக் கொள்வோம்.''

நான் எழுந்து கொண்டேன்.

''ரொம்ப நன்றி சுரேஷ்! இந்தக் கேஸைப் பொறுத்தவரை ஜெயித்திருக்கலாம். ஆனால் வாழ்க்கையில் முக்கியமான ஒ விஷயத்தில் தவறான முடிவை எடுத்துவிடாமல் இந்தக் கே என்னைக் காப்பாற்றிவிட்டது. நீ எப்படிப்பட்டவன் என்று உன்னுடைய எண்ணங்கள் எப்படிப்பட்டவை என்றும் இப்போ எனக்குத் தெளிவாகத் தெரிந்துவிட்டது. இதே ஆறு மாத களுக்குப் பிறகு நடந்திருந்தால், உன்னுடன் திருமணம் முடிந் புதைமணலில் மூழ்கியிருப்பேன். பை... பை ஃபார் எவர்...''

சுரேஷின் முகம் களையிழந்தது. நான் இந்த முடிவுக்கு வரு வேன் என்று அவன் எதிர்பார்க்கவில்லை போலும். வெளிறி போன முகத்துடன் கேட்டான்:

''நீ என்ன பேசுகிறாய் என்று புரிந்துதான் பேசுகிறாயா?''

''புரிந்துகொள்ளும் திறன் கொஞ்சமாவது பாக்கியிருப்ப தால்தான் சரியான முடிவை எடுத்திருக்கிறேன்.''

''நீ ரொம்ப அவசரப்பட்டு இந்த முடிவுக்கு வந்துவிட்டா என்று நினைக்கிறேன். உனக்காக... உன் எண்ணங்களின் மாற்றத் துக்காக நான் காத்திருப்பேன்.''

''தேவையில்லை. உன் கருணைக்காகவோ இரக்கத்தைப் பெறவோ என் அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டு திரும்பி வர மாட்டேன். ஒரு விஷயம் சொல்கிறேன், நினைவில் வைத்துக் கொள். ஒரு பெண்ணுக்குத் தேவையானது இரக்கமில்லை.



மதிப்பு... சுயகௌரவம். அது தெரிந்துகொண்ட பிறகு திரு மணம் செய்துகொள். உன் மனைவி மகிழ்ச்சியாக இருப்பாள்.''

''மதிப்பு, இரக்கம் ஒருவர்மீது ஒருவருக்கு இருந்தால், எல்லாம் சேர்ந்தால்தான் காதல். நான் உன்னைக் காதலிக்கிறேன் ஷியாமா.''

''காதலில் இரக்கத்துக்கு வேலையில்லை. காதலுக்கு அஸ்திவாரம் நம்பிக்கை.''

''நம்பிக்கைதான் முக்கியம் என்று நினைத்தாயானால் என்னுடைய வருமானத்தை அப்படியே உன்னிடம் கொடுத்து விடுகிறேன். அப்போது பொருளாதார ரீதியாக பயப்பட வேண்டிய தேவை உனக்கு இருக்காதில்லையா?''

''தாங்க்ஸ். நான் இந்தத் திருமணம் செய்துகொள்ளா விட்டாலும் எனக்கு அந்த நிலைமை ஏற்படப்போவதில்லை. போயிட்டு வர்றேன். இத்தனை நாட்களும் என்னுடன் நட்பைப் பகிர்ந்து கொண்டதற்கு ரொம்ப நன்றி.'' விடுவிடு என்று அறையை விட்டு வெளியேறப் போனேன். பின்னால் இருந்து சுரேஷின் குரல் கேட்டது.

''கோர்ட்டில் ஆகட்டும், பெண் உரிமைகள் என்று கொடி பிடித்துக் கொண்டிருப்பவர்களுக்காகட்டும்... நான் சொல்வது ஒன்றுதான். உனக்கும் அதைத்தான் சொல்கிறேன். நாணயத்தின் மறு பக்கத்தையும் பார்க்கக் கற்றுக்கொள்.''

''நானும் அதைத்தான் சொல்கிறேன். கோர்ட்டில் சொன்னா லும், ஆணாதிக்க சமுதாயத்தின் பிரதிநிதியான உன்னிடம் சொன்னாலும் ஒரே வார்த்தைதான். அடுத்தவர்களின் பிரச்சினை களை உன்னுடைய கண்ணோட்டத்தில் பார்க்காதே. முடிந்தால் புரிந்துகொள்ள முயற்சி செய்'' என்று சொல்லிவிட்டு வெளி யேறினேன்.

★ ★ ★

## 6

என்னைப் புரிந்துகொண்டது பிரகாஷ் ஒருவன்தான்.

''ரொம்பச் சரியான முடிவைத்தான் எடுத்து இருக்கே அக்கா... தான் ரொம்ப மேதாவி என்ற எண்ணம் சுரேஷுக்கு ஏற்கெனவே இருக்கு. தான் சொன்னதுதான் வேத வாக்கு என்ற அபிப்பிராயம் அவனுடைய இரத்தத்திலேயே கலந்திருக்கும் என்று நினைக்கிறேன். உங்க இருவருக்கும் ஒத்து வராது என்று ஏனோ எனக்குத் தோன்றிக் கொண்டே இருந்தது.''

என்னைப் பாராட்டுவதுபோல் சொன்ன பிரகாஷை நன்றியுடன் பார்த்தேன்.

இருபத்து இரண்டு வயதுக்குள்ளேயே அவன் நிறைய மனவியல் புத்தகங்களைப் படித்திருக்கிறான். எத்தனைக் கஷ்டமான பிரச்சினையாக இருந்தாலும், தன்னிடமிருக்கும் அறிவாற்றலால் நிமிடத்தில் தீர்வு காண்பதோடு, மற்றவர்களின் பிரச்சினைகளுக்கும் சரியான தீர்வுகளைச் சொல்வது அவன் வழக்கம். அவனை என்கூடப் பிறவாத சகோதரனாக அம்மா குறிப்பிடும்போது எனக்குக் கோபம் வராது. சிரிப்புதான் வரும்.

பிரகாஷிடம் இருக்கும் இன்னொரு குணம். என்னவென்றால், தனக்கு அனுகூலமாக இருக்கும் விதமாக பிரச்சினையை உருவகப்படுத்தி எதிராளியையும் நம்ப வைத்து விடுவான். எது எப்படியிருந்தாலும், அவன் என்னை சப்போர்ட் செய்ததற்கு இன்று எனக்குச் சந்தோஷமாக இருந்தது.

அம்மா மட்டும் வேறு விதமாக யோசித்தாள்.

''அவசரப்பட்டு முடிவு செய்துவிட்டாயோ என்று தோன்றுகிறது. சுரேஷ் ரொம்பப் புத்திசாலி, நல்ல பையன். ஆவேசத்தில் முன்பின் யோசிக்காமல் அவனை மறுப்பது சரியில்லை என்று நினைக்கிறேன்; நீயும் யோசித்துப் பார்'' என்றாள்.



''கேஸ் ஜெயித்தவுடன் நியாயம் யார் பக்கத்தில் என்பதையும் மறந்துவிட்டு சுரேஷின் புத்திசாலித்தனத்தைப் பற்றி யோசிப்பது சரியா அம்மா?''

''நான் சொல்ல வந்தது நியாயத்தைப் பற்றியில்லை... லாஜிக் பற்றி. அவன் சொன்னதில் லாஜிக் இருப்பதால் தானே அந்தப் பெண் முன்னேற்ற இயக்கங்கள் அவன்மீது பாயவில்லை'' அம்மா சொன்னாள்.

''அவன்மீது பாயவில்லையா? யார் சொன்னது? எனக்கு எத்தனை கடிதங்கள் வந்திருக்கிறது என்று உனக்குத் தெரியுமா?''

வேகமாய் என் அறைக்குள் போய் ஒரு ஃபைலை எடுத்துக் கொண்டு வந்து அம்மாவின் முன்னால் போட்டேன். ''அந்த முடிவை எதிர்த்து கண்டனம் தெரிவித்து உலகத்தின் நாலாப் பக்கங்களிலிருந்து எனக்கு வந்த கடிதங்கள் இவை.'' அதிலிருந்து கைக்கு வந்த கடிதத்தை எடுத்து அம்மாவிடம் கொடுத்தேன்.

''எந்த ஒரு கடிதத்தை எடுத்துப் படித்தாலும் அதில் புதைந்திருக்கும் வேதனையை உன்னால் புரிந்துகொள்ள முடியும்'' என்றேன்.

அம்மா அந்தக் கடிதத்தைப் படித்துவிட்டு, என்னிடம் திருப்பிக் கொடுத்தாள். ''நீ இப்போது சின்னப் பெண் இல்லை; நல்லது கெட்டது தெரிந்தவள். உனக்கு எது சரி என்று தோன்றுகிறதோ அதன்படி நடந்துகொள். சுரேஷ் இல்லாவிட்டால் வேறு ஒருவனைத் திருமணம் செய்துகொள். எனக்கு வேண்டியதெல்லாம் நீ மகிழ்ச்சியாக இருக்கவேண்டும். அவ்வளவுதான்'' என்றவள் அங்கிருந்து போய்விட்டாள்.

தொடர்ந்து என்னுடன் வாதம் செய்யாமல் அம்மா என் எண்ணங்களை மதித்ததற்கு அம்மாமீது எனக்கு மதிப்பு ஏற்பட்டது.

இந்தியாவில் பத்திரிகை ஆபீசில் வேலை செய்யும் என் சினேகிதி, தன்னுடைய பத்திரிகையில் வெளிவந்த கவிதை ஒன்றை அனுப்பி வைத்தாள்.

இந்தக் கேஸின் தீர்ப்பு வெளியான பிறகு அதைக் கண்டித்து தஞ்சாவூர் திருவையாறு கிராமத்திலிருந்து ஒரு பெண் எழுதிய கவிதை அது.

கடிதத்தை ஃபைலில் வைத்துவிட்டேன். ஏனோ அந்த நிமிடம் எனக்கு விரக்தியாக இருந்தது.

★ ★ ★

## 7

மூன்று நாட்களாய் பிரகாஷ் கண்ணில் படவில்லை. என்ன காரணம் என்று தெரியவில்லை. அவனுடைய ஃப்ளாட்டுக்கு இரண்டு மூன்று தடவை போன் செய்துப் பார்த்தேன். சுருக்கமாக இரண்டு மூன்று வார்த்தைகள் மட்டும் பேசி விட்டுப் போனை வைத்துவிட்டான்.

திடீரென்று அவனிடம் இந்த மாற்றம் வந்தது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. அன்று மாலையில் அவனுடைய ஃப்ளாட்டுக்குப் போனேன்.

காரை வீட்டின் முன் நிறுத்திவிட்டு, மாடிக்குப் போனபோது, அறையில் தனியாகத்தான் இருந்தான். ஏதோ புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தான்.

''என்ன பிரகாஷ்? கண்ணிலேயே படமாட்டேன் என்கிறாய்?'' சிரித்துக் கொண்டே உரிமையுடன் கேட்டேன்.



''ஒன்றுமில்லை'' என்றான்.

அவன் முகம் கொடுத்துப் பேசவில்லை என்பது தெளிவாகப் புரிந்தது.

''இதோ பார் பிரகாஷ். நீதான் மனவியல் சாஸ்திரத்தை கரைத்துக் குடித்தவனாயிற்றே. நம் மனதில் ஏதாவது இருந்தால் மறைக்காமல் எதிராளிக்குத் தெளிவுபடுத்திவிடுவது நல்லது இல்லையா? என்னிடம் உனக்கு ஏதாவது பிடிக்காவிட்டால் ஒளிவு மறைவில்லாமல் சொல்லிவிடு'' என்றேன்.

அவன் முகத்தை அந்தப் பக்கம் திருப்பிக் கொண்டு, ''நிஜமாகவே ஒன்றுமில்லை'' என்றான்.

நான் எழுந்து போய் அவனுக்கு நேர் எதிரிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டேன்.

''எதுவும் இல்லையென்றால் இந்தப் பாராமுகம் எதுக்கு? நீ சொல்லித்தான் ஆகணும். இப்படி மனதில் ஒன்றை வைத்துக் கொண்டு வெளியில் வேறுவிதமாக நடந்து கொள்பவர்களைக் கண்டால் எனக்கு வெறுப்பு'' கடினமான குரலில் சொன்னேன்.

அவன் முகத்தில் குற்ற உணர்ச்சி எதுவும் தென்படவில்லை. வெறுமையான குரலில் சொன்னான்.

''காரணத்தைச் சொன்னால் உன்னால் தாங்கிக்கொள்ள முடியாது.''

''பரவாயில்லை... சொல்லு.''

''என்னவென்று சொல்லட்டும்? நீயும் நானும் ஒரே தந்தைக்குப் பிறந்த குழந்தைகள் என்று சொல்லட்டுமா? சுகமாகக் குடித்தனம் செய்து கொண்டிருந்த பிறகும் உன்னுடைய தாய் யாருடனோ தொடர்பு வைத்துக்கொண்டு கையும் களவுமாகப் பிடிப்பட்டு விட்டதைச் சொல்லட்டுமா? அப்பாவியான அவளுடைய கணவன் இந்த அதிர்ச்சியைத் தாங்க முடியாமல்

தற்கொலைக்கு முயற்சி செய்ததைச் சொல்லட்டுமா? படியோ பிழைத்து, வாழ்க்கையுடன் சமாதானம் செய்ததை, அந்த மனைவிக்குப் பிறந்த குந்தை நான்தான் என்பதை, சொல்லட்டுமா?''

என் காலுக்கடியில் நிலம் நழுவியதுபோல் தோன்றிய வானம் பிளந்து தலைமீது விழுந்துவிட்டதோ என்று நடுக்க ஏற்பட்டது. கண்களில் நீர் கிர்ரென்று சுழன்றது. இது... இதெல் லாம் உண்மைதானா? என் தாய் என்னிடம் சொன்னது எல்லாம் பொய்தானா?

★ ★ ★

''அம்மா... உன்னிடம் சில கேள்விகளைக் கேட்பேன் உண்மையைச் சொல்வாயா?'' நேரடியாகக் கேட்டேன்.

''கேளும்மா'' என்றாள்.

என் இதயம் வேகமாகத் துடித்துக் கொண்டிருந்தது. ''நீயு அப்பாவும் எதுக்காகப் பிரிந்துவிட்டீர்கள்? எதனால் அப்பா உன்னை விட்டுவிட்டார்? அப்பா உயிரோடு இருக்கும் விஷ யத்தை இதுவரை என்னிடம் ஏன் சொல்லவில்லை? என்னையு அப்பாவையும் சந்திக்க விடாமல் செய்தது ஏன்?''

அம்மா திக்பிரமை அடைந்தவளாய் ஒரு நிமிடம் அப் படியே நின்றுவிட்டாள். பிறகு தயங்கிக் கொண்டே சொ னாள், ''எங்க இருவருக்கும் சில விஷயங்களில் கருத்து வே றுமைகள் இருந்ததால் பிரிந்துவிட்டோம்.''

''பொய்'' கத்திவிட்டேன், ''நீங்க இருவரும் கருத்து வே றுமை வந்ததால் பிரிந்துபோகவில்லை. உனக்கு யாருடனோ கள்ளத் தொடர்பு இருந்தது. அந்த விஷயம் அப்பாவுக்கு தெரிந்ததால் பிரிந்துவிட்டீர்கள். இது உண்மையா இல்லையா''

''நான் சொல்ல வந்தது...''



''நான் கேட்ட கேள்விக்குப் பதில் நேராகச் சொல்லு. இருந்ததா இல்லையா?''

''இ... இருந்தது.''

நிலம் இரண்டாகப் பிளந்து நான் அதில் புதைந்து போய் விட்டால் நன்றாக இருக்குமென்று தோன்றியது. விழிகளில் தன்னிச்சையாக நீர் சுழன்றது.

நான் எழுந்து நின்று கொண்டேன். அம்மா மேலும் ஏதோ சொல்லப் போனாள்.

''நீ ஒன்றும் சொல்லவேண்டிய அவசியமில்லை. நீ தவறு செய்துவிட்டாயே என்ற வருத்தமும் எனக்கில்லை. ஆனால் நான் என் தந்தையை ஒரு தடவை பார்க்கணும். அவர் உன்னை மறுத்திருக்கலாம். ஆனால் அவரை நான் ஒரு தடவையாவது சந்திக்கவேண்டும் என்று நினைக்கிறேன்.''

அம்மா அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''இதெல்லாம் எனக்கு எப்படித் தெரியும் என்று நினைக் கிறாயா? பிரகாஷ் யாரென்று நினைக்கிறாய்? உன் கணவரின் இரண்டாவது மனைவிக்குப் பிறந்தவன்; என்னுடைய தம்பி.''

அம்மாவின் உடல் மெலிதாக நடுங்கிக் கொண்டு இருப் பதை என்னால் உணர முடிந்தது. வெளியில் கிளம்பும் முன் கடைசியாகச் சொன்னேன்.

''பெண் உரிமைகளுக்காகப் போராடும் இயக்கங்களின் சார்பில் நான் வாதாடி இருக்கலாம். அதுக்காகப் பெண்கள் செய் யும் தவறுகளை என்னால் நியாயப்படுத்த முடியாது. எந்த வழி யும் இல்லாமல் தவறு செய்யும் பெண்களைக் கண்டால் இரக்கம் ஏற்படுமோ என்னவோ! ஆனால் உன்னைப்போல் எல்லாம் சரியாக இருந்தும், நேசிக்கும் கணவன் கிடைத்தபிறகும், வெறும் ஈர்ப்புக்கோ, கவர்ச்சிக்கோ அடிமையாகித் தவறானப்

பாதையில் செல்லும் பெண்களை என்னால் மன்னிக்க முடியாது. ஒரு தாய் என்ற முறையில் இத்தனை நாள் என்னை வளர்த்து ஆளாக்கியதற்கு தாங்க்ஸ்! நீ செய்த காரியத்துக்கு, தற்கொலை செய்துக்க முயற்சித்த என் தந்தையின் உருவம் என் கண்களுக்கு முன்னால் தோன்றுகிறது. உன்னை எந்த அளவுக்கு நேசித்திருந்தால் அவர் அப்படி செய்திருப்பார்? அப்படிப்பட்ட தந்தையை என்னால் மறக்க முடியாது... நான் போகிறேன்.''

வெளியில் வந்து காரை ஸ்டார்ட் செய்துகொண்டே யோசித்தேன். பாஸ்போர்ட் கையில் வரும் வரையில் சிநேகிதியின் வீட்டில் தங்கியிருக்க முடிவுசெய்தேன். மறுபடியும் வீட்டுக்குள் காலடி எடுத்து வைக்க விரும்பவில்லை.

கேட் வழியாக கார் வெளியேறும்போது 'ரியர் வ்யூ மிர்ரி'ல் வாசலில் நின்றிருந்த அம்மாவின் உருவம் தெரிந்தது.

தனியாக, மவுனமாக வாசற்கதவில் சாய்ந்து நின்றிருந்தாள். கார் முன்னால் போகப் போக அவளுடைய உருவம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து போயிற்று.

* * *

அத்தியாயம் - 2

## அகல்யா சொன்ன கதை

1

**ம**கிழ்ச்சியாக இருப்பது என்றால் வேதனையின்றி இருப்பது என்று அதுவரை நான் நினைத்திருந்தேன். என் இருபத்து ஆறாம் வயதில்தான் அந்த எண்ணம் தவறானது என்று புரிந்துகொண்டேன்.



எங்கள் வீட்டில் அம்மா, அப்பா, அண்ணன் மற்றும் நான். ரொம்ப சந்தோஷமான குடும்பம் எங்களுடையது. அண்ணனும் நானும் படிப்பில் சிறந்து விளங்கினோம்.

திடீரென்று ஒரு நாள் அண்ணன் காதல் திருமணம் செய்து கொண்டு அண்ணியை வீட்டுக்கு அழைத்து வந்தான். அதுவரை எங்கள் குடும்பத்தில் எந்தச் சச்சரவும் வந்ததில்லை. அண்ணன் இப்படிச் செய்வான் என்று கனவிலும் நாங்கள் நினைக்கவில்லை. அந்த அதிர்ச்சியினால் அப்பாவுக்கு நெஞ்சுவலி வராமலிருந்தது எங்களுக்கு ஓரளவு ஆறுதலைக் கொடுத்தது.

அண்ணியின் பெயர் ராக்காயி... ஆமாம் ராக்காயிதான். அண்ணன் அந்தப் பெண்ணை அறிமுகப்படுத்திக் கொண்டே அவளுடைய பெயரைச் சொன்னபோது திக்பிரமை அடைந்தேன்.

என் கண்களில் தெரிந்த அதிர்ச்சியை அண்ணன் கவனிக்கவில்லை. அண்ணி உணர்ந்துகொண்டு விட்டாள் போலும்! மெலிதாக இதழ்களை விரித்து புன்னகைத்தாள். தன் பெயரைக் கேட்டதும் எதிராளியின் கண்களில் தெரியும் அதிர்ச்சியை, புன்னகையுடன் ஏற்றுக்கொள்வது அவளுக்குப் பழக்கமாகி இருக்கவேண்டும்.

எது எப்படியிருந்தாலும் அண்ணன் இப்படி நடந்து கொள்வான் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. ரொம்ப நல்ல பையனாக இருந்தான். படிப்பைத் தவிர வேறு உலகம் தெரியாதவனாக இருந்தான். அப்படிப்பட்டவன் இந்த ''துணிச்சல்'' மிகுந்த முடிவை ஏன் எடுத்தான் என்று எங்களுக்குப் புரியவில்லை.

'துணிச்சல் மிகுந்த' என்று நான் குறிப்பிட்டதற்குக் காரணம் அவள் பெயர் ராக்காயி என்பதால் இல்லை.

ஏற்கெனவே அவள் வேறு ஒருவனுடன் குடித்தனம் செய்தவள் என்பதால்கூட இல்லை.

அவன் விவாகரத்து பெறாததால்...

காதல் என்ற பெயரில் வீட்டில் சொல்லாமல் ஓடிப் போ திருமணம் செய்துகொள்ளாமலேயே இரண்டு வருடங்கள் கு பம் நடத்தி, கருத்து வேற்றுமை வந்ததால் அவனைப் பிரி வந்த பெண்ணாக இருந்ததால்...

நீங்களே சொல்லுங்கள், ஒரு நடுத்தர குடும்பத்தில் இ விட அதிர்ச்சியான விஷயம் வேறு ஏதாவது இருக்க முடியு

★ ★ ★

## 2

அண்ணன் வேறு ஜாதியில் திருமணம் செய்து கொண்டு வந்ததும், என் பெற்றோர்கள் என்னுடைய திருமணத்துக்கு அவசரப்பட்டார்கள்.

இதுபோன்ற விஷயங்களை மறைப்பது ரொம்பக் கஷ்ட என்பது அனுபவத்தில் புரிந்துகொள்ள முடிந்தது. எப்படியோ அண்ணனின் கலப்புத் திருமண விஷயத்தை மறைத்து (அண்ண யின் பெயரையும் சேர்த்து) என் திருமணத்தை முடித்தார்கள்.

என் பெற்றோர்கள் அண்ணனை வீட்டைவிட்டு வெளியே போகச் சொல்லவில்லை. இந்த வயதான காலத்தில் மகனை பிரிந்து தனியாக வாழ அவர்களால் முடியாது. அதான் பிடிக்க விட்டாலும் அண்ணியை மருமகளாக ஏற்றுக்கொண்டு விட்டா கள்.

நான் சொல்ல வந்தது அண்ணன், அண்ணியின் குடு தனத்தைப் பற்றியில்லை. என் வாழ்க்கையில் அண்ணியி



பங்கு என்ன என்பது பற்றி மகிழ்ச்சி இல்லாமல் இருப்பது என்றால் என்னவென்று நான் உணர்ந்து கொண்டது பற்றி!

நான் என்றும் ப்ரொஃபெஷனல் எழுத்தாளர் இல்லை. நிகழ்ச்சிகளைக் கோர்வையாக எழுத எனக்குத் தெரியாது. நான் எழுதிய கதையில் சில பக்கங்களைப் படித்ததும், "இதில் என்ன இருக்கு? எல்லா வீடுகளிலும் நடக்கிறது தானே" என்று நீங்கள் நினைத்துக் கொள்ளலாம், உண்மைதான்.

முதல் பாதி அப்படியே இருக்கலாம்.

ஆனால் அதன்பிறகு நடந்ததெல்லாம் மட்டும், "ஒவ்வொரு வீட்டிலும்" நிகழக்கூடியது இல்லை.

ஒவ்வொரு பெண்ணின் மனதிலும் நிகழ்வது.

★ ★ ★

## 3

என் கணவர் ரொம்ப ரசனையுள்ளவர் என்று சொல்ல முடியாவிட்டாலும் என்மீது அளவு கடந்த அன்பு கொண்டவர் என்பதை திருமணம் ஆன பத்து நாட்களுக்குள் உணர்ந்துகொண்டேன்.

சமையலறையில் நான் தனியாக இருக்கும்போது, திடீ ரென்று பின்னாலிருந்து வந்து அணைத்துக் கொள்வதோ, உணவு மேஜையருகில் யாருக்கும் தெரியாமல் என்னை சீண்டுவதோ... இப்படி சின்னச் சின்ன நெகிழ்வுகள் எதுவும் அவருக்குத் தெரி யாது. அதெல்லாம் நான் புத்தகத்தில்தான் படித்திருக்கிறேன்.

எங்களுக்கு என்று தனியாக ஒரு அறையை ஒதுக்கியிருந்த தால் தனிமை கிடைப்பதில் எந்தப் பிரச்சினையும் இருந்ததில்லை.

மாமியார், பெரிய மச்சினர், அவர் மனைவி, காலேஜ் ப
கும் நாத்தனார், நானும் என் கணவரும்... மொத்தம் ஆறு ந
களைக் கொண்ட கூட்டுக் குடும்பம் எங்களுடையது.

என் கணவரிடம் எனக்குப் பிடிக்காத ஒரு விஷயம் இரு
தது. ஞாயிற்றுக்கிழமையாக இருந்தாலும், மதிய வேளைய
ரெஸ்ட் எடுத்துக் கொள்ளும் நேரத்தில் படுக்கை அறை கதவை
சாத்துவதற்குத் தயங்குவார். எல்லோரும் என்ன நினைத்து
கொள்வார்களோ என்று சங்கோஜப்படுவார்.

எனக்கும் அந்த ''வேட்கை'' அதிகமாக இருந்ததில்லை
ஆனால் ஒரு பத்து நாட்களாவது அவருடன் சேர்ந்து வெளி ஊ
களுக்குப் போய்விட்டு வரவேண்டுமென்ற விருப்பம் ஏற்ப
டது. அந்த வீட்டுச் சூழ்நிலையைப் பார்த்த பிறகு அந்த விரு
பம் மேலும் வலுவடைந்தது.

புகுந்த வீட்டில் காலடி எடுத்து வைத்து ஒரு மாதம் ஆ
பிறகும் அவர் அந்தப் பேச்சை எடுக்காததால், நானாக ஒருநா
அவரிடம் கேட்டேன்.

''என்னங்க... ஜாலியாக ஒரு பத்து நாள் எங்கேயாவ
போய்விட்டு வரலாமா?''

''ஹனிமூனுக்குப் போகலாமா என்று கேட்கிறாய்
அப்படித்தானே'' என்றார்.

வெட்கத்துடன் தலையைக் குனிந்த என்னை அருகி
இழுத்துக் கொண்டே, ''அம்மாவும் அதைத்தான் கேட்கிறா
எங்கேயும் போகலையா என்று. ஆனால் அண்ணாவும்
திருமணமானது முதல் ஊரில்தானே இருக்கிறார். நாமு
கிளம்பிப் போய்விட்டால் எப்படி? அண்ணன் வந்ததும்
போகலாம்?'' என்றார்.

இத்தனை சின்ன விஷயம் எனக்குத் தோன்றாமல் போ
தற்கு என்னை நானே கடிந்து கொண்டேன். மாமியாருக்



இந்த விஷயம் நினைவில் இருந்ததற்குப் பெருமையாக இருந்தது.

அந்த மகிழ்ச்சியில் ''ஹனிமூன்'' விஷயத்தை அப்படியே மறந்துவிட்டேன்.

''அட்ஜெஸ்ட்மெண்ட்'' – அது மனதைத் தற்காலிகமாக திருப்திப்படுத்தி, சாசுவதமாக உணர்வுகளை இழக்கச் செய்யும் கருவியென்று அடுத்து வரும் பத்து நாட்களுக்குப் பிறகு தெரிந்து கொண்டேன்.

ஒருநாள் இவர் ஆபீசிலிருந்து வந்ததும், ''சினிமாவுக்குப் போகலாமா?'' என்று கேட்டேன். எந்த மூடில் இருந்தாரோ உடனே சம்மதித்தார். மளமளவென்று தயாராகி கிளம்பும் முன், மாமியாரிடம் சொன்னேன்.

''என்னைக் கொஞ்சம் ஸ்கூட்டரில் அந்த மருந்துக் கடை வரை கொண்டு விட்டுடுப்பா... அப்புறமாய் வந்து மருமகளை சினிமாவுக்கு அழைத்துக்கிட்டுப் போ'' என்றாள் மாமியார்.

பதட்டமடைந்து விட்டார் என் கணவர், ''என்னம்மா? என்ன ஆச்சு?''

''ஒன்றுமில்லை தம்பி, கொஞ்சம் மூச்சு இரைக்கிறது. அது வழக்கமாய் வர்றதுதானே. மாத்திரை போட்டுக் கொண்டால் சரியாகப் போய்விடும். அதான் மருந்து வாங்கலாம்னு கிளம்பினேன்'' என்றாள்.

அவர் தயங்குவதைப் பார்த்து, ''கிளம்புப்பா... லேட்டாகி விட்டால் உங்களுக்கு சினிமாவுக்கு டிக்கெட் கிடைக்காது'' என்று அவசரப்படுத்தினாள்.

எனக்கு ஏனோ கில்டியாக இருந்தது. ''உங்க உடம்புக்கு முடியாதபோது எங்களால் எப்படி சினிமாவுக்குப் போக முடியும்? உங்க மகன் மருந்துகளை வாங்கிக்கொண்டு வருவார். நீங்க

கட்டிலில் படுத்துக் கொண்டு நன்றாக ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்'' - மனப்பூர்வமாகச் சொன்னேன்.

''ச்ச... ச்ச... எனக்கு இந்த மூச்சு இரைப்பு வழக்கமாய் வர்றதுதான். இதுக்காக நீங்க சினிமாவுக்குப் போகாமல் இருப் பானேன்?'' - நொந்து கொண்டே சொன்னாள் மாமியார்.

நான் வேண்டாமென்று மறுப்பதும், கட்டாயம் போயிட்டு தான் வரணும் என்று மாமியார் வலியுறுத்துவதுமாகப் பேச்சு வார்த்தைகளிலேயே சினிமா நேரம் கடந்துவிட்டதால், அந்த விதமாக அந்தப் பிரச்னைக்குத் தீர்வு கிடைத்தது. இந்தச் சர்ச்சை நடந்து கொண்டு இருந்தபோது என் நாத்தனார் ஹாலில் சோபா வில் அமர்ந்துகொண்டு சாவகாசமாக 'ஃபெமீனா' புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். ஓர்படி சமையல் அறையில் வேலை செய்து கொண்டிருந்தாள்.

ஏனோ எனக்குக் கொஞ்சம் வருத்தமாக இருந்தது. அதற் குள் கடவுளே அனுப்பி வைத்த மாதிரி அண்ணாவும், அண்ணி யும் வந்தார்கள். எல்லோரும் கலகலவென்று பேசிக் கொண் டிருந்தோம். என் கணவரும், அண்ணனும் ஹாலில் உட்கார்ந்து கொண்டு பேச்சில் மூழ்கி விட்டார்கள்.

உள்ளே என்னுடைய மாமியார் அண்ணியைக் கேள்வி களைக் கேட்டு அன்புடன் திணற அடித்துக் கொண்டிருந்தாள்.

அண்ணிக்கு 'ராக்காயி' என்ற பெயரை ஏன் வைத்தார்கள் என்பதிலிருந்து, அண்ணனைக் காதல் திருமணம் செய்து கொண்டது வரை விடாமல் கேள்வி கேட்டுத் துளைத்து எடுத்துக் கொண்டிருந்தாள். அண்ணி சங்கடமாக உணர்ந்ததைப் புரிந்து கொண்டு, ஏதோ ஒரு சாக்கு சொல்லி அவளை என்னுடைய அறைக்கு அழைத்து வந்தேன்.

''எப்படி இருக்கு புது குடித்தனம்?'' அண்ணி கேட்டாள்.



''நல்லாயிருக்கு'' வெட்கப்பட்டுக் கொண்டே தலையை அசைத்தேன்.

ஏனோ எனக்கு அண்ணியை ரொம்ப பிடித்துவிட்டது. அண்ணியை வீட்டுக்கு அழைத்து வருவதற்கு முன்னாடி, அண்ணா என்னையும், அப்பா அம்மாவையும் உட்கார வைத்து தான் திருமணம் செய்துகொள்ளப்போகும் விஷயத்தைச் சொன்ன போது, அவனைவிட முட்டாள் யாரும் இருக்க மாட்டார்கள் என்று நினைத்தேன்.

அப்பா கல்லாகச் சமைந்துவிட்டார். அம்மா 'ஹோ' வென்று அழத் துவங்கிவிட்டாள். ''கல்யாணம் கார்த்திகை எது வும் செய்துகொள்ளாமல் யாருடனோ இரண்டு வருடங்கள் குடித்தனம் செய்தவளை இந்த வீட்டுக்கு மருமகளாக அழைச்சுக் கிட்டு வர்றேன்னு சொல்றியே உனக்கே இது நியாயமா இருக்கா? நான் கிணற்றில் விழுந்து சாகப் போகிறேன்'' என்று மார்பில் அறைந்து கொண்டே அம்மா கத்தினாள்.

''இதையெல்லாம் முன்னாடியே உங்களிடம் தெரிவிக்கச் சொல்லி அவள்தான் சொன்னாள். சில நாட்கள் அவளுடன் பழகி னால் அவளைப் பற்றி உங்களுக்கே தெரிந்து விடும்'' அண்ணன் சுருக்கமாகத் தெரிவித்தான்.

அம்மாவின் உண்ணாவிரதமும், அப்பாவின் மிரட்டல்கள் எதுக்கும் அசைந்து கொடுக்கவில்லை. அண்ணனின் திருமணம் நடந்து முடிந்தது.

''என் விஷயம் இருக்கட்டும் அண்ணி... நீங்க சொல்லுங் கள் எப்படி இருக்கு உங்க குடித்தனம்?'' அண்ணியிடம் கேட் டேன்.

''உங்க அண்ணாவைப் பற்றி உனக்குத் தெரியாதா? உலகத் தில் நல்லவர்களாக இருக்கும் மிகச் சிலரில் அவரும் ஒருவர்'' என்றாள் அண்ணி.

அந்தக் குரலில் இருந்த நேர்மையை என்னால் உணர முடிந்தது

''நான் கேட்டது அம்மாவைப் பற்றி'' என்றேன்.

''பெரிசாக ஒன்றுமில்லை'' என்றாள் சுருக்கமாக.

நானும், என் கணவரும் சினிமாவுக்குப் போகலாமென்று லெம்பியதை, மாமியாருக்கு மூச்சு இரைப்பு ஏற்பட்டதா அந்தப் 'புரோகிராம் கான்ஸல்' ஆன விஷயத்தைச் சொன்னேன்

எல்லாம் கேட்டுவிட்டு, ஒரு நிமிடம் மவுனமாக இருந் வள், பிறகு கேட்டாள்.

''அத்தனை மூச்சு இரைப்பு இருப்பவள் என்னுடன் அ தனை நேரம் விடாமல் எப்படிப் பேசினாள்?''

உண்மைதான். அதுவரைக்கும் இந்த விஷயம் என் கவன துக்கு வரவில்லை.

அண்ணி மேலும் சொன்னாள்: ''தெருமுனையில் இரு கும் மருந்துக் கடைக்கு உன் நாத்தனாரை அனுப்பியிருக்கலாமே அது போகட்டும், அவங்களை மருந்துக் கடை வாசலில் இறக் விட்டு, மறுபடியும் வீட்டுக்கு வந்து உன்னை சினிமாவுக் அழைத்துக் கொண்டு போவதாவது? மூச்சு இரைப்பால் அவதி பட்டுக் கொண்டு இருப்பவள் மருந்துக் கடையிலிருந்து வீ டுக்கு நடந்து வருவாளாமா? இதெல்லாம் உன்னிடம் இர சுத்தைப் பெறுவதற்காகச் செய்யும் முயற்சிகள்.

அண்ணி கிளம்பிப் போனபிறகும் யோசனைகள் என்னை விடவில்லை. இந்த முறை நான் யோசித்தது என் மாமியாரை பற்றி இல்லை. என் நாத்தனாரைப் பற்றி. யாராவது அவளிட உன்னுடைய பொழுதுபோக்குகள் என்ன என்று கேட்டா ''பேசுவது, கேட்பது'' என்று சொல்வாள் என்று நினைக்கிறேன்

சினேகிதிகளுடன் விடாமல் அரட்டை அடிப்பது அ ளுடைய வழக்கம். படிப்பு பற்றியோ, இலக்கியத்தைப் பற்றியோ



அந்தப் பெண் பேசி நான் பார்த்தது இல்லை. லேட்டஸ்ட் ஃபாஷன், சினிமா ஷாபிங்... இவையெல்லாம் தான் அவள் பேசும் விஷயங்கள். இது பொறுப்பற்ற தன்மை தானே தவிர ஆபத்தை விளைவிக்கக் கூடிய சமாசாரம் இல்லையென்று எனக் கும் தெரியும். சொல்லப் போனால் இந்தக் காலத்தில் பெரும் பாலான பெண்கள் இப்படித்தான் இருக்கிறார்கள்.

ஆனால் என் மாமியார் தப்பி தவறிகூட மகளை அழைத்து எந்த வேலையும் செய்யச் சொல்லாதது எனக்கு வியப்பை அளித் தது. மகள் சினேகிதிகளுடன் அரட்டை அடிப்பதை மகிழ்ச்சி யாக பார்த்துக் கொண்டிருப்பாள்.

''என்னவோப்பா, இந்தக் காலத்துப் பெண்களே இப்படித் தான்'' என்று மகளைச் செல்லமாகக் கோபித்துக் கொள்வதைப் பார்க்கும்போது எனக்கு வேடிக்கையாக இருந்தது. மேலும் மக ளுடைய சினேகிதிகளுக்குக் காபி, டிபன் எல்லாம் கொடுத்து, கடமை தவறாமல் உபசாரம் செய்வாள்.

எங்கள் வீட்டில் இப்படி இருந்ததில்லை. எனக்கோ, அண்ணாவுக்கோ அதிகமாக ஃபிரண்ட்ஸ் இருந்தது கிடையாது. தேவையானாலொழிய யாரும் வீட்டுக்கு வரும் வழக்கம் இருந்தது இல்லை. முச்சந்தியில் நின்று கொண்டு நண்பர்க ளுடன் அரட்டை அடிக்கும் பழக்கம் அண்ணாவுக்கும் கிடை யாது. நண்பர்களுடன் பேசும்போது, படிப்பு பற்றியோ, கோர்ஸ் களைப் பற்றியோ தான் சர்ச்சைகள் நடக்கும். வெட்டியாகப் பேசி பொழுதைக் கழிப்பதற்கு அம்மா ஒருநாளும் ஊக்கம் அளித்திருக்க மாட்டாள் என்று எனக்குத் தெரியும்.

ஒரே மகள்தானே என்று அம்மா எனக்கு செல்லம் கொடுத் தது இல்லை. அன்புடன் வளர்ப்பது வேறு; செல்லமாக வளர்ப் பது வேறு. வீட்டு வேலைகளை தினசரி செய்யாவிட்டாலும், எப்படி செய்யவேண்டும் என்று தெரியும் அளவுக்கு அம்மா என்னை வளர்த்திருந்தாள்.

என் நாத்தனாருக்குக் காலையில் ஒன்பதரைக்குக் கல்லூ ரிக்குப் போகவேண்டும். எட்டரை மணிக்குமேல் நிதானமாக எழுந்து கொள்வாள். அதற்குள் மாமியார் குளியல், பூஜை விவ காரங்களை முடித்துக்கொண்டு சமையலைத் தொடங்கியிருப் பாள். நானும், ஓர்படியும் கறிகாய் நறுக்குவது, மிக்ஸியில் அரைத்துத் தருவது போன்ற சுற்று காரியங்களைச் செய்து வந் தோம். என் நாத்தனார் ஒன்பது மணிக்குக் குளித்துத் தயாராகி, உணவு மேஜை அருகில் தன்னுடைய தாயாரை பம்பரமாக நாட்டியமாட வைப்பாள்.

''ஏற்கெனவே காலேஜுக்கு லேட்டாகி நான் திண்டாடி கிட்டிருக்கேன். நீ இன்னும் சமையலை முடிக்கவில்லையா?'' என்று கத்தி ஆர்பாட்டம் செய்வாள்.

''சீக்கிரமாக எழுந்துகொண்டு காலேஜுக்கு நேரத்துடன் புறப்படுவதற்கென்ன?'' என்று மாமியார் மகளை கடிந்து கொள்ளாமல், ''அய்யோ! குழந்தை அரை வயிற்றுடன் காலே ஜுக்குப் போகிறாயே'' என்று தவிக்கும்போது நான் வெறும் பார்வையாளராக நின்று கொண்டிருப்பேன்.

ஏனோ என்னால் அந்த விஷயத்தை சரியென்று ஒப்புக் கொள்ள முடியவில்லை. வயதான காலத்தில் தாய் சமையல் அறையில் திண்டாடிக் கொண்டிருக்கும்போது, கூடமாட உதவி செய்யாது அந்தப் பெண், அதான் என் நாத்தனார் ராணி மாதிரி அதிகாரம் செய்வதும், தாயை வேலை வாங்குவதும் எனக்குப் பிடிக்கவில்லை.

கிட்டத்தட்ட என் வயதை ஒத்தவளாக இருப்பதால் அவ ளிடம் எடுத்துச் சொல்வோம் என்று நினைத்தேன். அது தவறான விளைவுகளை ஏற்படுத்தும் என்று நான் அப்பொழுது எதிர் பார்க்கவில்லை.

★ ★ ★



எங்கள் மாமியார் வீட்டுக்கு யாராவது வந்துகொண்டே இருப்பார்கள். உறவுக்காரர்கள், நண்பர்கள், அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள், வெளியூரிலிருந்து வரும் விருந்தாளிகள் இப்படி யாராவது ஒருத்தர், சொல்லாமல் கொள்ளாமல் நேரங் காலம் இல்லாது விஜயம் பண்ணுவார்கள்.

எந்த நேரத்தில் யார் வந்தாலும் அவர்களுக்கு வேளைக்குத் தகுந்தாற்போல் சாப்பாடோ, காபி டிபனோ சகலவிதமான உப சாரங்களைச் செய்யவேண்டியதுதான். வந்தவர்களில் யாராவது சுமங்கலிப் பெண்ணாக இருந்தால் என் மாமியார் வெற்றிலைப் பாக்குடன், பழங்களும் ரவிக்கைத் துணியையும் வைத்துக் கொடுக்காமல் அவர்களை அனுப்ப மாட்டாள். என் ஓர்படியோ அல்லது நானோ இந்த வேலையை ஏற்றுக் கொண்டு வழக்கம் மாறாது செயல்படுத்தி வந்தோம்.

வெளியூரிலிருந்து வந்தவர்களாக இருந்தால் தங்களுடைய சொந்த வீடு என்பதுபோல் உரிமையாக சில நாட்கள் தங்கிவிட்டுச் செல்வார்கள். அதே ஊரிலிருக்கும் உறவினர்களாக இருந்தால், காலையில் வந்து மாலைவரையில் இருந்துவிட்டுச் செல்வார் கள்.

கல்யாணமான புதிதில் கணவர் வங்கிக்குக் கிளம்பிச் சென்றபிறகு, இப்படி யாராவது வீட்டுக்கு வந்தால் எனக்கும் பொழுதுபோக்காக இருந்தது. ஆனால் போகப் போக ரொம்ப போரடிக்கத் துவங்கியது. வெட்டிப் பேச்சுக்களில் நேரம் வீணாவது போல் உணர்ந்தேன்.

புதிய மனிதர்களுடன் அதிகமாகப் பேசும் பழக்கம் எனக்கு இல்லாததால், புத்தகத்தையோ, பேப்பரையோ படித்துக் கொண்டே நடுநடுவில் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தேன்.

யாராவது வந்தபோது, மாமியார் சமையல் அறையில் வேலை செய்துகொண்டிருப்பதும், நான் ஹாலில் உட்கார்ந்து

கொண்டு பேப்பர் படித்தபடியே நடுநடுவில் பேசுவதும் எனக் ஏனோ சங்கடத்தை ஏற்படுத்தியது. வந்தவர்களில் ஒருத்தர் தாங் மாட்டாது வாயைத் திறந்து கேட்டுவிட்டாள்.

''இரண்டு மருமகள்கள் வந்தபிறகும் வீட்டுப் பொறுப்புக உன்னை விடவில்லை போலிருக்கே?''

எனக்கு ரொம்ப தலைகுனிவாக இருந்தது. அவர்களு கென்ன தெரியும்? நான் வேலைகளைச் செய்ய முன்வந்தாலு மாமியார் ஒத்துழைக்க மாட்டாளென்றும், வேலை செய்யு விதமும் அவர்களுக்குப் பிடிக்கவில்லை என்றும் எல்லோரி மும் பறைசாற்றிக் கொண்டிருக்க முடியுமா என்ன?

''வந்த புதிசுதானே. சின்ன மருமகளுக்கு இநத வீட்டு பழக்க வழக்கங்கள் இன்னும் புரிப்படவில்லை. போகப் போகு தானே எல்லாம் புரிந்துகொள்வாள்'' என்று சமாதானப்படுத் வதுபோல் மாமியார் அவளிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அதைக் கேட்டதும் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. முதல் முறையாக மாமியாரின் சுபாவம் என்னவென்று கொஞ்ச புரிந்துவிட்டாற் போலிருந்தது. இதைவிட பெரிய அதிர்ச்சி ஒன்று எனக்காக மறுநாள் காத்துக் கொண்டிருப்பதை நான் அப் பொழுது உணரவில்லை.

★ ★ ★

# 4

என் மச்சினர் வீட்டுக்கு வந்தபோது நானும், என் கணவரும் வீட்டில் இல்லை. வீட்டுக்குச் சில பொருட்கள் வாங்க கடைத் தெருவுக்குச் சென்றிருந்



தோம். பொருட்களை தேர்ந்தெடுத்து வாங்கிக் கொண்டு வீடு திரும்பியபோது தமிழ் சினிமாவில் கடைசி காட்சி நடைபெறு வதுபோல் சூழ்நிலை சந்தடியாக இருந்தது.

மச்சினரைச் சுற்றி எல்லோரும் அமர்ந்து பேசிக் கொண்டு இருந்தார்கள். எங்களைப் பார்த்ததும் அவர் மகிழ்ச்சியுடன் வர வேற்றார்.

டூரிலிருந்து வரும்போது வீட்டில் எல்லோருக்கும் புது உடைகளை வாங்கி வந்திருப்பார் போலும். பாய்மீது புதுத் துணிகள் பரப்பினாற்போல் தென்பட்டன.

என் கணவருடன் பேசிக் கொண்டே, ''இது உனக்காக'' என்று ஒரு புடவையை என்னிடம் நீட்டினார்.

தயக்கத்துடனே அதைப் பெற்றுக் கொண்டேன்.

''முன்னாடியே தகவல் தெரிவித்திருந்தால் ஏர்போர்ட்டுக்கு வந்திருப்பேன் இல்லையா?'' என்று என் கணவர் கூறினார்.

''பரவாயில்லை, புதுசா கல்யாணம் ஆனவங்களைத் தொந் தரவு செய்யவேண்டாமேன்னுதான் தகவல் தெரிவிக்கலை'' என்று சிரித்துக்கொண்டே பதிலளித்தார்.

அவர் எல்லோருடனும் கலகலப்பாகப் பழகினாலும், மற்றவர்களுக்கு அவர்மீது மதிப்பு, மரியாதை அதிகமாக இருப் பதைக் கவனித்தேன்.

எல்லோரும் கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்தபோது நான் மட்டும் மௌனமாக அங்கே நிற்பது சங்கடமாக இருந்தது. நான் வாங்கி வந்த பொருட்களை உள்ளே வைக்கும் எண்ணத் துடன் என்னுடைய அறைக்குள் நுழைந்தேன்.

புதிதாக வாங்கி வந்த பெட்லேம்பை பொருத்திவிட்டு கனெக்ஷன் கொடுத்தேன். பழைய பெட்ஷீட்டை எடுத்து விட்டு புதிதை மெத்தைமீது சுருக்கமின்றி விரித்தேன். பழைய பெட்

ஷீட்டை எடுத்து சலவைக்காக வைத்திருந்த துணிகளுட வைக்க எண்ணி வெளியில் வந்தபோது, என் ஓர்படியு மச்சினரும் எதிரில் வந்தார்கள்.

''அவருக்குக் களைப்பாக இருக்காம். கொஞ்சம் ரெஸ் எடுத்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறார். இந்த ரூமி படுத்துக் கொள்ளலாம் இல்லையா?'' – ஓர்படி என்னிடம் கே டாள்.

அவருக்குக் களைப்பாக இருந்தால் ரெஸ்ட் எடுத்து கொள்ள எங்களுடைய படுக்கை அறைதான் கிடைத்தத எனக்குப் புரியவில்லை.

போகட்டும். சரியென்று சொல்ல நினைத்தாலும், நா உள்ளே புதிதாக விரித்த பெட்ஷீட், பெட்லேம்பை அவர்க உபயோகப்படுத்துவார்கள் என்ற எண்ணம் வந்ததும் என் மன சுருக்கென்றது. நான் தயங்குவதைப் பார்த்து என் கணவர் சொ னார்.

''இது அவங்களுடைய அறைதான். அண்ணன் ஊரில் இல்லா தால் இத்தனை நாட்கள் நாம் பயன்படுத்திகிட்டு இருந்தோம்''

ஷாக் அடித்ததுபோல் இருந்தது எனக்கு. அப்படின்ன இத்தனை நாட்கள் அவர்களுடைய படுக்கையில் நாங்க படுத்து கொண்டிருந்தோமா! கசப்பான உணர்வு மனதில் பரவ தொடங்கியது.

என்னுடைய ஓர்படி புது பெட்ஷீட்டை எடுக்கப் போ போது என் கணவர் தடுத்துவிட்டார்.

''இருக்கட்டும் அண்ணி. அண்ணாவுக்கு ஒருபக்கம் தூக்க வரும்போது இதெல்லாம் எதுக்கு?''

அதற்குள் நான் மளமளவென்று என்னுடைய பொரு களை எல்லாம் எடுத்துக்கொண்டு அந்த அறையை விட் வெளியேறினேன்.



பி.பி.சி. சானலில் செய்திகள் வந்து கொண்டிருந்தன. போஸ்னியாவில் செர்புகளின் ஆக்ரமிப்புக்குப் பலியான முஸ்லீம்கள் கும்பல் கும்பலாக எல்லையை நோக்கி சென்றுக் கொண்டிருக்கும் காட்சியை டி.வி.யில் பார்க்கும்போது எனக்குச் சிரிப்புதான் வந்தது.

ஆகமொத்தம் எங்களுடைய சின்ன அறைக்கு குடிபெயர்ந் தோம். அதுவரையில் அந்த அறையை ஸ்டோர் ரூம் என்று நினைத்திருந்தேன். டைனிங் ரூமுக்கும் பால்கனிக்கும் நடுவில் இருந்த அறை அது.

துணிகளை உலர்த்தவோ, எடுக்கவோ அந்த ரூம் வழி யாகத்தான் பால்கனிக்குச் செல்லவேண்டும். தண்ணி வரும் குழாயும் பால்கனியில்தான் இருந்தது. மேற்பார்வைக்கு சாதாரண மாக தென்படும் இந்த இரண்டு விஷயங்களும் எவ்வளவு இடைஞ்சலானவை என்று மறுநாள் எனக்குப் புரிந்தது.

* * *

## 5

எங்கள் மச்சினர்தான் வீட்டுக்குக் காட் ஃபாதர் போன்றவர். அவருடைய அனுமதியில்லா மல் வீட்டில் எதுவும் நடக்காதென்று புரிந்து கொள்ள எனக்கு ரொம்ப நாள் ஆகவில்லை. அவரிடம் கொஞ் சம் உரிமையோடு பழகுவது நாத்தனார் ஒருத்திதான்.

ஓர்படியும் மச்சினரும் பேசிக் கொள்வதை நான் ஒரு நாளும் பார்த்ததில்லை. கணவரின் தேவைகளை உணர்ந்து செயல்படும் பதிவிரதையைப் போல் அவருக்குப் பணிவிடை களைச் செய்து வந்தாள்.

எனக்கும் வீட்டுச் சூழ்நிலை பழகிவிட்டதால் கொஞ் கொஞ்சமாக வீட்டு வேலைகளில் பங்கெடுத்துக் கொள்ள ஆ பித்தேன்.

மாமியார் மெயினாக சமையல் வேலையைக் கவனித் கொள்ளும்போது, நானும் ஓர்படியும் அவள் கீழே வேலை செய்யும் அசிஸ்டெண்டுகளை போல் செயல்பட்டு வந்தோ ஒன்பது மணிக்குள் சமையலை முடிக்க ஏதோ போருக்கு புறப்படுவதுபோல் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியிருந்த அப்படியிருந்தும் ஒருநாளாவது சமையல் நேரத்திற்குள் முடிந் பாடில்லை.

கொஞ்சம் காமன்சென்ஸ் உபயோகித்து செயல்பட்டா அந்த வேலையை ரொம்ப எளிதாக முடித்து விடலாம்தா ஆனால் வீட்டில் ஒருவருக்கும் அந்த யோசனை வராம போனது எனக்கு வேடிக்கையாக இருந்தது.

குளித்த பிறகுதான் சமையலறைக்குள் காலடியெடுத் வைக்கவேண்டும் என்பது அந்த வீட்டின் சட்டம். இருக்கும் ஒ பாத்ரூமில் ஒருவர் பின்னால் ஒருவர் குளித்து சமையல் அறை குள் நுழையும்போது மணி ஏழரை ஆகிவிடும்.

பற்று பாத்திரங்களை இரவே வெளியில் வைத்துவிட்டா காலையில் வேலைக்காரி வந்ததும், தேய்க்கப் போட வசதியா இருக்கும் என்ற யோசனை அதுவரை என் மாமியாருக்கோ ஓர்படிக்கோ வராதது வியப்பாக இருந்தது.

என் நாத்தனாருக்கு மட்டும் சில கட்டுத் திட்டங்களி இருந்து விலக்குகள் அளிக்கப்பட்டிருந்தன. குளிக்காமலேயே காபி அருந்துவது, சமையற்கட்டில் நுழைவது போன்ற சலுகை கள் அளிக்கப்பட்டு வந்தன. அவள் எட்டரை மணிக்கு எழுந் கொண்டதும் காபி குடித்துவிட்டு, குளித்துத் தயாராகி காலே ஜுக்குப் போக வேண்டியிருப்பதால் அவளுக்கு இந்தச் சலுகை களை அளித்திருந்தார்கள்.



சீக்கிரமாகச் சமையலை எப்படி செய்யமுடியும் என்பதை ஜன்ஸ்மன் லெவலில் என் கணவருக்கு ஒருநாள் விளக்கிச் சொன்னேன்.

''அம்மாவின் மடி, ஆசாரம் பற்றி உனக்குத் தெரியாதா? குளிக்காமல் சமையல் அறைக்குள் நுழைவதை விரும்ப மாட்டாள்'' என்றார்.

''போகட்டும். உங்கள் தங்கையைச் சீக்கிரமாக எழுந்து கொண்டு பற்றுப் பாத்திரங்களை ஒழித்துப் போடச் சொல்லுங்கள். அதற்குள் நான் கறிகாயை நறுக்கி வைத்துவிடுவேன். பத்து நிமிடங்களாவது மிச்சப்படும் இல்லையா?'' என்றேன்.

ஒரு நிமிடம் மௌனமாக இருந்துவிட்டுப் பிறகு சொன்னார்.

''இதோ பாரு. இதுவரைக்கும் நாங்க எங்கள் தங்கையை ஒரு வேலையும் செய்யச் சொன்னதில்லை. நாளைக்குக் கல்யாணமான பிறகு புகுந்த வீட்டுக்குப் போனால் அங்கே எப்படி இருக்குமோ என்னவோ? அதான் அவள் இங்கே இருக்கும் வரை அவளுக்கு எந்தப் பிடுங்கலும் இல்லாமல் பார்த்துக் கொள்ளணும் என்று நினைக்கிறோம். இனி ஒருநாளும் வீட்டு வேலைகள் செய்யும் விஷயத்தில் அவள் பேச்சை எடுக்காதே'' உரையாடலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதுபோல் எழுந்து சென்று விட்டார்.

திருமணம் ஆனபிறகு முதல் தடவையாக எனக்குக் கோபம் வந்தது.

இவருடைய உத்தேசம்தான் என்ன? நாங்க மட்டும் பிறந்த வீட்டில் அபூர்வமாக வளர்ந்தது இல்லையா? மற்றவர்களின் பிடுங்கல்களை நாங்க ஏன் ஏற்றுக் கொள்ளணும்? திருமணம் செய்து கொண்டால், மற்றவர்களின் பொறுப்புகளையும் நாங்கதான் சுமக்க வேண்டுமா? நினைக்க நினைக்க என் உள்ளம் கொதித்தது.

''உனக்கு இங்கே ஏதாவது கஷ்டமாக இருக்காம்மா'' மறுநாள் மாமியார் என்னிடம் நயமாகக் கேட்டாள்.

''கஷ்டமா? எனக்கா? எந்த விஷயத்தில்?'' புரியாதவளாக் கேட்டேன்.

''வீட்டுவேலைகள் விஷயத்தில்... இல்லை இந்த வீட்டு பழக்கவழக்கங்களில் ஏதாவது இடைஞ்சல்...''

எதுக்காக இப்படிச் சொல்கிறாளென்று உண்மையிலேயே எனக்குப் புரியவில்லை.

மாமியார் மேலும் சொன்னாள், ''உனக்கு வீட்டுவேலைகள் செய்து பழக்கமில்லைன்னு நினைக்கிறேன். சொன்னாலும் கேட்காமல் நீயாகத்தான் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு இருக்கே. உனக்கு கஷ்டமாக இருந்தால் வேலைகளை செய்ய வேண்டாம். அவனுடன் சண்டை மட்டும் போடாமல் இரு.''

எனக்கு விஷயம் ஓரளவுக்குப் புரிந்தது.

''சண்டை ஒன்றும் போடவில்லை அத்தை. காலை வேளையில் அவசரமாக இருப்பதால், உங்க மகளும் வந்து உதவி செய்தால் சீக்கிரமாக வேலை முடிந்துவிடுமே என்று சொன்னேன். அவ்வளவுதான்'' என்று நேர்மையுடன் சொன்னேன்.

''அதுதாம்மா நானும் சொல்லவந்தேன். பசங்க இருவருக்கும் தங்கை என்றால் உயிர். அவளுக்குக் கொஞ்சம் கஷ்டமெனாலும் அவர்களால் தாங்க முடியாது. நாளைக்கு மாமியார் வீட்டுக்குப் போனால் அந்த வீட்டு மனிதர்கள் எப்படி இருப்பார்களோ என்னவோ? எல்லோரும் உன்னைப் போல் அதிர்ஷ்டசாலிகளாக இருக்க முடியாது இல்லையா? அதான் இங்கே எந்த வேலையும் சொல்லாமல், எந்தக் கட்டுப்பாடுகளையும் வைக்காமல் பார்த்துக் கொள்கிறோம். திருமணம் ஆனால் தானே கற்றுக் கொள்வாள். இப்போ நீ கற்றுக்கொள்ளவில்லையா என்ன? அதிலும் இந்தக் காலத்துக் குழந்தைகள் ரொம்ப சூட்டிகை. ஒ



தடவை பார்த்தால் பிடித்துக்கொண்டு விடுவார்கள். எங்க காலத்தில்...''

மேற்கொண்டு அந்த அம்மாள் சொன்னது எதுவும் என் காதுகளில் விழவில்லை. இதயத்தில் தீப்பற்றி எரிவதுபோல் இருந்தது. என் கணவரைப் பற்றி நினைக்க நினைக்க ஆத்திரம் கட்டுக்கடங்காமல் போயிற்று.

எங்கள் இருவருக்கும் நடுவில் சின்ன கருத்து வேற்றுமை வந்தால், அதை தாயாரிடம் வரை கொண்டுபோய், என்னைக் கெட்டவளாக உருவகப்படுத்துவானேன்? நான் சொன்னதில் தவறென்ன இருக்கு? தங்களுடைய வேலைகள் செய்து கொள்வது அவர்களுக்கே கஷ்டமாக இருந்தால் நான் மட்டும் காலையிலேயே எழுந்து கொண்டு அனைத்து வேலைகளையும் நேரத்திற்குள் செய்து முடிக்கணும்னு ஏன் தவிக்கணும்?

இத்தனையும் இழுத்துப் போட்டுக்கொண்டு செய்தால் என்னைப் போன்ற அதிர்ஷ்டசாலிகள் யாருமே இருக்கமாட்டார்களாமே! புகுந்த வீட்டில் எந்தப் பொறுப்பும் இல்லாமல் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருப்பது போல் மாமியார் பேசியது எனக்கு எரிச்சலை ஏற்படுத்தியது.

என் கணவர் குளிப்பதற்காக பாத்ரூமில் நுழையப் போன போது குறுக்கே கதவை மறைத்துக் கொண்டு நின்றேன்.

''இந்த விஷயத்தை உங்க அம்மாவிடம் சொல்லவேண்டிய அவசியம்தான் என்ன?'' ஆவேசத்துடன் கேட்டேன்.

''எந்த விஷயம்?'' வியப்புடன் கேட்டார்.

''அதுதான்... நாம் நேற்று பேசிக் கொண்டது.''

''நான் எதுவும் சொல்லவில்லையே. என்ன நடந்தது?''

அவர் குரலில் தென்பட்ட நேர்மை, அவர் எதுவும் சொல்லி இருக்கமாட்டார் என்ற உண்மையை தெரிவித்தது. மாமியாரே

ஒட்டுக் கேட்டிருப்பாளோ? இந்த எண்ணம் வந்ததும் எ மேலும் எரிச்சல் ஏற்பட்டது.

இத்தனைக்கும் நாங்கள் இருவரும் குரலைத் தாழ்த் கொண்டுதான் பேசினோம்.

மகனும், மருமகளும் பேசிக் கொள்வதை ஒட்டுக்கே தும் இல்லாமல், என்னையே குற்றவாளியாக்கி, புத்திமதி சொல்ல வந்துவிட்டாளா!

மறுநாள் காலை ஏழுமணி வரை நான் எழுந்துகொள் வில்லை. முதல் நாள் இரவு கணவரை நெருங்கவிடவில் காலையில் அவர் என்னை எழுப்ப வந்தபோது, தலைவலி இருக்கு என்று இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்தேன்.

அவர் போய் மாமியாரிடம் எனக்குத் தலைவலியாக இரு பதைத் தெரிவித்திருப்பார் போலும். உடனே பதட்டத்துடன் அறைக்குள் வந்தாள்.

''எம்மா தலைவலி அதிகமா இருக்கா... எழுந்து வா கொப்பளிச்சுட்டு வா... காபி கலந்து தர்றேன். காபி குடி விட்டு மாத்திரையும் போட்டுக் கொண்டு ரெஸ்ட் எடுத்துக் கொ

அந்தக் குரலில் இருந்த பதட்டத்தை உணர்ந்தேன். நா நடந்துகொண்ட முறையை நினைத்து எனக்கே வெட்கமா இருந்தது.

'பாவம்... வயதானவள், பழக்கத்தோஷத்தில் ஏதாவ சொன்னாலும் நாம் அதை ஏன் பெரிதுபடுத்தணும்? கொஞ் உடம்பு சரியில்லையென்றதும் எப்படி தவிக்கிறாள்?'

இந்த எண்ணம் வந்ததும் எழுந்து கொண்டேன்.

''பரவாயில்லை அத்தை... இந்த வலி எனக்குப் பழ மானதுதான். நான் குளித்துவிட்டு வந்து பாக்கி சமைய பார்த்துக் கொள்கிறேன்'' என்றேன்.



''சொன்னாக் கேளு... கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கொள்'' என்று மாமியார் தடுத்ததை நான் காதில் வாங்கிக் கொள்ள வில்லை.

''பார்த்தாயா? எங்க அம்மா எவ்வளவு நல்லவள் என்று இப்போதாவது புரிந்ததா? சண்டை போடணும்னா ஒரு நிமிஷம் ஆகாது. சமரசமாகப் போவதுதான் கஷ்டம். அது தெரிந்துகொள்.''

என் கணவர் சொன்னபோது நான் பதில் எதுவும் சொல்ல வில்லை.

★ ★ ★

## 6

என் அறை எனக்கு அதிருப்தியை அளித்தது. வீட்டைத் துடைக்கும் துணி, விளக்குமாறு போன் றவை பால்கனியில் ஒரு மூலையில் வைக்கப்பட்டு இருக்கும். வேலைக்காரி காலையில் ஆறு மணிக்கே வந்துவிடுவாள். எழுந்து கொள்வதைத் தவிர வேறு வழி யில்லை.

விடியற்காலை வேளையில் கணவரின் மார்பில் முகம் புதைத்து, அவருடைய அணைப்பில் இன்னும் கொஞ்சநேரம் அப்படியே படுத்துக் கொள்ளணும் என்று எனக்குத் தோன்றும். ஆனால் அவரோ காலையில் ஐந்து மணிக்கே எழுந்து கொண்டு தன்னுடைய உடைகளைச் சரிசெய்து கொண்டு, என்னையும் எழுப்பிவிடுவார். கசங்கியிருந்த படுக்கை விரிப்பை சரியாகப் போட்டுவிட்டுத்தான் மறுவேலையைப் பார்ப்பார்.

'சூரியனின் ஒளிக் கிரணங்கள் ஜன்னல் வழியாக உள்ளே வந்து என்னை எழுப்ப, கண்களை மெதுவாகத் திறந்து அருகில் இருந்த கணவரைப் பார்த்ததும், வெட்கத்துடன் என் நிலையை உணர்ந்து அவருக்கு விழிப்பு வராமல் மெதுவாக அவருடைய அணைப்பிலிருந்து விடுபட்டு, உடைகளைச் சரிசெய்து கொண்டு... ரேடியோவில் சுப்ரபாதம் ஒலித்துக் கொண்டிருக்கும் போது, கையில் காபி டம்ளருடன் அவரை எழுப்பி, டம்ளருடன் அவர் என் கையையும் சேர்த்துப் பிடிக்க... நான் சிணுங்கி... இப்படிச் சின்ன சின்ன விருப்பங்கள் என் மனதில் புதைந்து கிடந்தன. ஒவ்வொரு கன்னிப் பெண்ணின் மனதிலும், இயற்கை யாய் மலரக்கூடிய விருப்பங்கள்தானே இவை.

என் கண்களிலிருந்து தன்னிச்சையாக நீர் வழிந்தது. இன்னும் சில வருடங்கள் போனால் தாம்பத்திய வாழ்க்கையே ரொட்டீனாக மாறிவிடலாம். அது வேறு விஷயம். ஆனால் தாம்பத்தியத்தில் இருக்கவேண்டிய புதுமையை, அந்த உணர்வு களை நாங்கள் இழந்துகொண்டு இருக்கிறோம்.

எல்லா கூட்டுக் குடித்தனங்களிலும் இந்தப் பிரச்னை இருக்கும் வாய்ப்பு இல்லை. முக்கியமாகக் கணவருக்கு ப்ரை வேஸியின் மதிப்புத் தெரிந்திருக்க வேண்டும். ''ஏதாவது தேவை யாக இருந்தால் ராத்திரியே எங்க அறையிலிருந்து எடுத்து வைத்துக்கொள்'' என்று மற்றவர்களிடம் சொல்வதில் தயக்கம் ஏன் என்பது எனக்குப் புரியாத விஷயம். இது அவருடைய வீடு தானே.

ஒருநாள் இரவு விளக்குமாற்றை எடுத்து ஹாலில் ஒரு மூலையில் வைக்கப் போனபோது மாமியார் தடுத்து விட்டாள். முன்அறையில் விளக்குமாற்றை வைக்கக் கூடாதாம். போகட் டும்... வேறு இடத்தில், காலை வேளையில் எங்கள் அறைக் கதவைத் தட்டி எடுத்துக்கொள்ள வேண்டிய தேவை இல்லாத



இடத்தில் அதை வைத்துக் கொள்ளலாம் இல்லையா? இவ் வளவு சின்ன விஷயத்தில் என் கணவர் அம்மாவுக்கு சப் போர்டாகப் பேசியது எனக்கு வியப்பாக அளித்தது. இப்படி நடந்து கொள்கிறவர்கள் தாம் எதை இழக்கிறோம் என்பதை உணர மாட்டார்கள். அடுத்தவர்களின் உணர்வுகளையும் குழி தோண்டி புதைத்து விடுவார்கள்.

அந்த வீட்டிலிருக்கும் நபர்களின் போக்கு, மனப்பான்மை எனக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் புரியத் தொடங்கியது. அந்த வீட்டில் மச்சினர் சொல்வதுதான் வேதவாக்கு. எல்லாம் சரியாக இருக்கும்வரை அவர் எந்த விஷயத்திலும் தலையிட மாட்டார். வீட்டு நிர்வாகம், செலவு செய்வது எல்லாம் ஓர்ப்படியின் மேற் பார்வையில் நடந்து வந்தன.

மாமியாருக்குத் தன்னுடைய அதிகாரம் முடிந்துவிட்ட தென்று புரிந்துவிட்டது. சமையல் வேலையை தான் பார்த்துக் கொண்டு, சுற்றுக்காரியங்களை என்னிடம் தள்ளிவிட்டாள்.

★ ★ ★

ஒருநாள் சினிமாவுக்குப் போயிருந்தோம். எந்த மூடில் இருந்தாரோ கணவரும் ஜாலியாக இருந்தார். நகைச்சுவைக்கு முக்கியத்துவம் கொடுத்த படமாக இருந்ததால் வீட்டு விஷயங் களை மறந்துவிட்டு படத்தில் மூழ்கி விட்டோம். வரும்போது வழியில் அவர் மல்லிகைப்பூ இரண்டு முழம் வாங்கி என்னிடம் கொடுத்தார். அந்த இரவு வேளையில் ஸ்கூட்டரில் அவர் பின் னால் உட்கார்ந்து கொண்டு வரும்போது, மனம் முழுவதும் உற்சாகம் பரவியிருந்தது.

எங்கள் தெருமுனையில் வண்டி திரும்பும் போது, மருந்துக் கடை வாசலில் மாமியார் ஏதோ மருந்துகளை வாங்கிக் கொண் டிருப்பது கண்ணில் பட்டது.

பதட்டமடைந்த இவர் வண்டியை நிறுத்திவிட்டு ஓட் மும் நடையுமாய் அம்மாவின் அருகில் சென்றார்.

எங்கள் இருவரையும் பார்த்தவள், ''சினிமா நன்றாக இரு ந்ததா?'' என்று விசாரித்தாள்.

''யாருக்காக அம்மா மருந்து வாங்கறே?''

''எனக்குதான்டா... ரொம்ப தலைவலி... தாங்க மு யலை.''

''தலைவலியா?'' கலவரமாய் அம்மாவின் நெற்றிபு கையைத் தொட்டுப் பார்த்தார். ''நாங்க வரும் வரையில் க திருக்கக் கூடாதா? வந்தபிறகு மருந்து வாங்கிக் கொண்டு வந்தி பேன் இல்லையா?''

''பரவாயில்லைப்பா, தானே சரியாகப் போய்விடும். இப்படிப் பதட்டப்படப் போகிறாயே என்றுதான் நீ வர்ற குள்ளேயே மருந்து வாங்கிட்டுப் போகலாம்னு வந்தேன். வ போகலாம்'' என்றாள்.

நான் எதுவும் பேசாமல் பார்த்துக் கொண்டு நின்றிருந்தே

அவரும் மாமியாரும் ஸ்கூட்டரில் வீட்டுக்குச் சென் விட்டார்கள். நான் நடந்து போய்க் கொண்டிருந்தேன். என் மன முழுவதும் எண்ணங்கள் சூழ்ந்திருந்தன.

நாங்கள் வரும்வரை மாமியார் வீட்டிலேயே காத்திருந் மருந்து வாங்க இவரை அனுப்பியிருக்கலாமே. ஒரு ஐந்து நி டங்கள் காத்திருந்தால் போதுமே என்ற நினைப்புதான் எ மனதில் மேலோங்கி நின்றது. நாங்கள் பதட்டப்படுவோ என்று மாமியார் சொன்ன காரணத்தை என் மனம் ஏற்க மறுத்த

மாமியாருக்கு நிஜமாகவே தலைவலியாக இருந்தால் நாங்க வீட்டுக்கு வந்தபிறகு எப்படியும் அந்த விஷயம் எங்களுக்கு தெரியத்தானே போகிறது? இதில் மூடி மறைக்க என்ன இருக்கி



மாமியார் வேண்டுமென்றே எங்கள் மகிழ்ச்சியை நாசமாக்க முயலுகிறாள் என்று தோன்றியது. நாங்கள் இருவரும் சினிமாவுக்குப் போவதற்கும், மாமியாருக்குத் தலைவலி வருவதற்கும் இனம் தெரியாத தொடர்பு ஏதோ இருப்பதுபோல் தோன்றியது.

நான் ஊகித்தது போலவே வீட்டில் காலடி எடுத்து வைக்கும்போது என் கணவர் அம்மாவின் நெற்றியில் மருந்தைத் தடவி, தலையைப் பிடித்துவிட்டுக் கொண்டிருந்தார்.

என்னைப் பார்த்ததும் மாமியார், ''பாவம்... மருமகள் நடந்து வந்திருக்கிறாள்'' என்று சொன்னதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் விடுவிடுவென்று என் அறைக்குள் நுழைந்தேன். கட்டிலில் படுத்துக்கொண்டு கண்களை மூடி விழிகளிலிருந்து கண்ணீர் வெளிவராமல் அணைபோட முயன்று கொண்டிருந்தேன்.

ரொம்ப நேரம் கழித்து என் கணவர் உள்ளே வந்தார். களைப்புடன் என் பக்கத்தில் தலையணையில் சாய்ந்த வாக்கில் உட்கார்ந்துகொண்டே, ''நாம் சினிமாவுக்குப் போய் தப்பு பண்ணிவிட்டோமோ என்று நினைக்கிறேன்'' என்றார்.

நான் ஒன்றும் பேசவில்லை. வேறெதையோ எதிர்பார்த்தேன்; நிச்சயமாக இந்தக் கேள்வியை இல்லை. அதற்குள் அவர் மேலும் சொன்னார், ''ஐ ஃபீல் கில்டி. திருமணம் ஆனபின் என் குடும்பத்தினரை நான் சரியாகக் கவனிப்பதில்லையோ என்று.''

அவர் சொல்வது ஒன்றும் என் காதுகளில் விழ மறுத்தன. குற்ற உணர்ச்சியால் அவர் கண்கள் பனித்திருப்பதை என்னால் ஊகிக்க முடிந்தது. அவருடைய முகத்தை ஏறிட்டுப் பார்க்காமலேயே, ''சாப்பிட வருகிறீர்களா?'' என்று கேட்டேன்.

''வேண்டாம், மூட் இல்லை.''

நான் மேலும் வற்புறுத்தவில்லை. மௌனமாக டை
டேபிள் அருகில் சென்றேன். எல்லோருடைய சாப்பாடும்
விட்டது போலும். எங்கள் இருவருடைய தட்டுகள் மட்
மேஜைமீது வைக்கப்பட்டிருந்தன. என்னுடைய தட்டில்
மாறிக் கொண்டு சாப்பிடத் துவங்கினேன். தட்டில் என்ன இ
குன்னுகூட கவனிக்கவில்லை. என் கணவருடைய உணர்ச்சி
என்னை கொஞ்சம்கூட பாதிக்கவில்லை என்று அவரு
உணர்த்தணும் என்பதற்காகவே பிடிவாதமாகச் சாப்பிட்
கொண்டிருந்தேன்.

நான் தயிரை பரிமாறிக் கொண்டிருந்தபோது என் நா
னார் ஃபிரிஜ்ஜிலிருந்து இரண்டு ஆப்பிள்களையும், பாலை
எடுத்துக்கொண்டு என்னுடைய அறைக்குள் போவதைப் பார்
போது, எனக்கு தீப்பற்றி எரிவது போலிருந்தது.

என்னை ஒரு சுயநலக்காரியாக நிலைநாட்டும் முயற்சி
இல்லை மனைவியைவிட அவர்கள்தான் அவருக்கு நெரு
மானவர்கள் என்று பறைசாற்றும் நினைப்பா?

என் தட்டைக் கழுவப் போட்டுவிட்டு மேஜையை
துடைக்கத் துணியைத் தேடியபோது, மாமியார் சோபாவி
ஆயாஸமாக உட்கார்ந்துகொண்டு டி.வி.யில் சினிமாவை
பார்த்துக் கொண்டிருந்தாள்.

அதுவரை அடக்கி வைத்திருந்த ஆவேசம், தடை விலகிய
போல் அலையாய் எழும்பியது. என் கணவரை தரதரவென்
இழுத்து வந்து அந்தக் காட்சியைக் காண்பிக்க வேண்டும்போ
ஆத்திரம் பொங்கியது. ஆனால் அவர் சொல்லப் போகு
பதிலையும் என்னால் ஊகிக்க முடியும்.

''சரியான நேரத்தில் அம்மாவுக்கு மருந்து தடவி மாத்திரை
கொடுத்ததால் தலைவலி அதிகமாகாமல் குறைந்துவிட்ட
பார்த்தாயா'' என்றுதான் சொல்வார்.



ஈரமாயிருந்த கையைத் துடைத்துக் கொண்டே அறைக்குள் நுழைந்தவளுக்கு என் நாத்தனாரும், கணவரும் சிரித்துப் பேசிக் கொண்டிருப்பது கண்ணில் பட்டது. மேஜைமீதிருந்த மல்லிகைப் பூக்கள் என்னைப் பார்த்துக் கேலி செய்வது போலிருந்தது.

நான் மௌனமாக அறையைவிட்டு வெளியே வந்துவிட்டேன். எந்த யோசனையும் இல்லாமல் மனம் வெறுமையாக இருந்தது. யோசிப்பதற்கு ஒன்றும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

ஹால் சோபாவில் படுத்துக்கொண்டே டீபாய் மீதிருந்த பத்திரிகையைக் கையிலெடுத்துக் கொண்டேன். மேற்படிப்பைத் தொடர்ந்து என் மனதைத் திருப்ப நான் முடிவு செய்வது அந்தக் கணத்தில்தான்.

* * *

## 7

எங்கள் வீட்டில் பத்திரிகைகள் வாங்குவதில் எந்தக் குறையும் இல்லை. ஆனால் அவற்றைப் படிப்பதற்குதான் எங்களுக்கு நேரமில்லை. ஓய்வு நேரத்தில்கூட நான் சும்மா இருக்க விரும்பவில்லை. அதனால் மனம் மேலும் கலங்குவதைத் தவிர வேறு பிரயோஜனம் கிடையாதுன்னு எனக்குப் புரிந்தது.

தினசரி அட்டவணையிலும் மாறுதல் ஏற்பட்டது. காலையில் ஐந்து மணிக்கு எழுந்துகொள்ளத் தொடங்கினேன். வீட்டின் முன்னால் கொஞ்சம் நேரம் நடந்துவிட்டு பிறகு வீட்டு வேலைகளில் மூழ்கிவிடுவேன்.

அதிகாலை வேளையில் வீட்டின் முன் இருந்த பூஞ்செடிகள், சூரியோதயம், கோவிலிருந்து ஒலிக்கும் சுப்ரபாதம் என்

மனதுக்கு அமைதியைத் தந்தன. பேப்பர் வரும் நேரத்திற் வீட்டு வேலைகளை என் வரைக்கும் முடித்துக் கொண்டு யாக இருக்கும் விதமாய் பார்த்துக் கொண்டேன்.

சில நாட்கள் கழித்து எனக்கு ஒரு யோசனை வந்தது. யோச வந்த மறுநாளே அவரிடம் ரொம்ப காஷுவலாகச் சொன்னே

''நான் ரீசேர்ச் செய்யலாம்னு இருக்கேன்.''

அவர் யோசனையில் ஆழ்ந்து விட்டார்.

''ரீசெர்ச் என்றால் நீ அடிக்கடி வெளியில் போகவேண் யிருக்கும். படிப்புக்காக நேரத்தையும் ஒதுக்க வேண்டியிருக்கு குடித்தனம், படிப்பு இரண்டையும் சமாளிப்பது என்ற கஷ்டமாக இருக்குமோ என்னவோ...'' என்றார்.

''குடித்தனம்... படிப்பு இல்லை. வீட்டு வேலைகளு படிப்புன்னு சொல்லுங்கள்'' என்று சொல்ல நினைத்தே ஆனால் அவருடன் வாதத்தில் இறங்குவது என் நோக்கம் இல்ல

''கஷ்டம்தான். ஆனால் கஷ்டப்படாமல் ஒன்றும் சாதி முடியாதே!'' நயமான குரலில் சொன்னேன்.

அவருக்கு என் படிப்பு விஷயத்தில் இண்ட்ரெஸ் இல்லையென்று புரிந்துகொள்ள ரொம்ப நேரம் ஆகவில்லை இன்னும் சொல்லப்போனால் வீட்டு வேலைகளைத் தவிர நா வேறெது செய்தாலும் அவருக்குப் பிடிக்காது. அதுவும் எனக்கு தெரியும்.

''சரி, உன் இஷ்டம். வீட்டு வேலைகளையும், படிப்பையு பிரச்னைகள் இல்லாமல் சமாளிக்க உன்னால் முடியுமென்றா எனக்கு ஆட்சேபணை இல்லை'' என்றார்.

மகிழ்ச்சியாக இருந்தது எனக்கு.

''நீ பகல் முழுவதும் யூனிவர்சிடிக்குப் போய்விட்டா வீட்டில் இடைஞ்சலாக இருக்கும். முடிந்தவரை வீட்டிலே புத்தகங்களை ரெஃபர் செய்துகொள்.''



அவர் சொன்னபோது, சரியென்று தலையை அசைத்து விட்டேனே தவிர, அதனால் வேறு பிரச்னைகள் வரலாம் என்று அப்பொழுது நான் நினைக்கவில்லை.

யூனிவர்சிடியில் கைடை ஏற்பாடு செய்து கொள்ளணும் என்றாலும், ஜர்னலில் இரண்டு கட்டுரைகள் பிரசுரிக்கப்படணும் என்றாலும் முதன்முதலில் நிறைய அலையவேண்டியிருக்கும். எங்கள் வீட்டில் நான் மேற்படிப்பு படிக்கப் போகும் விஷயத்தில் வெளிப்படையாக எந்த ஆட்சேபணையும் வரவில்லை.

''இன்னிக்கு வேண்டாம்மா. அஷ்டமி நவமியாக இருக்கு. தசமி அன்னிக்கு ஆரம்பித்தால் படிப்புக்கு நல்லது'' என்று ஒரு நாள் – ''இன்று சாம்பார் பொடி, தோசை மிளகாய் பொடி வறுத்து அரைக்கணும்'' என்று மற்றொரு நாள் – ''இன்னிக்கு உறவுக் காரங்க சிலர் நம் வீட்டுக்கு வரப் போறாங்க. வீட்டுக்கு மருமகள் நீ இல்லாவிட்டால் எப்படி?'' என்று ஏதாவது ஒரு காரணம் சொல்லி தடை விதிப்பாள் மாமியார்.

லைப்ரரியில் எல்லா புத்தகங்களையும் வீட்டுக்குத் தர மாட்டார்கள். சில புத்தகங்களை அங்கேயே ரெஃபர் செய்து கொள்ள அனுமதிப்பார்கள். என்னாலும் அடிக்கடி லைப்ரரிக்குப் போக முடியவில்லை. அதனால் சில புத்தகங்களை வாங்கிக் கொள்ள முடிவு செய்தேன். ரொம்ப விலை உயர்ந்த புத்தகங்கள் அவை.

தயங்கிக்கொண்டே கணவரிடம், புத்தகங்களை வாங்கிக் கொள்ள கொஞ்சம் பணம் தேவையாய் இருக்கும் என்று கேட்டேன்.

''எவ்வளவு தேவைப்படும்.''

''கிட்டத்தட்ட நான்காயிரம்.''

திடுக்கிட்டாற்போல் பார்த்தார். ''இப்படி செலவு செய்ய வேண்டி வந்தால் உன் படிப்பை தொடர முடியாதோ என்னவோ?'' என்றார்.

''வங்கியில் பத்து வருடங்களாக வேலை செய்யறீங் மனைவிக்காக நான்காயிரம் செலவு செய்வது உங்களுக்கு கஷ்டமாகத் தோன்றுகிறதா?'' என்று ரோஷத்துடன் கேட்டேன்.

''தேவையில்லாத செலவு என்று என் எண்ணம். ரீசெ செய்வதால் என்ன பிரயோஜனம்?''

ஞானத்தால் என்ன பயன் என்று கேட்டால் என்ன சொல் முடியும்?

''சமையல் செய்வதற்கு ரீசெர்ச் எதுக்குன்னு கேட்கிறீ களா? இல்லை வேலைக்குப் போவதற்கு இருக்கிற படிப் போதுமென்ற எண்ணத்தில் சொல்கிறீர்களா?''

''அம்மா கேட்டால் என்ன சொல்லட்டும்?''

''ஹனிமூன் செலவு என்று சொல்லுங்களேன்?'' கிண் லாகப் பதிலளித்தேன்.

அவர் தயங்கிக்கொண்டே, ''பார்க்கலாம்'' என்று சொ னார்.

மறுநாள் அவர் இந்த விஷயத்தைச் சொல்லியிருக்க வேண் டும். மாமியார் தன் மகளிடம், ''உன் கல்யாணத்தைச் சீக்கிரமாய் நடத்த முடியுமென்று எனக்குத் தோன்றவில்லை'' குறைப் பட்டுக் கொள்வதுபோல் சொன்னாள்.

எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. கூட்டுக் குடும்பங்களில் மனித உறவுகளைப் பற்றியோ, கடமைகளுக்கும் கடன்களுக்கும் உள்ள தொடர்பு பற்றியோ நான் இங்கே விளக்கப் போவ தில்லை.

தேடிப்போன மூலிகை காலில் தட்டுப்பட்டதுபோல் எனக்கு வேலை கிடைத்தது.

* * *



# 8

எனக்கு வேலை கிடைத்திருப்பதாக அம்மா போன் செய்து சொன்னபோது நான் நம்பவில்லை. திருமணத்துக்கு முன்பே நான் சர்வீஸ் கமிஷன் பரீட்சை பாஸ்செய்து, நேர்முகத் தேர்வுக்கும் போயிட்டு வந்தேன். திருமணம் ஆனபிறகு அந்த விஷயத்தை முற்றிலும் மறந்துபோய்விட்டேன்.

என்னுடைய மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லாமல் போய் விட்டது. நான் இப்பொ ஒரு லெக்சரர். உலகமே என் காலடியில் இருப்பதுபோல் பெருமையாக உணர்ந்தேன். நான் வேலைக்குப் போவதைப் பற்றி மாமியார் வீட்டில் யாரும் ஆட்சேபிக்க வில்லை.

''போகட்டும், வீட்டு வேலைகளிலிருந்து உனக்குக் கொஞ் சம் விடுதலை கிடைக்கும்'' என்று மாமியார் சொன்னாள்.

என்னைக் குத்திக் காண்பிக்கிறாளோ என்று தோன்றி னாலும், எனக்கு இருந்த சந்தோஷத்தில் அதை நான் பொருட் படுத்தவில்லை.

ஓர்படி, நாத்தனார், என் கணவர் எல்லோரும் எனக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள்.

''ட்ரீட் கொடுக்கணும்...'' பிடிவாதம் பிடித்தாள் நாத்தனார்.

மாலை ஏழு மணிக்குமேல் வீட்டுக்கு வந்த மச்சினரிடம் இனிப்பைக் கொடுத்துவிட்டு, இந்தச் செய்தியைச் சொன்னேன்.

''ஓ! ரியலி... கங்கிராட்ஸ்'' மகிழ்ச்சியுடன் இனிப்பைப் பெற்றுக்கொண்டார்.

வேலை சம்பந்தமாக எல்லா விவரங்களையும் கேட்டுக் கொண்டார். எனக்கு ஷேர்ஸ் பற்றி தெரியும் என்று சொன்ன போது வியப்படைந்துவிட்டார். ''உன்னுடைய சப்ஜெக்ட் சயின்ஸ் என்றபோது ஸ்டாக் மார்க்கெட்டில் உனக்கு ஆர்வம் எப்படி ஏற்பட்டது?'' என்று கேட்டார்.

நான் பிசினெஸ் இந்தியா, காபிடல் மார்க்கெட் போ
பத்திரிகைகளைப் படித்து வருவதை அவர் கவனித்து வந்தி
பார் போலும். இந்தப் பழக்கம் எனக்கு அப்பா, அண்ணா
மிருந்து வந்தது. அவர்கள் ஷேர்ஸ், டிபெஞ்சர்களில் பண
முதலீடு செய்து வந்ததால் தினமும் மார்க்கெட்டை ஸ்டெ
செய்வார்கள். அந்தப் பழக்கம் என்னையும் தொற்றிக்கொ
விட்டது. அதைத்தான் அவரிடமும் சொன்னேன்.

''குட்'' பாராட்டும் வகையில் பார்த்தார். ''ஏதோ புரோ
சொல்வதை நம்பி வாங்குவேனே தவிர, மார்க்கெட்டை ஸ்டெ
செய்யும் அளவுக்கு எனக்குப் பொறுமையும், நேரமும் இல்ல
உனக்கு இந்தத் துறையில் ஆர்வம் இருப்பது என் அதிர்ஷ்ட
இனிமேல் உன்னிடமிருந்தே டிப்ஸ் பெற்றுக்கொள்ள
இல்லையா? ஐயாம் கிளாட்'' என்றார்.

எதிர்பாராத இந்தப் புகழ்ச்சியைக் கேட்டபோது என
மகிழ்ச்சியாக இருந்தது. நாங்கள் இருவரும் எதிரெதிரில் உ
கார்ந்துகொண்டு ஸ்டாக் மார்க்கெட் பற்றி அலசிக் கொ
டிருந்தபோது, ஏனோ என் நிலை உயர்ந்து விட்டாற்போ
தோன்றியது. வீட்டிலும் எனக்கு முக்கியத்துவம் *(அதாவ
குளியல் அறையில் முன்னுரிமை)* கொடுக்க ஆரம்பித்தார்க

என் கணவரிடம் படிப்புக்காகப் பணம் கேட்டு மறுப்பை
பதிலாகப் பெற்ற அந்த நாட்களுக்கும், இன்றைய நிலைமை
கும் வித்தியாசம் பளிச்சென்று தெரிந்தது.

தினமும் வீட்டு வேலைகளை முடித்துக் கொண்டு பஸ்ஸை
பிடிக்க ஓடுவதும், வகுப்பில் சொல்லித் தரவேண்டிய பாட
களுக்காக நோட்ஸ்களைத் தயாரித்துக் கொள்வதும், இப்ப
இடைவிடாமல் வேலைகள் இருந்து வந்தாலும், முன்பு இரு
வாழ்க்கையைவிட இந்த ரொட்டீன் எனக்கு ரொம்ப பிடித்திருந்த

★ ★ ★



வீட்டுக்கு வரும்போது மாலை நான்கு மணி ஆகிவிடும்.
ஐந்து மணிவரை ஓய்வு எடுத்துக்கொண்டு, இரவு சமையலுக்
கான கரிகாயை நறுக்கி வைத்துவிட்டு, ஏதாவது ஜர்னலைப்
படிக்க உட்கார்ந்து விடுவேன். வீட்டு வேலைகளை மற்றவர்கள்
சொல்லிச் செய்யாமல் நானாக ரொட்டீனாக செய்து வந்ததால்
யாருடனும் பேசவேண்டிய தேவை ஏற்படவில்லை.

காலை வேளைகளில் என் கணவருடன் பேசக்கூட எனக்கு
நேரம் இருக்கவில்லை. மாலைகளில் ரொம்ப அவசியம் இருந்
தால் தவிர எங்கள் இருவருக்குமிடையே எந்தப் பேச்சு வார்த்தை
களும் நிகழ வாய்ப்பும் இல்லை. எங்கள் இருவருக்கும் நடுவில்
மனதளவில் ஏற்பட்ட இந்த இடைவெளி எனக்கு ஏனோ
வேதனையைத் தரவில்லை. நான் வேறு உலகில் வாழ்ந்து
வருவதால் இருக்கலாம்.

மச்சினர் என்னை ஸ்டார்க் மார்க்கெட் விவரங்களைக்
கேட்டதிலிருந்து இன்னும் கவனம் எடுத்துக் கொண்டு ஸ்டெடி
செய்து வந்தேன். என்றாவது ஒருநாள் அவர் கேட்டால் பதில்
சொல்ல, அந்த விவரங்கள் என் விரல் நுனியில் இருக்கவேண்
டும் என்ற தீவிரம்தான் என்னை அந்தத் துறையில் மேலும்
ஸ்டெடி செய்யத் தூண்டியது.

சில நாட்கள் கழிந்த பிறகும் அவர் அந்தப் பேச்சை எடுக்க
வில்லை. ஒருகால் அந்த விஷயத்தை அவர் மறந்து விட்டிருப்
பார் என்று நினைத்தேன். என்னுடைய ஊகம் தவறானது என்று
பிறகு தெரிந்தது.

ஒருநாள் நான் காலேஜிலிருந்து வீட்டுக்கு வந்தபோது,
மச்சினர் ஹால் சோபாவில் உட்கார்ந்திருந்தார். என் கையில்
இருந்த 'ஃபைனான்ஷியல் விஜார்ட்' பத்திரிகையைப் பார்த்த
வர், ''பரவாயில்லையே... இவ்வளவு பிஸியாக இருக்கும்போதும் நீ
உன் ஹாபியை மறக்காமல் இருக்கிறாயே குட்...'' என்றார்.

அவருடைய பாராட்டை ஏற்றுக் கொள்வது போல்
லுக்கு முறுவலித்துவிட்டு, தயக்கத்துடன் அங்கேயே நி
விட்டேன். அதற்குள் என்னுடைய ஓர்படி கையில் காபி த
ருடன் அங்கே வந்தாள். என்னைத் தாண்டி காபி டம்ளரை ம
மீது வைக்கப் போனாள்.

என்னை உட்காரச் சொல்லி கையால் ஜாடை காட்
மச்சினர், மனைவியைப் பார்த்து, ''அவளுக்கும் காபியைக் கொ
வா...'' என்றார்.

ஓர்படி என்ன நினைத்துக் கொள்வாளோ என்று என
தோன்றியது. என் கணவர் என்னிடம் இந்த மாதிரி சொ
யிருந்தால் எனக்கு எரிச்சல் வந்திருக்கும். வேடிக்கை எ
வென்றால் மச்சினர் தன் மனைவியை எனக்காக் காபி கொ
வரச் சொன்னபோது பெருமையாக... இல்லை... இல்
ரொம்பவே பெருமையாக இருந்தது.

ஓர்படி உள்ளே போய்விட்டாள். என் பக்கம் திரும்பி
மச்சினர், ''இப்பொ சொல்லு. இந்த வாரம் நான் எந்தக் க
பெனியின் ஷேர்களில் முதலீடு செய்யட்டும்?'' என்று கேட்டா

நான் சற்று யோசித்துவிட்டு மூன்று கம்பெனிகள்
பெயர்களைச் சொன்னேன்.

''நீ சொன்னவற்றில் ஜி.கே. கம்பெனி ஷேர்ஸ் என்னிட
இருக்கு. அதுக்கு ரைட்ஸ்ும் வரும். இருக்கு இல்லையா... இ
மற்ற இரண்டு கம்பெனிகளின் ஷேர்களை நாளைக்கு வாங்
வேன். நீ எவ்வளவு புத்திசாலி என்பதையும் பார்த்துவி
லாம்...'' என்று சிரித்தார்.

வெளியில் தெரியும் அளவுக்கு இவர் ஒன்றும் இந்த வி
யத்தில் அப்பாவியில்லை என்று புரிந்தது. ரைட்ஸ் பற்றி பே
ரில் சற்று முன்னால்தான் படித்தேன். அதற்குள் இவருக்கு
விஷயம் எட்டியதை நினைக்கும்போது வியப்பாக இருந்தது.



ஓர்படி கொண்டுவந்த காபியைக் குடித்துவிட்டு உள்ளே வந்துவிட்டேன். கட்டிலில் படுத்தவாறே யோசித்துக் கொண்டிருந்தேன். என் கணவரும் தன்னுடைய அண்ணனைப்போல் எல்லா விஷயங்களிலும் உற்சாகம் காட்டுபவராக இருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். 'அம்மா, தங்கை, வீட்டு வேலைகள், மனிகை, ஆபீஸ்' இதைத் தவிர அவர் வேறு விஷயம் பேசி நான் கேட்டதில்லை. என் மச்சினரைப் பார்த்தால் எனக்கு வியப்பாக இருந்தது. சின்ன வயதிலேயே வீட்டுப் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு, குடும்பத்தை முன்னுக்குக் கொண்டு வந்து, அந்தஸ்திலும் உயர்ந்த நிலையில் இருக்கவேண்டும் என்றால் எவ்வளவு கஷ்டப்பட்டு இருக்கவேண்டும்? அவருடைய முகத்தில் ஒருநாளும் எரிச்சலோ, களைப்போ தென்பட்டது இல்லையே? அவருக்கும் ஓர்படிக்கும் எந்த விஷயத்திலும் தகராறு ஏற்பட்டு நான் பார்த்ததில்லை. வீட்டு விஷயங்களில் அவர் தலையிடுவதுபோல் இருக்காதே தவிர எல்லா விஷயங்களும் அவருக்குத் தெரியும். எல்லோருடைய தேவைகளும் அவருக்கு நன்றாகவே நினைவில் இருக்கும்.

மறுநாளே அவர் நான் சொன்ன கம்பெனிகளின் ஷேர்களை வாங்கி விவரத்தை என்னிடம் தெரிவித்தார். அந்த ஷேர்களின் எதிர்காலம்தான் என்மீது அவருக்கு இருக்கும் நம்பிக்கையைப் பலப்படுத்துவதையோ, குறைப்பதையோ நிர்ணயிக்கும் என்று நான் பயந்தேன்.

* * *

## 9

பத்து நாள்களுக்குப் பிறகு ஒருநாள், காலே
ஜில் வேலை அதிகமாக இருந்ததால் ரொம்ப

களைத்துப் போய் இருந்தேன். பஸ்ஸை விட்டு இறங்கி வீட் பக்கம் நடந்துபோய்க் கொண்டிருந்தேன். சூழ்நிலை இரு மாக மழை வரும்போல் இருந்தது. ஏதோ யோசனையில் ஆழ் போய் இருந்த நான், பக்கத்தில் கார் வந்து நின்றதைக் கவன வில்லை.

''காலேஜிலிருந்து வருகிறாயா?'' என் மச்சினரின் குரலை கேட்டதும், திடுக்கிட்டுத் தலையைத் திருப்பிப் பார்த்தேன்.

டிரைவிங் சீட் ஜன்னல் வழியாகத் தலையை வெளி நீட்டிக் கேட்டுக் கொண்டிருந்தார்.

''ஆமாம்'' - புன்முறுவலுடன் சொன்னேன்.

''நானும் வீட்டுக்குத்தான் போகிறேன்... கமின்'' என்ற கதவைத் திறந்துகொண்டே.

தயங்கிக் கொண்டே காரில் ஏறிக்கொண்டேன். அவருட காரில் தனியாகப் பயணிப்பது அதுதான் முதல் தடவை. வீட்டி என்ன நினைத்துக் கொள்வார்களோ என்று யோசித்துக் கொ டிருந்தேன்.

''உனக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கணும்...'' என்றார்.

''எதுக்கு?'' யோசனைகளிலிருந்து மீண்டவளாய் கேட்டேன்.

''நீ டிப்ஸ் கொடுத்த ஷேர்களின் விலை ஏறியிருக்கு இன்னிக்கே அவற்றை விற்றுவிடச் சொல்லி புரோக்கரிட சொல்லிவிட்டேன். எந்த ஷேர்களையும் ரொம்ப நாட்களுக் வைத்துக்கொள்வது எனக்குப் பிடிக்காது. ஸ்பெக்யுலேட் செ வதுதான் பிடிக்கும். இப்பொ உன்னுடைய துணையும் இருக்கே ... என்ன சொல்கிறாய்?'' என்றார்.

நான் தயக்கத்துடனே சிரித்தேன். உள்ளூரப் பெருமையா ரிலிருந்தது என்னுடைய மார்க்கெட் ஸ்டெடி வெற்றி அடைந் விஷயம். இருந்தாலும் எதையாவது சொல்லவேண்டுமே என்ற



''இந்த முறை ஜஸ்ட் ஃப்ளூக் ஆக இருக்கலாம். என்னுடைய ஜோசியம் எப்போதுமே சரியாகப் பலிக்கும் என்று சொல்ல முடியாது'' என்றேன்.

''நோ... நோ... நீ செய்தது பர்ஃபெக்ட் ஸ்டெடி. ஒரு புரோக்கரால் மட்டும் இதைவிட என்ன செய்யமுடியும்?'' என்றார்.

கார் வீட்டுப் பக்கம் போகாமல் வேறு பக்கம் திரும்பி யதைக் கவனித்து, ''நாம் எங்கே போகிறோம்?'' பதட்டத்துடன் கேட்டேன்.

அவர் புன்முறுவல் மாறாமல் சொன்னார், ''உன்னுடைய வெற்றிக்கு எனக்குக் கிடைத்த லாபத்தையும் சேர்த்துக் கொண் டாடப் போகிறோம்.''

ஏனோ எனக்கு இந்த யோசனை சரியாகப் படவில்லை. அவருடன் காரில் தனியாக வீட்டுக்குப் போவதற்கே தயங்கிக் கொண்டிருந்தபோது, பார்ட்டி வேறு தேவையா?

''வேண்டாம்... வேண்டாம்... இது ரொம்ப சின்ன விஷயம். இதுக்குப் போய் ட்ரீட் எதுக்கு?'' தடுப்பதுபோல் சொன்னேன்.

''ஜஸ்ட் ஐஸ்க்ரீம் மட்டும்தான். பிறகு வீட்டுக்குப் போய் விடலாம்'' என்றார்.

என்ன பேசுவதென்று எனக்குப் புரியவில்லை.

கார் ஐஸ்க்ரீம் பார்லர் முன்னால் நின்றது. யாராவது பார்த் தால் என்ன நினைத்துக் கொள்வார்களோ என்ற பதட்டத்துடனே காரை விட்டிறங்கினேன். என்னை உட்கார வைத்துவிட்டு இரண்டு டூட்டிஃப்ருட்டிக்களைக் கொண்டு வந்தார். ஐஸ்க்ரீமை மெதுவாகச் சாப்பிட்டுக் கொண்டு இருந்தபோது மச்சினர் கேட்டார்.

''இப்படி நான் கேட்பது உனக்குப் பிடிக்கு
இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் வீட்டுக்குப் பெ
வனாக இப்படிக் கேட்பது என்னுடைய பொறுப்பு எ
நினைக்கிறேன். என் வீட்டில் யாரும் அதிருப்தியுடன் வா
எனக்குப் பிடிக்காது.''

என் கையில் இருந்த ஸ்பூன் நழுவியது. அவர் எ
கேட்கப் போகிறார் என்று புரியாததால் என் மேனியில் நடு
பரவியது. கண்களை வட்டமாய் அகல, அவரையே பார்
கொண்டிருந்தேன்.

''உனக்கும், தம்பிக்கும் நடுவில் ஏதாவது தகராறா?
இப்படி கேட்கிறேன் என்று தவறாக நினைக்காதே! ஏதா
பிரச்னை இருந்தால் என்னிடம் சொல்ல நீ தயங்க வேண்
டில்லை. எதுக்காக இப்படிக் கேட்கிறேன் என்றால், உ
இருவருக்கும் ஒத்துப் போகவில்லை என்ற விஷயம் யாருக்
தெரியாது என்று நீங்க நினைச்சுக்கிட்டு இருக்கீங்க. ஆ
வீட்டில் எல்லோருக்கும் தெரியும் என்றும், உங்க பர்சனல் வி
யத்தில் தலையிடும் துணிச்சல் இல்லாமல் மவுனமாக இ
கிறார்கள் என்ற விஷயம் உனக்குத் தெரியாது. உன்னை
அதிகமாய் தம்பியை எனக்குத் தெரியும் என்பதால், இந்தப் பி
னைக்கு என்னால் தீர்வு காண முடியும் என்று நினைக்கிறே
அவருடைய குரல் தாழ்வாக இருந்தாலும் கம்பீரமாக ஒலித்

விழிகளில் நிறைந்த நீர் என் பார்வையை மறைத்
தாம்பத்திய வாழ்க்கையில், எனக்கு அதிருப்தி இருப்பது பு
அக்கறை கொண்ட நபர் ஒருவர் இருக்கிறார் என்ற எண்ண
எனக்கு ஆறுதலைத் தந்தது.

அவர் மேலும் சொன்னார், ''குடித்தனம் என்றால் பிரச்
களே வராது என்று நான் சொல்லமாட்டேன். ஆனால் பிரச்
களே வாழ்க்கை ஆகக்கூடாது இல்லையா? என் தம்பி நல்ல



நீயும் ரொம்ப புத்திசாலி. இரண்டு மேதாவிகள் நல்ல கணவன் மனைவி ஆகமுடியாது என்ற பழமொழி இருப்பதைக் கேள்விப் பட்டிருப்பாய். அதை உண்மையாக்கணும் என்று தவிப்பானேன்?''

அவர் வாதம் செய்யும் திறமை, விஷயத்தை எடுத்துச் சொல் லும் பாங்கு என்னைக் கவர்ந்தன. அவரைப் பார்க்கும் போது என் கணவரின் அண்ணன் என்பதைவிட என் நலனில் அக்கறை கொண்ட நண்பன்போல் தோன்றியது. அதுவரை என்னை ஒருமையில் அழைப்பதை விரும்பாமல் இருந்த எனக்கு, இன்று அந்த அழைப்பு ஏதோ நெருக்கத்தை உணர்த்துவதுபோல் இருந் தது. அத்தனை நாட்களாக என் மனதில் குடியிருந்த வேதனை மெள்ள மெள்ளமாய் குறையத் தொடங்கியது.

அதன்பிறகு அவர் அந்த விஷயத்தை நீடிக்கவில்லை. என்னுடைய வேலை... அவருடைய பிசினெஸ் இப்படிப் பொது வான விஷயங்கள் பற்றிப் பேசினார். அவர் சொல்வதை நானும் ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தேன். அவருடன் தனியாக அங்கே வந்திருக்கிறேன் என்ற குற்றவுணர்ச்சி, தயக்கம் எல்லாம் காணாமல் போயிருந்தன.

கிளம்பும்முன் அவர் கேட்டார், ''ஹோ... நோ ஹார்ட் ஃபீலிங்ஸ் – நான் இப்படிக் கேட்டதை நீ தவறாக எடுத்துக் கொள்ள வில்லையே?''

''இல்லை'' மனப்பூர்வமாய்ச் சொன்னேன்.

''இருந்தாலும்... மறுபடியும் ஒரு தடவை யோசித்துப் பார். வாழ்க்கையில் சில விஷயங்களில் காம்பரமைஸ் செய்து கொண்டுதான் ஆகணும். வேலை பார்க்கும் இடத்தில் சில சம யம் நீ விட்டுக் கொடுப்பது இல்லையா... குடும்ப வாழ்க்கை யிலும் ஓரளவுக்கு அனுசரித்துப் போனால், பிரச்னைகள் இருந் தாலும், அதன் பாதிப்பு அவ்வளவாக இருக்காது...'' என்றார்.

"உண்மைதான்... ஆனால் வேலையில் பர்சனல் ... ஷன்ஸ் இருக்காது. தாம்பத்திய வாழ்க்கையில் உணர்வு... பாதிப்பு இருக்குமே!" என்றேன்.

ஒப்புக் கொள்வதுபோல் தலையை அசைத்தார். "... ஒரு விஷயம் மட்டும் நினைவில் வைத்துக்கொள். மற்... களுடன் ஒப்பிட்டால், நல்ல கணவன்தான் உனக்குக் கி... இருக்கிறான். மனிதர்களுக்கு இருக்கும் பலவீனம் ... வென்றால், கிடைக்காதது பற்றி ஏங்குவது. தங்களைவிட ... வர்கள் நன்றாக வாழ்கிறார்கள் என்றுதான் எல்லோரும் நினை... பார்கள். உன் கணவனே ஒரு குடிகாரனாகவோ, மனைவி... அடிப்பவனாகவோ இருந்திருந்தால், நிலைமை எப்படி இ... திருக்கும் என்று யோசித்துப் பாரு. இப்போ கிடைத்திரு... வாழ்க்கையின் மதிப்பு உனக்குப் புரியும். கணவரிடம் உன... பிடிக்காதது எது? வாழ்க்கைச் சாதாரணமாகக் கழிந்து விட்... போதும் என்ற மனப்பான்மை, எதையும் சாலெஞ்சாக எடு... கொள்ளாத குணம்... இவைதானே? இதொண்ணும் மன்னி... முடியாத குற்றங்கள் இல்லையே?"

கார் வீட்டின் முன் நின்றது. நான் வீட்டுக்குள் காலடி எடு... வைக்கும்போது, மாமியார் சமையல் செய்து கொண்டிரு... தாள். என் கணவர் சமையல் அறை வாசலில் நின்றுகொண்... தாயுடன் பேசிக் கொண்டிருந்தார். என் நாத்தனார் சோபாவி... குப்புறப் படுத்துக்கொண்டு, "ஃபெமீனா" படித்துக் கொண்... டிருந்தாள். ஓர்படி மிக்ஸியில் எதையோ அரைத்துக் கொண்டிரு... தாள். நான் வராண்டாவில் செருப்பைக் கழட்டிவிட்டு உள்... நுழைந்தபோது, எல்லோரும் ஒருமுறை தலை உயர்த்தி... பார்த்துவிட்டு மறுபடியும் தங்களுடைய வேலைகளில் மூழ்... விட்டார்கள்.

தாங்கள் இருவரும் சேர்ந்து வந்தோம் என்ற விஷயம் தெ... தால் எல்லோரும் என்ன நினைத்துக் கொள்வார்களோ என்...



பயமாக இருந்தது. என் மச்சினர் ஹாலில் சோபாவில் அமர்ந்து கொண்டே, "எங்க இருவருக்கும் டீ" என்றார் உரத்த குரலில்.

"களைத்துவிட்டாய் போலிருக்கே!" கணவர் என்னிடம் கேட்ட போது அவர் முகத்தைக் கூர்ந்து பார்த்தேன். அவர் முகம் வழக்கம்போல்தான் இருந்தது.

என் மச்சினருடன் சேர்ந்து வந்தது, அங்கே யாருக்கும் வித்தியாசமாகத் தோன்றவில்லை. மேலும் நான் லேட்டாக வந்தாலும் அவருடைய துணையுடன் வந்ததில் நிம்மதியாக உணருவதுபோல் எனக்குத் தோன்றியது. அவரிடம் அந்த அளவுக்கு மதிப்பு வைத்திருக்கிறார்கள் என்றால், அந்தப் பெருமை அவரைத் தான் சேர வேண்டும்.

அன்று இரவு முழுவதும் மச்சினர் சொன்ன அறிவுரையை மறுபரிசீலனை செய்து பார்த்தேன். எனக்கும் என் கணவருக்கும் நடுவில் இந்த இடைவெளி வந்ததற்குக் காரணம் என்னவென்று யோசித்தேன்.

சமுதாயத்தில் நிலவியிருந்த வழக்கத்தின்படி திருமணம் ஆனபின் கணவரின் வீட்டை என்னுடைய வீடாக ஏற்றுக்கொண்டேன். பெண்ணாகப் பிறந்தவளுக்குக் கணவன்தான் எல்லாமே. நல்லதோ கெட்டதோ அவர்தான் இனி என் வாழ்க்கைத் துணை என்று மனப்பூர்வமாய் நம்பினேன். தன் மனைவி எப்படி இருக்க வேண்டும் என்று என் கணவர் விரும்புகிறாரோ, அதுபோல் இருப்பதற்கு முயற்சி செய்து வந்தேன். அப்படியிருந்தும் அவருக்கு என்னிடமும், எனக்கு அவரிடமும் பற்றுதல் இல்லாமல் போனதற்குக் காரணம் என்ன?

பெண்ணாக இருந்தாலும் சரி, ஆணாக இருந்தாலும் சரி, திருமணம் என்பது வாழ்க்கையில் ஒரு முக்கியமான கட்டம். அதுவரைக்கும் தனியாகப் போய்க் கொண்டிருந்த வாழ்க்கைப் பயணத்தை, இன்னொரு நபருடன் இணைத்து ஜோடியாகத் தொடங்க வேண்டிய கட்டம்.

ஆனால் சமுதாயத்தில் இருக்கும் பெரும்பாலான
களைப் போலவே என் கணவரும் 'மனைவி'யின் பொறு
பற்றி யோசிக்கிறாரே தவிர, அவளுக்கும் சில உரிமைகள்
பதை ஒப்புக்கொள்ள மறுக்கிறார்.

திருமணம் செய்து கொண்டதால் தன் வாழ்க்கையில்
பந்தம் ஏற்பட்டிருப்பதையும், அதுவரைக்கும் பெற்
ளுடன், உடன் பிறந்தவர்களுடன் இருந்த நெருக்கம் கொ
தளர்ந்து, மனைவிக்கு முக்கியத்துவம் ஏற்படும் என்ற உ
அவர் உணரவில்லை.

என் மச்சினர் சொல்வதுபோல் இதை அவருடைய
மாகப் புரிந்துகொண்டு, அதிலிருந்து அவரை மீட்க முய
அவர் ஒரு நல்ல கணவராக இருப்பார்.

எங்கள் இருவருக்கும் இடையிலிருக்கும் மா
பிரிவைப் போக்கவேண்டுமென்று முடிவு செய்த நான் அத
நேர்மையாக உழைக்க வேண்டும் என்று நிச்சயித்துக் கொ
டேன். ஏற்கெனவே காலையில் சீக்கிரமாகவே எழுந்து கொ
பழக்கமாகி விட்டிருந்தது. வீட்டில் இருந்த நேரத்தில் வீ
வேலைகளைப் பொறுப்புடன் செய்யத் தொடங்கினேன்.

இதற்கு முன்பு செய்ததுபோல் கஷ்டமாக உள்ள கா
களைச் செய்யும்போது மற்றவர்களின் உதவியை எதிர்பா
வில்லை. அதோடு நான் வேலை செய்யும் நேரத்தில் மற்றவ
என்ன செய்கிறார்கள் என்று பொருட்படுத்துவதையும் வி
விட்டேன். என் கடமையைத் தவறாமல் நேரத்திற்குள் முடி
நான் என் நோக்கமாக வைத்துக் கொண்டேன்.

வேலைகளை அதிகமாகச் செய்வதால் களைப்பாக உ
தாலும், மனதை மட்டும் உற்சாகமாக வைத்துக் கொள்ள மு
சித்து வந்தேன். ஓரளவுக்கு அதில் வெற்றியும் பெற்றேன்.



என் போக்கில் மாற்றம் ஏற்பட்டதில் என் கணவருக்கு நிம்மதி ஏற்பட்டிருக்க வேண்டும். அதற்காக, எங்கள் இருவருக்கும் இடையே சமரசம் ஏற்பட்டு விடவில்லை. நானாக அவரை நெருங்கவில்லை. அவரும் என் மீதுள்ள தவறான அபிப்பிராயம் நீங்கிவிட்டால் தானாகவே அவர் என்னை நெருங்கி வருவார் என்று எனக்குத் தெரியும்.

இத்தனை நாட்களும் அவருக்குப் பிடித்தாற்போல் என்னை மாற்றிக் கொள்வது என் தனித்தன்மைக்கு ஒவ்வாத விஷயமாக நினைத்து வந்தேன். சில சமயங்களில் அப்படி இருக்கவேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டபோது, என்னால் அதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது. ஆனால் இப்போ தோன்றுகிறது, இது என்னுடைய குடித்தனம்; இதை விட்டு என்னால் விலக முடியாது. சண்டை போடுவதைவிட சமரசமாகப் போய்விடுவது நல்லது இல்லையா? அதைத்தானே மச்சினரும் சொன்னார்!

அன்று காலேஜ்விட்டு சீக்கிரமாகவே வந்துவிட்டேன். அதிசயமாக என் கணவரும் சீக்கிரமாகவே வந்துவிட்டார். டீயை குடித்துவிட்டுப் பத்திரிகையைப் புரட்டிக்கொண்டே கட்டிலில் சாய்ந்தேன்.

அவராகவே என்னிடம், "சினிமாவுக்குப் போகலாமா?" என்றார்.

நான் காண்பது கனவா இல்லை நினைவா என்ற சந்தேகம் ஒரு நிமிஷம் எனக்கு ஏற்பட்டது.

"என்ன... போகலாமா?" என்று மறுபடியும் வினவினார்.

சரியென்று மகிழ்ச்சியுடன் தலை அசைக்க நினைத்தேன். அதற்குள் மாமியார் ஏதாவது தடை செய்வாளோ என்ற சந்தேகம் வந்ததும், "வீட்டில் ஏதாவது வேலை இருக்குமோ என்னவோ... அத்தையிடம் கேட்கணும்" என்றேன்.

''அதனாலென்ன? ரொட்டீன் வேலையாக இருந் முன்னாடியே முடித்துக்கொண்டு போய்விடலாம்'' சிரித் கொண்டே சொன்னார்.

மாமியாரிடம் சொன்னபோது தடை எதுவும் சொல் வில்லை. காய்கறி மட்டும் நறுக்கி வைத்துவிட்டுப் போ சொன்னாள்.

மளமளவென்று அந்த வேலையை முடித்துவிட்டு சினி வுக்குத் தயாரானேன். மெரூன் பார்டர் போட்ட வெண்பட்டு புடவையைக் கட்டிக்கொண்டேன். ஆளுயர கண்ணாடியில் எ உருவத்தைப் பார்த்துக் கொண்டேன். ஆலிலை போன்ற வயி கொடி போன்ற உடல்வாகு, என் அழகை மேலும் எடுத்து காட்டின.

திருமண வாழ்க்கை என் உடலில் எந்த மாற்றத்தைய ஏற்படுத்தவில்லை. மனதளவிலும் மாற்றம் இல்லாதத இத்தனைப் பிரச்னைகள்!

எத்தனையோ நாட்களுக்குப் பிறகு, திருமணம் ஆ புதிதில் இருந்ததுபோல மகிழ்ச்சியாக இருந்தோம். சினிமாவை ரசித்துப் பார்த்தோம். இரவு உணவு முடிந்த பிறகு நாங்க வாங்கி வந்த இனிப்புகளை அனைவருக்கும் கொடுத்தேன்.

சமையற்கட்டில் வேலைகளை முடித்துக் கொண்டு அறை குள் நுழைந்த எனக்கு ஆச்சரியம் காத்திருந்தது. கட்டிலின் புதிதாக விரிக்கப்பட்ட போர்வை, அறை முழுவதும் பர இருந்த ஊதுபத்தியின் நறுமணம்... தலையணையில் சாய் வாக்கில் அமர்ந்துகொண்டு என் வருகைக்காகக் காத்திரு கணவர்...

கதவு அருகிலேயே நின்றுவிட்டேன். பாதங்கள் அ யெடுத்து வைக்க மறுத்தன. அவருடைய கண்களில் தென்பட் விருப்பத்தை, குறும்புத்தனத்தைப் பார்க்க வேண்டுமென்



உத்வேகமாய் இருந்தாலும், கண் இமைகள் பாரமாகி, பார்வை தரையில் பதிந்துவிட்டது.

அவர் என் அருகில் வந்து, ''என்ன, வெட்கமா?'' என்று கேட்டபிறகும் நான் தலையை உயர்த்தவில்லை. இன்னும் நெருக்கமாக வந்தவர் என் தோளைச் சுற்றி கையைப் போட்டுக் கொண்டு, கட்டிலருகில் அழைத்துச் சென்றார். என்னைக் கட்டிலில் உட்கார வைத்தவர், மல்லிகைப் பூச்சரத்தைக் கையில் எடுத்தார்.

''என் கையால் உனக்கு வைத்து விடணும்னுதான் விரும்புகிறேன். ஆனால் எனக்குச் சரியாக வைக்கத் தெரியாது. நீயே வைத்துக்கொள்'' என்று என் கையில் பூச்சரத்தைக் கொடுத்தார்.

எனக்குச் சிரிப்புதான் வந்தது. ட்யூப் லைட்டை அணைத்துவிட்டு விடிவிளக்கை ஏற்றினார். என்னை அவர் அணைத்தவாறே கட்டிலில் சாய்ந்தபோது, என் கண் இமைகள் பாரமாக மூடிக்கொண்டன.

ஜன்னலுக்கு வெளியே இருந்த பௌர்ணமி நிலவின் குளிர்ச்சி மனதிலும் பரவத் தொடங்கியது.

* * *

அந்த நிகழ்ச்சி எங்களுக்கு இடையில் ஓரளவுக்கு நெருக்கத்தை ஏற்படுத்தியது. என் பேச்சு, செயல் எல்லாவற்றிலும் நம்பிக்கை நிறைந்திருப்பதாகத் தோன்றியது. ஒன்று மட்டும் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். கணவன் மனைவிக்கும் இடையே 'ரொமான்ஸை'விட நல்ல கம்யூனிகேஷன் வேறு இல்லை.

எனக்குக் கிடைக்கும் சம்பளத்தில் கொஞ்சம் வீட்டுச் செலவுகளுக்குக் கொடுத்துவிட்டு கொஞ்சம் கைச்செலவுக்கு வைத்துக்கொண்டு மற்றதை வங்கியில் சேமித்து வந்தேன்.

ஓரளவுக்குப் பணம் சேர்ந்ததும் டூ வீலர் ஒன்று வா வேண்டுமென்று நினைத்திருந்தேன். வீட்டுக்கும் காலேஜுக்கு பதினைந்து கி.மீ. தொலைவு இருந்தது. பஸ் வசதியும் குறை சல். நேர் பஸ்ஸை பிடிக்க முடியாவிட்டால், இரண்டு பஸ்கள் மாறி, அப்படியும் நேரத்திற்கு காலேஜ் போக முடியாமல் திண் டாட்டமாய் இருந்தது.

நேரமாகிவிட்ட நாட்களில் என்னைக் காலேஜ் அருகில் ட்ராப் செய்யச் சொல்லி இவரிடம் எத்தனை முறை கேட்டு இருக்கிறேன். அவருக்கு நேரமிருந்தால் கொண்டுபோய் விட்டு வார். இல்லாவிட்டால் நிர்தாட்சண்யமாக மறுத்து விடுவார். வேறு வழியில்லாமல் இரண்டு பஸ்கள் மாறி காலேஜுக்கு போயிருக்கிறேன். ஆட்டோவில் போகலாம் என்றால், அனா வசியமாகப் பணம் செலவழிக்க மனம் ஒப்புக்கொள்ளாது. ஆட் டோக்களும் நேரத்திற்குக் கிடைக்காது.

அதுபோன்ற சமயத்தில் கணவர்மீது கோபமும் எரிச்சலும் ஏற்படும். அந்தக் கோபத்தின் காரணம் சின்னதாக இருக்கலாம். அவரவர்களின் மனநிலையை, குணநலனைப் பொறுத்து கோபத்தின் வெளிப்பாடு இருக்கும் என்று நினைக்கிறேன்.

★ ★ ★

## 10

ஒரு ஞாயிற்றுக்கிழமை அன்று என் கணவரின் நண்பரும், அவருடைய மனைவியும் வீட்டுக்கு வந்திருந்தார்கள். என் கணவர் அவர்களுடன்



ஹாலில் அமர்ந்து, உரையாடிக் கொண்டிருந்தார். துணிகளைத் தோய்த்துக் கொண்டிருந்த நான், அந்த வேலையைச் செய்து கொண்டே அவர்களுடன் நடுநடுவில் பேசிக் கொண்டிருந்தேன். துணிகளை உலர்த்தி முடித்துவிட்டு வாளியைப் பாத்ரூமில் வைக்கப் போனபோது என் கணவர் என்னை அழைத்தார்.

''வாயேன்... இங்கே உட்கார். வேலைக்கென்ன எப்போதும் இருப்பதுதானே...''

எனக்கு எரிச்சலாய் வந்தது. இவருக்கு ஏன் புரிய மாட்டேங்கிறது? வேலை எப்போதும் இருப்பதுதான். ஆனால் நேரம் இருக்கவேண்டாமா? மனதில் மூட்டிய எரிச்சலை அடக்க முயற்சி செய்து கொண்டிருந்தேன்.

''பரவாயில்லைங்க... உங்க மனைவியும் வேலைக்குப் போறவங்க. ஞாயிற்றுக் கிழமைகளில் கொஞ்சம் அதிகமாக வேலை இருப்பது சகஜம்தானே...'' நண்பருடைய மனைவி சொன்னாள்.

வந்தவளுக்கு இருக்கும் இங்கிதம்கூட கட்டிய புருஷனுக்கு இல்லையேன்னு நினைத்துக்கொண்டே அவர்கள் எதிரில் வந்து அமர்ந்து கொண்டேன்.

''ஆபீசுக்குப் போனால் மட்டும் அன்றாட வேலைகளை செய்யாமலா இருக்கிறோம்? ஞாயிற்றுக்கிழமை மட்டும் புதிதாக எந்த வேலை வந்துவிடப் போகிறது. இப்பொ நீங்க வேலைகளை முடித்துக் கொண்டு வரவில்லையா என்ன?'' தமாஷாகச் சொல்வதுபோல சொன்னார் என் கணவர்.

எனக்கு உடல் தீப்பற்றி எரிவதுபோல் இருந்தது. வெளி ஆட்களுக்கு முன் மனைவியை இப்படித் தாழ்த்திச் சொல்கிறோமே என்ற ஞானம் இருக்கவேண்டாம்.

அன்று மாலையில் அவரிடம் கேட்டுவிட்டேன். ''எதுக்காக வந்தவர்கள் முன்னாடி என்னை அவமானப்படுத்துவது மாதிரி சொன்னீர்கள்?''

''நானா... அப்படிப் பேசினேனா... எனக்கு நினைவு இல்லையே'' என்றார். நிஜமாகவே அவருக்கு நினைவு இல்லையென்று புரிந்துவிட்டது.

இவருக்கு செல்ஃப் ஆப்ப் பிளானிங் தெல் இல்லை... இவருக்குன்னு இல்லை... பெரும்பாலான கணவர்களுக்கு இருக்காது. அந்த செல்ஃப் இருக்கும் கணவர் கிடைத்தால் அது மனைவி செய்த அதிர்ஷ்டம்தான்.

இதுபோன்ற சின்ன சின்ன நிகழ்ச்சிகள் எங்களுடைய நெருக்கத்தைக் குறைத்துவிடக் கூடாதென்று கடவுளை வேண்டிக் கொண்டேன்.

* * *

நான் டிப்ஸ் கொடுத்த ஷேர்களில் மச்சினருக்கு நல்ல லாபம் கிடைத்ததாம். ஐந்நூறு ரூபாய்க்கு வாங்கிய ஷேர்களில் கிட்டத்தட்ட ஐயாயிரம் ரூபாய் லாபம் வந்ததாம். ஸ்வீட் வாங்கி வந்தார். வீட்டில் எல்லோரும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

''பேசாம வேலையை விட்டுவிட்டு, கன்சல்டன்ஸி ஆரம்பித்து விடுங்கள் அண்ணி.'' நாத்தனார் பாராட்டுவது போல சொன்னாள்.

மச்சினர் தன்னுடைய தங்கைக்காகப் புதிய உடைகள் வாங்கி இருந்தார்.

''ஓ! அண்ணா, தாங்க்ஸ்...'' மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டாள்.

''இதோ... உனக்காக ஸ்பெஷல் கிஃப்ட்'' என்றவர் என்னிடம் பெரிய பாக்கெட் ஒன்றை கொடுத்தார்.

தயக்கத்துடன் அதைப் பெற்றுக் கொண்டேன். அத்தனை பேருக்கு நடுவில் அவர் எனக்குத் தனியாக கிஃப்ட் கொடு...



...போது, மற்றவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்களோன்னு ...சங்கடமாக இருந்தது.

ஆனால் நான் பயந்ததற்கு மாறாக எல்லோரும் அந்தப் பாக்கெட்டை உடனே திறந்து பார்க்கச் சொல்லி வற்புறுத்தினார்கள். என் கணவர் அதன் மேல் சுற்றியிருந்த காகிதங்களைப் பிரிக்க, நானும் உதவி செய்தேன். உள்ளே இருந்த பொருளைப் பார்த்ததும் என் கண்கள் வியப்பால் விரிந்தன.

விலை உயர்ந்த ஷாண்டிலியர் அது. சின்னதாக இருந்தாலும் ரொம்ப அழகாக இருந்தது. என் மனம் முழுவதும் சந்தோஷம் பரவியது. அவருடைய செலக்ஷன் ரொம்ப நன்றாக இருப்பதாக எல்லோரும் பாராட்டினார்கள்.

''ரொம்ப நல்லாயிருக்கு. இதைப் பரிசாகக் கொடுக்கணும்னு உனக்கு எப்படித் தோன்றியது?'' என் கணவர் கேட்டார்.

அவருடைய பதில் என்னவாக இருக்குமென்ற ஆவலுடன் அவர் பக்கம் பார்த்தேன்.

''உங்களுக்காக வாங்கிய பெட் லேம்ப் எங்களுடைய அறையிலேயே தங்கிவிட்டது இல்லையா? அதற்குப் பதிலாக வேறு ஏதாவது வாங்கித் தரவேண்டுமென்று அப்போதே நினைத்துக் கொண்டேன். இப்பொழுதான் அதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது...'' புன்முறுவலுடன் சொன்னார்.

அவர் இந்த விஷயத்தை இன்னும் நினைவில் வைத்துக் கொண்டதற்கு எனக்கு வெட்கமாக இருந்தது. நான் வாங்கிய பெட் லேம்ப் அவர்கள் அறையிலேயே தங்கிவிட்டதற்கு நான் பட்ட வேதனையும் நினைவுக்கு வந்தது.

தன் அண்ணனிடமிருந்து அந்தப் பதில் வந்ததும், என் கணவர் என்னைப் பார்த்த பார்வையை இந்த ஜென்மத்தில் மறக்க முடியாது. கண்களாலேயே அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன்.

என் கணவரும், மச்சினரும் அந்த ஷாண்டிலியரை எங்கள் படுக்கை அறையில் தொங்கவிட்டு, உள்ளே லைட் ப்ளக் பல்பை பொருத்தினார்கள். ட்யூப் லைட்டை அணைத்துவிட்டு அந்த பல்பை போட்டால் அறை முழுவதும் நட்சத்திரங்கள் பரவி கிடப்பதுபோல்... கண்ணாடிகள் வைத்து தைத்த புடவை விரித்ததுபோல்... அறையே புதுமையாய் காட்சியளித்தது.

''பார்த்தாயா... அண்ணன் எவ்வளவு நல்லவரென்று. மனிதர்களைப் புரிந்து கொள்வதில் உனக்கு எப்போதும் அவசரம் தான்...'' என்று என் கணவர் சொன்ன போது-

''ஆமாம்'' என்பதுபோல் தலையை அசைத்தேன்.

* * *

## 11

டூவீலர் வண்டி வாங்கினால் கெனெட்டிக் ஹோண்டாவைத்தான் வாங்க வேண்டுமென்று முடிவு செய்திருந்தேன். டிபாஸிட்டாக ஓரளவு பணத்தைக் கட்டிவிட்டால் போதும். பாக்கியை மாதாமாதம் இன்ஸ்டால்மெண்டில் செலுத்தலாம் என்று விளம்பரப்படுத்தி இருந்தார்கள்.

அந்த ஆஃபரைப் பயன்படுத்திக்கொள்ள அன்றுதான் கடைசி நாளாம். எனக்கு அப்பொழுதுதான் தெரிந்தது. அதுக்குத் தேவையான பணமும் என்னிடம் இருந்தது. அதனால் வண்டியை வாங்கிவிட வேண்டும் என்று முடிவு செய்தேன்.

டிபாஸிட்டுக்கான செக்கை ஷோரூமில் கொடுத்துவிட்டு ரசீதைப் பெற்றுக் கொண்டு வீட்டுக்கு வந்தேன். அவர்களே



வண்டியை ரிஜிஸ்ட்ரேஷன் செய்து தருவார்கள் என்று சொன்ன போது நிம்மதியாக இருந்தது. வீட்டுக்கு வந்ததும் மாமியாரிடம் வண்டிக்காக பதிவு செய்த விஷயத்தைத் தெரிவித்தேன்.

மாமியார் ஒன்றும் சொல்லவில்லை. ''அவனிடம் கேட்டாச்சா?'' என்று மட்டும் கேட்டாள்.

அந்தக் கேள்விக்குப் பின்னால் இருக்கும் எண்ணம் எனக்குப் புரியவில்லை.

''கேட்கிறதுக்கு என்ன இருக்கு இதில்? வண்டியை வாங்கணும் என்று நான் நினைப்பது அவருக்கு ஏற்கெனவே தெரியும். இந்த ஸ்பெஷல் ஆஃபருக்கு இன்றுதான் கடைசி நாளாம். இந்த சமயத்தில் அதை விட்டால் நமக்குத்தான் நஷ்டம்'' என்றேன்.

''அப்படியா... நல்ல காரியம் செய்தாய்...'' என்று சொன்னவள் மேற்கொண்டு ஒன்றும் பேசவில்லை.

எப்படியும் இரண்டு நாட்களில் வண்டி வீட்டுக்கு வந்துவிடும். வண்டி வந்தபிறகு அதைக் காண்பித்து அவரை வியப்பில் ஆழ்த்த வேண்டுமென்று நான் நினைத்துக் கொண்டிருந்தேன். அதனால்தான் அவரிடம் நான் விஷயத்தை முன்னாடியே சொல்லவில்லை. இந்தக் காரணத்தை மாமியாரிடம் சொல்வதற்கு எனக்கு சங்கோசமாக இருந்தது.

மாலையில் அவர் சீக்கிரமாகவே வந்துவிட்டார். காபி டம்ளரை அவரிடம் கொடுத்துவிட்டு உள்ளே போகப் போனேன். என்னை தடுப்பதுபோல் மாமியார் சொன்னாள்.

''நீ வண்டிக்காக பதிவு செய்திருக்கிற விஷயத்தை அவனிடம் சொல்லும்மா. அப்புறமாய் மறந்துவிடப் போகிறாய்.''

நான் திகைத்து நின்றுவிட்டேன். அவ்வளவு ராஜ தந்திரமாக மாமியார் சொல்லுவாளென்று நான் நினைக்கவில்லை. அவரை பிரமிப்பில் ஆழ்த்த வேண்டும் என்று நான் வைத்திருந்த

கனவுகளையெல்லாம் நாசமாக்கியதற்கு மாமியார் மீது...
தீயாய் கிளம்பியது.

''வண்டியா... என்ன வண்டி?'' என் கணவர் கேட்...

வேறு வழியில்லாமல் விஷயத்தைச் சொன்னேன்...
சலுகை இன்றுடன் முடிந்துவிடும் என்பதையும் விளக்கி...

''பரவாயில்லை, நல்ல காரியம் பண்ணாய்.'' இப்...
சொல்வாரென நினைத்தேன்.

சற்று நேரம் வரை ஒன்றும் பேசவில்லை. பிறகு ...
குரலில் கேட்டார், ''இப்பொ அந்த வண்டி வாங்குவது ...
வளவு அவசியமா?''

எனக்கு ஒரு நிமிடம் அவர் சொன்னதன் அர்த்தம் வி...
வில்லை.

''ஏன் அப்படிக் கேட்கறீங்க? வண்டி இருந்தால் வசதி...
இருக்குமென்று நாம் பேசிக் கொள்ளவில்லையா? ...
பஸ்ஸில் போய் வருவது ரொம்ப கஷ்டமாக இருக்கு என்...
உங்களிடம் சொல்லியிருக்கிறேன். உங்களுக்குத் தெரியா...
ஒன்றுமில்லை'' என்றேன்.

''உண்மைதான். ஆனால் அதைவிட முக்கியமான செ...
களை முன்னால் வைத்துக்கொண்டு வண்டிக்காக பணத்...
செலவழிப்பது தேவையா?'' என்று கேட்டார்.

அவர் அப்படிக் கேட்டது எனக்கு வேதனையை ஏற்படுத்...
யது. ''அதற்குத் தேவையான பணம் என்னிடம் இருக்கு. ப...
பணத்தை மாதத் தவணைகளில் கட்டினால் போதும். அதை...
நானே கட்டி விடுகிறேன். நீங்க கொடுப்பீங்கன்னு நம்பி நா...
இந்தக் காரியத்தில் இறங்கவில்லை'' என்றேன்.

இல்லையென்று மறுத்தாலும் என் குரலில் ரோஷம் எட்...
பார்த்தது. அவர் அதைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை...



''என்னை நம்பி நீ டிபாஸிட் பணத்தைக் கட்டியிருப்பதாக
...நானும் நினைக்கவில்லை. ஆனால் உன்னுடைய பணமாக
இருந்தாலும் இந்தச் செலவு அவ்வளவு அவசியமானதான்னு
கேட்டேன். அவ்வளவுதான்'' என்றார்.

என்ன சொல்ல வருகிறாரென்று புரியாததால் நான் அவ
ருடைய முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

''இதோ பாரு! தங்கைக்குக் கல்யாணம் செய்யணும். அதுக்கு
எவ்வளவு செலவு ஆகுமென்று தெரியாது. இப்படி இருக்கும்
போது இப்பொ வண்டி வாங்கித்தான் ஆகணுமா?'' என்றார்.

தொலைவில் உட்கார்ந்து கொண்டு, அரிசியில் கல்லைப்
பொறுக்கிக் கொண்டிருந்த மாமியார், வேலையில் கவனமாக
இருந்தாலும், நாங்கள் பேசிக் கொண்டிருப்பதை உன்னிப்பாகக்
கேட்டுக் கொண்டிருக்கிறாளென்று எனக்குத் தெரியும்.

என்னுடைய ஆவேசம் கட்டுக்கு அடங்காமல் போய்
விட்டது. இவருடைய தங்கையின் திருமணத்துக்காக சிக்கன
மாகச் செலவு செய்து பணத்தைச் சேமித்து வைக்கணுமாம்.
சிக்கனத்தைப் பற்றி இவர் என்னிடம் சொல்லுவானேன்?

வேளைக்கு இரண்டு வகை கறி, கூட்டுடன் சமையல்
செய்து குப்பையில் கொட்டும் அவருடைய தாயார்... சுவாமி
பூஜையென்றும், விரதம் என்றும் பணத்தைக் கற்பூரமாய்
செலவழிக்கும் அவருடைய அண்ணி... சினிமாவுக்கும்,
ஷாப்பிங்கிற்கும் தாம்தூம் என்று செலவு செய்யும் தங்கை...
இவர்களிடம் சிக்கனத்தைப் பற்றி எடுத்துச் சொல்வதுதானே!

அவசியமாக இருந்த நேரத்தில்கூட ஆட்டோவில் போகா
மல் வீட்டுக்கும் காலேஜுக்கும் பஸ்ஸில் நின்றாடி, கொஞ்சம்
கொஞ்சமாய் சேமித்து வைத்த பணத்தை இவர்களுடைய
செலவுகளுக்காகக் கொடுக்கணுமா?

இப்படியெல்லாம் கேட்டுவிடலாமென்றுதான் என் நா... தாக்கது. ஆனால் பண்பாடானது என்னைத் தடுத்துவிட்... ஆனால் மாமியார் இந்த உரையாடலைக் காது கொடுத்து கேட்... கொண்டிருப்பது தெரிந்தபிறகு என்னால் பொறுமையாக இரு... முடியவில்லை.

"அன்று ஒருநாள் நான் என் ரிசெர்ச்சுக்காக புத்தகங்க... வாங்கணும். பணம் தேவை என்று கேட்டபோது முடியாது... தாட்சிண்யம் இன்றி மறுத்து விட்டீர்களே. இப்போ ந... கஷ்டப்பட்டு சேமித்து வைத்த பணத்தைக் கேட்பதற்கு உ... னுக்கு எப்படி மனசு வந்தது?"

இப்படிக் கேட்பதால் என் கணவரிடம் மட்டுமே இல்ல... மாமியாரிடமும் கெட்ட பெயரை சாசுவதமாக சம்பாதி... சொல்கிறேன் என்ற விஷயம் நன்றாகத் தெரிந்திருந்தும், ... னுடைய வயிற்றெரிச்சல் என்னை மவுனமாக இருக்க... வில்லை. அவருக்குக் கோபம் வருமென்று எதிர்பார்த்தேன்.

அப்படியேதும் நடக்கவில்லை.

"ஆமாம்! எது முக்கியமோ அதுக்குத்தான் செலவு செ... ணும்னு நான் அன்னிக்குச் சொன்னேன். இப்பவும் அதைத்தா... சொல்கிறேன்."

"முக்கியமானதா? யாருடைய தேவைகள் உங்களு... முக்கியமானதாகத் தோன்றும்?" என்னுடைய குரல் கொஞ்... கொஞ்சமாய் உயர்வது எனக்கே தெரிந்தது.

"போகட்டும். என்னுடைய தேவையென்றே வை... கொள். அது உனக்கும் முக்கியமானதுதானே?"

"கட்டாயம்! ஆனால் என்னுடைய தேவைகளும் ப... னுக்கு முக்கியமானதாக இருக்கும் பட்சத்தில்..."

"இப்போ என்னதான் சொல்கிறாய்?"



"புதுசா சொல்வதற்கு இதில் ஒன்றுமில்லை."

நான் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, காலிங்பெல் ஒலித்த சத்தம் கேட்டது. அங்கிருந்து நகருவதற்கு விருப்பம் இல்லாவிட்டாலும் வேறு வழியில்லாமல் மாமியார் எழுந்து சென்றாள்.

நான் மேலும் தொடர்ந்தேன். "நான் கஷ்டப்பட்டு பணத்தைச் சேர்த்தது, உங்களுக்குக் கொடுப்பதற்காக இல்லை. இப்படி ஆகு மென்று முன்னாடியே தெரிந்திருந்தால் காலேஜுக்குப் பஸ்ஸில் போய் வருவதற்குப் பதிலாக ஆட்டோவில் சென்றிருப்பேன். நேரமாகிவிட்டால் என்னை கொண்டுவிட முடியுமா என்று உங்களைக் கெஞ்சுவதும், நீங்க மறுத்தால் இரண்டு பஸ் மாறி திண்டாடிக் கொண்டு போய் வருவதும்... இப்படிக் கஷ்டப் பட்டிருக்க மாட்டேன். மதிய வேளைகளில் பசித்தாலும் ஹோட்ட லுக்குச் சென்றால் செலவாகிவிடுமே என்று பயுடன் நிறுத்திக் கொண்டிருக்க மாட்டேன்" என்னை அறியாமல் குரல் தழு தழுத்தது.

"அப்படி இருந்திருப்பேன், இப்படிச் செய்திருப்பேன் என்று மிரட்டத் தேவையில்லை. நீ வயிறு நிறைய சாப்பிட்டு இருந்தாலும், சொகுசாக ஆட்டோவில் சென்று வந்திருந்தாலும் நான் சந்தோஷப்பட்டு இருப்பேனே தவிர, உன்னைப் போல் அழுதுகொண்டு இருக்கமாட்டேன். உன்னுடைய கஞ்சத்தனத்தை நினைத்து இப்போ வருத்தப்பட்டு என்ன பிரயோஜனம்?" என்றார்.

"அடடா! எவ்வளவு பெருந்தன்மை! என் பணத்தில் நான் ஹோட்டலுக்கும், ஆட்டோவுக்கும் செலவழித்தால் நீங்க வருத்தப்பட மாட்டீங்க. மேலும் சந்தோஷப்படுவீங்க. ஆனால் அப்படிச் செலவழிக்காமல் சேமித்த பணத்தில் வாங்கிக் கொள் கிறேனென்று நான் சொன்னால், அது அனாவசிய செலவு.

எவ்வளவு பரந்த மனப்பான்மை உங்களுக்கு?'' என்... அப்படி எகத்தாளமாய் பேச முடியுமென்று அப்பொழு... உணர்ந்தேன்.

அதற்குள் மாமியாரும், நாத்தனாரும் உள்ளே நுழை... கள். அவர்களைப் பார்த்ததும் அவர் குரலைத் தாழ்த்தினார்.

''போதும்! ரகளையை நிறுத்து. தங்கையும் அம்மா... இருக்காங்க. அவங்க காதில் விழுந்தால் நன்றாக இருக்காது...

வெந்த புண்ணில் வேலை பாய்ச்சியது போலிருந்... எனக்கு. ''ஆமாம்! நான் வேதனைப்பட்டால் உங்களுக்... பரவாயில்லை. வீட்டில் வேறு யாராவது வருத்தப்பட்... மட்டும் உங்களால் பொறுத்துக் கொள்ள முடியாது. நீங்க பே... சொன்னால் பேசணும், நிறுத்து என்றால் நிறுத்தணும். அப்ப... தானே!'' என் குரல் உயர்ந்தது.

அவர் முகத்தில் கோபம் எட்டிப் பார்த்தது. ''உன்... வாயை மூடச் சொன்னேன். அதைச் செய் முதலில். மேலு... கோபத்தை உண்டாக்காதே. பொல்லாத வேலை... அதன... உனக்கு இவ்வளவு திமிரு... நாளையிலிருந்து நீ வேலைக்கு... போகத் தேவையில்லை.

விவேகம் இழந்துவிட்டவளாக நானும் கத்தினே... ''வேலைக்குப் போ என்றால் போவதற்கும் வேண்டாமென்றா... விட்டுவிடுவதற்கும் நான் ஒன்றும் உங்களுடைய அடிமை இல்லை... என் சுகத்தைப் பற்றி அக்கறை இல்லாத நீங்கள் என்னை... அதிகாரம் செய்ய என்ன உரிமையிருக்கு?'' என்னுடைய கேள்... இன்னும் முடியக்கூட இல்லை.

பளாரென்று அறை விழுந்தது என் கன்னத்தில். அ... ருடைய உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

''உன்னை அதிகாரம் செய்வது மட்டுமில்லை; எது வேண்... மானாலும் செய்ய உரிமையிருக்கிறது. உனக்கு தாலி கட்டி...



...னவன் நான். அண்ணாவின் வார்த்தையை மீற முடியாமல் உன்...டன் பொறுத்துப் போகிறேன். இல்லாவிட்டால், இவ்வளவு ...மிராய் நீ இருப்பதற்கு எப்பவோ இந்தக் காரியத்தைச் செய்...ருப்பேன். இனி ஒருநாளும் உரிமைகளைப் பத்திப் பேசாதே. இந்த வீட்டில் எனக்கென எத்தனைப் பொறுப்புகள் உளதோ, என் மனைவியான உனக்கும் அதே அளவிற்குப் பொறுப்புகள் உள்ளதென்பதை நினைவில் வைத்துக்கொள். புரிந்ததா?''

கன்னத்தை ஒரு கையால் பிடித்துக் கொண்டு கல்லாகச் சமைந்து விட்டேன். திடீரென்று கால்களில் வலிமை இல்லாதது போல் நிற்கக்கூட முடியவில்லை என்னால்.

என் மாமியாரும், நாத்தனாரும் அதிர்ச்சி அடைந்துவிட்டவர்கள் போல் கண்களை அகல விரித்துப் பார்த்தவாறு இருந்தார்கள்.

மற்றவர்களின் முன்னால் என்னை அவமானப்படுத்தி தன்னுடைய ஆணாதிக்கத்தை நிரூபித்துக் கொண்டு விட்டார் என்று உணர்ந்தபோது என் கண்களில் நீர் நிறைந்தது. எதுவும் செய்ய இயலாதவளாக விருட்டென்று அறைக்குள் சென்று கதவைச் சாத்திக்கொண்டு கட்டில்மீது சரிந்து விட்டேன்.

யதார்த்தம் என்னவென்று இப்பொழுதுதான் புரிந்தது. அவருக்கு வேண்டியது மனைவியில்லை. ஒரு அடிமை. தாயின் விருப்பத்திற்காக என்னை மனைவியாக ஏற்றுக் கொண்டிருக்கிறார். அண்ணாவின் வார்த்தையை மீற முடியாமல் என்னுடன் குடித்தனம் நடத்துகிறார்... அவ்வளவுதானே தவிர அவருக்கு என்மீது அன்போ, மதிப்போ எதுவுமில்லை.

இந்த உண்மையை உணர்ந்தபோது மடைதிறந்த வெள்ளமாக துக்கம் பொங்கி வந்தது. சற்றுநேரம் அழுதபின் மனதில் இருந்த பாரம் நீங்கியது போல் தோன்றியது.

கண்ணாடியில் பார்த்துக் கொண்ட போது, கண்கள் சிவந்த முகம் வீங்கி விகாரமாகத் தென்பட்டது. கன்னத்தில் பதிந்திருந்த

அவருடைய விரல்களின் அடையாளத்தைப் பார்த்தபோது படியும் அழுகை வந்தது. அழுது அழுது தலைவலியும் வந் விட்டது. தலைவலி மாத்திரையைப் போட்டுக் கொண்டு இருந்த தண்ணீரைக் குடித்துவிட்டு இழுத்துப் போர்த்திக்கொண் படுத்துவிட்டேன். தூக்கம் என்னை ஆட்கொண்ட சமயத்தில்

''உள்ளே ஏதாவது வேண்டாத காரியத்தைச் செய்துவி போகிறாள்... போய்... பாரு...'' என்று மாமியார் சொல்வதும்,

''சாகட்டும்... இப்பொ அவளுடைய பேச்சை என்னிட எடுக்காதே...'' என்று என் கணவர் சொன்னதும் என் காதுகளில் தெளிவற்று விழுந்தது. பிறகு, தூக்கம் என்னை ஆட்கொண்ட

★ ★ ★

## 12

மறுநாள் காலேஜுக்கு நேரத்துடன் போக முடியவில்லை. மனநிலை ஓரளவுக்குச் சரியாகி விட்டதால் ரொட்டீன் வேலைகளில் ஆழ்ந்து போய் விட்டேன். வேலை முடியும்போது மணி மூன்றாகி விட்டது. சீக்கிரமாகக் கிளம்பிப் போனால்தான் ஷோரூம் பூட்டுவதற்குள் போய்ச் சேர முடியும்.

மளமளவென்று என்னுடைய பொருட்களை எடுத்துக் கொண்டு டிராயரை பூட்டும்போது, ப்யூன் வந்து யாரோ எனக்காக வந்திருப்பதாகத் தெரிவித்தான். வந்தது யாராக இருக்குமென்று என்னால் ஊகிக்க முடியவில்லை.

பேக்கை எடுத்துக்கொண்டு விசிடர்ஸ் அறையினுள் காலடி எடுத்து வைத்தபோது, கதவு பக்கம் முதுகை காண்பித்தபடி நோட்டீஸ் போர்டில் இருப்பதைப் படித்துக் கொண்டிருந்த என் மச்சினர் தென்பட்டார். நான் வருவதை அவர் கவனிக்கவில்லை.



''நீங்களா?'' வியப்புடன் கேட்டேன்.

சட்டென்று திரும்பியவர், ''வந்து விட்டாயா... கையில் பேக்கைப் பார்த்தால் கிளம்பிவிட்டாய் போலிருக்கு. நான் கொஞ்சம் லேட்டாக வந்திருந்தால் உன்னைப் பிடித்திருக்க முடியாது இல்லையா?'' என்றார்.

''ஆமாம்! கொஞ்சம் வெளி வேலை இருப்பதால் வழக்கத்தைவிட சீக்கிரமாகவே புறப்பட்டு விட்டேன்'' என்றேன்.

''வா... போகலாம்'' என்றார்.

அவர் எங்கே அழைத்துப் போகிறார் என்று தெரியாவிட்டாலும், மௌனமாக அவரை பின்பற்றினேன். நேற்று மாலையில் நடந்த ரகளை விஷயமாகத்தான் பேச வந்திருப்பார் என்று நினைத்தாலும், என்னைச் சந்திக்க காலேஜிக்கே வந்தது எனக்கு வியப்பை அளித்தது.

காரில் போகும்போது அவர் எதுவும் பேசவில்லை. காரில் மெலிதாக ஒலித்துக் கொண்டிருந்த மாலியின் புல்லாங்குழல் இசை என் மனதை அமைதிப்படுத்துவது போல் இருந்தது.

கார் ஒரு பெரிய கட்டடத்தின் முன் நின்றது. அது என்னவாக இருக்குமென்று யோசித்துக் கொண்டே, அந்தப் பில்டிங்க் முன்னால் கரும்பலகையில் பொன் வண்ணத்தில் மின்னிய அந்த எழுத்துக்களைப் பார்த்தேன்.

**J.S. Electronic Components Ltd.**

அவருடைய அலுவலகம் அது என்று புரிந்தபோது திகைத்துப் போனவளாய்ப் பார்த்தேன்.

ஆபீஸ் என்றால் ஏதோ சாதாரணமாக இருக்கும் என்று நினைத்திருந்த நான் இவ்வளவு பெரிய நிறுவனத்தைப் பார்த்ததும் பிரமித்துப் போய்விட்டேன்.

வீட்டில் சகஜமாக, எல்லோருக்கும் நடுவில் ஒருவராக தென்படும் மச்சினர், இந்த நிறுவனத்தின் முதலாளி என்ற உண்மை என்னை வியப்பில் ஆழ்த்திவிட்டது.

பாக்டரி முழுவதையும் சுற்றிக் காண்பித்தார்.

''பாக்டரி ஆரம்பித்த நாட்களில் ரொம்ப கஷ்டப் வேண்டியிருந்தது. மார்க்கெட் நிலவரத்தைப் பற்றி நெ சுளிவுகள் தெரியாததோடு அனுபவமும் குறைவாக இருந் கூட இருந்தவர்கள் என்னை ஏமாற்றி வந்தார்கள். அப்படியு எதிர் நீச்சல் போட்டு ஜெயித்தேன். என்னுடைய நிறுவனம் அ வில் சிறியதாக இருந்தாலும், ஒரு வெற்றிகரமான பிசி மேனாக சமுதாயத்தில் எனக்கு ஒரு இடம் உண்டு'' என்று அ சொன்ன போது...

நான் யோசித்துக் கொண்டிருந்தேன். இத்தனைச் சிர களை, கஷ்டங்களை இவர் தனியாக அனுபவித்தபோது, எ கணவர் தன்னுடைய அண்ணனுக்கு ஏன் உதவி செய்யவில்

என் மனதைப் படித்து விட்டவர்போல் அவர் சொன்

''கம்பெனி பிரச்னைகளில் நான் மூழ்கியிருந்த போது அந்த விஷயத்தை வீட்டில் சொன்னதில்லை. அப்பொ அவ படித்துக் கொண்டிருந்தான். டிகிரியை முடித்தபிறகு எனக் உதவியாய் கம்பெனியைக் கவனித்துக்கொள் என்று நா அவனைக் கேட்பதற்கு முன்பே அவனுக்கு வங்கியில் வேலை கிடைத்துவிட்டது. வாழ்க்கையில் ரிஸ்க் எடுத்துக் கொள் விரும்பாதவன் அவன். எனக்கும் பிரச்னைகள் ஓரளவுக் சரியாகிவிட்டதால் அவனை வற்புறுத்தவில்லை.''

பாக்டரியைச் சுற்றிப் பார்த்தபிறகு அவருடைய அறையி உட்கார்ந்து கொண்டோம். ப்யூனை அழைத்து கூல்ட்ரிங்க் கொண்டுவரச் சொன்னார்.

ப்யூன் கிளம்பிப் போன பிறகு, ''இப்பொ சொல் ''நேற்று ஏதோ ரகளை நடந்ததாமே?'' என்று தாழ்வான குரலி கேட்டார்.

எனக்கு எரிச்சலாக இருந்தது. ''அதைக் கேட்க இத்தனை நேரம் காத்திருப்பானேன்? காலேஜிலேயே கேட்டிருக்கலாமே?''



ஏதோ ஒரு வேகத்தில் கேட்டுவிட்டேனே தவிர, ''ச்ச... ச்ச... ஏன் இப்படி பெரியவர், சின்னவர் என்ற இங்கித ஞானமில்லாமல் நடந்து கொள்கிறேன்'' என்று உள்ளூர வருத்தம் ஏற்பட்டது.

நான் சொன்னதை அவர் சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை. புன்முறுவல் மாறாமலேயே, ''அதெல்லாம் ஒன்றும் இல்லை. உனக்கு இந்த ஃபாக்டரியைக் காண்பிக்க வேண்டும் என்று ரொம்ப நாளாய் நினைத்துக் கொண்டிருந்தேன். நம் வீட்டில் யாருக்கும் பிசினெஸ்ஸில் ஆர்வம் இல்லை. என் தம்பியையும் சேர்த்துச் சொல்கிறேன். வங்கியில் ரொட்டீனாக வேலை செய்வது, மாதம் தவறாமல் சம்பளம் பெறுவது தவிர அவனுக்கு எதிலும் இண்டரெஸ்ட் கிடையாது. உனக்கு மட்டும்தான் பிசினெஸ் பற்றிக் கொஞ்சமாவது ஆர்வமும், அதைப் புரிந்து கொள்ளும் புத்திசாலித்தனமும் இருக்கு. அது போகட்டும்... நேற்று என்னதான் நடந்தது?'' மறுபடியும் விஷயத்திற்கு வந்தார்.

''உங்களுக்கு யார் மூலமாய் விஷயம் எட்டியதோ எனக்குத் தெரியாது. ஆனால் வண்டி வாங்கும் விஷயமாக எங்களுக்கு இடையில் ரகளை ஏற்பட்டது'' என்றேன்.

''நீ வண்டியை வாங்கப் போகும் விஷயத்தை அவனிடம் முன்னாடியே சொல்லியிருந்தால், அது அவனுடைய ஈகோவை திருப்திப்படுத்தியிருக்கும் இல்லையா? ஒருகால் அவன் மறுத்திருந்தாலும் சமாதானமாகப் பேசி ஒப்புதல் வாங்கியிருக்கலாமோ என்னவோ... கொஞ்சம் யோசித்துப் பாரு.''

''நான் சம்பாதித்துச் சேர்த்த பணத்தில் வண்டியை வாங்க நினைத்தேன். காலேஜுக்கு நேரத்துடன் போக முடியாமல் திண்டாடும் மனைவிக்குத் தானாக வண்டியை வாங்கித் தருவதற்குப் பதில், அவன் வாங்க நினைத்தாலும் தடை சொல்லும் மனிதரைப் பற்றி விவாதிப்பது அனாவசியம். நேற்று நான் அவரிடம்

வண்டியை வாங்கட்டுமா என்று கேட்கவில்லை. கேட்க வே
டிய அவசியமும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. வ
டிக்காகப் பதிவு செய்திருப்பதாகச் சொன்னேன். அவ்
தான்!'' போகப் போக என் குரல் ஆவேசமடைந்துவிட்ட
என்னால் உணர முடிந்தது.

அவர் ஒன்றும் பேசவில்லை. ஏதோ யோசனையில் ஆழ்
விட்டவர்போல் அவருடைய புருவங்கள் முடிச்சிட்டுக் கொ
டன. கை மட்டும் பேனாவின் மூடியைத் தன்னிச்சையாய் திரு
கொண்டிருந்தது.

நான் எழுந்து கொண்டேன். ''இனி அந்த விஷயத்தை
பற்றிப் பேசுவது அனாவசியம். நான் உடனே கிளம்பணு
என்றேன்.

அவர் வியப்படைந்தவராக ''எங்கே?'' என்றார்.

''வண்டிக்காகப் பதிவு செய்ததைக் கான்சல் செ
தற்கு...'' என் குரலில் இருந்த எரிச்சலைக் கவனித்தாற் போ
அவர் இதழ்களில் முறுவல் தவழ்ந்தது.

''அவனைக் கேட்க வேண்டிய தேவையே இல்லையெ
வள், அவன் வேண்டாமென்றதும் புக்கிங்கை கான்சல் செய்
னேன்?''

என்னால் பதில் சொல்ல முடியவில்லை. இயலாமையுட
பார்த்தேன். என்னை உட்காரும்படி சாடைக் காட்டிவிட்
மேலும் தொடர்ந்தார்.

''இதோ பாரு! நான் முன்னாடியே சொல்லியிருக்கிறே
என் வீட்டில் எல்லோருடைய தேவைகளை நிறைவேற்
பொறுப்பு எனக்கு இருக்குன்னு. நான் சொல்வதைக் கேள். அ
வண்டியை நானே வாங்கித் தருகிறேன். அப்பொ வீட்டி
ஒன்றும் சொல்ல மாட்டார்கள்.''



நான் திகைத்துப் போய்விட்டேன். அவர் எனக்கு வண்
டியை வாங்கித் தருவதாவது? என்னுடைய சுயமரியாதைக்கே
அவமானம்! என்னை நானே கட்டுப்படுத்திக் கொண்டேன்.

''இங்கே பிரச்னை வண்டியை வாங்கணுமா வேண்டாமா
என்பது பற்றி இல்லை. மனதுக்குச் சம்பந்தப்பட்ட பிரச்னை.
எனக்கு வண்டியை வாங்க முடியவில்லையே என்ற வருத்தத்தை
விட, அதற்கு அவர் சொன்ன காரணங்களும், என் எண்ணங்
களுக்குக் கொஞ்சம்கூட மதிப்பு தராத அவருடைய குணமும்
தான் என்னை ரொம்ப வேதனைப்படுத்துகிறது. அவருக்கே
மனைவியிடம் அக்கறையில்லாத போது, மூன்றாவது நபர் வாங்கித்
தருவது சரியென்று என் மனதுக்குப் படவில்லை'' ஆங்கிலத்தில்
படபடவென்று சொல்லி முடித்தேன்.

என்னைச் சமாதானப்படுத்துவதில் தோற்றுப் போனவராய்
பெருமூச்சுவிட்டார். மேற்கொண்டு எதுவும் பேசாமல் காரில்
வீட்டுக்கு வந்தோம். கார் வீட்டை நெருங்கும்போது அவர்
சொன்னார்.

''பிரச்னைகளை ரொம்பவும் வளர்த்துக் கொண்டு போகக்
கூடாது. நீ ரொம்ப புத்திசாலியானவள். மனதில் இருப்பதை
அப்படியே வெளியில் சொல்லிவிடும் சுபாவம் உனக்கு. இது
நல்லதுதான். ஆனால் இப்படி இருப்பது எல்லா சூழ்நிலைக்கும்
ஒத்து வராது. கொஞ்சம் விட்டுக் கொடுத்து நடந்து கொள்ள
முயற்சி செய்.''

அவர் சொல்லி முடித்ததும் நான் கேட்டேன். ''இப்பொ
அந்த ஷோ ரூம் திறந்திருக்குமா?''

என் பிடிவாதக் குணத்தை உணர்ந்தபோது அவருக்கு
மேலும் ஆச்சரியமாக இருந்திருக்க வேண்டும். ஒரு நிமிடம் என்
முகத்தைக் கூர்ந்து பார்த்தார். பிறகு தாழ்ந்த குரலில் சொன்னார்.

''இந்த விஷயத்தை உன்னிடம் சொல்ல வேண்டாமென்று
நான் நினைத்தேன். ஆனால் இப்பொ சொல்லிவிடலாம்னு

தோன்றுகிறது. காலையில் நீ காலேஜுக்குப் போன பிறகு யிடம் பேசினேன். அவன் உன்மீது ரொம்ப எரிச்சலுடன் இ கிறான். சாதாரணமாக அவனுக்கு யார்மீதும் கோபம் வரா என் தம்பி என்பதற்காக நான் அவனைச் சப்போர்ட் செய்யவி அவனைச் சின்ன வயதிலிருந்து எனக்குத் தெரியும். அவனி எல்லோருக்கும் நல்ல அபிப்பிராயம் இருக்கு, உன்னை தவிர. அது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. நீ சேமி வைத்த பணத்தில் வண்டியை வாங்க நினைத்தாய். அ வேண்டாமென்று மறுக்க யாருக்கும் உரிமையில்லை. ஆனா குடும்பம் என்றால் வெறும் உரிமைகள் மட்டுமே இல்லை ஒரு வார்த்தை அவனிடம் முன்னாடியே சொல்லியிருந்தா நிலைமை வேறுவிதமாக இருந்திருக்கும். இந்த விஷயம்தா உன்னுடன் பேச நினைத்தேன். நேற்று நீ கதவைச் சாத் கொண்டு உள்ளேயே இருந்துவிட்டாய். எல்லோரும் எவ்வள கவலைப்பட்டார்கள் என்று உனக்குத் தெரியாது. வீடு நெருங் விட்டது. உன் மூட் நன்றாக இருக்கும் போது பேசிக் கொள்ளலா

"தம்பிமீது அவ்வளவு பரிவு ஏற்பட்டபிறகு இனிமே இந்த விஷயமாக என்னுடன் பேசுவது வியர்த்தம்" என்றேன் யாரும் என்னைப் புரிந்துகொள்ள மறுக்கிறார்களே என்ற வேதனை தான் என் குரலில் பிரதிபலித்தது.

ஒரே ஒரு உரிமையைப் பயன்படுத்திக் கொள்வதாக நா சொன்னதும், அதுவரை நான் சுமந்து வந்த பொறுப்புகளை எல்லோரும் மறந்துவிட்டார்கள்.

வண்டி விஷயத்தில் முன்னாடியே அவரிடம் சொல்லி அனுமதி பெற்றிருக்கலாம் என்பது மச்சினரின் வாதம். அப்படி சொல்லியிருந்தாலும் அவர், "நோ" என்றுதான் சொல்லியிருப் பார் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

★ ★ ★



கார் வீட்டின் முன் நின்றதும் என் கணவர் வாசற் கதவைத் திறந்தார். அவரை ஏறெடுத்தும் பார்க்காமல் நான் உள்ளே போய் விட்டேன். அவரும் என்னிடம் பேச முயற்சிக்கவில்லை.

முகத்தை அலம்பி, புடவையை மாற்றிக்கொண்டு சமைய லறையில் நுழைந்து விட்டேன். யாருடனும் பேச வேண்டிய தேவை இருப்பதாக நான் நினைக்கவில்லை. வீட்டுச் சூழ்நிலை சாதாரணமாக இருந்தது.

நான் படுத்துக்கொள்ள அறைக்குள் நுழையும்போது அவர் மேஜை முன்னால் உட்கார்ந்து ஆபீஸ் பைல்களை பார்த்துக் கொண்டிருந்தார். நள்ளிரவு தாண்டிய பிறகு அவர் கட்டிலில் அந்தப் பக்கம் திரும்பிப் படுத்துக் கொள்வதை என்னால் உணர முடிந்தது.

அதன்பிறகு மௌனமே எனக்குத் துணையாகிவிட்டது. மறுநாள் காலையிலேயே போய் வண்டியின் புக்கிங்கை கான்சல் செய்துவிட்டேன். வேலையில் இருப்பதால் பணத்துக்குப் பிரச்னை இல்லாவிட்டாலும், ரீசேர்ச் செய்வதால் பெரிதாகப் பிரயோஜனம் இருக்கப் போவதில்லை என்று பி.ஹெச்.டி. எண்ணத்தைக் கைவிட்டிருந்தேன். ஆனால் இப்போ என் மன இறுக்கத்தைக் குறைத்துக்கொள்ள ஏதாவது மாற்றம் வேண்டும் போல் தோன்றியது.

படிப்பு ஒன்றுதான் இதற்கு மாற்று மருந்து என்று உணர்ந்த தும் செயலில் இறங்கினேன். என் ஆர்டிகிள்ஸ் ஜர்னலில் பப்ளிஷ் ஆவதும், எனக்காக கைடை தேடிக்கொண்டதும் எளிதில் முடிந்து விட்டன.

இரவும், பகலும் வேலை, படிப்பில் மூழ்கிவிட்டேன். என்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்று உணரும் நிலையில் நான் இல்லை.

ஒருநாள் நான் காலேஜுக்குக் கிளம்பிக் கொண்டிருந்த போது மச்சினர் சொன்னார்.

''நான் அந்தப் பக்கமாய்தான் போகிறேன். உன்னை கா
ஜில் ட்ராப் பண்றேன். ஐந்து நிமிடங்கள் வெயிட் பண்ணு

காரில் போகும்போது அவர் என்னுடைய ப
விஷயங்கள் எதுவும் கேட்கவில்லை. பொதுவாகப் பி
பற்றிப் பேசிக் கொண்டோம். மாலையில் வீட்டுக்கு வ
போது ஹாலில் மச்சினரும், மாமியாரும் இருந்தார்கள். டி
சாப்பிட்டுக் கொண்டு இருந்த மச்சினர் என்னை வரவே
பேசியபோது, வேறு வழியில்லாமல் அங்கேயே உட்கா
கொண்டேன்.

மாமியார் உள்ளே போய் எனக்காகத் தட்டில் இட்லி
சட்னியும் எடுத்துக் கொண்டு வந்தாள்.

''நானே எடுத்து வந்திருப்பேனே... உங்களுக்கு ஏன் வீ
சிரமம்?'' மனப்பூர்வமாக சொன்னேன்.

''பரவாயில்லைம்மா... இதில் சிரமம் என்ன இருக்
பெரிய மகன் இப்பொதான் சொல்லிக்கிட்டு இருந்தான். இர
மூன்று மாதங்களுக்கு யாரோ டீலருடன் வேலை இருக்கும
அந்த வழியில்தான் போகவேண்டியிருக்கும். உன்னைத் தி
மும் காலேஜ் வாசலில் இறக்கிவிடுகிறேன் என்று சொன்
ஏதோ உனக்கும் சிறிது சிரமம் குறையுமில்லையா?''

மாமியார் முகத்தைக் கூர்ந்து பார்த்தேன். அதில் உண்
யான ஆதங்கம் இருப்பதுபோல்தான் தோன்றியது.

மறுநாளிலிருந்து மச்சினருடன் காரிலேயே போ
தொடங்கினேன். வீட்டு வேலைகளை முடித்துக்கொண்
சாவகாசமாய் கிளம்பினாலும் காலேஜிக்கு லேட்டாகாமல் போ
முடிந்தது. முக்கியமாக களைப்பு என்பது இல்லாமல் இருந்த

மச்சினருடன் தினமும் காரில் போவது பற்றி வீட்
இருப்பவர்கள் வித்தியாசமாக எடுத்துக்கொள்ளப் போ
தில்லை.



வெளி உலகில் இதைப் பற்றி என்ன நினைத்துக் கொள்கி
...ர்கள் என்று தெரியும் வாய்ப்பு எனக்கு இல்லாததால் நான்
...தைப் பொருட்படுத்தவில்லை. நான் செய்த இரண்டாவது
தவறு அது.

* * *

## 13

நாங்கள் இருவரும் காரில் போகும்போது
சிலசமயம் டீலரிடம் சென்றுவிட்டு என்னை காலேஜ்
வாசலில் இறக்கிவிடுவார்.

அந்த டீலர் ரொம்ப நம்பிக்கையானவனாக இருப்பதால்
அவனுடைய பொறுப்பில் என் காலேஜ் அருகிலேயே புதுசாக
பாக்டரியைத் தொடங்கும் எண்ணம் என் மச்சினருக்கு இருப்ப
தாக பேச்சுவாக்கில் தெரிந்தது.

''புதிதாக பாக்டரியை மட்டும் தொடங்குவீர்களா...
இல்லை கிளை அலுவலகமும் திறக்க வேண்டுமென்ற ஐடியா
வும் இருக்கிறதா?'' என்று கேட்டேன்.

''என்ன சொல்கிறாய் நீ?'' புரியாததுபோல் கேட்டார்.

''ஆபீசும் இங்கே வந்தால் நான் தினமும் காரிலேயே வந்து
போகலாம் இல்லையா?'' சிரித்துக் கொண்டே சொன்னேன்.

அவர் வியப்புடன் என்னைப் பார்த்து, ''டு... யூ ரியல்லி
திங்க் ஸோ?'' என்று கேட்டார்.

நான் மறுப்பதுபோல் தலையசைத்தேன். ''இல்லை...
இல்லை... சும்மா சொன்னேன். புதிதாக கிளை அலுவலகத்தைத்

தொடங்க வேண்டிய அவசியமில்லை. ஒரே ஆபீசாக இருந்தால் சென்ட்ரலைஸ்ட் அதாரிட்டியும் இருக்குமில்லையா? புதுசா ஆரம்பிக்கிற பாக்டரியில் எல்லோரையும் புதிதாக எடுத்துக் கொள்வதைவிட பழைய பாக்டரி ஆட்கள் சிலரை இங்கே ட்ரான்ஸ்பர் செய்யலாம்'' என்றேன்.

''அப்படி செய்தால் பழைய பாக்டரியில் உற்பத்தித் திறன் குறைந்து விடாதா?''

''ப்ரொடக்ஷன் தொடங்குவதற்கு எப்படியும் சில மாதங்கள் ஆகும். பழைய பாக்டரியில் சில ஆட்களை அப்ரெண்டிஸ் டிரைனிக்குகளாக எடுத்துக் கொண்டு அவர்களுக்குப் பயிற்சி தரலாம். ஆனால் அவர்களைப் புது இடத்துக்கு மாற்ற வேண்டாம்'' என்றேன்.

''ஏன் மாற்றக் கூடாது?'' அவருடைய கேள்வியில் ஆர்வம் தென்பட்டது.

''புதிய ப்ளாண்ட், புது மிஷினரியில் ஏதாவது பிரச்னைகள் வந்தாலும் வரலாம். அவற்றை சமாளிக்க அனுபவம் இருப்பவர்கள் இருந்தால்தான் நல்லது'' என்றேன்.

ஒரு நிமிடம் நிதானித்தவர், ''நீ உடனே வேலையை விட்டுவிடு'' என்றார் சீரியஸாக.

நான் திகைத்துப் போய்விட்டேன். அதிகப் பிரசங்கித்தனமாக ஏதாவது சொல்லிவிட்டேனோ? அது அவருக்குப் பிடிக்கவில்லையோ என்று பயந்துகொண்டே, ''எதுக்கு?'' என்றேன்.

''உடனே பிசினஸ்ஸில் என்னுடைய பார்ட்னராக சேர்ந்துவிடு'' கலகலவென்று நகைத்துக் கொண்டே சொன்னார்.

உயிர் வந்தது போலிருந்தது எனக்கு. ''நான் புதுசாக எதையும் சொல்லிவிடவில்லை. ஏதோ எனக்குத் தோன்றியதைச் சொன்னால், நீங்களும் அதை ரொம்ப பெரிய விஷயமாய்



பாராட்டறீங்க...'' தயங்கிக் கொண்டே சொன்னாலும், அவர் அப்படி என்னை பாராட்டியது மனதுக்கு ரொம்ப பிடித்திருந்தது.

''உண்மையைத்தான் சொல்கிறேன். ஒருபக்கம் ஜெனடிக்ஸில் கோல்ட்மெடலைச் சாதித்து, இன்னொரு பக்கம் பிசினெஸ் பற்றி இவ்வளவு ஆழமாக, தெளிவாக யோசிக்கும் உன்னைப் பார்த்தால்... I admire you. some time I fed marriage has shadowed you honestly...'' அவர் குரலில் இருந்தே நேர்மை என்னை ஈர்த்து விட்டது.

மேலும் அவர் தொடர்ந்தார், ''என் தம்பி திருமணம் செய்து கொள்ளப் போகிறேன் என்று தெரிந்தபோது, யாரோ புதிய பெண் இந்த வீட்டுக்கு வருவாள் என்றுதான் நினைத்தேன். மாமியார் மருமகள் சச்சரவு வராமல் வீட்டு வேலைகளைப் பகிர்ந்து கொண்டால் நன்றாக இருக்கும் என்றுகூட எதிர்பார்த்தேன். உன்னுடைய குவாலிஃபிகேஷன் தெரிந்தபோது, போஸ்ட் கிராஜுயேஷன் செய்துவிட்டு வீட்டுடன் இருக்கப் போகிறாளா? இந்தக் காலத்தில் பெண்கள் ஏன்தான் படிக்கிறார்களோ கஷ்டப்பட்டு கோல்ட்மெடல் சாதிக்கும் அளவுக்குத் திறமையை வைத்துக் கொண்டு, எல்லாமே வீண்தானே என்று எரிச்சல்கூட வந்தது.''

அவர் மேலும் ஏதோ சொல்லப் போகும்முன் இடைமறிப்பதுபோல் கேட்டேன்.

''இப்பொ என்னைப் பற்றி என்ன நினைக்கிறீங்க?''

சின்ன குழந்தையைப் போல் அப்படிக் கேட்டாலும், அவருடைய பாராட்டு என் மனதைக் கிறங்கச் செய்தது.

''நீ புத்தகங்களை ஆர்வத்துடன் படிப்பதை - வீட்டு வேலைகளைத் தடைகளாய் உணருவதைப் பார்க்கும்போது, இந்த வீட்டுச் சூழ்நிலையில் நீ நலிந்து போய்க் கொண்டிருப்பதாக எனக்குத் தோன்றியது. அந்த விஷயத்தில் உனக்கும், அவனுக்கும் பிரச்னைகள் வருமென்று நான் முன்னாடியே ஊகித்

தேன். அவன் ரொம்ப ஹோம்லி டைப். அவனுக்கு உன்னைப் போல் சாலெஞ்சான வாழ்க்கை தேவையில்லை. மனைவியாக வருபவள், தன்னுடைய தாய்க்கு சேவை செய்கிறவளாக, தன்னிடம் அன்பு செலுத்துகிறவளாக இருந்தால் போதும் அவனுக்கு. துரதிர்ஷ்டவசமாக நான் ஊகித்தது போலவே நடந்தது. இருந்தாலும் நீ புத்திசாலியாக இருப்பதால் இதற்குச் சரியான தீர்வு உன்னால் காணமுடியும் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது.''

என் கண்கள் பனித்துவிட்டன. ''என்னைச் சரியாகப் புரிந்து கொண்டது நீங்க ஒருத்தர்தான். நான் வளர்ந்த சூழ்நிலை வேறு. சமையலறைச் சுற்றியே என் எண்ணங்கள் இருப்பதுபோல் நான் வளரவில்லை. என்னுடைய யோசனைகள், எண்ணங்கள் மாறுபடுவதை வீட்டில் இருப்பவர்கள் புரிந்து கொள்ளவில்லை. புகுந்த வீட்டுக்குத் தகுந்தாற்போல் மாறலாம் என்று நான் நினைத்தாலும் மற்றவர்கள் என்னுடன் ஒத்துழைக்க மறுக்கிறார்கள்'' என்றேன். என் குரல் தழுதழுத்தது.

என்னுடைய வேதனையைப் பகிர்ந்து கொள்வதுபோல் அவர் சற்று நேரம் மவுனமாக இருந்தார்.

''என்னால் உன்னைப் புரிந்துகொள்ள முடியும். ஆனால் வருத்தப்படுவதால் பிரயோஜனம் என்ன? குடித்தனமே வேண்டாமென்று பிரிந்து போய்விட்டால் அது வேறு விஷயம். ஆனால் குடும்பம் வேண்டும் என்று நினைத்தால், அதை நமக்குத் தகுந்தாற்போல் மாற்றிக் கொள்வதுதான் புத்திசாலித்தனம். சொல்ற அளவுக்கு எளிதாக முடியும் காரியமில்லை இது. மனதளவில் இந்த வீட்டுடன் உன்னை இணைத்துக் கொள்வதற்கு மேலும் கொஞ்ச நாள் தேவைப்படும். அதுவரையில் பொறுமையாக இரு... சரிதானே...'' அவருடைய குரல் ஆறுதல் தருவதுபோல் இருந்தது.



எந்த விஷயத்தையும் பொருட்படுத்துவதற்கு நேரமில்லாதவராகத் தென்படும் இவர், ஒவ்வொரு சின்ன விஷயத்தையும் எவ்வளவு ஆழமாகக் கவனிக்கிறார் என்று புரிந்தபோது வியப்பாக இருந்தது. மனிதர்களைச் சரியாக எடை போடக்கூடிய திறமை அவரிடம் இருப்பதை உணர்ந்தபோது, அவர்மீது மதிப்பு மேலும் கூடியது.

இனிமையான சங்கீதத்தைக் கேட்பது அவருக்குப் பிடிக்குமாம். சங்கீதம் களைப்பைப் போக்குவதோடு, உற்சாகத்தையும் அளிப்பதாக அவர் சொன்னபோது, நான் நம்பவில்லை. ஆனால் காரில் போகும்போது காதில் விழும் மெலிதான இசை என் மனதில் உற்சாகத்தை நிரப்புவதுடன், வேலையிலும் சுறுசுறுப்பாகச் செயல்பட முடிந்தது.

இதற்கு முன்புபோல் அவருடன் சேர்ந்து காரில் போவது எனக்கு கில்டியாகத் தோன்றவில்லை. ரொம்ப சகஜமான விஷயம் போல் உணர்ந்தேன். எங்கள் இருவருக்கும் இடையில் இருக்கும் வயது வித்தியாசம் பளிச்சென்று தெரிவதால், வெளியிலும் யாரும் வித்தியாசமாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள் என்று நான் நம்பினேன். என்னை நானே சமாதானப்படுத்திக் கொள்வதற்காக இந்தப் பதிலைக் கண்டுபிடித்தேனோ என்று அதற்குப் பிறகு தோன்றியது.

இந்த விஷயம் அம்மாவுக்குத் தெரிந்தபோது, பிடிக்காத விஷயத்தைக் கேட்டு விட்டதுபோல் முகத்தைச் சுளித்தாள்.

''அவருடன் சேர்ந்து போவானேன்? அழகாய் ஒரு வண்டி வாங்கிக் கொண்டால் ராணி மாதிரி நீயே போகலாமே?'' என்றாள்.

எனக்குக் கொஞ்சம் வருத்தமாக இருந்தது. ஒரு ஆணும், ஒரு பெண்ணும் கொஞ்சம் நெருங்கிப் பழக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், மற்றவர்களுக்கு அர்த்தமில்லாத சந்தேகங்கள் வருவானேன்? இருந்தாலும் என் உணர்ச்சிகளை வெளியில் காட்டிக் கொள்ளாமல் சொன்னேன்.

''வண்டிக்காரப் பணத்தைச் செலவு செய்வதை அவர்கள் விரும்பவில்லை. எனக்கும் கஷ்டமில்லாமல் காலேஜ் போய் வருவதற்காக அவர்களாகக் கண்டுபிடித்த தீர்வுதான் இது. அவர் வயதில் ரொம்ப பெரியவர் அம்மா! என்னிடம் அபிமானமும் ஜாஸ்தி...'' அவரை என் தந்தை ஸ்தானத்தில் வைத்திருப்பது போல் நான் பேசிய பேச்சுகள், பின்வரும் நாளில் எண்ணிப் பார்த்தபோது வியப்புதான் ஏற்பட்டது. மனிதன் தன்னுடைய நடத்தையை நியாயப்படுத்திக் கொள்வதற்காக, எப்படி வேண்டுமானாலும் பேசுவான் என்ற உண்மை புரிந்தபோது, காலம் கடந்துவிட்டது.

ஒருநாள் மாமியாரின் தூரத்து உறவுக்காரப் பெண்மணி ஒருத்தி வந்திருந்தாள். என் மாமியார் அவளுடன் பேச்சுவாக்கில் மருமகப் பெண்கள் வந்தபிறகு குடும்பம் பெரியதாகி விட்டதால், வீடு போதவில்லை என்று குறைப்பட்டுக் கொண்டாள்.

''உன் சின்ன மருமகளும் வேலை பார்க்கிறாள் இல்லையா? மகளுடைய காலேஜ் அருகிலோ, சின்ன மருமகளுடைய காலேஜ் அருகிலோ பெரிய வீடாக வாடகைக்கு எடுத்துக்கொள். வாடகை கொஞ்சம்கூட போனாலும் போக்குவரத்துப் பிரச்னை இருக்காது இல்லையா?'' இலவசமாய் அறிவுரை வழங்கினாள் அந்த அம்மாள்.

''இப்பொ அந்தப் பிரச்னை இல்லை. சின்னவளுக்கு காலேஜ் ரொம்ப தொலைவு இல்லை. ஆட்டோவில் போனாலும் மினிமம் சார்ஜ்தான் ஆகும். பெரிய மகன் சின்ன மருமகளை காலேஜ் வாசலில் இறக்கி விட்டுட்டு போவான்...'' தன் போக்கில் சொல்லிக் கொண்டு போனாள் மாமியார்.

பக்கத்தில் இடி விழுந்தது போல் அதிர்ந்து விட்டாள் அந்த மாது. ''என்ன? பெரிய மகன் சின்ன மருமகளைகூட அழைத்துக் கொண்டு போகிறானா?'' உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மறுபடியும் கேட்டாள் அந்த மாது.



அதற்குள் மாமியார் சுதாரித்துக் கொண்டுவிட்டாள். ''பாவம்... புது மருமகள்... வீட்டு வேலைகளைச் செய்துவிட்டு, பஸ்ஸில் காலேஜுக்குப் போய்க் கொண்டு ரொம்ப திண்டாடிக் கொண்டிருந்தாள். நான் பெரிய மகனை, 'முடிந்த போதெல்லாம் சின்ன மருமகளை காலேஜ் வாசலில் இறக்கி விடுடா'ன்னு சொன்னேன். அவனும் ஒத்துக் கொண்டான். குழந்தைகள் என் பேச்சை ஒருநாளும் மீறமாட்டார்கள்'' பெருமைப்பட்டுக் கொள்வதுபோல் மாமியார் சொன்னாள்.

மாமியார் என்ன சொல்லப் போகிறாளோ என்று ஆர்வத்துடன் காத்திருந்த எனக்கு அந்தப் பதில் வியப்பை ஏற்படுத்தியது. எதிராளி வாயடைத்துப் போகும் விதமாகப் பதில் சொல்ல சிலரால்தான் முடியும். இந்தக் கலையில் மாமியார் கற்றுத் தேர்ந்தவள். எது எப்படி இருந்தாலும் மாமியார் எனக்கு அனுகூலமாய் பேசியது மகிழ்ச்சியைத் தந்தது.

மச்சினருடன் பழகப் பழக அவருடைய குணநலன்கள் என்னைக் கவர்ந்துவிட்டதை உணரும்போது முதலில் அதிர்ச்சியாக இருந்தாலும், போகப் போக அதை பொருட்படுத்தும் நிலையில் என் மனம் இருக்கவில்லை. எல்லா விஷயங்களிலும் அவருக்கு இருந்த ஈடுபாடு எனக்கு வியப்பை ஏற்படுத்தியது.

'அடுத்த தடவை ஊருக்குப் போனால் உனக்கு ராஜஸ்தானி மிரர் வர்க் செய்த டிரெஸ் வாங்கி வருகிறேன். போன முறை தங்கைக்கு வாங்கி வந்தேனே! நீ பார்த்தாயா அந்த டிரெஸ்ஸை?''

அவர் இப்படிச் சொல்லும்போது என் மனம் உத்வேகத்தில் துடிப்பதை என்னால் தடுக்க முடியவில்லை. ''ஹிண்டு'' பேப்பரில் வரும் மேனேஜ்மெண்ட் ஆர்டிகிள்ஸ், ரீடர்ஸ் டைஜஸ்டில் வரும் ஜோக்ஸ் இப்படி எல்லாவற்றையும் கரைத்துக் குடித்தவர் போல் அவர் பேசும்போது என் கண்களில் பிரமிப்புத் தெரியும்.

அதெல்லாம் நினைவுக்கு வந்தால் இப்பொ சிரிப்புதான் வருகிறது. யாரோ எழுத்தாளர் சொன்னதுபோல் முதல் முதலில்

பழகும்போது அவர்களின் நல்ல குணங்கள்தான் தெரியுமாம். அவர்களுக்குள் ஒளிந்திருக்கும் மற்றொரு முகத்தைக் காண நாம் விரும்பாததுதான் அதற்குக் காரணமாம்.

*　　　*　　　*

## 14

ஒருநாள் அம்மா வீட்டிலிருந்து போன் வந்தது. நான் குளியலறையில் இருந்ததால் போன் வந்த விவரம் எனக்குத் தெரியாது. உடை மாற்றிக் கொண்டு தயாராகி ஹாலுக்கு வந்தபோது என் கணவர் சீரியஸாக அப்படியும் இப்படியுமாக நடந்து கொண்டிருந்தார்.

பணம் ஏதாவது தேவைப்பட்டிருக்கும். என்னிடம் எப்படிக் கேட்பதென்று தயங்குகிறார் போலும். அவராகவே கேட்கட்டும் என்றிருந்தேன்.

திடீரென்று என் அருகில் வந்தார், ''இன்னிக்கு நீ காலேஜுக்குப் போக வேண்டாம்'' அவர் குரலில் பதட்டம் தெரிந்தது.

''ஏன்?'' விஷயம் என்னவென்று எனக்கு விளங்கவில்லை.

''ஒன்றுமில்லை... உங்க அப்பாவுக்கு மைல்ட் ஹார்ட் அட்டாக் வந்திருக்காம். கவலைப்பட வேண்டாம்னு உங்க அண்ணன் போன் செய்தான். ஒரு தடவை ஆஸ்பத்திரிக்குப் போய் வருவோம் என்றுதான்...''

எனக்கு கண்களை இருட்டிக்கொண்டு வந்தது. நாங்கள் ஆஸ்பத்திரிக்குப் போனபோது, அப்பா இன்டென்ஸிவ் கேர்





யூனிட்டில் இருந்தார். யாரையும் உள்ளே போக அனுமதிக்கவில்லை.

அம்மா கவலையுடன் பெஞ்சில் உட்கார்ந்து இருந்தாள்; அண்ணி அம்மாவுக்குத் துணையாக, ஆறுதல் அளிப்பவள் போல் அருகிலேயே இருந்தாள். அண்ணன் மருந்துகளை வாங்கி வருவதும், வீட்டுக்கும் ஆஸ்பத்திரிக்கும் அலைவதுமாய் இருந்தான்.

அன்று முழுவதும் கவலையுடனே பொழுது கழிந்தது. வாய்விட்டுச் சொல்லவில்லையே தவிர, அம்மா உள்ளூர எவ்வளவு கவலைப்பட்டுக் கொண்டிருப்பாள் என்று அந்த முகத்தைப் பார்த்தாலே புரிந்துகொள்ள முடிந்தது.

கணவன், மனைவிக்கு இடையே இருக்கும் பந்தம் இவ்வளவு பலமானதா? இவ்வளவு பாசப் பிணைப்பு இருக்குமா அந்த உறவில்? எனக்கும் என் கணவருக்கும் இடையில் ஏன் இப்படி நிகழவில்லை?

அவருக்கு இப்படி ஏதாவது ஆனால் மற்றவர்களைப் போல் நானும் வருத்தப்படுவேனே தவிர, இப்படிப் பசி, தாகம் இல்லாமல் வேதனையில் ஆழ்ந்து போய் விடுவேனென்று மட்டும் நிச்சயமாகச் சொல்ல முடியாது.

நினைவு திரும்பிய பிறகு, ''ரொம்ப கவலைப்பட்டு விட்டீர்களா?'' என்று அப்பா பலவீனமான குரலில் புன்முறுவல் மாறாமல் கேட்டார்.

அவரை அந்த நிலைமையில் பார்க்கும்போது எனக்கு அழுகைதான் வந்தது.

யாருக்கும் தெரியாமல் அண்ணியும் கண்களைத் துடைத்துக் கொண்டபோது எனக்கு வியப்பு ஏற்படவில்லை! என் பிறந்த வீட்டில் அண்ணன், அண்ணி, அம்மா, அப்பா... இந்த நால்வருக்குமிடையில் இருக்கும் பாசப் பிணைப்பு எப்படிப்பட்டதென்று என்னால் உணர முடிந்தது.

ஹாஸ்பிடலில் இருந்து அப்பா டிஸ்சார்ஜ் ஆகி வீட்டுக்குப் போனபிறகு ஒரு நாள் பிறந்த வீட்டில் தங்கிவிட்டு, மறுநாளே வீட்டுக்குத் திரும்பிவிட்டேன்.

இந்தப் பிரச்னையில் எனக்கும் அவருக்கும் நடுவிலிருந்த பிரச்னைகள் ஓரளவு மறைந்து விட்டதை நினைக்கும் போது சந்தோஷமாக இருந்தது.

நான் வீட்டுக்குப் போனபோது, மச்சினர் ஊரிலிருந்து வந்திருந்தார். அப்பாவின் உடல்நலனைப் பற்றிக் குசலம் விசாரித்தார். எனக்கும் என் கணவருக்குமிடையே சுமுகம் நிலவியதைக் கவனித்து மகிழ்ந்தாற்போல் தென்பட்டார். நானும் வீட்டுக்கு அந்நியன்போல் தனித்து இருக்காமல் முடிந்தவரை வீட்டு வேலைகளில் உற்சாகத்துடன் பங்கெடுத்துக் கொள்ளத் துவங்கினேன்.

நடுவில் நாத்தனாருக்கும் பெண் பார்க்கும் நிகழ்ச்சி ஒன்று நடந்தது. கல்யாணமே நடக்கப் போவதுபோல் வீட்டில் ஆர்ப்பாட்டம் நடந்தது. நானும், ஓர்ப்படியும் வீட்டையே தலைகீழாக்கியதுபோல் மாற்றியமைத்திருந்தோம்.

மாமியாரும் பட்டுப் புடவையைக் கட்டிக் கொண்டு, நகைகளைப் போட்டுக் கொண்டு பிள்ளை வீட்டாரை வரவேற்கத் தயாராகி விட்டாள்.

பையன் வீட்டில் முக்கியமானவர்கள் மட்டும் வந்திருந்தார்கள். அவர்களைப் பார்த்தால் பெரிய ஸ்டேடஸ் இருப்பவர்கள் போல் தெரியவில்லை. பையன் மட்டும் பாரெஸ்ட் ஆபீசராக இருந்தான். எங்களுடைய ஏற்பாடுகளைப் பார்த்து அவர்கள் பிரமித்துப்போனது வெளிப்படையாகவே தெரிந்தது.

அவர்கள் கிளம்பிப் போனபிறகு வீட்டில் பேச்சு வார்த்தைகள் நடந்தன.



"அவர்களைப் பார்த்தால் சொத்து சுகம் இருப்பவர்களாகத் தெரியவில்லை. பெண்ணைக் கொடுக்கும்போது பெரிய இடத்தில் கொடுக்கணும் என்றும், தங்களைவிடத் தாழ்வான இடத்திலிருந்து பெண்ணை எடுக்கணும்னு சொல்வாங்க. அதான் மருமகள்களின் பிறந்த வீட்டின் அந்தஸ்த்தை நான் பொருட்படுத்தவில்லை. அந்த மாதிரி ஒன்றுமில்லாத வீட்டில் மகளைக் கொடுக்க நான் சம்மதிக்க மாட்டேன்" என்று முடிவு கட்டிவிட்டதுபோல் மாமியார் சொன்னாள்.

அதைக் கேட்டதும் எனக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது. என் ஓர்ப்படி பக்கம் பார்த்தேன். அவள் அந்த வார்த்தைகளைக் காதில் வாங்கிக் கொண்டதாகவே தெரியவில்லை. அதுவரைக்கும் நான் செய்து வைத்திருந்த முடிவுகள் எல்லாம் காற்றில் அடித்துக்கொண்டு போய்விட்டன.

"எவ்வளவு அகம்பாவம் இந்த மாமியாருக்கு? இவங்க வீட்டில் இருப்பதும், என் பிறந்த வீட்டில் இல்லாததும் என்ன இருக்கு? மகன்கள் இருவரும் சம்பாதித்துக் கொண்டிருந்தாலும் சொந்த வீடு உண்டா? நல்ல பர்னிச்சர் உண்டா? ஒரு வாஷிங் மிஷினாவது உண்டா? அந்தஸ்த்தைப் பற்றி இவளுக்கு என்ன தெரியும்? மகன்களிடமிருந்து சுரண்டி மகளுக்கு சீர்செய்வதுதான் தெரியும்" மனதில் கோபம் எரிமலையாய் பொங்கியது.

ஒவ்வொரு சின்ன விஷயத்துக்கும், விமர்சனத்துக்கும் இப்படி ரியாக்ட் ஆவதுதான் என் பிரச்னை என்று நினைக்கிறேன். அதன்பிறகு நாத்தனாரின் திருமண விஷயத்தில் தலையிடுவதை நிறுத்திக் கொண்டேன்.

கடைசியாக ஒரு வரன் நிச்சயமானது. பையனும் கண்ணுக்கு லட்சணமாக இருந்தான். சொத்து அதிகம் இல்லாவிட்டாலும், ஒரே மகன் என்பதால் இந்த வரனை எல்லோருக்கும் பிடித்துவிட்டது. என் கணவர் இராப்பகலாய் திருமண ஏற்பாடுகளில் மூழ்கிவிட்டார்.

''இந்த சீரை செய்தால்தான் நம்முடைய பெண்ணுக்குப் புகுந்த வீட்டில் மதிப்பிருக்கும். நாம் ஒண்ணுமில்லாதவர்கள் இல்லையே! அவங்க கேட்டதைவிட அதிகமாகவே செய்வோம்'' என்று மாமியார் சொல்லிக் கொண்டிருந்தாள்.

''எல்லாவற்றுக்கும் பூம்பூம் மாடு மாதிரி தலையை ஆட்டும் மகன்கள் இருக்கும் போது உங்களுக்கு என்ன குறைச்சல்?'' என்று சொல்ல நினைத்தாலும், பண்பாட்டினைக் கருதி மௌனமாக இருந்தேன்.

நகைகளுக்கு, பட்டுப் புடவைகளுக்கு, பாத்திரங்களுக்கு நிறையச் செலவு செய்தார்கள்.

கல்யாண நாளும் நெருங்கிவிட்டது. வெள்ளி தட்டு, குத்து விளக்கு விஷயத்தில் திடீரென்று பிரச்னை முளைத்தது.

முதலில் பணத்தைக் கொடுத்தால் தாமே வாங்கிக் கொள்வதாகச் சொன்னவர்கள். பணத்தை வாங்கிக் கொண்டபிறகு, அதை மறந்துவிட்டவர்கள்போல் வெள்ளித் தட்டு, குத்துவிளக்கு வாங்குவது பெண் வீட்டாரின் பொறுப்பு என்று அடித்துச் சொல்லி விட்டார்கள். இதனால் ஐயாயிரம் ரூபாய் அதிகமாக செலவு செய்ய வேண்டியதாயிற்று.

இந்த ஏமாற்று வேலை என் கணவருக்கும் கோபத்தை வரவழைத்தது. ஏற்கெனவே நாத்தனாரும் அந்தப் பையனும் சினிமா, டிராமா என்று சுற்றிக் கொண்டிருந்தார்கள்.

''நியாயமில்லாமல் கேட்கிறீர்களே என்று அந்தப் பையனை நீ கேட்க வேண்டியதுதானே?'' என்று தங்கைமீது எரிந்து விழுந்தார்.

''அவரும் வருத்தப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார் அண்ணா. இருந்தாலும் பெரியவங்களை எப்படிக் கேட்க முடியும்? நீயே சொல்லு'' என்று வருங்கால 'கணவனுக்காக வக்காலத்து வாங்கினாள் நாத்தனார்.



நான் எதிர்பார்த்தது போலவே நடந்தது.

''இருபதாயிரம் ரூபாய் வரை தேவைப்படும் போலிருக்கு. உன்னிடம் இருந்தால் கடனாகத் தந்து உதவக் கூடாதா?'' என்று தயங்கிக் கொண்டே கேட்டார் என் கணவர்.

எனக்கு உடல் பற்றி எரிவதுபோல் இருந்தது.

''தரமுடியாது...'' வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்பது போல் மறுத்துவிட்டேன்.

''ஏன்?''

''உங்க அம்மா ராஜா வீட்டுப் பரம்பரையிலிருந்து வந்தவங்க இல்லையா? மருமகளிடம் கடன் வாங்கும் அளவுக்கு ஏழை எப்பொ ஆனாள்?'' என் குரலில் எகத்தாளம் இருந்தது.

''அவங்க தெரியாமல் ஏதோ ஒரு வார்த்தைச் சொல்லி விட்டால், நீ அதைப் பிடித்துக் கொண்டு இப்பொ சாதிக்கணுமா?'' இறங்கி வந்தார் அவர். தேவை அவருடையது இல்லையா?

''கஷ்டப்பட்டுச் சம்பாதிப்பது மருமகளுடைய வேலை. க்ரெடிட் மகனுடையது. பயனடையப் போவது உங்க அம்மாவும், தங்கையும். நான் மட்டும் எல்லாவற்றையும் மறந்துவிட்டு இப்பொ உதவி செய்ய வேண்டுமா?'' பிடிவாதமாக மறுத்தேன்.

அவரால் பேச முடியவில்லை.

''என் பெற்றோர்களை இல்லாதவர்கள் என்று சொன்னவளுக்கு வேலை பார்க்கும் மருமகளுடைய வருமானத்தைக் கொள்ளையடித்து மகளுடைய திருமணத்தை நடத்த வேண்டிய துர்பாக்கிய நிலைமை ஏன் வந்தது?'' என்றேன்.

அவருடைய முகத்தில் கோபத்தின் சாயல் தெரிந்ததும், மேற்கொண்டு பேசாமல் நிறுத்திவிட்டேன். அவர் சட்டென்று அறையை விட்டு வெளியேறினார்.

சூடாக நாலு வார்த்தை கேட்டபிறகு மனதுக்குக் குளிர்ச்சியாக இருந்தது. அவர்களுக்குச் சிக்கனம் என்றால் என்னவென்று

தெரியாது. எதுக்கு செலவு செய்யணும், எதை விடணும் என்று தெரியாது. நான் கொடுத்தாலும் அதை ஆடம்பரங்களுக்குச் செலவழிப்பார்களே தவிர, அவசிய தேவைகளுக்குப் பணத்தைச் சேமித்து வைத்துக் கொள்ள மாட்டார்கள்.

வண்டி வாங்குவதாகச் சொன்னபோது, அதை 'அனாவசிய செலவு' என்று சொன்னதை என்னால் என்றுமே மறக்க முடியாது. இங்கே ஒரு விஷயம் மட்டும் எனக்குப் புரியவில்லை.

பெண்ணுக்குத் திருமணம் செய்யும்போது அனாவசிய செலவுகள் நிறையவே செய்யவேண்டி வரும். அந்த மாதிரி நிலைமை வரும் போது, என் கணவரைப் போன்றவர்கள் வெளியில் அதிக வட்டி கொடுத்தாவது கடனை வாங்கி அந்தச் செலவுகளைச் செய்யத் தயாராக இருப்பார்கள். அப்படிக் கடன் வாங்கும் போது தங்களுடைய எதிர்காலத்தைப் பற்றி நினைக்கவும் மாட்டார்கள். அதன்பிறகு வரப்போகும் கஷ்டங்களைப் பற்றி கவலையும் படமாட்டார்கள். தேவைப்பட்டால் இன்னொரு தடவை அப்படி நடந்து கொள்ளவும் தயங்க மாட்டார்கள்.

என் பிறந்த வீட்டில், அப்பா கொண்டு வரும் சம்பளத்தில் அம்மா சிக்கனமாகக் குடும்பம் நடத்தி எங்க இருவரின் படிப்புக்கு எந்தக் குறையும் இல்லாமல் செலவு செய்து, சொந்த வீட்டையும் கட்டிவிட்டார்கள். என் திருமணம் நடக்கும்போது அப்பா ரிடையராகி விட்டாலும், ஒரு ரூபாய்கூட கடன் வாங்காமல், என்னுடைய திருமணத்தைச் சிறப்பாக நடத்தினார்கள். இதையெல்லாம் நினைத்துப் பார்க்கும் போது எனக்குப் பெருமையாக இருந்ததோடு, அவர்களிடம் மதிப்பும் கூடியது.

நான் நினைத்தாற் போலவே என் கணவர் அதிக வட்டி கொடுத்துப் பணத்தைக் கடனாக வாங்கி வந்தார். அதை அடைப்பதற்கு வீட்டில் எந்தச் செலவுகளையும் குறைத்துக் கொள்ளவில்லை. கடன் கொடுத்தவர்கள் வீட்டுக்குப் படையெடுத்து



வந்து விட்டார்கள். என் மச்சினர் அவர்களுடன் சமாதானமாகப் பேசி அனுப்பிவிட்டார். மாமியார் சமையல் அறையை விட்டு வெளியே வரவில்லை.

என் மச்சினர் தன்னுடைய தம்பிக்குப் பணத்தைக் கடனாகக் கொடுத்து உதவி செய்தார். அந்தக் கடனை மாதா மாதம் நான் தான் அடைத்தேன் என்று சொல்ல தேவையில்லைன்னு நினைக்கிறேன்.

எப்படியும் பணம் என் கையை விட்டுப் போகத்தான் போகிறது. அனாவசியமாய் பேசி கெட்ட பெயரை வாங்கிக் கொள்வானேன்?

என் மாமியார் யாரிடமோ பேசும்போது, 'என் சின்ன மகன் இந்தக் கல்யாணத்தில் ரொம்ப நலிந்து போய்விட்டான். சொந்தம் என்று நினைத்தவர்கள்கூட 'உன்பாட்டை நீ பார்த்துக்கொள்' என்று ஒதுங்கி விட்டார்கள்' என்று மறைமுகமாக என்னைக் குத்திக் காட்டிப் பேசியபோது கோபம் வரவில்லை. இரக்கம்தான் ஏற்பட்டது.

என்னுடைய பேங்க் பேலன்ஸ் கரைந்துவிட்டது. மாதச் சம்பளம் மச்சினரின் கடன் தீர்ப்பதற்குச் சரியாகிவிட்டது. மனதில் அமைதியின்மை, உடல் உழைப்பினால் ஏற்பட்ட களைப்பும் தான் எனக்குப் பரிசாகக் கிடைத்தன.

மச்சினருடன் பேசுவதைக் குறைத்துக் கொண்டு விட்டேன். எல்லோரையும்விட வித்தியாசமானவர் என்று அவரைப் பற்றி எண்ணி இருந்தேன். பண விவகாரம் வந்ததும், தங்கையின் திருமணத்தில் தனக்கு எந்தப் பொறுப்பும் இல்லாததுபோல் கடன்களையெல்லாம் தம்பியின் தலையில் கட்டிவிட்டார். என் நடவடிக்கைகளில் வந்த மாற்றத்தை அவர் கவனித்திருக்க வேண்டும். ஒருநாள் என்னிடம் கேட்டுவிட்டார்.

''நீ எதுக்காக இப்படி இருக்கிறாய் என்று புரிந்துகொள்ள முடியாத முட்டாளில்லை நான். கடன்களைத் தீர்க்கும்

பொறுப்பை தம்பியிடம் தள்ளி விட்டேன் என்றுதானே உன் வருத்தம்?''

நான் பதில் எதுவும் சொல்லவில்லை.

''இதோ பாரு! திருமணத்துக்குக் கடன் வாங்கி ஆடம்பரமாகச் செலவு செய்வதை நீ எந்த அளவுக்கு வெறுக்கிறாயோ, நானும் அதே அளவுக்கு வெறுக்கிறேன். நான் வேண்டாமென்று தான் சொன்னேன். அம்மாவும், தம்பியும் என் பேச்சை கேட்கவில்லை. அதனுடைய விளைவுகளை அவர்களே அனுபவிக்கட்டும் என்று நான் சும்மா இருந்து விட்டேன். கடைசியில் கடன்களைத் தீர்க்க நம் இருவரின் உதவியும் அவர்களுக்குத் தேவைப்பட்டது. என்னிடம் ஷேர்ஸை தவிர அதிகமாகச் சேமிப்புகள் கிடையாது. அதை அடகு வைத்துத்தான் கம்பெனியிலிருந்து லோன் வாங்கித் தந்தேன். அதை தீர்க்கும் பொறுப்பையும் அவனிடம் ஒப்படைத்தேன்'' என்றார்.

'மாதா மாதம் அந்தக் கடனை அடைப்பது நான்தான்' உங்களுடைய தம்பி இல்லை. இதில் அவர் கற்றுக் கொண்ட பாடம் என்ன இருக்கு? எல்லாவிதமாகவும் நஷ்டமடைந்தது நான் தானே!' கேட்டுவிடலாம் என்றுதான் நினைத்தேன். ஆனால், எனக்கு யார்மீதும் கோபம் வரவில்லை. வெறுமைதான் என் மனதில் பரவியிருந்தது.

* * *

நானும் என் கணவரும் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்று என் மச்சினர் செய்த முயற்சிகள் எல்லாம் வியர்த்தமாயின. வீட்டில் எல்லோரும் உள்ள சூழ்நிலையில் எங்களுக்கு நடுவில் சமரசம் ஏற்பட வாய்ப்பு இருக்குமென்று தோன்றவில்லை.

காஞ்சிபுரத்தில் நடக்கவிருக்கும் உறவினர் வீட்டுத் திருமணத்திற்கு மாமியாரும், ஓர்படியும் புறப்பட்டார்கள்.



முடித்துக்கொண்டு நேராக திருமணத்துக்கு வந்து விடுவதாக மச்சினர் தெரிவித்தார்.

எங்கள் இருவருக்கும் தனிமை ஏற்படுத்த மச்சினர் போட்ட திட்டம் அது என்று புரிந்தபோது, அவர்பால் நன்றி உணர்ச்சி பெருகியது.

எல்லோரும் புறப்பட்டுப் போய் விட்டார்கள். நான் ஏழு நாட்கள் விடுமுறை எடுத்துக் கொண்டேன். அவரும் விடுமுறை எடுத்துக் கொண்டால் நன்றாக இருக்குமென்று தோன்றியது.

வாழ்க்கையில் முதல் முறையாகக் கிடைத்த தனிமை. அதை ரொம்ப அற்புதமாய் அமைத்துக்கொள்ள வேண்டும் என்று விரும்பினேன்.

''இன்ஸ்பெக்ஷன் நடக்கிறது விடுமுறை கிடைக்காது'' என்று அவர் சொன்னபோது, கொஞ்சம் ஏமாற்றமாக உணர்ந்தேனே தவிர வருத்தப்படவில்லை.

வீட்டில் எல்லோரும் இருக்கிறபோது என் கணவர் சீக்கிரமாகவே எழுந்துகொண்டு வீட்டு வேலைகளில் உதவி செய்வது வழக்கம். இப்போ இரண்டு பேர் மட்டுமே இருப்பதால் கொஞ்சம் லேட்டாக எழுந்துகொண்டு, இருவரும் சேர்ந்து வீட்டு வேலைகளை முடித்துவிட்டு, மாலையில் சினிமாவுக்கோ, டிராமாவுக்கோ போய்... நிலவின் ஒளியில்... தனிமையில்... இப்படியெல்லாம் நினைத்துப் பார்க்கும் போதே மனதில் உற்சாகம் பரவியது.

முதல்நாள் எட்டரை மணி ஆனபிறகும் அவர் எழுந்து கொள்ளவில்லை. அவர் என்னை எழுப்ப வேண்டுமென்றும், விருப்பமில்லாமல் சிணுங்கிக்கொண்டே எழும்ப வேண்டுமென்றும் ஊகித்திருந்த நான், நேரமாகிவிட்டதைக் கவனித்து, பதட்டத்துடன் அவரை எழுப்பினேன்.

"இன்னும் கொஞ்சநேரம் தூங்கவிடேன். எல்லோரும் இருந்தால் எப்படியும் தூங்க முடியாது" தூக்கக் கலக்கமாக பதில் வந்தது.

"அதென்ன? ஆபீசுக்குப் போக வேண்டாமா?" என்று கேட்டேன்.

"போகணும்."

"அப்பொ எழுந்து வாங்க... சமையலை முடித்துவிடுவோம்... மற்ற வேலைகளை நான் பார்த்துக் கொள்கிறேன்."

"இரண்டு பேருக்கு சமையல் செய்வதற்குகூட உதவி தேவையா என்ன? ஏதோ ஒன்று செய்; போதும். சமையல் ஆனதும், குளிக்க வெந்நீர் வைத்துவிட்டு என்னை எழுப்பு" போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு, அந்தப் பக்கமாக திரும்பிப் படுத்தார்.

"சமையல் செய்ய உதவி தேவைன்னு உங்களை எழுப்பவில்லை. இருவரும் சேர்ந்து செய்தால், அது ஒரு த்ரில்லாக இருக்கும்" என்று சொல்ல நினைத்தேன்; ஆனால் சொல்லவில்லை. மனதில் உற்சாகம் வடிந்து விட்டாற்போல் இருந்தது.

சமையலை முடிக்க நேரமாகி விட்டால், "எங்க அம்மா கரெக்டாக நேரத்திற்குள் சமையலை முடிப்பாங்க. உன்னால் முடியவில்லை" இப்படிச் சொல்லிக் காட்டப் போகிறார் என்று பிடிவாதமாகக் கறி, கூட்டு, அப்பளம் என்று வகையாக சமைத்தேன்.

ஒன்பதரைக்கு மேல் எழுந்து கொண்டவர், உடனே பாத்ரூமில் நுழைந்து குளித்தேன் என்று பெயர் பண்ணி விட்டு, சரியாகத் துடைத்துக் கொள்ளாமலேயே சாப்பிட உட்கார்ந்தார். அவசர அவசரமாக நாலு வாயை அள்ளிப் போட்டுக் கொண்டு ஆபீசுக்கு ஓடினார்.



தனிமையாக உணர்ந்தேன். வீட்டு வேலைகளை முடித்துக் கொண்டு மாலை ஐந்து மணிவரை புத்தகங்களைப் படித்துக் கொண்டே உட்கார்ந்து விட்டேன். இரவு சமையலை முடித்துக் கொண்டு, குளித்துவிட்டு, புதுப்புடவையை உடுத்திக் கொண்டு இவருடைய வருகைக்காகக் காத்திருந்தேன்.

மணி ஏழான பிறகும் அவர் வரவில்லை. ஏழரை வரைக்கும் பொறுமையாக எதிர்பார்த்தேன். மணி எட்டையும் தாண்டிய போது கவலை வந்துவிட்டது. மணி ஒன்பதாகும் போது களைத்துப் போனவராய் அவர் வந்தார்.

சூடாகக் கேட்டுவிடலாம் என்று நினைத்த நான், களைப்புற்று தென்பட்ட அவருடைய முகத்தைப் பார்த்ததும், மௌனமாய் குடிக்கத் தண்ணீர் கொண்டு வந்து தந்தேன். இரவு உணவு முடிந்தபின், பாத்திரங்களை ஒழித்துப் போட்டு, மேஜையைத் துடைத்துக் கொண்டிருந்தபோது, அவர் டி.வி.யில் சீரியலைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

தாயாருக்கு அவ்வளவு உதவி செய்து கொண்டிருந்தவர், மனைவி என்று வந்ததும் கணவன் என்ற அந்தஸ்தை நிலை நாட்டிக் கொள்வதுபோல், எந்த வேலையிலும் பங்கெடுத்துக் கொள்ள முன்வராதது எனக்கு எரிச்சலை ஏற்படுத்தியது.

அந்த எண்ணத்தை ஒதுக்கிவிட்டு, ப்ரிஜ்ஜிலிருந்து வெற்றிலை, பாக்கு எடுத்துக் கொண்டு படுக்கை அறையினுள் நுழைந்தேன். கட்டிலில் ஆழ்ந்த உறக்கத்தில் அவர் இருப்பதை உணர்ந்த போது என் மனக் கதவுகள் தானாக மூடிக் கொள்வதை என்னால் தடுக்க முடியவில்லை. விளக்கை அணைத்து விட்டு மெதுவாகக் கட்டிலில் சாய்ந்து கொண்டேன்.

நாங்கள் இருவரும் தனியாக இருந்த அந்த ஏழு நாட்களும் கிட்டத்தட்ட இதே ரீதியில் கழிந்தன. காலையில் லேட்டாக எழுந்து கொள்வதும், ஆபீசுக்கு ஓடுவதும், இரவிலும் நேரங்

கழித்து வருவதுமாகத்தான் அவர் இருந்தார். அனாவசியமாய் விடுமுறை எடுத்திருக்க வேண்டாமே என்ற வருத்தம்தான் எனக்கேற்பட்டது.

கணவன் மனைவி இருவரில் ஒருவருக்கு மட்டும் ரசனை இருப்பது துரதிருஷ்டம்தான்.

நடுவில் ஒருநாள் மச்சினரிடமிருந்து ட்ரங்கால் வந்தது.

''எப்படி இருக்கீங்க? நிலைமைச் சரியாகி விட்டதா?'' என்று அவர் கேட்டபோது நான் சிரித்து விட்டேன். அந்தச் சிரிப்பிலேயே அவருக்கு விஷயம் புரிந்திருக்க வேண்டும். ஷேர் மார்க்கெட்டை பற்றி மேலும் இரண்டு நிமிடங்கள் பேசி விட்டுப் போனை வைத்து விட்டார்.

ஆபீசில் இன்ஸ்பெக்ஷன் இருந்ததால், பத்து மணிக்கு மேல்தான் அவரால் வீட்டுக்கு வரமுடிந்தது. அவர் வரும்வரை விழித்திருந்து, வந்ததும் நிம்மதியாக உணர்ந்து, சாப்பாடு பரிமாறி, மற்ற வேலைகளை முடித்துவிட்டு கட்டிலில் விழும் போது அப்பாடா என்றாகிவிடும்.

நான் வரும்வரை அவர் விழித்துக் கொண்டிருந்தால், என்னை நெருங்குவார். அந்த நெருக்கத்திலும் ஒரு இயந்திரத் தன்மை தான் இருக்குமே தவிர பரவச நிலை என்றுமே ஏற்பட்டதில்லை. எல்லாமே மூன்று நிமிடங்களில் முடிந்துவிடும். அவர் மறு பக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டதும் நான் இந்தப் பக்கமாக திரும்பி வெறுமை நிறைந்த மனதுடன் இரவு முழுவதும் போராடிக் கொண்டிருப்பேன்.

ஞாயிற்றுக்கிழமை வந்தது. அவருக்கு ஆபீசுக்குப் போக வேண்டியதில்லை என்ற நினைப்பு வந்ததும் அப்படியே படுத்துக் கொண்டிருந்தேன். அவருக்கு விழிப்பு வந்துவிட்டது போலும், பக்கத்தில் இருந்த என்னை அருகில் இழுத்து, கன்னத் தில் முத்தமிட்டார். அந்த ஸ்பரிசம் என் மனதில் புதைந்திருந்த



இனிய உணர்வுகளைத் தட்டி எழுப்பியது. மெள்ள மெள்ளமாய் இருவரும் தன்வசமிழக்கும் நேரம்...

வாசலில் காலிங்பெல் ஒலித்தது. அவ்வளவுதான். அரக்கப் பரக்க எழுந்து, உடைகளைச் சரிசெய்து கொண்டு பாத்ரூமிற்கு ஓடினேன். அவர் எழுந்துபோய் வாசற் கதவைத் திறக்கிற சத்தம் கேட்டது. ஒரு நிமிடம் கழித்து...

''என்ன தம்பி? எப்படி இருந்தீங்க? ஒரு வாரமாய் தனிக் குடித்தனம் தானே? சந்தோஷமாய் இருந்திருப்பீங்கன்னு நினைத் தேனே!'' மாமியாரின் வெங்கல குரல் கணீரென்று கேட்டது.

அதற்குள் புடவையைச் சரிசெய்து கொண்டு, மேலாகத் தலையை வாரிக்கொண்டு பாத்ரூமைவிட்டு வெளியே வந் தேன். இரண்டு நிமிடங்கள் கழித்து மாமியார், ஓர்படி, என் கணவர் மூவரும் ஹாலில் அமர்ந்து ஊர் விசேஷத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அவர்களைப் பார்த்ததும் என் கணவரிடம் ஏற்பட்ட மாறு தலை என்னால் தெளிவாக உணர முடிந்தது. கூண்டில் இருந்து விடுதலை கிடைத்த பறவையைப்போல் உற்சாகமாய் தென் பட்டார். ஏனோ என் மனதில் சுருக்கென்று தைத்தது.

''விடிந்து இத்தனை நேரமான பிறகும் வீடு ஏன் குப்பை யாய் இருக்கிறது? அடுப்பை துடைக்காமலேயே சமைக்கிறாயா என்ன?'' மாமியார் சமையலறையை ஆராய்ந்து கொண்டிருந்தாள்.

நான் பதில் சொல்ல முயற்சிக்கவில்லை.

''இல்லைம்மா... இன்னிக்கு ஞாயிற்றுக்கிழமைதானே! அவசரமில்லைன்னு நான்தான் சொன்னேன். மேலும் இன்னிக்கு நீங்க வரப்போவதாய் தெரியாது இல்லையா?'' என் கணவர் நிலைமையைச் சமாளிக்க முயன்றார்.

நான் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

* * *

# 16

மறுநாளே நான் காலேஜுக்குப் போய்விட்டேன். அதற்கும் மறுநாள் மச்சினர் ஊரிலிருந்து வந்துவிட்டார்.

அன்று காரில் போகும்போது மச்சினர் சொன்னார்.

''ஞாயிற்றுக் கிழமையாவது சந்தோஷமாக இருந்திருப்பீங்கன்னு நினைச்சேன். திங்கள் கிழமை ஊர் திரும்பினால் போதும் என்று அம்மாவிடம் சொல்லியிருந்தேன். அவங்க இப்படிச் செய்வாங்கன்னு நான் எதிர்பார்க்கவில்லை.''

''பரவாயில்லை. ஏற்கெனவே உங்கள் தம்பி தாயாரை விட்டுப் பிரிந்த துக்கத்தில் நிலை கொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தார். அவங்க ஒருநாள் முன்னாடியே வந்துவிட்டதில் அவருக்கு நிம்மதி கிடைத்துவிட்டது.''

என் குரலில் இருந்த விரக்தியைக் கவனித்த மச்சினர் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை.

கோபம், எரிச்சல் போன்ற குணங்கள் மனிதன் வாழும் நிலையைப் பொறுத்து அமைந்திருக்கும் என்று நினைக்கிறேன். வாழ்க்கையில் அதிருப்தி அதிகம் ஆக ஆக, மனதளவில் பல வீனப்பட்டுப் போவதுடன், எளிதான உணர்ச்சி வசப்படுவதும் நிகழும்.

அன்று ஞாயிற்றுக் கிழமை. மாமியார் வேலைக்காரியிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

''முனியம்மா! துணிகளை இப்பொ தோய்க்க வேண்டாம். துணிகளைப் பார்த்துப் போட இப்பொ யாருக்கும் நேரமில்லை. நான் கோவிலுக்குப் போகனும். அப்புறமாய் வந்து துணிகளைத் தோய்த்துக் கொள்ளலாம். இப்பொ போய்விடு.''

எனக்குத் திடுக்கென்றது. இன்று விடுமுறை நாளாக இருப்பதால், வீட்டு வேலைகளை முடித்துக்கொண்டு, என்னுடைய



ரிசேர்ச் வர்க்கை ஒருவழியாய் முடித்து விடலாமென்று நினைத்துக் கொண்டிருந்தேன். மதிய நேரத்தில் வேலைக்காரி வந்தால், அவளுடனே எனக்குச் சரியாக இருக்கும்.

சமையல் செய்து கொண்டிருந்தவள், அவசரமாய் வெளியே வந்தேன். மாமியாரிடம் அந்த விஷயத்தைச் சொல்லிவிட்டு, ''சமையல் ஆனதும் அந்த வேலையை நான் பார்த்துக் கொள்கிறேன். அவளைக் கொஞ்சம் இருக்கச் சொல்லுங்க'' என்றேன்.

மாமியார் முகத்தைச் சுளித்துக் கொண்டாள், ''அதனால் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடாது. நீ இல்லாவிட்டால் இன்னொருத்தர் பார்த்துக் கொள்வார்கள். அவசரப்பட்டுக் கொண்டு சமையல் வேலையைக் குட்டிச் சுவராக்கிவிடாதே!''

மாமியார் சொன்னதைக் கேட்டபோது எனக்கு எரிச்சல் தான் வந்தது. பெரிய மருமகள் வீட்டுக்குள் வரக்கூடாது. என்னைத் தவிர வேறு யார் இருக்காங்க பார்த்துக் கொள்ள? மனதில் நினைத்துக் கொண்டே கணவர் பக்கம் ஒரு பார்வையை வீசி விட்டு வேகமாய் சமையலறைக்குள் சென்றுவிட்டேன்.

மாமியார் கோவிலிலிருந்து வரும்போது, மதியம் ஒரு மணியாகிவிட்டது. நான் உண்டு முடித்து விட்டு என் அறையில் ஜர்னல்ஸ், புத்தகங்கள் எல்லாவற்றையும் எதிரில் வைத்துக் கொண்டு மும்முரமாய் எழுதிக் கொண்டிருந்தேன். இவர் கட்டிலில் படுத்துக் கொண்டு, தமிழ் மாத நாவல் எதையோ படித்துக் கொண்டிருந்தார்.

மாமியார் சாப்பிட்டு முடித்துச் சற்று படுத்தாளோ இல்லையோ வேலைக்காரி கதவைத் தட்டினாள். ஆயாசப்பட்டுக் கொண்டே மாமியார் எழுந்து போய் கதவைத் திறந்தாள்.

அதைப் பார்த்த என் கணவர், ''உனக்கு எழுதி முடிக்க இன்னும் நேரம் ஆகுமா?'' தயங்கிக்கொண்டே கேட்டார்.

அவர் என்ன சொல்ல வருகிறார் என்று புரிந்தவளாய், தலையை உயர்த்திப் பார்க்காமலேயே, ''ஆமாம்'' என்றேன்.

என் மாமியார் முணுமுணுப்பது தெளிவாகவே காதில் விழுந்தது.

''அவள் *(அதாவது நான்)* காலையிலேயே சொன்ன போது, சரின்னு சொல்லியிருக்கணும். இன்னும் கால் மணி நேரத்தில் டி.வி.யில் நல்ல படம் வரப்போறது. தெரியாமல் வேலைக் காரியை வரச் சொல்லி விட்டேன்.''

இனி என் கணவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

''ப்ளீஸ்! நீதான் போய் கொஞ்சம் பார்த்துக் கொள்ளேன். அம்மா பாவம்! களைத்துப் போய் வந்திருக்கிறாள். நீ அப்புறமாய் உன் படிப்பைப் பார்த்துக் கொள்ளலாம்...'' என்றார்.

மாமியாருக்குக் காது இங்கேயேதான்.

''அவளைப் போய் சிரமப்படுத்தாதே தம்பி. அவதான் முன்னாடியே சொல்லிவிட்டாளே, படிக்கணும்னு...'' நீட்டி முழக்கினாள்.

''பொல்லாத படிப்பு! வேலையை முடித்து விட்டு அப்புறமாய் படித்துக் கொண்டால் ஆகாதா?''

சுரீரென்று கிளம்பிய கோபத்தை வலுக்கட்டாயமாய் கட்டுப்படுத்திக் கொண்டேன்.

''நீங்க ஓய்வாகத்தான் இருக்கீங்க. நீங்களே அந்தக் காரியத்தைக் கவனித்துக் கொள்ளுங்களேன்'' கணவரிடம் சொன்னேன்.

''அர்த்தமில்லாமல் பேசாதே!'' அவர் சொல்லிக்கொண்டிருக்கும் போதே, மாமியார் புயல்போல் வேகமாய் அறைக்குள் வந்தாள்.

''அவனைப் போய் பார்த்துக் கொள்ளச் சொல்கிறாயே? ஏதோ சில சமயம் அவன் எனக்கு உதவி செய்கிறான் என்பதால்



அவ்வளவு இளக்காரமாய் போய்விட்டானா?'' கோபமாகக் கேட்டாள்.

மாமியாரின் கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ள வேண்டும் என்ற எண்ணத்தைப் பலவந்தமாய் அடக்கிக் கொண்டேன்.

''இதில் இளக்காரமாய் என்ன பேசிவிட்டேன்? அவர் ஓய்வாக இருக்கிறார் என்பதால் பார்த்துக் கொள்ளச் சொன்னேன்'' மனதில் ஏற்பட்ட எரிச்சலை மறைத்துக் கொள்ள நான் முயற்சி செய்யவில்லை.

மாமியார் தொடர்ந்து ஏதோ சொல்லப் போகும்போது அவர் இடைபுகுந்து தடுத்தார்.

''அம்மா! நீ போய் ரெஸ்ட் எடுத்துக் கொள். நாங்க பார்த்துக் கொள்கிறோம்.''

மாமியாரை அனுப்பிவிட்டு என் பக்கம் கோபமாகப் பார்த்தார்.

''அம்மாவிடம் இப்படித்தான் பேசுவாயா?''

''நானாக ஒன்றும் பேசவில்லை. அவங்கதான் நம் அறைக்குள் வந்து என்னுடன் பேசினாங்க'' அலட்சியமாகப் பதில் அளித்தேன்.

''ஷட்டப்... வாய்க்கு வந்தபடி பேசாதே...'' என்றார்.

நான் அதைப் பொருட்படுத்தாமல் மறுபடியும் புத்தகத்தில் ஆழ்ந்துவிட்டேன். பிரச்னை அத்துடன் முடிந்து போயிருக்குமோ என்னவோ! அவருடைய கோபம் இன்னும் தணியவில்லை போலும், என் அருகில் வந்தார்.

''எதைப் பார்த்துக்கொண்டு உனக்கு இந்தத் திமிரு? கணவன் என்றால் உனக்குக் கொஞ்சம்கூட லட்சியம் கிடையாது. மனதில் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறாய்?''

ஆவேசத்தில் அவருடைய உடல் நடுங்கிக் கொண்டிருந்தது

''இப்பொ என்ன நடந்து விட்டதென்று இப்படிக் குதிக்கிறீங்க. நான் இன்று மதியம் படிக்கப் போகிறேன் என்று முன்னாடியே சொல்லிவிட்டேன். நீங்க ஒய்வாக இருப்பதால் உங்களைப் பார்த்துக் கொள்ளச் சொன்னேன். அதுக்கு இத்தனை ரகளை எதுக்கு?''

''இங்கே யார் ஒய்வாக இருக்காங்க என்பது பிரச்னை இல்லை. காலையில் நீ சொன்னதை அம்மா கேட்கவில்லை. அதை இப்பொ குத்திக் காண்பிக்கிறாய். அப்படித்தானே!''

''நீங்க அப்படி நினைத்துக் கொண்டால், அதில் எனக்கு ஆட்சேபணை இல்லை.'' மேலும் பேச்சை வளர்க்க நான் விரும்பவில்லை.

அவ்வளவுதான், அவருக்குக் கோபம் தலைக்கேறி விட்டது.

''எவ்வளவு அகங்காரம் உனக்கு? பெரிய படிப்பு படிக்கிறோம் என்றுதானே அந்த அகம்பாவம். வீட்டு வேலைகளை ஒழுங்காகச் செய்யத் தெரியாது. படிக்கிறாளாம். பெ...ரி...ய படிப்பு'' என்று கத்தினார்.

''ஆமாம்... எனக்கு அகம்பாவம்தான். எழுதப் படிக்கத் தெரியாதவங்களுக்கே அகம்பாவம் இருக்கும்போது, எனக்கு ஏன் இருக்கக் கூடாது?'' என்னாலும் இவ்வளவு கீழ்த்தரமாகப் பேச முடியும் என்று அப்பொழுதுதான் உணர்ந்தேன்.

''பெரிய பி.ஹெச்டி! அதை இப்பொ படிக்காவிட்டால் என்ன? படிப்பு படிப்பு என்று குடித்தனத்தைக் குட்டிச்சுவராக்கி விட்டாய். உன்னைச் சொல்லிக் குற்றமில்லை. உன்னை வளர்த்தவங்களைச் சொல்லணும்.''

என்னால் கோபத்தை அடக்க முடியவில்லை.

''என் பிறந்த வீட்டாரைப் பற்றி அனாவசியமாய்ப் பேசாதீங்க. அவங்களைப் பற்றி பேசக்கூட உங்களுக்குத் தகுதி இல்லை.''



''த...கு...தி... உன் பார்வையில் தகுதி என்றால் அந்த டிகிரி படிப்புகள்தானோ! எந்தப் பட்டப் படிப்பும் படிக்காமலே அண்ணி அண்ணனுடன் ஒழுங்காய்க் குடித்தனம் நடத்தவில்லையா? ஒரு நாளாவது அவர்களுக்கு நடுவில் சண்டை வந்து நீ பார்த்து இருக்கிறாயா? நாம் அதுக்கு நேர் எதிர்! சண்டை இல்லாமல் ஒரு நாள்கூட இருந்ததில்லை. வரவர வீட்டுக்கு வரணும் என்றாலே வெறுப்பாய் இருக்கு. நீயும் ஒரு பெண்தானா என்று நினைக்கத் தோன்றுகிறது'' படபடவென்று மொழிந்தார்.

''நாம் நடத்துவதற்குப் பெயர்தான் தாம்பத்தியமா என்ற சந்தேகம் எனக்கும் வருகிறது'' மனதில் இருப்பதை வெளிப்படுத்தி விட்டேன்.

யாருடன் என்னைச் சரி சமமாக வைத்துப் பேசுகிறார்? என் பிறந்த வீட்டாரைப் பற்றிப் பேச இவருக்கு என்ன தகுதி இருக்கிறது? நான் அகம்பாவம் பிடித்தவளாமா? மற்றவர்களுக்கு இல்லாத திமிரா எனக்கு இருக்கிறது? என் படிப்பு எதுக்கும் உதவப் போவதில்லையாமே? எனக்குக் குடித்தனம் செய்யத் தெரியாதா?

என் உரிமைகளுக்காக நான் போராடுகிறேன். நான் படிப்பதையும், என் குண நலன்களை மேம்படுத்திக் கொள்வதற்கு முயற்சி செய்வதையும் இவர்கள் விரும்பவில்லை. மனைவியை அடக்கத் தெரியாத முட்டாள் என்று மற்றவர்கள் சொல்லிவிடப் போகிறார்களே என்ற கவலை இவருக்கு. அதை மறைத்துக் கொள்ள தன்னுடைய ஆணாதிக்கத்தை இந்த விதமாக வெளிப்படுத்துகிறார். வாழ்க்கையில் எதை இழந்து கொண்டிருக்கிறோம் என்று இவருக்குப் புரியுமா?

கதவு அருகில் யாரோ வந்த அரவம் கேட்டு, யோசனையி
லிருந்து மீண்டேன். என் மச்சினர் நின்று கொண்டிருந்தார்.

''வேலைக்காரி முன்னால் நடந்த ரகளை போதும். இனி நீ சும்மா இரு தம்பி'' என் கணவரிடம் சொல்லிவிட்டு என் பக்கம்

திரும்பினார். ''நீ படிப்பதை நிறுத்த வேண்டாம். உங்க அண்ணி பார்த்துக் கொள்வாள். அவளிடம் சொல்லிவிட்டேன்'' என்று நகரப் போனார்.

''அண்ணி எதுக்காகச் செய்யணும்? இவளுக்கு இதைவிட வேறு வேலை என்ன? வேலை செய்யணும்னா இவளுக்கு நேரமே இருக்காது. சண்டைபோட மட்டும் தாராளமாய் நேரமிருக்கும்'' எகத்தாளமாய் சொன்னார்.

அத்தனை கோபத்திலும் எனக்கு அந்தப் பாயிண்ட் சரியென்று பட்டது. அவர் சொல்வது உண்மைதான். இத்தனை ரகளை செய்வதற்குப் பதில் அந்த வேலையை முடித்துவிட்டு வந்திருந்தால், படிப்பதற்கு மூடாவது நன்றாக இருந்திருக்கும்.

புத்தகங்களை மூடிவிட்டு எழுந்து கொண்டேன்.

என் முகத்தில் தென்பட்ட வெறுமையைக் கவனித்த மச்சினர் என் கணவரிடம் ஏதோ சொல்லப் போனார்.

''பரவாயில்லை! இனிமேல் என்னால் படிக்கவும் முடியாது'' என்று சொல்லிவிட்டு அறையை விட்டு வெளியேறினேன்.

கையில் மாத நாவலை வைத்துக் கொண்டே வேலைக்காரியிடம் வேலை வாங்கிக் கொண்டிருந்த ஓர்படி, என்னைப் பார்த்ததும் மகிழ்ச்சி அடைந்தவளாய் என்னிடம் அந்த வேலையை ஒப்படைத்துவிட்டு, உள்ளே போய்விட்டாள்.

வீட்டில் நடக்கும் விஷயங்களுக்கும் தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லாததுபோல் மாமியார் டி.வி.யில், ''புரட்சிப் பெண்'' சினிமாவைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கையில் மிஷின்கன் இருந்தால், எல்லோரையும் படபட என்று சுட்டுவிடணும் என்ற அளவுக்கு ஆத்திரமாய் இருந்தது. எதையும் செய்யமுடியாத இயலாமை அதிருப்தியாக மாறி என் மனதைத் தகித்துக் கொண்டிருந்தது.



இப்படி ஏதாவது ரகளை நடந்தவுடன், எதையாவது செய்து இந்தச் சூழ்நிலையிலிருந்து விடுதலை பெறவேண்டுமென்ற எண்ணம் தலைதூக்கும். அவர் மட்டும் எதுவும் நடக்காதது போல் இயல்பாக இருந்தது என் அபிமானத்தை மேலும் காயப் படுத்தியது.

என்ன வாழ்க்கை இது? எத்தனை சண்டைகள் வந்தாலும் கடைசியில் விட்டுக் கொடுப்பது நானாகத்தான் ஏன் இருக்க வேண்டும்? அவருக்கு என்னிடம் அக்கறையில்லா விட்டாலும், இந்தக் குடித்தனத்தின் மீது உள்ள பற்றுதலை என்னால் விட முடியவில்லையா? வரவர நானும் சராசரி இந்தியப் பெண் மணிக்குப் பிரதிநிதியாய் மாறிக் கொண்டிருக்கிறேனா?

என் பிறந்த வீடு நினைவுக்கு வரும்போது வேதனையாக இருந்தது. எவ்வளவு சுதந்திரமாய், நிம்மதியாய் வாழ்ந்து வந்தேன். இங்கே அழுவதற்குக்கூட ப்ரைவேஸி கிடையாது. ஆறுதல் சொல்லி அணைத்துக்கொள்ள அன்பு கணவரும் இல்லை. ஏன் இப்படி என்னைத் தனிமைப்படுத்துகிறார்கள்? இருபத்து இரண்டு வயதுவரை வேறு சூழ்நிலையில் வளர்ந்தவளுக்கு, வேறு சூழ்நிலையில் வாழ வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளான போது, அவளுக்குத் துணையாய் நிற்காமல் கணவனே எல்லோர் முன்னிலையிலும் அவளை அவமானப்படுத்தினால் எப்படி? அந்த வீட்டில் என்னுடைய நிலை என்னவென்று புரியாத குழப் பத்தில், அந்தச் சூழ்நிலையை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்ற தவிப்பு நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருந்தது.

மறுநாள் மாலையில் மச்சினர் காலேஜுக்கு வழக்கத்தை விடச் சற்று முன்னாடியே வந்தார். அவரைப் பார்த்தால் நேராக வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போகாமல், எங்கேயாவது உட்கார வைத்து அறிவுரைகள் வழங்குவார்போல் இருந்தது. எதைப் பற்றியும் விவாதிக்கும் மனநிலையில் என் மனம் இருக்க வில்லை.

நான் எதிர்பார்த்தது போலவே அவர் தன்னுடைய ஆபீசு அழைத்துச் சென்றார். வாட்ச்மேனை அழைத்து கூல்டிரிங்க் ஸ்னாக்ஸ் வரவழைத்தார். சற்றுநேரம் பிசினெஸ் விஷய களைப் பற்றிப் பேசினார். பிசினெஸ் அவருடைய வாழ்க்கை யுடன் ரொம்ப ஆழமாய்ப் பிணைந்து போயிருக்க வேண்டும் அவ்வளவு தீவிரமாய் இருப்பதால்தான் அவர்களைப் போன்ற வர்களுக்கு வெற்றி கிடைக்கிறது. மனதை ஒருமுகப்படுத்த தெரியாத என்னைப் போன்றவர்களால் வாழ்க்கையில் எதை யுமே சாதிக்க முடியாது. என்னுடைய ரிசெர்ச் பற்றி நினைவு வந்தபோது கொஞ்சம் கவலையாக இருந்தது.

''பிசினெஸ் விஷயத்தில் உங்களுக்கு இருக்கும் பிடிவாதம், தீவிரம் எனக்கும் வருமா?'' கவலையுடன் கேட்டேன்.

''எந்த விஷயத்தில்?''

''படிப்பில்...''

அவர் சிரித்து விட்டார். ''வாழ்க்கையில் வேறு எதுவும் கிடைக்க வாய்ப்பு இல்லை என்று நிச்சயமாகத் தெரிந்தபின் பிடி வாதம்தானே வரும்'' அவர் குரல் கம்பீரமாய் ஒலித்தது.

''இத்தனை நாட்களும் நீ உன் குடித்தனம் மட்டுமே இப்படி இருக்கு என்று வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாய். அது முற்றி லும் உண்மை இல்லை. உன்னைப் போன்றவர்கள், இதைவிட மோசமான நிலைமையில் இருப்பவர்கள் இவ்வுலகில் நிறைய பேர் இருக்கிறார்கள் என்ற உண்மை உனக்கு ஆறுதல் அளிக்கக் கூடும். அதிருப்தி என்பது மனிதனின் நிழலைப் போன்றது. அது நமக்கு முன்னால் இருக்காமல் பின்னால் விழணும் என்றால் சூரியனை... அதாவது லட்சியத்தை நோக்கிய உன்னுடைய பயணம் அமையவேண்டும். என்னையே எடுத்துக் கொள்.''

இதுவரை நான் அறிந்த மச்சினர் வேறு. அவருக்குள் மறைந்து இருக்கும் புதிய மனிதனை, கண்கள் அகலமாய் விரிய வியப் புடன் பார்த்துக் கொண்டிருந்தேன்.



அவர் மேலும் தொடர்ந்தார். ''நமக்கு இல்லாததைப் பற்றி யோசித்துக் கொண்டு வாழ்க்கையை வீணாக்கிக் கொள்வது முட்டாள்தனம். நம்மிடம் இருக்கும் ப்ளஸ் பாயிண்ட்லை நம்முடைய சொத்துக்களாக மாற்றிக் கொண்டு, சூழ்நிலையுடன் ஒத்து வாழக் கற்றுக்கொண்டால் வேதனையை மறக்கலாம்.''

''அது எஸ்கேபிஸம் இல்லையா? உண்மையை எதிர் கொள்வதற்குப் பதிலாக, வேறு வழியைத் தேடிக்கொள்வது எப்படி நியாயமாகும்?'' சின்சியராகக் கேட்டேன்.

''அது எஸ்கேபிஸம் ஆகாது. நம்முடைய முயற்சியில் எந்தக் குறையும் இருக்கக்கூடாது. உன் கணவர் நீ எதிர்பார்த்தது போல் இல்லை என்றால் அது உன்னுடைய தவறு இல்லையே! மனைவியாக உன்னுடைய கடமைகளைச் செய்தால் போதும் மற்றபடி நீ அவனைப் பொருட்படுத்த வேண்டிய தேவையில்லை. உன் வாழ்க்கையில் அவன் ஒரு பகுதி மட்டும்தான். லட்சியத்தை நோக்கி உன் பாதையை அமைத்துக்கொள். மற்ற விஷயங்கள் உனக்கு அனாவசியம்.''

நான் யோசித்துக் கொண்டிருந்தேன். தம்பியைச் சப்போர்ட் செய்து பேசுவார் என்று எதிர்பார்த்த எனக்கு, அவர் இப்படிப் பேசியது வியப்பை ஏற்படுத்தியது.

என் எதிர்காலத்தைப் பற்றி, என்னுடைய உணர்வுகளைப் பற்றி அவருக்கிருந்த அக்கறையைக் கவனித்தபோது என் மனம் இளகிவிட்டது.

அவர் சொல்லிக் கொண்டிருந்தார். ''திருமணமாகும் வரை எனக்கும் சில ஆசைகள் இருந்தன என்பதை நான் உணர வில்லை. எந்தப் பெண்ணாக இருந்தாலென்ன என்று நினைத்து விட்டேன். திருமணமான பின் என் எதிர்பார்ப்புகளுக்கு நேர் மாறாக அவள் இருப்பதைப் புரிந்துகொண்டேன். நிறைய பேருக்கு இப்படி அமைவது சகஜம்தான். சிலர் தம்முடைய மனைவியை

அல்லது கணவனை மாற்ற முயற்சித்து, தோல்வி அடைந்து வேறு வழிகளில் அந்த அதிருப்தியைக் குறைத்துக் கொள்வார்கள். என்னைப் போன்றவர்கள் லட்சியத்தை அடையும் முயற்சியில் மகிழ்ச்சியைத் தேடிக் கொள்வார்கள்.''

நான் கண் இமைக்காமல் ஆர்வத்துடன், அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

''என் மனைவி டைனமிக் பர்சனாலிடியுடன், புத்திசாலியாய், என்னைச் சேலெஞ் செய்பவளாய், அதே சமயம் சுமூகமாக என்னுடைய எண்ணங்களுடன் ஒத்துப் போகிறவளாய் இருக்க வேண்டும் என்று ஊகித்திருந்தேன். அவள் ரொம்ப ஏழையான குடும்பத்திலிருந்து வந்தவள். பார்வைக்கும் நன்றாக இருந்தாள். கொஞ்சம் படிக்க வைத்து, பட்டணத்து வாழ்க்கைக்கு ஏற்றாற்போல் அவளை மாற்றி விடலாமென்று நினைத்தேன். நம்மால் எப்படி அவர்களைப்போல் மாறமுடியாது என்ற சின்ன லாஜிக் எனக்கு அப்பொ புரியவில்லை. அவளுக்கு என் மீது அன்பு இல்லை... மதிப்பு, பக்தி. நான் எது சொன்னாலும் வேதவாக்காக எடுத்துக் கொள்ளும் சுபாவம். ஒரு தடவை நான் இன்ஷ்யூரென்ஸ் பாலிஸி பாரத்தை நிரப்பும்போது, அது என்னவென்று கேட்டாள். நானும் விளக்கிச் சொன்னேன்.

''அவ்வளவுதான், அழத் துவங்கிவிட்டாள். ஏன் என்று எனக்குப் புரியவில்லை. ரொம்ப கேட்ட பிறகு சொன்னாள். 'இன்ஷ்யூரன்ஸ் என்றால் இறந்த பிறகு பணம் கிடைக்கும் என்று டி.வி.யில் பார்த்திருக்கிறேன். நீங்களே இல்லாதபோது, எனக்கு மட்டும் இந்த வாழ்க்கை எதுக்கு? இந்த பாலிஸி விவகாரமெல்லாம் நமக்கு வேண்டாம்'' என்று மறுபடியும் அழுகையை தொடர்ந்தாள். அவளுக்கு விளக்கமாகச் சொல்லி புரிய வைப்பதற்குள் எனக்குப் போதும் என்றாகிவிட்டது.

''நான் நினைக்கும் நிலைக்கு அவளைக் கொண்டுவர வேண்டுமென்றால் அவளைவிட நான்தான் அதிகமாய் சிரமப்பட வேண்டு



மென்பதும் புரிந்தது. ஓரளவுக்காவது அவளுடைய ஒத்துழைப்புக் கிடைத்திருந்தால், என் முயற்சி வெற்றி அடைந்திருக்குமோ என்னவோ! ஆனால் எதைச் சொன்னாலும் 'இது எல்லாம் எனக்குப் பழக்கமில்லையே' என்றோ, இல்லாவிட்டால் 'ச்சீ... ச்சீ... இதெல்லாம் எனக்கெதற்கு' என்று சொல்லியோ என்னை டிஸ்கரேஜ் செய்வாள். அதைவிட முக்கியமான விஷயம் என்னவென்றால், பிசினெஸ் துறையில் எனக்குக் கிடைத்த வெற்றியால் ஒருநாளும் அவள் பங்கெடுத்துக் கொண்டது இல்லை.

''இந்தப் பணம், கார், வசதிகள் இல்லாவிட்டாலும் என்னால் சுகமாக வாழமுடியும்'' என்பாள். இல்லாவிட்டால் 'ஏன் நீங்க இன்னும் கஷ்டப்பட்டு உழைக்கணும்? மற்றவர்களைப் போல் பத்திலிருந்து ஐந்துவரை வேலை செய்தால் போறாதா' என்பாள். கணவனின் வெற்றியை, திறமையைச் சரியாக உணராத பெண்ணை மனைவியாய் அடைந்த கணவனைவிட அதிர்ஷ்டசாலி வேறு இல்லை. நான் வேலையில் ஆழ்ந்து, என்னுடைய ஏமாற்றத்தை மறக்க முயலுவதுபோல், அவள் பக்தி மார்க்கத்தில் தன்னுடைய அதிருப்தியை மறக்க நினைக்கிறாளோ என்று சிலசமயம் எனக்குத் தோன்றும். எத்தனை பூஜைகள்? எத்தனை உபவாசங்கள்? கேட்டால் என்னுடைய ஆயுளை நீடிப்பதற்காக என்பாள். என்னுடைய சந்தோஷத்திற்கு என்ன செய்யவேண்டும் என்பதை மட்டும் தெரிந்துகொள்ள மாட்டாள்.

''எத்தனையோ தடவைகள், சிறந்த எழுத்தாளர்களின் நாவல்களைக் கொண்டுவந்து கொடுத்திருக்கிறேன். புத்தகத்தைப் புரட்டிக்கூட பார்க்க மாட்டாள். 'எனக்கு இதெல்லாம் எதுக்கு? ஏதோ உங்களுக்குப் பணிவிடை செய்து கொண்டு, உங்கள் காலடியில் வாழ்ந்தால் அதுவே போதும்' என்று பக்தியுடன் சொல்வாள். அவள் அப்படிச் சொல்லும்போது முதலில் எரிச்சல் வந்தாலும், சில சமயம் இரக்கம்தான் ஏற்படும்.

''படுக்கை அறையில் எப்படி இருக்கணுமென்று தெரியாது. வீட்டில் நல்ல புடவைகளை உடுத்திக்கொண்டு நான் பார்த்ததில்லை. வெளியே செல்லும்போது மட்டும் பட்டு சென்று டிரெஸ் செய்துகொண்டால் போதுமாம். வீட்டில் இருக்கும்போது எதைக் கட்டிக் கொண்டால் என்ன என்பதுதான் அவளுடைய கொள்கை. பழைய புடவையில், எண்ணெய் வடியும் முகத்துடன் அவள் படுக்கை அறையினுள் நுழையும்போது, என்னுடைய உற்சாகம் அப்படியே வடிந்துவிடும். பயாலஜிகல் அர்ஜ்னால் அவளை நெருங்கிய நேரங்களிலும், எனக்காகத்தான் அவள் அதற்கு சம்மதிப்பது போலவும், அவளுக்குக் கொஞ்சம் கூட விருப்பமில்லாதது போலவும் நடந்துகொள்வாள்.''

தனக்குள் தானே பேசிக் கொள்வதுபோல் அவர் சொல்லிக் கொண்டே போனார்.

''அதற்காக அவளை ரொம்ப அப்பாவி என்று சொல்லிவிட முடியாது. பட்டிக்காட்டு சாமர்த்தியம் என்பார்களே, அது அவளுக்கு நிறையவே இருக்கு. மாமியாரை, நாத்தனாரை எப்படி வசப்படுத்திக் கொள்ளணுமோ அவளுக்கு நன்றாகவே தெரியும். இத்தனை படித்திருக்கிறாயே தவிர அந்தச் சாமர்த்தியம், காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் திறமை... இதெல்லாம் உன்னிடம் இல்லையென்று எனக்குத் தெரியும். மற்றவர்கள் சாமர்த்தியமாக வீட்டு வேலைகளை உன் தலையில் கட்டிவிட்டதை நான் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். உன்னுடைய திறமைகள் வீணாக்கப்படுவதை உணர்ந்தபோது, இரக்கம்தான் ஏற்பட்டது.

''இத்தனை நாளும், இதையெல்லாம் நான் உன்கிட்டே சொல்லவில்லை. நான் இப்படிச் சொல்வதால் மற்றவர்களிடம் உனக்கு வெறுப்பு ஏற்படலாமென்ற பயம்தான். மற்றவர்களிடம் வெறுப்பை வளர்த்துக் கொண்டால் வாழ்க்கையில் அமைதி



இல்லாமல் போய்விடும். டிட்டாச்மென்டை வளர்த்துக் கொள். லட்சியத்தை அடைவதையே வாழ்க்கையின் குறிக்கோளாக் வைத்துக்கொள். கிடைக்காததைப் பற்றி வருத்தப்படாதே. கிடைத்ததில் மகிழ்ச்சியைத் தேடிக்கொள்ள முயற்சி செய்.''

அவர் சொல்வதைக் கேட்கக் கேட்க என்னுடைய வியப்பு அதிகரித்தது. என் கணவரைப் பார்த்தபிறகு, ஆண்களிடம் இப்படிப் பட்ட ரசனைகள், உணர்ச்சிகள் இருக்குமா என்ற சந்தேகம் ஏற்பட்டது.

தாம்பத்திய வாழ்க்கையைப் பற்றி நிறைய கனவுகளைக் கண்டு, அவை நிறைவேறாமல் போகும்போது வேதனைப்பட்டு, அடுத்தவரை மாற்ற முயற்சி செய்து, அதிலும் தோல்வியைச் சந்தித்து, வாழ்க்கையில் நரகத்தைச் சிருஷ்டித்துக் கொள்வதை விட, கிடைத்த வாழ்க்கையில் மகிழ்ச்சியைத் தேடிக் கொள்வதுதான் சிறந்தது. இந்த உண்மை புரிந்தபோது, ஏனோ என் விழிகளில் நீர் நிறைந்தது.

''இரண்டாவது திருமணம் செய்துகொள்ளணும்னு உங்களுக்கு என்றுமே தோன்றியது இல்லையா?'' சின்சியராகக் கேட்டேன்.

''தோன்றியது'' என்ற பதிலை அவர் சொல்லி இருந்தாலும் எனக்கு வேதனை ஏற்பட்டிருக்காது. உண்மையைச் சொல்லணும் என்றால், அந்தப் பதிலைத்தான் எதிர்பார்த்தேன். அவர் எழுந்து ஜன்னல் அருகில் சென்று, வெளிப்பக்கம் பார்த்துக் கொண்டே சொன்னார்.

''தோன்றவில்லை. இரண்டாவது வருபவள் என்னுடைய ரசனை, எண்ணங்களுக்கு ஏற்றாற்போல் இருப்பாள் என்ற கியாரண்டி என்ன? மேலோட்டமாகப் பார்த்து, நம் எண்ணங்களுடன் ஒத்துப்போகும் நபரா இல்லையா என்று முடிவு செய்வது அசாத்தியம். அதிலும் நம் சமுதாயத்தில் திருமண பந்தம் ரொம்பவும்

வலிமையானது. என்னுடைய ரசனைகளுடன் ஒத்துப்போக வில்லை என்ற ஒரே காரணத்துக்காக இரண்டாவது திருமணம் செய்து கொண்டு, என் மனைவிக்கு வேதனையைத் தருவதை நான் விரும்பவில்லை.''

அவருடைய குரலில் இன்னதென்று சொல்ல முடியாத உணர்ச்சி தென்பட்டது.

''அப்படின்னா உங்க மனதுக்கு ஏற்றாற்போல் எந்தப் பெண்ணையும் இதுவரையில் நீங்க சந்திக்கவே இல்லையா?''

நான் ஏன் இந்தக் கேள்வியைக் கேட்டேன் என்று இன்று வரை எனக்குப் புரியவில்லை. சில கேள்விகள் வாழ்க்கையின் போக்கையே மாற்றிவிடும். ''அசுவத்தாம ஹத:'' என்று தருமராஜர் சொல்லாமல் இருந்திருந்தால் மகாபாரதமே மாறி இருக்கும். தசரதர் தன் மனைவி கைகேயிக்கு இரண்டு வரங் களைக் கொடுப்பதாக வாக்கு மட்டும் கொடுக்காமல் இருந் திருந்தால் ராமாயணமே இருந்திருக்காது.

ஒருகணம் எங்கும் நிசப்தம். பிறகு மந்திரஸ்தாயில் அவ ருடைய குரல் ஒலித்தது.

''அப்படிப்பட்ட பெண்ணை சந்திக்கவே முடியாது என்று நினைத்திருந்தேன், உன்னைப் பார்க்கும் வரை!''

என் இதயத் துடிப்பு ஒரு நிமிடம் நின்றுவிட்டது. உடல் முழுவதும் சில்லென்று உணர்வு பரவி, நாக்கு உலர்ந்துவிட்டது. கண்கள் அகல விரிய அவர் பக்கமே பார்த்துக் கொண்டிருந்தேன்.

அதுவரை ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்தவர் என்னை நோக்கி நடந்து வந்தார். அருகில் வந்து, என் கண்களை ஆழ்ந்து நோக்கி, ''யெஸ்... ஐ லவ் யூ'' திடமான குரலில் சொன்னார்.

தலை சுற்றுவதுபோல் இருந்தது எனக்கு. என்னை நானே சமாளித்துக் கொள்ள, கண்களை இறுக்கமாய் மூடிக்கொண்டு சோபாவின் விளிம்பை பலமாகப் பற்றிக் கொண்டேன்.



அவருடைய வலது கை என் இடையை இறுக்கமாகத் தழுவியதை, இடது கையால் என் முகவாயைப் பற்றி லேசாக உயர்த்தி, மூடி இருந்த கண்கள்மீது மிருதுவாக முத்தமிட்டதை என்னால் உணர முடிந்தது. என்னால் கண்களைத் திறக்க முடிய வில்லை. ஏதோ கனவு உலகில் அடியெடுத்து வைத்ததுபோல் தன்னிலையை மறந்துவிட்டேன். எது எப்படி நிகழ்ந்தது என்ற உணர்வே இல்லாமல்... அது... எங்களுக்கு இடையில் நடந்து முடிந்துவிட்டது. அதுவரை வாழ்க்கையில் இழந்துவிட்ட ஒன்றை மறுபடியும் பெறும் தவிப்புதான் அந்த ஸ்பரிசத்தில் என்னால் உணர முடிந்தது.

சற்றுப் பொறுத்து சுயநினைவுக்கு வந்தவளாய், ''கிளம்ப லாம்'' என்றேன். என் குரல் எனக்கே விசித்திரமாய் ஒலித்தது.

பத்து நிமிடங்கள் கழித்து கிளம்பிவிட்டோம். காரில் ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந் தேன். இதயத்தில் அடியிலிருந்து வேதனை மெள்ள மெள்ளமாய் பரவத் தொடங்கியது. சூழ்நிலையே இறுக்கமாக மூச்சு முட்டு வதுபோல் இருந்தது.

வீட்டுக்குள் போனதும் யாருடனும் பேசாமல் என் வேலை களை முடித்துக்கொண்டு கட்டிலில் சாய்ந்துவிட்டேன்.

மறுநாள் காலையில் எழுந்த பிறகு மற்றவர்களின் முகத்தில் விழிக்கும்போது கிலேசமாக உணர்ந்தேன். வீட்டுச் சூழ்நிலை வழக்கம்போல்தான் இருந்தது. தவறு செய்துவிட்டேன் என்ற குற்ற உணர்வுதான், மற்றவர்கள் என்னைக் குற்றவாளியாகப் பார்க்கிறார்களோ என்ற எண்ணத்தைத் தோற்றுவித்திருக்கும்.

வழக்கம்போல் காரில் அவருடன் காலேஜ் போகக் கிளம்பி னேன். வழியில் அவர் எதுவும் பேசி என்னைச் சங்கடத்தில் ஆழ்த்தவில்லை. மௌனமாகவே இருந்துவிட்டார்.

அன்றும், மறுநாளும் ஏனோ என் உடல்நிலை சரியாக இல்லாமல் இருந்தது. வேலைகளைச் சுறுசுறுப்பாய்ச் செய்ய முடியாமல் சோர்வாக உணர்ந்தேன். மூன்றாவது நாள் காலேஜில் வகுப்பு நடத்தும்போதே தலையைச் சுற்றிக் கொண்டு வந்தது. உடனே ஸ்டாப் ரூமுக்கு வந்து ஓய்வெடுத்துக் கொண்டேன். அப்படியும் நிலைமையில் மாற்றம் தெரியாததால் பர்மிஷன் சொல்லிவிட்டு ஆட்டோவில் நேராக வீட்டுக்கு வந்துவிட்டேன். மனத்தில் ஏற்பட்ட கொந்தளிப்புதான் இந்தப் பலவீனத்துக்குக் காரணமாக இருக்கும் என்று தோன்றியது.

பிறந்த வீட்டில் நான்கு நாட்கள் தங்குவதற்காக நாத்தனார் வந்திருந்தாள். உடல் நிலை சரியாக இல்லாததால் சீக்கிரமாக வந்துவிட்டேன் என்று அவளிடம் சொல்லிவிட்டு உள்ளே போய்ப் படுத்துக் கொண்டேன். சூடாக காபி கலந்து நாத்தனார் என்னிடம் கொடுத்தபோது ஆச்சரியமாக இருந்தது. திருமணம் ஆனபின் அவள் சுபாவத்தில் கொஞ்சம் பணிவு, அனுசரணை ஏற்பட்டிருந்தது உண்மைதான்.

காபி குடித்ததும் வயிற்றை பிரட்டிக்கொண்டு வந்தது. உடனே பாத்ரூம் பக்கம் ஓடினேன். குடித்த காபி அப்படியே வெளியே வந்துவிட்டது. வாயைக் கொப்பளித்துவிட்டு, கட்டிலில் படுத்துக் கொள்ள போகும்போது, மாமியார் மலர்ந்த முகத்துடன் உள்ளே வந்தாள்.

''உடம்பு சரியாக இல்லையா அம்மா! எதாவது விசேஷமாகத்தான் இருக்கும்னு நினைக்கிறேன். ஒரு பேரனை பெற்று என் கையில் கொடுத்துவிட்டால் போதும். நான் பாட்டுக்கு கொஞ்சிக் கொண்டு நிம்மதியாக இருப்பேன்.''

மாமியார் இப்படிச் சொன்னதும் திடுக்கிட்டேன். அது உண்மையாக இருக்குமோ என்ற எண்ணம் வந்ததும், குற்ற உணர்வு மறுபடியும் வந்து என்னைப் பலமாகத் தாக்கியது.



மயக்கமாக இருக்கவே, அப்படியே படுத்துக்கொண்டு விட்டேன். மாலையில் அவர் வந்தபிறகு டாக்டரிடம் போகலாம் என்று நினைத்தேன். ஆனால் அவர் வரும்போது பதினோரு மணியாகிவிட்டது. அந்த நேரத்தில் இந்த விஷயத்தைச் சொல்ல வேண்டாமென்று, மவுனமாக இருந்துவிட்டேன்.

மறுநாள் காலையில் வீட்டில் உள்ள எல்லோருக்கும்... என் கணவர் உள்பட தெரிந்துவிட்டது போலும். அவர்கள் என்னைப் பார்க்கும் பார்வையில் அபிமானம் தெரிந்தது. கணவர் என்னிடம் வாயைத் திறந்து எதுவும் சொல்லவில்லை.

நானாக அவரிடம் சென்று, ''இன்று மாலையில் டாக்டரிடம் போய்விட்டு வருவோமா?'' என்று கேட்டேன்.

அதுவரைக்கும் சாதாரணமாக இருந்தவர், எதையோ யோசித்துவிட்டு, ''இன்று மாலை சீக்கிரமாக வரமுடியாதே! ஆபிசில் மீட்டிங் இருக்கு...'' என்றார்.

மனதில் ஏற்பட்ட ஏமாற்றத்தை அடக்கிக் கொண்டு, ''அதனால் என்ன? நாளைக்குப் போகலாம்'' என்றேன்.

அவரிடமிருந்து இதுபோன்ற பதில்தான் வரக்கூடும் என்று முன்பே எதிர்பார்த்ததால், ஏமாற்றம் ஏற்பட்டாலும் அதைப் பொருட்படுத்தாமல் இருக்க முடிந்தது.

வழக்கம்போல் காலேஜுக்குப் போனேனே தவிர, எதையுமே சாப்பிட பிடிக்காததால் பலவீனமாக இருந்தது. ஸ்டாஃப் ரூமில் மேஜைமீது தலையைச் சாய்த்துப் படுத்துக்கொண்டேன். மச்சினர் வந்திருப்பதாக ப்யூன் வந்து தகவல் தெரிவித்தான். விசிடர்ஸ் ரூமுக்குள் காலடி எடுத்து வைக்கும் போதே, அவர் எழுந்து வந்தார்.

''போகலாமா?'' என்றார்.

''எங்கே?'' என்றேன். காலேஜ் முடிய இன்னும் நேரம் இருந்தது.

''பர்மிஷன் சொல்லிவிட்டு வா... டாக்டரிடம் போகப் போகிறோம்...'' என்றார்.

டாக்டர் முன்னால் போய் உட்கார்ந்த பிறகும் எனக்கு பிரமிப்பு அடங்கவில்லை. டாக்டர் என்னை டெஸ்ட் செய்து விட்டு, ஸ்பெசிமனை லேபுக்கு அனுப்பியிருந்தாள். கால்மணி நேரம் கழித்து, ரிப்போர்ட் வந்தது. 'பாசிடிவ்' என்று தெரிந்த போது என் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லாததுபோல் தோன்றியது.

என் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சியைக் கவனித்த மச்சினர் என்னை வாழ்த்துவதுபோல் புன்முறுவல் பூத்தார். வீட்டுக்குப் போனதும், அவரே இந்த விஷயத்தை எல்லோரிடமும் சொல்லி விட்டார். மாமியார் மகிழ்ச்சியில் திக்குமுக்காடி விட்டாள். உடனே கேசரி செய்து முதலில் எனக்கு, பிறகு மற்றவர்களுக்கு வழங்கினாள். ஓர்படியும் மனப்பூர்வமாகச் சந்தோஷப்படுவது போல் என்னைப் பார்த்தாள்.

அன்று இரவும் என் கணவர் வரும்போது நேரமாகி விட்டது. தூக்கக் கலக்கத்தில் எழுந்து வந்து அவருக்கு உணவைப் பரிமாறினேன். டாக்டரிடம் போனது பற்றி நானும் அவரிடம் சொல்லவில்லை. அவருக்கு அந்த விஷயம் நினைவில்கூட இருக்காது என்று நினைக்கிறேன்.

மறுநாள் காலையில் அவர் காபி குடித்துக் கொண்டு இருக்கும்போது, நானும் மச்சினரும் முதல்நாள் டாக்டரிடம் போய்விட்டு வந்த விஷயத்தை மாமியார் சொல்லிக் கொண்டு இருந்தாள்.

''கன்ஃபார்ம் ஆகிவிட்டதா நல்லது...'' பதிலுக்கு அவர் சொன்னது காதில் விழுந்தது. 'அப்பாடா... ஒரு வேலை மிச்சம்' என்று எண்ணியிருப்பாரோ என்ற உணர்வுதான் மேலோங்கியது.

* * *



மூன்றாவது மாதம் வந்ததும், பிறந்த வீட்டில் வந்து அழைத்துச் சென்றார்கள். என் அண்ணிக்கு இன்னும் எந்த விசேஷமும் இல்லையென்று அம்மா குறைப்பட்டுக் கொண்டாள்.

அண்ணி என்னிடம் தனிமையில் பேசும்போது, விஷயத்தை விளக்கினாள். அண்ணாவும், அண்ணியும் வெளி நாட்டுக்குப் போவதாக இருக்கிறார்கள் என்றும், இந்தச் சமயத்தில் குழந்தைகள் பிறந்தால் சங்கடம் என்பதால், குழந்தை பெற்றுக் கொள்ளும் எண்ணத்தைத் தள்ளிப் போட்டிருப்பதாகச் சொன்னாள். அவர்கள் வாழ்க்கையை எவ்வளவு திட்டமிட்டு நடத்துகிறார்கள் என்று புரிந்தபோது, மனதில் சுருக்கென்று தைப்பது போல் இருந்தது. அங்கே இருப்பு கொள்ளவில்லை. எதையோ காரணம் காட்டி மாமியார் வீட்டுக்கு வந்துவிட்டேன்.

நான் அங்கே இல்லாத நாட்களில் ஓர்படியின் தந்தை இறந்து விட்டாராம்; தாய் முன்னாடியே போய்விட்டாள். யாரும் இல்லாத அனாதையாக நின்ற தங்கையை ஓர்படி மாமியார் வீட்டுக்கு அழைத்து வந்திருக்கிறாள்.

தந்தை போன துக்கத்திலிருந்த அந்தப் பெண் கொஞ்சங் கொஞ்சமாய் யதார்த்த உலகத்திற்கு வந்து கொண்டிருந்தாள். மாமியார் வீட்டு வேலைகளை ரொம்ப சாதுரியமாய் அந்தப் பெண்ணின் தலையில் கட்டுவதைக் கவனித்தபோது எனக்குச் சிரிப்புதான் வந்தது.

காலேஜ் செல்லும்போது வழியில் மச்சினர் சொன்னார். தாய் தந்தை இல்லாத அந்தப் பெண்ணை எங்கே தங்க வைப்பது என்ற விஷயத்தில் தான்பட்ட அளவுக்குக்கூட அவருடைய மனைவி அக்கறை காண்பிக்கவில்லை என்றும், அந்தப் பெண் இந்த வீட்டினுள் வந்ததும், அவராக முடிவு செய்த விஷயம் என்றும் சொன்னார்.

என்னுடைய எண்ணங்கள் வேறுவிதமாய் இருந்தன. இந்த வீட்டில் அந்தப் பெண்ணின் நிலைமை ஒரு வேலைக்காரியை விட மோசமாகத்தான் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. மருமகளாய் வந்த பெண்ணுக்கே அந்த நிலைமையை ஏற்படுத்தும் சாமர்த்தியம் மாமியாரிடம் நிறையவே இருக்கிறது.

என் மனதைப் படித்து விட்டவர்போல் மச்சினர் சொன்னார். ''நம் வீட்டில் அந்தப் பெண் இருப்பது ஒரு சுமை என்ற நினைப்பு வரும்முன் அவளுக்குத் திருமணத்தை முடித்து விடணும். அதுவரைக்கும் ஏதாவது தையல் கிளாஸில் சேரட்டும் என்று சொல்லியிருக்கிறேன். கொஞ்சம் அப்பாவியாக இருப்பாள் என்று நினைக்கிறேன்.''

என் மனம் கொஞ்சம் அமைதி அடைந்தது. அவர் எது செய்தாலும் ரொம்ப சரியானதாக, நியாயமானதாகத் தோன்றியது. அவர் மீது வைத்திருந்த நம்பிக்கை அதற்குக் காரணமாக இருக்கலாம்.

என் ஓர்படி தங்கையிடம் வேலையை வாங்குவதை கவனித்தபோது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அந்தப் பெண்ணுக்கு சீக்கிரமாக ஒரு நல்ல வரன் கிடைத்துவிட்டால் நன்றாக இருக்குமென்ற எண்ணம்தான் ஏற்பட்டது.

அண்ணன், அண்ணிக்கு அமெரிக்காவுக்குப் போக விசா கிடைத்து விட்டது. விஷயம் தெரிந்ததும் அப்பா, அம்மா முதலில் ரகளை செய்தார்கள்.

''மூன்று வருடங்கள் நிமிடத்தில் பறந்துவிடும்'' என்று நாங்க மூவரும் சேர்ந்து அவர்களைச் சமாதானப்படுத்தினோம். அதற்குள் அவர்கள் க்ஷேத்ராடனம் முடித்துக் கொண்டு விடலாமென்று யோசனை கூறிய பிறகு சம்மதித்தார்கள்.

அண்ணன், அண்ணியின் தாம்பத்தியத்தை, அவர்களிடம் இருக்கிற ஒற்றுமையை, ஒருவரை ஒருவர் மதித்துக் கொள்ளுகிற



தன்மையைப் பார்க்கிறபோது எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருந்தது.

வெளி நாட்டுக்குப் புறப்படும் முன் அண்ணி, என்னிடம் ஏதோ சொல்ல நினைத்து தயங்குவதுபோல் தோன்றியது.

''என்ன விஷயம் அண்ணி?''

''நீ என்ன செய்கிறாய்? எதற்காக செய்கிறாய் என்று எனக்குத் தெரியாது. என் காதுக்கு எட்டிய சில விஷயங்களிலிருந்து, நீ நடக்கிற பாதை சரியில்லையோ என்று நினைக்கிறேன். நீ பத்து பேருக்குப் பாடம் சொல்லித் தருபவள். உனக்கு எடுத்துச் சொல்லுகிற நிலையில் நான் இல்லை. இருந்தாலும் அனுபவம் என்ற தகுதியின் அடிப்படையில் ஒரு விஷயத்தைச் சொல்ல நினைக்கிறேன். வாழ்க்கை என்றால் சில ஏமாற்றங்கள் இருக்கத்தான் செய்யும். அந்த ஏமாற்றங்கள் உன் முன்னேற்றத்துக்கு ஏணிப்படிகளாய் மாற்றிக்கொள். நீ நினைப்பதுபோல் உன் குழந்தையின் வாழ்க்கையை அமைத்துத் தர முயற்சி செய். இதைத்தான் உன்னிடம் சொல்ல வந்தேன்...'' என்று அண்ணி சொன்னபோது—

எனக்கு தூக்கி வாரிப் போட்டது. 'அந்த' விஷயம் மற்றவர்களுக்குத் தெரிந்து விட்டதோ என்று பதட்டமடைந்து விட்டேன். ஆனால் எனக்கும் என் கணவருக்குமிடையே ஏற்பட்ட வெறுமையைப் பற்றி சொல்லுகிறாள் என்று புரிந்தபிறகு விரக்தியுடன் சிரித்தேன்.

''ரோஜா மலர்கள் தூவப்பட்ட பாதை போன்றது உன்னுடைய வாழ்க்கை. எல்லாம் சரியாக அமைந்து விட்டால் எத்தனை வேண்டுமானாலும் பேசலாம். ஆனால் ஒவ்வொரு நிமிஷமும் முட் பாதையில் நடப்பதுபோல், தடைகளை எதிர் கொள்ள வேண்டிய சூழ்நிலையில் உன்னால் இப்படிப் பேச முடியுமா சொல்லு. இருந்தாலும் என் நலனில் அக்கறை வைத்துச் சொல்லியிருப்பதால் அதுபடி நடந்து கொள்ள முயற்சி செய்கிறேன்.''

அதற்கப்புறம் அண்ணி எதுவும் பேசவில்லை. பேசத் தேவையில்லை என்று நினைத்துவிட்டாள் போலிருக்கிறது. அண்ணா... அண்ணி வெளிநாட்டுக்குப் போன பிறகும் அண்ணி சொன்ன வார்த்தைகள் அடிக்கடி நினைவுக்கு வந்தன. அண்ணியின் முன் குற்றவாளியாக நிற்பதுபோல் உணர்ந்தேன். நெருப்பை கையால் தொட்டுவிட்டதுபோல் என் மனது தகித்துக் கொண்டிருந்தது.

மேலும் சில நாட்கள் தங்கிவிட்டு, மாமியார் வீட்டுக்குப் புறப்பட்டேன். அங்கே மற்றவர்களுடன் போராடுவது மட்டுமில்லை, என்னுடனே நான் போராட வேண்டியிருக்குமென்று தெரியும். என் மச்சினருடன் எனக்கிருப்பது 'ப்ளேடோனிக் லவ்' என்று நினைத்துக் கொண்டிருந்தேன்.

என் நிலையில் இருக்கும் ஒவ்வொரு பெண்ணும் தன்னுடைய செக்யூரிடிக்கு இடைஞ்சல் இல்லாமல், உள் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளும் உண்மையான நண்பன் வேண்டும் என்று நினைப்பாளோ என்று தோன்றியது.

* * *

எங்கள் முதல் மேரேஜ் டே அடுத்த ஐந்து நாட்களில் இருந்தது. முன்னாடியே அவருக்கு நினைவுபடுத்தினேன்.

''என்னங்க... அன்று நாம் எங்கேயாவது வெளியில் போகலாம். அப்படியே வெளியில் சாப்பிட்டு வரலாம்'' என்றேன்.

''பணம் நிறைய செலவாகுமே... மாதக் கடைசி வேறு'' என்றார்.

அந்தப் பதில் முன்னாடியே எதிர்பார்த்திருந்ததால் ''பணத்தைப் பற்றி நீங்க கவலைப்படாதீங்க. அந்தப் பொறுப்பு என்னுடையது'' தைரியம் அளிப்பது போல் சொன்னேன்.

''அப்படின்னா சரி'' வாக்குக் கொடுத்து விட்டார்.



எனக்கு நிம்மதியாக இருந்தது. சரியான நேரத்தில் வழிகாட்டிய அண்ணிக்கு மனதிலேயே நன்றியைத் தெரிவித்துக் கொண்டேன். அவருக்காக சில்க் ஜிப்பா, பைஜாமா... எனக்கு காகச் சிவப்பு பார்டர் போட்ட வெண்பட்டுப் புடவை வாங்கியிருந்தேன். அவரிடம் காண்பிக்கவில்லை.

'வெட்டிங் டே' அன்று இரவு தனிமையில் இருக்கிறபோது அந்தப் புடவையைக் கட்டிக்கொண்டு அவரை வியப்பில் ஆழ்த்த வேண்டுமென்றும், அந்த இரவு வாழ்க்கையில் மறக்க முடியாத இரவாக அமைய வேண்டுமென்றும் ஊகித்துக் கொண்டிருந்தேன். கணவரின் அன்பு எனக்குக் கிடைத்தால் போதும் என்ற எண்ணம் அந்தக் கனவை மேலும் மெருகூட்டியது.

வெட்டிங் டே அன்று விடுமுறை எடுத்துக் கொண்டேன். முதல்நாள் இரவு முழுவதும் எதிர்பார்ப்புடன் தூக்கம் வரவில்லை. விடியற்காலையில் எழுந்ததும், தூக்கத்தில் இருந்த என் கணவரை நெருங்கி கன்னத்தில் முத்தம் பதித்து, ''ஹேப்பி ஆனிவர்சரி'' கிசுகிசுப்பான குரலில் சொன்னேன்.

முன் நெற்றியில் விழுந்த என் முடிகற்றைகளை விரல்களால் ஒதுக்கிவிட்டு, ''தாங்க்யூ அண்ட் விஷ் யூ தி ஸேம்...'' என்றார்.

என் உடல் காற்றில் மிதப்பதுபோல் உற்சாகமாய் உணர்ந்தேன். அவர் குளிக்கிறபோது டவல் தரும் சாக்கில் பாத்ருமில் நுழைந்து அவர்மீது பச்சைத் தண்ணீரை தெளித்தேன்.

''அட... சும்மா இரேன். மனுசனை நிம்மதியாகக் குளிக்கக் கூட விடமாட்டியா...''

''இன்னிக்கு உங்களைச் சும்மாவிடப் போவதில்லை. பார்த்துக்கிட்டே இருங்க...'' சாலெஞ்ச் செய்துவிட்டு வெளியே வந்தேன்.

கோவிலுக்குப் போய் அர்ச்சனை செய்துவிட்டு வந்தோம். கடவுளிடம் எனக்கு நம்பிக்கை உள்ளது என்று சொல்ல முடியாது. இருந்தாலும் இந்தத் தடவை மட்டும் கடவுள்மீது நம்பிக்கை வைத்து மனதாரப் பிரார்த்தனை செய்தேன்.

கோவிலிலிருந்து திரும்பி வந்தோம். நாத்தனாரின் கணவருக்கு அன்று பிறந்த நாள் என்றும், நம் வீட்டு சார்பில் யாராவது போய் அவர்களை வாழ்த்திவிட்டு வந்தால் நன்றாக இருக்குமென்று மாமியார் தெரிவித்தார்.

மாமியார் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் போவதற்கு என் கணவர் தயாராக இருப்பார் என்று எனக்குத் தெரியும். இரவு உணவை வெளியில் சாப்பிட நினைத்திருந்ததால், காலையிலாவது வீட்டில் மற்றவர்களுடன் சேர்ந்து சாப்பிடலாமென்று எண்ணியி ருந்தேன். இப்பொ நாத்தனார் வீட்டு ருப் போக வேண்டிய வேலை வந்துவிட்டது.

நானும் இவரும் உடனே நாத்தனார் வீட்டுக்குப் புறப்பட்டுப் போனோம். அங்கே போனால் நாத்தனாரும், அவள் கணவனும் வெளியில் ஏதோ வேலையாகப் போயிருப்பதாக அவளுடைய மாமியார் தெரிவித்தாள். எங்க இருவரையும் அங்கேயே சாப்பிடச் சொல்லி வற்புறுத்தினாள் அந்த அம்மாள். வெளியில் போன தங்கையும், அவளுடைய கணவரும் வராமல் சாப்பிட்டால் நன்றாக இருக்காது என்று என் கணவர் தீர்மானமாகச் சொல்லிவிட்டதால், அவர்கள் வரும்வரை சாப்பிடாமல் காத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தோம்.

அப்பவும் பொறுக்க முடியாமல் அந்த அம்மாளிடம் ''இன்று எங்க முதல் மேரேஜ் டே...'' என்று சொல்லிப் பார்த்தேன். சீக்கிரமாக இங்கிருந்து கிளம்பிவிடணும் என்ற எண்ணம் என் குரலில் இருப்பதை அந்த அம்மாள் புரிந்துகொள்ளவில்லை.



''அப்படியா! ரொம்ப சந்தோஷம். இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களுக்குச் சாப்பாடு போடுவது எங்க அதிர்ஷ்டமாய் நினைத்துக் கொள்கிறோம்...'' முகம் மலர அந்த அம்மாள் சொன்னாள்.

''வாழ்ந்தாற்போல்தான்...'' எரிச்சலுடன் உள்ளூர முணு முணுத்துக் கொண்டேன்.

என் கணவர் அந்த அம்மாளுடன் ரொம்ப சந்தோஷமாக உரையாடிக் கொண்டிருந்தார்.

'இந்த மனுஷனுக்கு மனைவியைத் தவிர உலகில் இருக்கும் மற்ற எந்தச் சமாசாரமும் சந்தோஷத்தைக் கொடுக்கும் போலிருக்கு' மனதில் அலையாய் எழும்பிய எண்ணங்களைப் பலவந்தமாகக் கட்டுப்படுத்திக் கொண்டு உட்கார்ந்தேன். ஆக மொத்தம் என் நாத்தனாரும், அவளுடைய கணவரும் வரும் வரை நாங்க இருவரும் சாப்பிடாமல் காத்திருந்தோம்.

ரொம்ப நேரம் கழித்து அவர்கள் வந்தார்கள். அண்ணன் வீட்டுக்குப் போயிருந்ததாகவும், தம்பியின் பிறந்த நாள் என்று தெரிந்து அவர்கள் சாப்பிட்டுத்தான் போகணும் என்று வற்புறுத்தியதால், அங்கேயே சாப்பிட்டு விட்டதாக மாப்பிள்ளை தெரிவித்தார்.

அவர்களுக்காக நாங்க காத்துக் கொண்டிருந்தது தெரிந்து நாத்தனார் மன்னிப்பு கேட்டுக் கொண்டு எங்க இருவருக்கும் உணவைப் பரிமாறினாள். சாப்பாடு முடிந்த பிறகு சற்றுநேரம் பொதுவாக உரையாடிக் கொண்டிருந்தோம். மணி நாலரையைத் தாண்டிவிட்டது. சீக்கிரமாய் கிளம்பிவிடணும் என்று நினைத்திருந்ததால் எனக்கு அங்கே இருப்பே கொள்ளவில்லை.

அருகில் யாருமில்லாத நேரமாகப் பார்த்து என் கணவர் என்னிடம் கேட்டார். ''ஹோட்டலுக்குப் போகலாமென்று நினைத்திருந்தோம் இல்லையா? அதற்கு வேண்டிய பணத்தைக் கையுடன் கொண்டு வந்திருக்கிறாயா?'' என்று கேட்டார்.

இங்கிருந்து வீட்டுக்குப் போகாமல் நேராக ஹோட்ட லுக்குப் போய் விடலாமென்ற எண்ணம் அவருக்கு வந்த நினைத்து ரொம்ப மகிழ்ந்து போய்விட்டேன்.

'பரவாயில்லை! இவருக்கும் மனைவியின் ரசனை மதிக்கத் தெரிந்திருக்குது...' என்று நினைத்துக்கொண் ''பணத்தை கையுடன் கொண்டு வந்திருக்கிறேன்'' என்று சொ னேன்.

மறுபடியும் எல்லோரும் பேச்சுகளில் மூழ்கிவிட்டார் திடீரென்று என் கணவர், ''நாம் எல்லோரும் சேர்ந்து இ உணவை வெளியில் போய் சாப்பிடலாம்... வாங்க ம பிள்ளை...'' என்று அழைப்பு விடுத்தார்.

அதைக் கேட்டதும் எனக்கு மயக்கமே வந்துவிட்ட உடனே நாத்தனாரின் கணவர், ''நாங்க இருவரும் சினிமாவுக்கு போகலாம்னு புரோகிராம் போட்டிருக்கிறோம்.'' தயங் கொண்டே சொன்னார்.

என் கணவர் பக்கம் பார்த்தேன்.

''அப்படியா! ரொம்ப சந்தோஷம். போயிட்டு வாங் என்று அவர் சொன்னதைக் கேட்டபிறகே நிம்மதியாக மூ வாங்கிக் கொண்டேன்.

இருவரும் சொல்லிக்கொண்டு புறப்பட்டோம். எங்கள வழியனுப்ப நாத்தனார் வாசல் வரைக்கும் வந்தாள். என் கண உரிமையுடன் என் பர்ஸிலிருந்து பணத்தை எடுத்து, தங்கையி கையில் திணித்துக்கொண்டே, ''முன்னாடியே தெரியாதத கிஃப்ட் வாங்கி வர நேரமில்லாமல் போய்விட்டது. என் சார் மாப்பிள்ளைக்கு ஏதாவது நல்ல பரிசாக வாங்கிக் கொடு- என்றார்.

நான் சட்டென்று முகத்தைத் திருப்பிக் கொண்டு, பார்வை வேறுபக்கம் செலுத்த முயன்றேன். கண்களில் நிறைந்த நீர் எ பார்வையை மறைத்துவிட்டது.



வழியில் வரும்போது அவர் எதையோ சொல்லி சமாதானப் படுத்த முயன்று கொண்டிருந்தார். என் மனம் வெறுமையாய், எந்த உணர்ச்சியுமில்லாத ஜடமாய் மாறி விட்டது. மூளையும் மரத்துப் போய் விட்டாற்போல் இருந்தது.

நாங்கள் வீட்டினுள் நுழையும்போது மணி ஆறு அடித்து விட்டது. மச்சினர் இன்னும் வந்திருக்கவில்லை. என் கணவர் அம்மாவிடம் தங்கையின் மாமியார் வீட்டு சமாசாரங்களை விலாவாரியாகச் சொல்லிக் கொண்டிருந்தார். மாமியாரும் ரொம்ப சந்தோஷமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

நான் நேராக அறைக்குள் சென்று உடைகளை மாற்றிக் கொண்டேன். பீரோவைத் திறந்து தூக்க மாத்திரைகளைப் போட்டுக்கொண்டு, பீரோ கதவைச் சாத்தப் போனபோது, திருமண நாளுக்காக வாங்கிய உடைகளின் பாக்கெட் என்னைப் பார்த்துக் கேலி செய்வது போலிருந்தது.

அப்படியே கட்டிலில் சரிந்து, கண்களை மூடிக்கொண் டேன்.

மறுநாள் காலையில் டைனிங் டேபிள் அருகில் என் கணவர் தானாகவே பேச்சை எடுத்தார்.

''அண்ணனிடம் பணம் கடனாக வாங்கிக் கொண்டு ஹோட்டலுக்குப் போகலாம்னு நினைத்தேன். உள்ளே வந்து பார்த்தால் நீ நன்றாக தூங்கிக்கொண்டு இருந்தாய். போகட் டும்... வேணும்னா இன்னிக்கு போகலாம்.''

அவர் சொன்ன, ''போகட்டும்... வேணும்னா...'' போன்ற வார்த்தைகள் என்னைப் பாதிக்கவில்லை. நேற்று இரவு நான் போட்டுக் கொண்ட தூக்க மாத்திரைகள், வயிற்றில் வளரும் என் குழந்தைக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுத்துமோ என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.

அதற்குள் மச்சினர் அருகில் வந்தார். கையிலிருந்த ப கெட்டை மேஜைமீது வைத்துக்கொண்டே, "நேற்று உ ளுடன் பேசக்கூட முடியவில்லை. மேரேஜ் டேயை இப்படி கொண்டாடுவது? உங்களுக்காக வாங்கிய டிரெஸ்ஸ கொடுக்கலாம்னா கண்ணில் பட்டால் தானே?" தாழ்ந்த குர தம்பியைக் கோபித்துக் கொண்டிருந்தார்.

நான் கண்களை உயர்த்திக்கூட பார்க்க முயற்சிக்கவில்லை பார்த்தால் கண்ணீர் பொலபொலவென்று வழிந்து என்ன காட்டிக் கொடுத்துவிடுமோ என்ற பயம் என்னை அந்தக் கா யத்தைச் செய்யவிடவில்லை.

அதன் விளைவு! காலேஜ் விடுவதற்குச் சற்று முன் லேயே நானும் என் மச்சினரும் காரில் உட்கார்ந்து இருந்தோ அவர் என்னை ஒன்றுமே கேட்கவில்லை. முன்சீட் அவர் பக்கத்தில் உட்கார்ந்து, அழுதுகொண்டிருந்தேன். வேதனையைத் துக்கத்தை அவரிடமிருந்து மறைக்க எ முயற்சியும் செய்யவில்லை. கொஞ்சம் ஆறுதல் கிடைத்தா பர்ஸ்ட் ஆகும் நிலையில் இருந்தேன்.

ஸ்டீரிங் மேலே கைகளை வைத்துக்கொண்டு மௌனமா என்னையே பார்த்துக் கொண்டிருந்தவர், இனி பொறுத் கொள்ள முடியாதவராக என் தலைமீது கையை வைத்தார்.

அவ்வளவுதான்... தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிரு வன், கிடைத்த பற்றுகோலைப் பலமாய்ப் பிடித்துக் கொள் போல், அவருடைய மார்பில் அடைக்கலம் புகுந்துவிட்டேன்.

அந்த நிமிடம் எனக்கு அண்ணியின் அறிவுரைகள் நின வில் வரவில்லை. என் கணவர்... மாமியார் யாரும் என் நின வில் இருக்கவில்லை... இத்தனை நாளாக நான் இழந்துவிட் பொருள் ஏதோ ஒன்று மறுபடியும் கிடைத்துவிட்ட திருப்தியி கண்களை மூடிக்கொண்டு, வெறுமனே இருந்துவிட்டேன்.



சீர்திருத்தவாதிகள்... பெண்ணினத்தைப் பற்றிப் பேசும் சமூக சேவகர்கள் என்னை மன்னிப்பார்களாக. எனக்கு ஆ...று... த...ல் வேண்டும். அதற்காக நான் எதையும் செய்யத் தயாராக இருந்தேன்.

* * *

## 17

**வாழ்க்கையில்** சில பிரச்னைகள் தானாகவே சரியாகிவிடும். சில பிரச்னைகளுக்கு உடனுக்குடன் முடிவெடுக்க அவசரப்பட்டால், சில நாட்கள் ஒத்திப் போட்டாலே போதும். தீர்வு தானாகவே கிடைத்துவிடும். அப்படி ஒத்திப் போட பொறுமை இல்லாதவர்கள், அந்தக் குழப்பத்தில் ஏதோ ஒரு முடிவை எடுத்துவிடுவார்கள்.

இன்று நடப்பதைப் பற்றித்தான் யோசிப்பார்களே தவிர, முன்பின் யோசிக்காமல் செயல்படுவதால் புதை குழியில் சிக்கிக் கொள்வோம் என்ற விவேகம் இவர்களுக்கு இருக்காது. அதிருப்தியின் விளிம்பில் இருந்த என்னுடைய நிலைமையும் அப்படித்தான் இருந்தது.

அன்று மச்சினருடன் எனக்கிருந்த உறவு அறியாமையினால் ஏற்பட்டுவிட்டதென்று, இன்று இந்த நடுவயதில் ஈசிச்சேரில் உட்கார்ந்து கொண்டுகூட என்னால் சொல்ல முடியாது. ஏன் என்றால் அந்த வயதில், அந்தச் சூழ்நிலையில் அதைவிட விவேகமாய் என்னால் நடந்து கொண்டிருக்க முடியாது என்றே

தோன்றுகிறது. மகிழ்ச்சியைவிட மாரல் வேல்யூஸ்தான் முக்கியம் என்ற தியரியை அந்த வயதில் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது.

என் மச்சினருடன் அந்த விதமாகத் தொடங்கிய உறவு மேலும் சில மாதங்களுக்கு நீடித்தது. தேவைக்கதிகமான முக்கியத்துவம், மதிப்பு இவை நமக்குக் கிடைக்கிற வரையில் எதிராளியின் அருகாமை ரொம்ப அபூர்வமாய், அற்புதமாக இருக்கும். ஆனால் போகப் போக அவர்கள் நம்மீது உரிமையை எடுத்துக் கொண்டு அதிகாரத்தைச் செலுத்த முயலும்போதுதான், அந்த உறவின் அஸ்திவாரமே ஆட்டம் காணத் தொடங்கும்.

வெறும் செக்ஸுக்காக மட்டும் அவர் என்னை நெருங்கவில்லையென்றும், அதற்கும் அப்பாற்பட்ட காதல் (?) அல்லது கன்சர்ன் அவருக்கு என்னிடம் இருப்பதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

ஆனால் போகப் போக எங்களுக்கு இடையில் உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ள வார்த்தைகள் மட்டுமே போறாமல் அந்த உறவும் தவறாமல் நிகழ்ந்து கொண்டிருப்பதை நான் உணரும்போது காலம் கடந்துவிட்டது.

மனித உறவுகளில் இருந்த இந்த 'காஷுவல் நெஸ்' எனக்கு மேலும் திருப்தியைத் தந்தது. எனக்கு என்ன வேண்டுமோ தெரியாத குழப்பத்தில் இருந்தேன்.

மகள் பிறந்தபோது என் மனக் குழப்பங்களுக்கு முடிவு வந்து விட்டாற்போல் தோன்றியது. மகள்தான் இனி எனக்கு துணையென்றும், என் வாழ்க்கையே அவளைச் சுற்றி இருப்பதாகவும் நினைக்கும்போது எல்லையில்லாத மகிழ்ச்சி ஏற்பட்டது.

மகள் பிறந்து மூன்றாவது மாதம் புகுந்த வீட்டுக்கு வந்து விட்டேன். என்னுடைய உலகமே அவளாக வாழ நான் முடிவு எடுத்திருந்த நேரம் அந்த நிகழ்ச்சி நடந்தது.



அன்று இரவு எனக்கு ரொம்ப தாகமாக இருந்தது. ஹாலில் இருந்த ப்ரிஜ்ஜை திறந்து தண்ணீர் குடித்துவிட்டு ப்ரிஜ் கதவைச் சாத்தப் போகும் போது...

★ ★ ★

ஹாலுக்கு ஒட்டினாற் போல் இருந்த ஸ்டோர் ரூமை என் ஓர்படியின் தங்கைக்காக ஒதுக்கி இருந்தார்கள். பெயருக்கு ஸ்டோர் ரூமாக இருந்தாலும், ஓரளவு விசாலமாக, வசதியாகத்தானிருக்கும். அந்த ரூம் கதவு மெல்ல திறந்து கொண்டது. யதேச்சையாகத் திரும்பிப் பார்த்த நான் திடுக்கிட்டேன்.

கலைந்த தலைமுடியைச் சரிசெய்து கொண்டே அந்த அறையிலிருந்து வெளிப்பட்ட அந்த நபர் யாரோ இல்லை... என் மச்சினர்.

ப்ரிஜ் கதவு சரியாக சாத்தாததால், அந்த வெளிச்சம் அவர் மீது பட்டு தெளிவாக அடையாளம் காட்டியது. கண்கள் அகல விரிய அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். அவரும் என்னைப் பார்த்து அதிர்ச்சி அடைந்திருக்க வேண்டும்.

அவருடைய நடையில் தடுமாற்றம் தெரிந்தது. ஏதோ சொல்ல நினைப்பவர்போல் என் அருகில் ஒரு நிமிடம் நின்று விட்டார்.

உள்ளிருந்து அந்தப் பெண்ணின் அழுகை குரல் ரொம்ப ஈனமாகக் கேட்டுக் கொண்டிருந்தது. அந்தப் பக்கம் பார்வையைச் செலுத்தினேன். இருட்டில் எனக்கு எதுவும் தெரியவில்லை.

அவரும் அந்த அறை பக்கம் ஒரு தடவை பார்த்துவிட்டு, என்னிடம் எதையோ சொல்லப் போகும்முன் சட்டென்று திரும்பி யாரோ துரத்தி வருவதுபோல் வேகமாக என் அறைக்குள் வந்து கதவைத் தாள் போட்டுக் கொண்டேன். என் இதயம் வேகமாகத் துடித்துக் கொண்டிருந்தது. போன மாதம் நடந்த நிகழ்ச்சி ஒன்று என் கண்களுக்கு முன் நிழலாடியது.

★ ★ ★

அன்று காலேஜில் ஏதோ ஸ்ட்ரைக். மதியத்துடன் காலேஜை மூடிவிட்டார்கள். அங்கிருந்தே மச்சினருக்குப் போன் செய்தேன்.

"அவர் இல்லையே... கால் மணிநேரம் முன்னால்தான் வெளியே கிளம்பிப் போனார். ஒரு மணி நேரத்தில் திரும்புவதாகச் சொல்லியிருக்கிறார். எனி மெஸேஜ் மேடம்?" அவருடைய காரியதரிசி பணிவுடன் கேட்டான்.

"நோ... தாங்க்யூ..." போனை வைத்துவிட்டு யோசனையில் ஆழ்ந்தேன்.

வீட்டுக்குப் போக இன்னும் நிறைய நேரம் இருந்தது. ஏதோ முடிவுக்கு வந்துவிட்டவள் போல் அவருடைய கெஸ்ட் ஹவுசுக்கே போனேன். ஒரு மணி நேரத்திற்குள் வந்து விடுவார் என்று சொல்லியிருப்பதால் அங்கேயே போய் அவருக்காகக் காத்திருக்கலாமென்று நினைத்தேன்.

கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே போகும்போதுதான் கவனித்தேன், அவருடைய கார் அங்கே இருப்பதை. அவர் வெளியே போயிருக்கும் போது கார் இங்கே எப்படி இருக்க முடியும்?" எனக்குப் புரியவில்லை.

யாரையாவது கேட்கலாம் என்றால் வாட்ச் மேனும் தென்படவில்லை. முன் அறை கதவு சாத்தியிருந்தது. கதவைத் தட்டிப் பார்க்க நினைத்தாலும் ஏதோ தயக்கம் ஏற்பட்டு பின் வாங்கினேன்.

வேறு ஊரிலிருந்து விசிட்டர்ஸ் யாராவது வந்திருக்கக் கூடும். அவர்களுடைய உபயோகத்திற்காக மச்சினர் காரை இங்கேயே விட்டு விட்டு டாக்ஸியில் வெளியில் சென்று இருக்கலாம்.

நான் அவருக்காக அங்கே காத்திருப்பதா, வேண்டாமா என்று யோசித்துக்கொண்டே, தோட்டத்திலிருந்த பூக்களை ஆராய்ந்து கொண்டிருந்தேன். திடீரென்று கார் ஸ்டார்ட் ஆகும்



ஓசை கேட்டு அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தேன். கார் கேட்டைத் தாண்டி வெளியேறிக் கொண்டிருந்தது.

பார்வை நிலைத்து விட்டதுபோல் அந்தப் பக்கமே பார்த்துக் கொண்டிருந்தேன். காரின் டிரைவிங் சீட்டில் மச்சினரும் ... அவருக்குப் பக்கத்தில் ஓர்படியின் தங்கையும் இருந்தார்கள்.

என் கண்களை என்னால் நம்ப முடியவில்லை. காரில்... அவருக்கு பக்கத்தில்... சரியாக நான் இருக்கும் அதே நிலையில்... எனக்குப் பதில் அந்தப் பெண்.

ஏதோ ஆவேசம் என்னை ஆட்கொண்டதுபோல் வேகமாய் நடந்து எதிரே இருந்த பப்ளிக் பூத்திலிருந்து போன் செய்தேன்.

ஓரிரண்டு நிமிடங்கள் கழித்து அவரே போனை எடுத்தார். என் குரலைக் கேட்டதும், "ஹலோ... நீதானா... சொல்லு... சற்று முன்னால் வந்தாயாமே?" அவருடைய குரல் வழக்கம் போல் மிருதுவாக இருந்தது.

"ஆமாம்... நீங்க இல்லாததால், உங்க ஆபீசுக்குப் பின்னாலிருந்த கெஸ்ட் ஹவுசுக்குப் போயிருந்தேன்." அமைதியான குரலில் சொன்னேன்.

மறுமுனையில் சில நொடிகள் மவுனம். பிறகு அவர் சொன்னார். "ஆமாம். நான் அங்கேதான் இருந்தேன்..." அவருடைய குரலில் எந்த தடுமாற்றமும் இல்லை.

"'இருந்தேன்' இல்லை... 'இருந்தோம்' என்று சொல்லுங்க" என் குரலில் தீவிரமிருந்தது.

"ஓஹ்... கமான்... நீ நினைக்கிறாற்போல் எதுவும் இல்லை..." அவர் மேலும் விளக்கும் முன் இடைபுகுந்து கேட்டேன்.

"போகட்டும்... நீங்க என்ன நினைக்கிறீங்களோ அதை சொல்லுங்க."

அவருடைய குரல் தாழ்வாக ஒலித்தது. "இதோ பாரு அனாவசியமாகப் பதட்டப்படாதே! நீ வருத்தப்படும் படியா எதுவும் நடக்கவில்லை... என்னை நம்பு."

"நம்புகிறேன்... நம்பாமல் வேறு என்ன செய்ய முடியும்! ஏமாற்றப்படுகிறோம் என்று தெரிந்த பிறகும் நம்பித்தான் ஆகவேண்டும். இல்லாவிட்டால் என்னைப் போன்றவர்கள் எப்படி வாழ முடியும்?"

என் குரலில் இருந்தது துக்கமா... கோபமா... எனக்கே தெரியவில்லை.

இன்றுதான் மறுபடியும் அதைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன். வேலையில்லாத வேளையில் ஒரு பெண்ணின் அறையிலிருந்து ஒரு ஆண் கதவைத் திறந்து கொண்டு வருகிறான் என்றால் அவ்விருவருக்கும் நடுவில் என்ன நிகழ்ந்திருக்கும் என்று ஊகிக்க முடியாதா என்ன?

சமுதாயக் கோட்பாடுகளை மீறி, ஆவேசத்தில் புது பாதையைத் தேர்ந்தெடுத்து, அங்கேயும் தோற்றுக் கொண்டு இருக்கிறேனோ என்ற வேதனை என்னை ஆட்கொண்டது.

திருமணம் ஆகும் முன், கணவரைத் தவிர வேறு ஒருவருடன் 'உறவு' என்பது என்னால் நினைத்துக்கூட பார்க்க முடியாத விஷயமாக இருந்தது. ஆனால் இன்று என் எண்ணங்களின் போக்கைக் கண்டு என்மீதே எனக்கு வெறுப்பு ஏற்பட்டது.

ஓர்படி தங்கையின் அறையிலிருந்து வெளியேறிய மச்சினரை பார்த்த நானும், நான் கவனித்து விட்டதைத் தெரிந்து கொண்ட அவரும், மறுநாள் அந்த விஷயத்தைப் பேசிக் கொள்ளவில்லை. சண்டை போடவில்லை. பிரிந்து போய் விடவுமில்லை. அவராகச சொல்லட்டும் என்று நானும், கேட்டால் சொல்லிக் கொள்ளலாம் என்று அவரும் இருந்து விட்டோமென்று நினைக்கிறேன்.



கேட்டு விட்டால், "ஆமாம்... உனக்குப் பிடிக்கா விட்டால் தாராளமாக விலகிக் கொள்" என்று சொல்லிவிடப் போகிறார் என்ற பயம் உள்ளூர என் மனதில் இருந்திருக்க வேண்டும்.

* * *

அன்று இரவு எனக்கு ஏனோ உறக்கம் வரவில்லை. தூக்கத்தில் சிணுங்கிய மகளை மெதுவாகத் தட்டி தூங்கச் செய்தேன். இரவு முழுவதும் ஜன்னல் வழியாக நிலாவை பார்த்துக் கொண்டே அப்படியே உட்கார்ந்து இருந்தேன்.

மணி ஆறரைத் தாண்டியும் எழுந்திருக்கவில்லையே என்று நினைத்தாள் போலும். மாமியார் அறை கதவைச் சத்தப் படுத்தினாள்.

"இதோ வந்து விட்டேன்" குரல் கொடுத்துக் கொண்டே, சிவந்துவிட்ட கண்களுடன், அவிழ்ந்த பின்னலை முடிந்து கொண்டே போய்க் கதவைத் திறந்தேன். என்னை எழுப்பி விட்டு மாமியார் குளிக்கச் சென்றுவிட்டாள். ஓர்படி சுவாமி விக்ரகங்களைப் புளி போட்டுத் தேய்த்துக் கொண்டிருந்தாள். மணியைப் பார்த்ததும் திடுக்கிட்டு, அவசரமாகக் குளித்து முடித்தேன்.

குக்கர் வைப்பதற்காக அரிசியை எடுக்கப் போனபோது, ஸ்டோர் ரூம் கதவு சாத்தியிருந்தது. மெதுவாகத் தள்ளிப் பார்த்தேன். உள்ளிருந்து கதவு தாள் போட்டிருக்க வேண்டும். கதவைத் திறக்க முடியவில்லை. தட்டிப் பார்த்தேன். பதில் வரவில்லை. என்ன செய்வதென்று புரியவில்லை. அந்த அறைக்கு ஜன்னல் இருந்தது. ஜன்னல் வழியாகக் குரல் கொடுத்துப் பார்க்கலாம் என்று அந்தப் பக்கமாய் நடந்தேன். அதற்குள் எழுந்துவிட்ட என் கணவர், அருகில் வந்தார்.

"என்ன விஷயம்?"

"அந்தப் பெண் இன்னும் எழுந்திருக்கவில்லை போல் இருக்கு" என்று சொல்லிவிட்டு ஜன்னல் அருகில் சென்றேன்.

''இன்னும் எழுந்து கொள்ளவில்லையா, என்?'' அவ... என் பின்னாடியே வந்தார்.

ஜன்னல் கதவுகள் வெறுமே சாத்தியிருந்தன. இரண்... மூன்று தடவை குரல் கொடுத்துவிட்டு, வேறு வழியில்லாம... ஜன்னல் கதவை உள்பக்கமாய் தள்ளிக் கொண்டே மறுபடியு... அழைத்தேன். அவ்வளவுதான் 'வீ'லென்ற சத்தம் என் குர... வளையிலிருந்து வெளிப்பட்டது. உலகமே கிர்ரென்று சுழலுவ... போல் இருந்தது.

''என்ன நடந்தது?'' என் கணவர் பதட்டத்துடன் கேட்டு... கொண்டே, கீழே விழாமல் என்னைப் பிடித்துக் கொண்டா... எனக்கு நினைவு தப்பியது.

★ ★ ★

ரொம்ப நேரம் கழித்து எனக்கு விழிப்பு வந்தது. நாத்தனா... என் அருகிலேயே இருந்தாள். தலையைத் திருப்பிப் பார்த்... போது ஓர்படி உட்கார்ந்திருப்பது தெரிந்தது. அழுது அழு... அவள் முகம் வீங்கியிருந்தது. கண்கள் சிவந்து காணப்பட்ட...

மாமியார் ஹார்லிக்ஸ் டம்ளருடன் அறைக்குள் நுழை... தாள். பாட்டி இருப்பில் இருந்த என் மகள் மிரண்டு போன... ளாய் என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள். நான் கொஞ்ச... தேறியபிறகு ஒவ்வொரு விஷயமாக எனக்குத் தெரிய வந்தது. ஓ... படி தங்கையின் சாவுக்குக் காரணம் ப்ரெயின் ஹெமரேஜ் என்ற டெத் சர்டிஃபிகேட் வாங்கி விட்டதால் போலீஸ் இன்வெஸ்டி... கேஷன் எதுவும் நடக்கவில்லை. டெத் சர்டிஃபிகேட் கொடுத்... டாக்டரும், சில போலீஸ் அதிகாரிகளும் என் மச்சினருக்கு நன்றாகத் தெரிந்தவர்களாக இருந்ததால், அந்தப் பெண்ணின் தற்கொலையை இயற்கையான மரணமாக மாற்றுவதில் எந்த சிரமமும் ஏற்படவில்லை. மச்சினர் ஊரில் இல்லாவிட்டாலும் காரியங்களைச் கச்சிதமாக முடித்து விட்டார்கள்.



மறுநாள் காலையில் மகளை மடியில் வைத்துக் கொண்டு சூனியத்தில் பார்த்துக் கொண்டிருந்தேன். அருகில் வந்த நாத்தனார் தாழ்ந்த குரலில் கிசுகிசுப்பாகச் சொன்னாள்.

''அந்தப் பெண் வயிற்றில் மூன்று மாத கரு இருந்தது''

அதைக் கேட்ட போது எனக்கு அதிர்ச்சி ஏற்படவில்லை.

★ ★ ★

## 18

மறுநாள்தான் மச்சினர் டூரிலிருந்து வரப் போகிறார். அந்தப் பெண் இறந்து போன பாதிப்பி லிருந்து வீட்டுச் சூழ்நிலை பழைய நிலைமைக்குக் கொஞ்சம் கொஞ்சமாக மாறிக் கொண்டு இருந்தது. நானும் காலேஜ் போக ஆரம்பித்து விட்டேன். இத்தனை நடந் தாலும் மச்சினர் டூரை கான்சல் செய்துவிட்டு வராதது எனக்கு வியப்பாக இருந்தது. இறந்து விட்ட அந்தப் பெண்ணை 'கடைசி தடவையாக' பார்ப்பதற்கு முக்கியத்துவம் அளிக்காதது அவ ரிடம் எனக்கு விரக்தி ஏற்படுத்தியது.

திடீரென்று மறுநாள் மதியம் மச்சினர் காலேஜ்க்கு வந்தார். இந்த முறை அவருடைய ஆபீஸ் கான்பரென்ஸ் ஹாலில் உட் கார்ந்து கொண்டோம்.

''அந்தப் பெண்ணின் தற்கொலைக்குக் காரணம் நான்தான் என்று உனக்குத் தோன்றுகிறது இல்லையா?'' என்று கேட்டார்.

நான் பதில் சொல்லவில்லை. அவர் சொல்ல வந்ததை சொல்லி முடித்து விட்டால், ''குட்பை'' சொல்லிவிட்டுப் போய் விடலாம் என்று நினைத்திருந்தேன்.

''நீ நினைத்துக் கொண்டிருப்பதுபோல் நான் ஒன்றும் கெட்டவன் இல்லை. நீ எது கேட்டாலும் நான் சொல்கிறேன்...''

நான் என் கை விரல்களை ஆராய்ந்துகொண்டு உட்கார்ந்திருந்தேன். அங்கிருந்து உடனே போய்விட வேண்டுமென்ற விருப்பம் பலமாகத் தோன்றியது.

''இதோ பார்... நீ இப்படி மவுனமாக இருப்பது என்னை வேதனைப்படுத்துகிறது. கொஞ்சம் யோசித்துப் பாரு. உன்னைவிட அந்தப் பெண் எந்த விதத்தில் உசத்தி? நீ இருக்கும் போது அவளுடன் நான் ஏன் நட்பு வைத்துக் கொள்ளப் போகிறேன்? சொல்லு!''

''நட்பு வைத்துக் கொள்ள மாட்டீங்க... ஆனால் காரில் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு ஊரைச் சுற்றுவீங்க. நள்ளிரவு நேரங்களில் அவளுடைய அறையில் தங்கி விட்டு வருவீங்க'' முகத்தில் அடித்தாற்போல் கேட்டேன்.

''அப்படியெல்லாம் செய்தால் நட்பு வைத்துக் கொண்டிருப்பதாக அர்த்தமா?'' அவருடைய குரலில் அமைதி இருந்தது.

''உண்மைதான்! நட்பு இல்லாமல் இருக்கலாம். ஒரு பெண்... அவள் பட்டிக்காடாக இருந்தாலும், படிப்பு இல்லாதவளாக இருந்தாலும் சரி! உங்களை நேசிக்கிறாள் என்ற விஷயம் உங்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கும். அந்தப் பெண் தானாக உங்களை நெருங்காவிட்டாலும், அதுபோன்ற சூழ்நிலையை ஏற்படுத்துவீங்க. அவளுடைய பலவீனத்தை, இயலாமையை எக்ஸ்ப்ளாயிட் செய்து, ஆறுதல் சொல்லும் சாக்கில் அவர்களுடன் உறவை வளர்த்துக் கொள்வீங்க.''

''ச்ச... ச்ச... நீ நினைப்பது தவறு. எங்களுக்கு இடையில் எந்தச் சம்பந்தமும் இடையாது...'' என்றார்.

நான் விடவில்லை... ''நான் சொல்ல வந்ததும் அதுதான். உங்களுக்கு இடையில் அந்த உறவு இல்லாமல் இருக்கலாம்.



ஆனால் அந்தப் பெண் உங்களை ஆராதிக்கிறாள் என்ற உண்மை உங்களுடைய ஈகோவை திருப்திப்படுத்தும். உங்களை நேசிக்கும் நபர்களில் மேலும் ஒரு நபர் கூடுவதும்... அவள் மனதில் நீங்க ஒரு காட்ஃபாதராக இருப்பதும் உங்களுக்குச் சந்தோஷத்தை உண்டாக்கும் சமாசாரங்கள். இதைத்தானே நீங்க என்னிடம் சொல்ல நினைத்தீங்க?''

அவர் குறுக்கே எதுவும் சொல்லாமல் என்னை முழுவதுமாகப் பேச விட்டார். பிறகு திடமான குரலில் சொல்லத் தொடங்கினார். அவர் சொன்ன அந்த வார்த்தைகளை என்னால் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாது.

''நீ சொல்வதில் உண்மையில்லையென்று நான் சொல்ல மாட்டேன். அந்தப் பெண் என்னை ஆராதிக்கிறாளா இல்லையா என்று எனக்குத் தெரியாது. ஆனால் அவள் என்னைச் சார்ந்து இருப்பது என்னுடைய ஈகோவை ஏற்படுத்தியது என்ற விஷயத்தை என்னால் மறுக்க முடியாது. அது என்னுடைய பலவீனமாகவும் இருக்கலாம். இல்லை என் மனதில் நம்பிக்கையை வளர்க்கும் உணர்வாகவும் இருக்கலாம். அதில் தவறு என்ன இருக்கு? அதனால் யாருக்கும் நஷ்டமில்லையே?''

அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். மனிதனில் மறைந்திருக்கும் சுயநலத்தை வியப்புடன், லேசான அருவெறுப்புடன் பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால் நான் அவர்மீது குற்றம் சாட்ட போய், அதுவே திருப்பி வந்து என்னைத் தாக்கும் என்று நான் ஊகிக்கவில்லை.

அவர் மேலும் தொடர்ந்தார். ''தொடக்கத்தில் நீ உன் கணவனை நேசிக்க முயன்றாய். அவன் உன்னை அலட்சியப் படுத்தியதும், வாழ்க்கையே உனக்குப் பாலைவனமாய் தோன்றி விட்டது. அந்த நேரத்தில் நான் உன்னைச் சந்தித்தேன். இருவரும் பரஸ்பரம் ஆறுதலைப் பெற்றுக் கொண்டோம். மகள் பிறந்த

பிறகு உன்னுடைய உலகம் மாறிவிட்டது. இதெல்லாம் பா
கும் போது அன்பின் வெளிப்பாடு ஒவ்வொரு ஸ்டேஜிலு
மாறிக்கொண்டு இருப்பது உனக்குப் புரியும். நீ ஒப்புக்கொள்
முடியாத உண்மை ஒன்றைச் சொல்லட்டுமா! ஏதாவது அற்பு
நிகழ்ந்து உன் கணவன் தன் தவறுகளை உணர்ந்து உன்னை நா
வந்தால், மிகச் சுலபமாக நீ எனக்கு குட்பை சொல்லிவிட்
அவனை ஏற்றுக்கொண்டு விடுவாய். நீ ஒப்புக் கொள்ளா வி
டாலும் சமுதாயக் கோட்பாடுகள் உன்னை அந்த விதமாய் நடந்
கொள்ளத் தூண்டிவிடும். அதேபோல் என் மனைவியும் நா
விரும்பும் முறையில் என்னை நேசிக்கத் தொடங்கினால், நானு
உனக்கு குட்பை சொல்லி விடுவேனோ என்னவோ! நம் சமு
தாயத்தில் விவாக பந்தம் ரொம்ப பலமானது என்று ஏற்கெனவே
உனக்குச் சொல்லியிருக்கிறேன்.''

அவர் மேலும் ஏதோ சொல்லிக் கொண்டு இருந்தார். எ
செவிப் புலன்கள் இயங்க மறுத்துவிட்டன.

யோசித்துப் பார்த்தால் அவர் சொல்லுவதிலும் நியாய
இருப்பதுபோல் தோன்றியது. முதலிலிருந்து என் கணவரையும்
என்னையும் இணைக்க வேண்டுமென்றுதான் அவரும் முயற்
செய்தார். அது நிறைவேறாவிட்டால் மட்டும் இவரிடம் நெரு
க்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியம் என்ன இரு
கிறது? அவர் என்னை நேசித்தாரே தவிர தன்னை நேசிக்க
சொல்லி ஒருநாளும் என்னிடம் கேட்கவில்லையே?

நான்தான் அவரிடம் அடைக்கலம் புகுந்தேன். அதனுடை
பலனாய் இன்று திருமண பந்தத்தின் புனிதத்தைப் பற்றி அவ
சொல்லும் சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டு நிற்கிறேன்.

இன்னதென்று தெரியாத வேதனை என் இதயத்தை தகித்து
கொண்டிருந்தது. அவர் சொல்வதெல்லாம் உண்மையெ
றால்... ஓர்பாடியின் தங்கை கருவுற்றதற்குக் காரணம் யார் என்



கேள்வி என்னைத் துளைத்தெடுத்தது. கேட்டு விட்டேன்
அவரை.

''நான் காரணம் என்று இல்லாதவரைக்கும் அது பற்றித்
தெரிந்துகொள்ள வேண்டிய தேவை உனக்கு இருக்காது என்று
நினைத்தேனே...'' வியப்புடன் கேட்டார்.

உண்மைதான். அந்த விஷயம் எனக்கு அனாவசியம்... அது
யாரு என்று தெரிந்து கொள்வதால்... 'இவர்' இல்லை என்று
உறுதிப்படுத்திக் கொள்வதுதான் என்னுடைய லட்சியமாக
இருந்தது. ஒருகால் இவர்தான் காரணம் என்று தெரிந்தால்,
எங்களுடைய பிரிவு எனக்கு வேதனை அளிக்காமல் இருக்கக்
கூடும். கைப்பையை எடுத்துக் கொண்டு வாசற்கதவை நோக்கி
நடந்தேன். பின்னாலிருந்து அவருடைய அழைப்பு கேட்ட
போது தன்னிச்சையாய் கால்கள் நின்றுவிட்டன. ஆனால் பின்
னால் திரும்பிப் பார்க்கவில்லை.

''நான் உன்னை எப்போதும் நேசித்துக்கொண்டே இருப்
பேன்'' என்று அவர் சொன்னபோது, விரக்தி கலந்த புன்னகை
ஒன்று என் இதழ்களில் மலர்ந்தது. அதன்பிறகு அங்கே நிற்கா
மல் கிளம்பி விட்டேன்.

* * *

**மா**லை ஆறு மணி நெருங்கிக் கொண்டிருந்தது. என்
கணவர் ஆபிசிலிருந்து வருவதற்கு இன்னும் நேரம் இருந்தது.
வீட்டிலும் யாரும் இல்லை. டீ போட்டு குடித்தபிறகு, நியூஸ்
பேப்பர்களைச் சரியாக அடுக்கி வைத்துக் கொண்டிருந்தேன்.
அந்த வேலை முடிந்தபிறகும் இவர் வரவில்லை. குழந்தைக்கு
ஜுரமாக இருப்பதால் டாக்டரிடம் அழைத்துப் போகணும்
என்று சொல்லியிருந்தேன். சீக்கிரமாக அவர் வந்தால்தான்
டாக்டரிடம் போக முடியும்.

என்ன செய்வதென்று புரியவில்லை. குழந்தை தூங்கிக் கொண்டிருந்தாள். ரொம்ப நாட்களாக வங்கி கணக்குச் சரி பார்க்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்தேன். பேலன்ஸ் எவ்வளவு என்று தெரியாமல் திண்டாட்டமாக இருந்தது.

கால்குலேட்டருக்காக பேக்கில் தேடியபோது, அந்த காகிதம் கண்ணில் தட்டுப்பட்டது. ஏதோ பழைய பேப்பர் என்று எண்ணி விட்டெறியப் போனவள், அதில் தென்பட்ட எழுத்துக்களைப் பார்த்து வியப்பு அடைந்து, பிரித்தேன்... யாருடைய கையெழுத்தென்று புரியவில்லை. யாருக்கோ எழுதப்பட்ட கடிதம் அது. என்னை அறியாமலேயே அதைப் படிக்க முற்பட்டேன்.

''அக்கா...

நான் உனக்கு கடிதம் எழுதுவதாவது என்று வியப்பு அடைகிறாய் இல்லையா? தயவு செய்து இந்தக் கடிதத்தை ஒரு தடவையாவது படித்து விடு...

நான் முதல் முறையாக உங்க வீட்டுக்கு வந்த போது, நீங்கள் எல்லோரும் சுவர்க்கத்திலிருந்து பூவுலகிற்கு வந்த தேவதைகளைப்போல் என் கண்களுக்குத் தென்பட்டீர்கள். முக்கியமாகப் பிறந்த வீடு என்ற நரகத்திலிருந்து என்னை மீட்ட பெரிய அத்தானை நான் தெய்வமாக மதிக்கிறேன்.

அதனால்தான் யார் எந்த வேலையைச் சொன்னாலும் மகிழ்ச்சியுடன் செய்து வந்தேன். தந்தை போனபிறகு பெரியப்பா மகன் வீட்டில் இருந்த ஒரு மாத காலத்தில் நான் நரகத்தை அனுபவித்து விட்டேன். நான் முழுவதும் உழைத்தாலும் சாப்பாடு போட அவர்களுக்கு மனசே வராது. நீங்க எல்லோரும் என்னை ஆதரித்ததோடு, எனக்குத் திருமணம் செய்து வைக்கும் யோசனையில் இருப்பதாகத் தெரிந்தபோது நன்றி உணர்ச்சியால் திக்குமுக்காடி விட்டேன். இந்த வீட்டில் எல்லோரும் மகிழ்ச்சியுடன் இருக்கவேண்டும் என்று தினமும் கடவுளிடம் வேண்டிக் கொள்வேன். உனக்கும், உன்



கணவருக்கும் இடையில் சில பிரச்னைகள் இருப்பது எனக்குத் தெரியும். யாருக்கும் தெரியாது என்று நீ நினைக்கிறாயோ என்னவோ?''

கடிதத்தைப் படிக்கும்போது ஓர்ப்படியின் தங்கை இறப்பதற்கு முன் எழுதிய கடிதம் அது என்று புரிந்தது. தன்னுடைய அக்காவுக்கு எழுதியிருக்கிறாள் போலும் என்று நினைத்தேன்... ஆனால் ''எனக்கு'' என்று புரிந்தபோது முதுகுத் தண்டில் சிலிர்த்தது. சமாளித்துக் கொண்டு படிக்கத் தொடங்கினேன்.

''தவறு யாருடையது என்ற பிரச்னையைவிட நீங்க இருவரும் மகிழ்ச்சியுடன் இல்லாதது எனக்கு ரொம்ப கஷ்டமாக இருந்தது. உன் வேதனையை மறப்பதற்காக நீ வீட்டையே கவனிக்காமல், உன் மகள்... உன் படிப்பு இவையே உலகமாய் வாழ்ந்து வருவது... பெரிய அக்காவுடன் உன் நெருக்கம்... எனக்கு வேதனையாக இருந்தது. இந்த விஷயமாக உன்னுடன் பேச வேண்டுமென்று தோன்றினாலும், என்னுடைய எல்லைகள் என்னைத் தடுத்துவிட்டன.''

படித்துக் கொண்டிருந்த எனக்கு உடல் சில்லிட்டு விட்டது. முயற்சி எடுத்துக் கொண்டு மேலும் படிக்கத் தொடங்கினேன்.

''இந்த நிலைமையில் சின்ன அத்தான்... அதாவது உன் கணவர் எனக்கு நெருக்கமானவராக மாறினார்.''

காலுக்கு அடியில் நிலம் நழுவியதுபோல், ஆகாயம் தலையில் இடிந்து விழுந்ததுபோல், மூச்சுத் திணறியது எனக்கு. கடிதத்தைப் பற்றியிருந்த என் கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன.

''ஒரு ஆண், பெண்ணை நெருங்குவதற்குப் பெரிய காரணங்கள் எதுவும் தேவையில்லை. மனைவி தன்னைச் சரியாகக் கவனிப்பதில்லை என்ற சின்னக் காரணம் போதும். உன் கணவர் தன்னுடைய மனக் குமுறலை வெளிப்படுத்தி, என்னுடைய இரக்கத்தைச் சம்பாதித்துக் கொண்டார். முத

வில் வெறும் பேச்சுடன் நின்றிருந்த எங்களுடைய நட்பு, போகப் போக உடல் நெருக்கத்தில் முடிவடையத் தொடங்கியது. அவருக்கு வேண்டியது அது மட்டும்தான் என்று நான் புரிந்து கொள்ளும்போது, காலம் கடந்து விட்டது. நான் முழுகாமல் இருந்தேன்.

இந்த விஷயம் தெரிந்ததும் உலகமே தலை கீழானது போல் பார்த்தார். 'முன்னாடியே தெரியாதா? கவனமாக இருந்திருக்கக் கூடாதா?' என்று எரிந்து விழுந்தார்.

அவருக்குத் தெரியாதது எனக்கு மட்டும் எப்படித் தெரியும்? இப்படிக் கேட்க நினைத்தாலும் கேட்கவில்லை.

தன் மனைவியை விட்டு விட்டு என்னைத் திருமணம் செய்து கொள்ள முடியாது என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார். உன்னைப் பற்றித் தாழ்வாகப் பேசி, என்னை நெருங்கி, வசப்படுத்திக் கொண்டதில் அவருடைய சுயநலம் பளிச்சென்று புரிந்தது.

இந்த நிலைமையில் நாங்க அடிக்கடி பேசிக் கொண்டிருந்தபோது ஒரு தடவை பெரிய அத்தான் எங்களைப் பார்த்து விட்டார். தம்பியிடம் பேசுவதைவிட என்னைச் சமாளிப்பது எளிது என்று நினைத்தாரோ என்னவோ, என்னிடம் நேராகவே கேட்டு விட்டார். உண்மையைச் சொல்லிவிட்டேன்.

'என் தம்பியைத் திருமணம் செய்துகொண்டு நிம்மதியாக இருந்து விடலாம்னு நினைக்கிறாயோ என்னவோ! அந்தக் கனவை எல்லாம் மறந்து விடு' என்று அவர் எச்சரித்தபோது சிரிப்புதான் வந்தது. தாம்பத்தியம் என்றால் என்னவென்று உங்க இருவரின் குடித்தனங்களைப் பார்த்தபிறகு எனக்கு அந்த எண்ணம் வருமா என்று தோன்றினாலும், மவுனமாக இருந்துவிட்டேன்.

இந்த விஷயத்தைச் செட்டில் செய்வதற்காக பெரிய அத்தானை இரண்டு தடவைகள் ஆஃபீசில் சந்திக்க நேர்ந்தது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அவரும் என்னை



நெருங்குவாரோ என்ற சந்தேகம் வந்தது உண்மைதான். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. இந்தக் கருவை கலைப்பதற்கு பெரிய அத்தான் உதவி செய்வதாகச் சொன்னார். திருமணம் ஆகாவிட்டாலும் பரவாயில்லை. குழந்தை வேண்டுமென்று பிடிவாதம் பிடித்தேன். நாங்கள் இருவரும் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை.

இதெல்லாம் உன்னிடம் சொல்லி, என் பிரச்னைக்குத் தீர்வு கேட்கலாம் என்று நினைத்தேன். ஆனால் இங்கு வந்த பிறகு உன்னைக் கவனித்து வந்தபோது இரு சுயநலவாதிகளுக்கு நடுவில் நீ எத்தனை வெறுமையான வாழ்க்கையை வாழ்ந்து வருகிறாய் என்று புரிந்தது. உன்னிடம், என் பிரச்னையைச் சொல்லி உன்னை மேலும் வேதனையில் ஆழ்த்த எனக்கு விருப்பமில்லை. எனக்கு இத்தனை உபகாரம் செய்த உங்களுக்கு மேலும் பிரச்னைகளை ஏற்படுத்த வேண்டாமென்று தற்கொலை செய்துகொள்ளத் துணிந்துவிட்டேன். இதனால் யாருக்கும் எந்த இழப்பும் இருக்காதில்லையா?

அக்கா... மேலும் உன்னை வருத்தப்பட வைப்பதற்கோ, இல்லை பிரச்னைகளை ஏற்படுத்துவதற்கோ நான் இதையெல்லாம் சொல்லவில்லை. ஒரு பெண்ணை நெருங்குவதற்கு ஆண் எத்தனை வேஷம் வேண்டுமானாலும் போடுவான்.

பெரிய அத்தான் எதைச் சொல்லி உன்னிடம் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டாரோ தெரியாது. ஆனால் வீட்டில் நான் கவனித்த வரையில், வீட்டுப் பொறுப்பு முழுவதும் உன் கணவர்தான் ஏற்றுக் கொண்டிருக்கிறார். பெரிய அத்தான் தன்னுடைய வருமானத்தை மறுபடியும் வியாபாரத்தில் முதலீடு செய்து, சொத்துக்களைச் சேர்த்து வருகிறார். வரவு செலவை அக்கா பார்த்துக் கொள்கிறாள். வீட்டு வேலைகளைச் செய்ய நீ இருக்கவே இருக்கிறாய். இந்த விஷயத்தைக் கவனித்திருந்து, அது பற்றிப் பொருட்படுத்தாமல் நீ இருந்தால், நான் இவ்வளவு வேதனைப்பட வேண்டிய தேவையில்லை.

ஆனால் ஒரு விஷயத்தை மட்டும் யோசித்துப் பாரு. உன்னைச் சுற்றி இருக்கும் மற்ற எல்லோரும், அவர்களைப் பொறுத்தவரை சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

உன் ஓர்படி... அதான் என் அக்கா... பக்தி என்ற பெயரில் மனக்கண்களையும் மூடிக் கொண்டு சிறந்த இல்லத்தரசியாக மற்றவர்களின் பாராட்டையும் பெற்று மகிழ்ச்சியாக இருக்கிறாள். உன் மாமியாரும்... தன்னுடைய அதிகாரத்துக்கு ஓர்ப்படியும் சின்ன மகனைக் கண்ட்ரோல் செய்து கொண்டு சந்தோஷமாக இருக்கிறாள். நீ மட்டும் ஏமாந்து போய்க்கொண்டு, அப்படி இருப்பதில் உன்னுடைய மகிழ்ச்சியைத் தேடிக் கொண்டிருக்கிறாய்.

நான் சொல்ல வந்தது இதுதான். உன் கணவருக்கும், பெரிய அத்தானுக்கும் பெரிய வித்தியாசம் எதுவும் இல்லை. கானல்நீரைக் கண்டு ஏமாறாதே! உன் கணவரை மாற்ற முயற்சி செய். அது சாத்தியப்படா விட்டால், மகளை நல்ல முறையில் வளர்த்து, அதில் உன் மகிழ்ச்சியைத் தேடிக்கொள்.

மகளையும், கணவரையும் அழைத்துக் கொண்டு இந்த வீட்டை விட்டு எங்கேயாவது தொலை தூரத்துக்குப் போய் விடு... அப்படியாவது உங்களுடைய மதிப்பு மற்றவர்களுக்குப் புரியட்டும். இந்த விஷயத்தில் உன் கணவரும் ஒத்துழைக்கணுமே என்று யோசிக்கிறாய் இல்லையா? கணவன் மனைவிக்குமிடையே நெருக்கமான உறவு இருப்பது ரொம்ப அவசியம். அது சரியாகக் கிடைக்காமல் போனதால், உன் கணவர் என்னிடம் அதைத் தேடிக் கொண்டார்.

இதெல்லாம் உன்னிடம் சொல்வானேன் என்று உனக்கு வியப்பாக இருக்கலாம். இந்த வீட்டில் இன்று வரை என்னை சுயநலத்துடன் பயன்படுத்திக் கொள்ளாத ஒரே நபர் நீதான். உன் கணவருக்கும் எனக்கும் இருந்த உறவைப் பற்றிச் சொல்வதால், உன் தாம்பத்திய வாழ்க்கைக்குப் புதிதாக எந்த இழப்பும் ஏற்படப் போவதில்லை. மேலும் நன்மை ஏதாவது



ஏற்படலாம் என்ற ஆசையில்தான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். அவ்வளவுதானே தவிர உன்னிடமிருந்து உன் கணவரைப் பிரிக்கும் எண்ணம் எனக்கு இல்லை. இந்தக் கடிதத்தினால் உனக்குச் சிறிதளவு நன்மை ஏற்பட்டாலும், என் வாழ்க்கைக்கு ஓர் அர்த்தம் கிடைத்து விட்டதாக நினைத்துக் கொள்வேன்.

இப்படிக்கு
உன் தங்கை"

படித்து முடித்ததும், நாற்காலியின் பின்னால் சாய்ந்து, கண்களை மூடிக் கொண்டேன். மனம் முழுவதும் வெறுமையாக இருந்தது.

மாமியாரும், ஓர்படியும் கோவிலிலிருந்து வந்துவிட்டார்கள் போலும். அங்கே சந்தித்தவர்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்படியே கட்டிலில் சரிந்து விட்டேன். என் கண் முன் ஓர்படி தங்கையின் முகம் நிழலாடியது. அனுபவங்களும் வாழ்க்கை கற்றுக் கொடுத்த பாடங்களும் மனிதர்களை எப்படி மாற்றிவிடுகின்றன? மாமியார் வீட்டில் மற்றவர்களுடன் இத்தனை பழகியும் எனக்குப் பல விஷயங்கள் புரியவில்லையே? புதிதாக வந்த அவளால் மட்டும் எப்படிப் புரிந்துகொள்ள முடிந்தது?

என் கணவரைப் பற்றி நினைக்க ஆச்சரியமாக இருந்தது. என்னைப் பற்றி குற்றம் குறைகளைச் சொல்லி அந்தப் பெண்ணை எத்தனை சுலபமாக வலையில் போட்டுக் கொண்டு விட்டார். அந்தப் பெண்ணிடம் இருப்பதும், என்னிடம் இல்லாததும் என்ன? தனக்குச் சொந்தமானது இல்லை என்ற ஒரே காரணத்தால் ஏற்பட்ட ஈர்ப்பு மட்டும்தானா? மச்சினர் என்னிடம் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டதும் இதனால்தானா?

யாரோ பளாரென்று கன்னத்தில் அறைந்ததுபோல் இருந்தது.

உண்மைதான்! எல்லா ஆண்களிடமும் இந்தக் குணம் மறைந்திருக்கும். தேவையும், வாய்ப்பும் பொறுத்து அது வெளியில் வரும். தன் மனைவியிடம் தனக்கு இருக்கும் கருத்து வேற்றுமையை ஆதாரமாக எடுத்துக் கொண்டு சிலர் வேறொரு பெண்ணுடன் ''நட்பை'' தொடங்குவான். தனக்கு பின்னால் என்ன நடக்கிறதென்று தெரிந்து கொள்ளாமல் இருக்கும் என்னைப் போன்றவர்களுக்கு ஆறுதல் சொல்லும் சாக்கில் நட்பை வளர்த்துக் கொள்பவர்களும் இருக்கிறார்கள்.

என் குவாலிஃபிகேஷனை, புத்திசாலித்தனத்தை நினைத்து நான் பெருமைப்பட்டுக் கொண்டதை எண்ணும் போது வேடிக்கையாக இருந்தது. என் ரிசெர்ச் முடிய இன்னும் சில நாட்களே இருந்தன. படிப்பில் டாக்டரேட் சம்பாதிக்கப் போகிறேனே தவிர, வாழ்க்கையில் மட்டும் அரிச்சுவடியிலேயே நின்று விட்டேன். என்னையும் அறியாமல் கண்ணீர் கன்னத்தில் வழிந்து கொண்டிருந்தது.

ஊகிக்க முடியாத உண்மைகளை எதிர்கொள்ள வேண்டி வந்ததால் என் மனம் கலங்கி விட்டதென்னவோ உண்மைதான். ஆனால் அதிலிருந்து மீளுவதற்கு ரொம்ப நேரம் பிடிக்கவில்லை. கொஞ்சம் கொஞ்சமாய் என் மனதில் அமைதி பரவியது. அது வரை மனதில் இருந்த குற்ற உணர்ச்சி மாயமாகிவிட்டது. குற்றவாளி நான் ஒருத்தி மட்டுமே இல்லை என்ற நிம்மதி ஏற்பட்டதால் இருக்கலாம்.

அந்தப் பெண் சொன்னதுபோல் இந்த இடத்தைவிட்டு எங்கேயாவது போய், புதிதாக வாழ்க்கையைத் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் பலமாக வேரூன்றியது. நடந்து போனவற்றைப் பத்தி அவருடன் நான் எதையும் பேசப் போவதில்லை. ஒரு கெட்ட கனவாக, கசப்பான அனுபவமாக அது என் வாழ்க்கையின் ஒரு மூலையில் இருந்துவிட்டுப் போகட்டும்.



இந்த ஊரை விட்டு வேறு இடத்துக்குப் போவதைப் பத்தி அவரிடம் பேசுவது எப்படி என்று எனக்குப் புரியவில்லை. எங்களுக்கு இடையில் சரியான கம்யூனிகேஷன் இல்லாமல் போய் ரொம்ப நாட்களாகி விட்டன. என் மச்சினருடன் சேர்ந்து காலேஜ் போவதை நிறுத்திவிட்டேன். எக்ஸ்ட்ரா கிளாஸ் என்ற சாக்கில் அரைமணி முன்னதாகவே கிளம்பிக் கொண்டிருந்தேன். அவர் மீது துவேஷம் ஏற்பட்டதால் இல்லை. எனக்கே இந்த மனிதர்களை விட்டு விலகிப்போய்த் தனியாக வாழ வேண்டும் என்று தோன்றியது.

''ஒருநாள் மாலை வேளையில் வீட்டில் நானும், இவரும் மட்டுமே இருந்தோம். மகளைப் பாட்டியுடன் கோவிலுக்கு அனுப்பிவிட்டு தனிமையை ஏற்படுத்திக் கொண்டேன். பால்கனியில் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தவரிடம், டீயைக் கொண்டு போய் கொடுத்தேன். வியப்புடன் என் பக்கம் பார்த்தவர், ''தாங்க்ஸ்'' என்றார்.

எது பற்றியோ பேசுவதற்காகத்தான் நான் வந்திருப்பது அவருக்கும் புரிந்திருக்கும். அவரை மேலும் சஸ்பென்ஸில் வைக்க விரும்பாமல் கேட்டுவிட்டேன்.

''உங்களுக்கு வேறு ஊருக்கு ட்ரான்ஸ்ஃபர் கிடைக்குமா?''

சற்று நேரம் மவுனமாக இருந்துவிட்டு, ''எதுக்கு?'' என்று கேட்டார்.

''எனக்கு ஏனோ நாம் இருவரும் குழந்தையுடன் வேறு ஊருக்குப் போய்ப் புதிதாக வாழ்க்கையைத் தொடங்கலாம் என்று தோன்றுகிறது.''

அவர் முகத்தில் எந்த உணர்ச்சியும் தென்படவில்லை.

நான் மேலும் சொன்னேன். ''இத்தனை நாட்கள் நாம் தெரிந்தோ, தெரியாமலோ சண்டை போட்டுக் கொண்டு,

அமைதியில்லாமல் வாழ்ந்துவிட்டோம். குழந்தையும் வளர்ந்து வருகிறாள். இத்தனை ரகளைகளுக்கு நடுவில் அவள் மனம் நலிந்து போவது அவளுடைய எதிர்காலத்துக்கு நல்லது இல்லை. பழைய நாட்களை மறந்து விடுவோம். குழந்தைக்காகவாவது நாம் இருவரும் ஒத்துப்போய் வாழணும். புது ஊரு - புதிய சூழ்நிலை அதற்கு மேலும் துணைபுரியும் என்று நான் நினைக்கிறேன்.'' மூச்சு எடுத்துக் கொள்வதற்காக ஒரு நிமிடம் நிறுத்தினேன்.

''உனக்கு ஏனோ முதலிலிருந்தே என் வீட்டு மனிதர்களைக் கண்டால் பிடிக்கவில்லை. அவர்களிடமிருந்து என்னைப் பிரித்து விடணும் என்று ரொம்ப நாளாய்த் திட்டம் உனக்கு.''

நான் திகைத்துப் போய்விட்டேன். அவர் என்னுடன் ஒத்துழைப்பார் என்றோ, நான் சொன்னதை ஏற்றுக் கொண்டு அதன்படி செயல்படுவார் என்றோ நான் எதிர்பார்க்கா விட்டாலும், இப்படிப் பேசுவார் என்று மட்டும் எதிர்பார்க்கவில்லை. அவரிடம் அன்றும் - இன்றும் எந்த மாற்றமும் இல்லை என்று புரிந்தது.

இருந்தாலும் பொறுமையை இழக்காமல் நயமான குரலில் சொன்னேன், ''நீங்க என்னைத் தவறாகப் புரிந்துகொண்டு இருக்கிங்க. உங்க வீட்டு மனிதர்களிடமிருந்து உங்களைப் பிரிக்க வேண்டும் என்று ஒருநாளும் நினைக்கவில்லை. திருமணம் ஆன புதிதில் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வதற்குக் கொஞ்சம் பிரைவெஸி தேவை என்று நினைத்தேன். பழைய விஷயங்கள் பற்றிய சர்ச்சை இனி வேண்டாம். நடைமுறைக்கு வருவோம். நம் இருவருக்குமிடையே சரியான கம்யூனிகேஷன் இல்லை என்பது உண்மைதான். குழந்தையின் எதிர்காலத்துக்காக நாம் இருவரும் ஒற்றுமையாக இருப்பது அவசியம். அதுக்காகத்தான் புதிய சூழ்நிலைக்கு மாறுவோமா என்று கேட்கிறேன்.''



''குழந்தையின் எதிர்காலத்துக்காகவா - இல்லை மாமியாருக்குப் பணிவிடை செய்வதிலிருந்து விடுதலை கிடைக்குமா என்றா?''

அவர் குரலில் தென்பட்ட எகத்தாளத்திற்கு திக்பிரமை அடைந்தேன். வாயடைத்துப் போனவளாய்ப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

''இதோ பாரு... எனக்கு என் வீட்டு மனிதர்கள்தான் முக்கியம். முக்கியமாக அம்மாவை விட்டு என்னால் எங்கேயும் வரமுடியாது. தனிக்குடித்தனம் போகணும் என்ற ஆசை ஏதாவது உன் மனதில் இருந்தால் அதை அழித்துவிடு. புதிய வாழ்க்கை - புதிய சூழ்நிலை - என்று ஏதேதோ சொன்னாயே? பழைய வாழ்க்கையில் என்ன குறையைக் கண்டுவிட்டாய்? கூட்டுக் குடித்தனத்தில் இருப்பதுதானே?'' படபடவென்று மொழிந்து விட்டு வேகமாய் எழுந்து போய்விட்டார்.

எத்தனை நேரம் அப்படியே தனிமையில் உட்கார்ந்திருந்தேனோ எனக்கே தெரியாது. மனதில் பரவியிருந்த இருள் முகத்திலும் பிரதிபலித்தது.

* * *

## 19

**அ**ண்ணன், அண்ணி வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்தார்கள். ரொம்ப வருடங்களுக்குப் பிறகு ஏற்பட்ட சந்திப்பு ஆனதால் எல்லோருக்கும் சந்தோஷத்தில் முதலில் கண்ணீர்தான் வந்தது.

ஒருவரை ஒருவர் குசலம் விசாரித்துக் கொண்டோம். அண்ணன் அண்ணியை வெளிநாட்டு வாழ்க்கை மனதளவில் மாற்றி விட்டாலும், பார்ப்பதற்கு ஆரோக்கியமாக, உற்சாகமாகத் தென் பட்டார்கள். அவர்கள் எல்லோரும் எந்த வேறுபாடும் இல்லா மல் கலந்து பழகுவதைப் பார்க்கும்போது எனக்கு ஏனோ கில்மயாக இருந்தது.

தனிமையில் இருக்கும்போது அண்ணி என்னிடம் கேட் டாள், ''மகள் பிறந்த பிறகு உன் வாழ்க்கையில் ஏதாவது மாற்றம் வந்ததா?''

என் உணர்ச்சிகளை மறைத்துக் கொண்டு சிரித்தேன். அண்ணிக்குப் புரிந்திருக்க வேண்டும்.

''கவலைப்படாதே! எல்லாம் சரியாகிவிடும். நேரம் கிடைக்கும் போது நாம் இதுபற்றி விரிவாகப் பேசுவோம். நானும், உன் அண்ணனும் உனக்குத் துணையாக இருப்போம்.''

என் கண்களில் கசிந்த நீரை அண்ணி பார்த்து விடாமல் தலையைக் குனிந்து கொண்டேன். அண்ணியுடன் தனிமையில் பேசும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை.

மறுநாள் மச்சினர் காலேஜ் விசிட்டர்ஸ் ரூமில் எனக்காகக் காத்திருப்பதாக ப்யூன் வந்து சொன்னபோது எனக்கு எரிச்சல் வந்தது. எரிச்சலைக் கட்டுப்படுத்திக் கொண்டு விசிட்டர்ஸ் அறைக்குச் சென்றேன்.

என்னைப் பார்த்தும் அவர், ''வா... போகலாம்'' என்று கிளம்பினார்.

அவருடைய அதிகாரத்தைக் கண்டு எனக்கு உடல் பற்றி எரிவதுபோல் இருந்தாலும், அங்கே குரல் உயர்த்திப் பேசினால் எனக்குத்தான் பிரச்னை என்று எண்ணியதால் மவுனமாக அவரைப் பின்தொடர்ந்தேன்.



இருவரும் கெஸ்ட் ஹவுஸிற்குப் போனோம்... எந்த முன்னுரையும் இல்லாமல் அவர் நேராக விஷயத்துக்கு வந்தார்.

''ஏன் என்னைத் தவிர்த்துக் கொண்டு போகிறாய்?''

என்னுள் ஆவேசம் கடல் அலையாய்ப் பொங்கியது.

''இந்த முறை நீங்க சொன்னதைச் சரியாகப் புரிந்து கொண்டதால்'' என்றேன்.

என் குரலில் இருந்த எகத்தாளம் புரிந்திருக்க வேண்டும். சிரித்துக் கொண்டே சொன்னார், ''ஓ... அதுவா... நான் அப்படிச் சொன்னது உன்னைப் பாதித்து விட்டதா? எந்தச் சந்தர்ப்பத்தில் நான் அப்படிச் சொன்னேன் என்று உனக்குப் புரியவில்லையா?''

''நன்றாகப் புரிந்து கொண்டேன். உங்க தம்பி செய்த காரி யத்தை நீங்க மறைத்ததையும், ஆண் இனத்துக்காக வக்காலத்து வாங்கிப் பேசியதையும் புரிந்துகொண்டேன். திருமண பந்தம் ரொம்பப் புனிதமானது என்றும், ஆரம்ப நாட்களில் அப்படி இப்படி இருந்தாலும், கடைசிக் காலத்தில் கணவன் மனைவி ஒருவருக்கொருவர் துணையாய் நின்று விடுவார்கள் என்றும் சொல்லி, உங்க தம்பி செய்ததை மறந்துவிட்டு நான் அவருடன் சேர்ந்து வாழணும் என்பதுதானே உங்களுடைய எண்ணம்?''

அவ்வளவுதான்! அவர் திகைத்துப் போய் கல்லாய்ச் சமைந்து விட்டார். ஒரு நிமிடம் கழித்து, ''உனக்கு... உனக்கு எல்லாமே தெரியுமா? எப்படித் தெரியும்?'' என்று கேட்டார்.

''அது அவ்வளவு அவசியமில்லையென்று நினைக்கி றேன்'' சுருக்கமாகச் சொன்னேன்.

அவர் இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. அவரை மேலும் குழப்பத்தில் ஆழ்த்த விரும்பாமல் நடந்ததையெல்லாம் சொல்லிவிட்டேன். முழுவதுமாகக் கேட்டபிறகு அவர் ஒரே ஒரு கேள்வியைக் கேட்டார்.

''அந்தப் பெண் சொன்னது போல் நான் உன்னை என் ச
நலத்திற்குப் பயன்படுத்திக் கொண்டாற்போல் உனக்கு
தோன்றுகிறதா?''

ரொம்ப கஷ்டமான கேள்வி இது. எது சுயநலமோ எ
இல்லையோ எப்படிச் சொல்ல முடியும்? அசல் காதல் எ
நாலே சுயநலம்தானே. எதிராளியைக் காதலிப்பதில் நமக்குச் ச
தோஷம் கிடைப்பதும், அந்த நபரும் நம்மை காதலிக்க வேண்
மென்று எதிர்பார்ப்பதும் சுயநலத்தின் வெளிப்பாடுதான்... நா
யோசித்துக் கொண்டிருந்தேன்.

''ப்ளீஸ்... ரொம்ப டிப்ரெஸ்ட் ஆக இருக்காதே. நீ நம்பின
லும், நம்பாவிட்டாலும் ஒரு விஷயம் சொல்கிறேன். நா
உன்னை நேசிப்பது முற்றிலும் உண்மை...''

நான் மவுனமாக இருந்தேன்.

''போகட்டும்! இனி என்ன செய்யலாமென்று நினைத்து
கொண்டிருக்கிறாயோ சொல்லு. உன் முடிவு எதுவாக இருந்
லும் சரி! உதவி செய்ய நான் இருக்கிறேன்.'' அவருடைய குரல்
நேர்மை இருக்கிறது.

''நான் என் கணவருடன் சேர்ந்து வாழப் போகிறேன்
கஷ்டமோ, சுகமோ அவருடனேயே பகிர்ந்து கொள்ளணும்
நினைக்கிறேன்.''

''நல்லதுதான். முடிவு எடுப்பதில் தாமதம் செய்தாலு
சரியான வழியைத்தான் தேர்ந்து எடுத்திருக்கிறாய்.''

என் மனதில் அலையாய் எழும்பிய எண்ணங்களை
கட்டுப்படுத்திக் கொண்டேன்.

''திடீரென்று என் கணவரிடம் காதல் ஏற்பட்டதா
இல்லை. என் தவறை உணர்ந்து அதற்கு பிராயச்சித்தமாக
நான் இந்த முடிவுக்கு வரவில்லை. இதற்கு முன்பு அவரி



தென்பட்ட குற்றம் குறைகள், இப்போ கண்ணுக்குத் தெரிய
வில்லை. எல்லா ஆண்களிடம் இருக்கும் பலவீனங்கள்தான்
அவரிடமும் இருக்கு. மற்ற ஆண்களுக்கும் என் கணவருக்கும்
இடையில் எந்த வித்தியாசமும் இல்லாதபோது, ஆறுதல்
பெறுவதற்காக நான் எதுக்காக வேறு இடம் தேடிப் போக
வேண்டும் என்ற ஞானோதயம் ஏற்பட்டது.''

சற்று நிதானித்து மேலும் சொன்னேன், ''நான் ரொம்ப
புத்திசாலி என்ற கர்வம் எனக்கு இருந்தது. அதுக்குக் காரணம்
யூனிவர்சிட்டியில் எனக்குக் கிடைத்த கோல்ட் மெடலோ
இல்லை, நீங்கள் என்னிடம் காண்பித்த அபிமானமோ தெரியாது.
ஆனால் எந்தப் படிப்பும் இல்லாத உங்க மனைவியின் தங்
கைக்கு இருக்கும் உலக ஞானம்கூட எனக்கு இல்லையென்பதை
ஒப்புக் கொள்வதில் எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை. எனக்கு
என் குடும்பம் வேண்டும். அதற்காக சில விஷயங்களில் விட்டுக்
கொடுக்க வேண்டி வந்தாலும் சரி...''

அவர் இமைக்காமல் என்னையே பார்த்துக் கொண்டிருந்தார்.

''என் மகள்தான் என்னுடைய உலகம். அவளை ரொம்பக்
கவனமாக வளர்க்க நினைக்கிறேன். சிறந்த குணநலனை கொண்ட
வளாக அவளை உருவாக்குவதுதான் என் வாழ்க்கையின்
லட்சியம்.''

''கட்டாயம் உன்னால் செய்ய முடியும். ஆனால் அதற்காக
இவ்வளவு ஆவேசம் அடைவதும், வைராக்கியமாக இருப்பதும்
எதுக்கு? கமான் சியர் அப்... நீ என்ன செய்வதாக இருந்தாலும்
என்னுடைய சப்போர்ட் உனக்கு எப்போதும் இருக்கும் மறந்து
விடாதே!'' தைரியம் அளிப்பதுபோல் தோள்மீது லேசாகத் தட்டி
னார்.

எனக்கு அவரிடம் நன்றி உணர்ச்சிதான் ஏற்பட்டது.
சாதாரணமாக இரு நபர்கள் பிரிந்து போவதென்பது இவ்வளவு
சமரசமாக இருக்காது. அதுவும் இதுபோன்ற விஷயங்களில்...

தோள்மீது படிந்திருந்த அவருடைய கைமீது என் கையை வைத்து அழுத்தி... ''தாங்க்யூ'' என்றேன்.

அப்பொழுது நாங்க எதிர்பாராத விதமாக கதவு படாரென்று திறந்து கொண்டது. வாசலில் என் கணவர் நின்றிருந்தார். அவருடைய கண்கள் வெறுப்பை உமிழ்ந்து கொண்டிருந்தன. அவர் கையில் மிரண்டு விட்ட பார்வையுடன் என் மகள்...

என் ரத்தம் முழுவதும் வற்றி விட்டாற்போல் உணர்ந்தேன். கைவிரல்கள் மெலிதாக நடுங்கிக் கொண்டிருந்தன. குற்ற உணர்ச்சியில் இல்லை... எதிர்பாராமல் என் கணவரை அங்கே பார்க்க நேர்ந்ததால்.

''அப்பொ நான் ஊகித்தது எல்லாம் நிஜம்தான் போல இருக்கு.'' அவருடைய குரல் கோபத்தால் நடுங்கிக் கொண்டிருந்தது. கையும் களவுமாகப் பிடித்து விட்டேன் என்பதுபோல் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவர் சொல்வது எதுவும் என் காதுகளில் விழவில்லை. கண்கள் அகல விரிய... மிரள மிரள பார்த்துக் கொண்டிருந்த என் மகளையே பார்த்துக் கொண்டிருந்தேன். அந்தக் குழந்தைக்கு எதுவும் புரிந்திருக்காது. ஆனால் நடக்கக் கூடாதது ஏதோ நடந்து விட்டதென்று உணர்ந்து விட்டவள் போல் பயத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''சண்டாளி... நீ ஒரு குடும்பப் பெண்தானா! எத்தனை நாட்களாய் இந்தக் காரியம் நடந்து கொண்டிருக்கு?'' கையை ஓங்கினார்.

நான் நகரவில்லை. அவருடைய கண்களை நேராக பார்த்துக் கொண்டே கேட்டேன்... ''குழந்தையை எதுக்கு இங்கே அழைத்துக் கொண்டு வந்தீங்க?''

நான் இந்தக் கேள்வியைக் கேட்பேன் என்று எதிர்பார்க்காததால் அவருடைய கை தானாக கீழே இறங்கிவிட்டது.



''உன் மகளுக்கு உன்னுடைய உண்மையான உருவத்தைக் காட்ட வேண்டுமென்று...'' எகத்தாளமாய்ச் சொன்னார்.

இந்த ரகளையில் மிரண்டுவிட்ட குழந்தை, பெரிதாக அழத் தொடங்கினாள். குழந்தையைப் பலவந்தமாய் அவரிடமிருந்து எடுத்துக்கொண்டு, மார்போடு அணைத்துக் கொண்டேன்.

மச்சினர் தம்பியிடம் ஏதோ சொல்ல முற்பட்டபோது, நான் இடை புகுந்து சொன்னேன், ''இது கணவன், மனைவிக்கு ஏற்பட்ட பிரச்னை. இதில் மூன்றாவது நபருக்கு வேலை இல்லை. இதை நாங்களே பேசித் தீர்த்துக் கொள்வோம்.'' ஏதோ முடிவுக்கு வந்து விட்டவள் போல் திடமான குரலில் சொன்னேன். கணவர் பக்கம் திரும்பி, ''வாங்க போகலாம்'' என்றேன்,

என்ன நினைத்தாரோ தெரியாது. உடனே அங்கிருந்து கிளம்பினார். அவரைப் பின்தொடர்ந்து நானும் வெளியே வந்தேன். அறை வாசலை தாண்டும் போது ஒரு நிமிடம் நின்று பின்னால் திரும்பிப் பார்த்தேன். மச்சினர் இந்தப் பக்கமே பார்த்துக் கொண்டிருந்தார். அவர் முகத்தில் நிம்மதி தென்பட்டாற்போல் தோன்றியது. இதுபோன்ற சமயங்களில் நிலைமையைச் சமாளிக்கும் பொறுப்பைப் பெண் எடுத்துக் கொள்ளும்போது, எந்த ஆணும் நிம்மதியாகத்தான் உணருவான் என்ற உண்மை அந்த நிமிடம் புரிந்தது.

* * *

## 20

போரில் சந்திக்கும் பகைவர்கள்போல் நாங்க இருவரும் எதிரெதிரில் உட்கார்ந்து கொண்டோம்.

ரொம்ப நேரம் நான் எதுவும் பேசவில்லை. ஏதாவது சொல் அவருடைய கோபத்தை, ஆவேசத்தை அதிகமாக்குவதி எனக்கு விருப்பமில்லை. அவரே ஏதாவது சொல்லட்டும் என் காத்திருந்தேன்.

''ஊம்... சொல்லு...'' என்றார்.

''என்ன சொல்லட்டும்?''

''எதையோ சொல்வதற்காகத்தானே அங்கிருந்து நடு லேயே அழைத்துக் கொண்டு வந்தாய். இல்லாவிட்டால் இ விஷயத்தை அங்கேயே செட்டில் செய்திருப்பேன்.''

''இதோ பாருங்க! நாம் இருவரும் பகைவர்கள் போ பேசிக்கொள்ளத் தேவையில்லை. நடந்ததோ நடந்துவிட்ட இந்தப் பிரச்னையைச் சமரசமாகப் பேசி தீர்த்துக் கொள்வோம்'' நயமான குரலில் சொன்னேன்.

''நான் சொல்ல வந்ததும் அதுதான். கூடிய சீக்கிரம் நா இருவரும் பிரிந்து விடுவோம்.''

நான் மெதுவாக தலையை உயர்த்தினேன். ''நான் அப்படி சொல்லவில்லை. நடந்ததை மறந்துவிட்டு நாம் இருவரு சேர்ந்து வாழ்வது பற்றி...''

நான் இன்னும் முடிக்கக்கூட இல்லை. அதற்குள் அ ருடைய குரல் உச்சஸ்தாயில் ஒலித்தது.

''என்ன? உனக்கு மூளை இருந்துதான் பேசுகிறாய? நடந்தது எல்லாம் மறந்து போகணுமா? நாம் இருவரும் சேர்ந் வாழணுமா? இத்தனை நடந்த பிறகும் இது சாத்தியப்படு என்று எப்படி எதிர்பார்க்கிறாய்?''

''இதோ பாருங்க. உங்களுடன் சண்டை போடுவது எ உத்தேசம் இல்லை... நடந்த தவறுகளைப் பற்றிப் பேசுவோம்



வாழ்நாள் முழுவதும் இணைந்திருக்க வேண்டிய நாம் இப்படி ஒருத்தரை ஒருத்தர் குத்திப் பேசிக் கொள்வதால் என்ன லாபம்?''

நான் சொல்லி முடிக்கக்கூட இல்லை. அவர் சரேலென்று எழுந்து கொண்டார். ''சேர்ந்து வாழணும் என்ற பேச்சுக்கே இடமில்லை. உனக்குப் பிடித்தவர்களுடன் நீ தாராளமாய் வாழலாம். என் வழியை நான் பார்த்துக் கொள்கிறேன்.''

என் விழிக்கடை ஓரங்களில் திரண்டு வந்து கொண்டிருந்த கண்ணீர், வெளியேறிவிடாமல் இருக்க நான் செய்யும் முயற்சி வியர்த்தமாகிக் கொண்டிருந்தது. பெண்ணை உருவாக்கும் போதே அவளுடைய இயலாமைக்கு அடையாளமாய் கண்ணீரையும் சேர்த்து அந்தக் கடவுள் படைத்துவிட்டார் போலும்! பொங்கி வந்து கொண்டிருந்த அழுகையை வலுக்கட்டாயமாக அடக்கிக் கொண்டேன்.

என் கணவரிடமிருந்து நான் எதையும் மறைக்க நினைக்கவில்லை. எனக்கும், என் மச்சினருக்கும் இடையே இருந்தது 'புனிதமான நட்பு' மட்டும்தான் என்று கூறி தப்பித்துக் கொள்ளவும் முயற்சிக்கவில்லை. பழைய விஷயங்களைக் கெட்ட கனவாக மறந்துவிட்டு, கணவருடன் சேர்ந்து நல்ல எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற விருப்பம் என் மனதில் பலமாக வேரூன்றி இருந்தது. அதனால் பொறுமையைக் கடைபிடித்து மறுபடியும் பேச முயற்சி செய்தேன். ஆனால் எதையும் காதில் வாங்கிக் கொள்ளும் நிலையில் அவர் இல்லை.

''ஆரம்பத்திலிருந்தே உனக்கு என்னைப் பிடிக்கவில்லை. பொறுப்புகளை ஏற்க முன் வராதவளுக்கு உரிமைகளைப் பற்றிப் பேச என்ன உரிமை இருக்க முடியும்? என் விருப்பு வெறுப்புகள் பற்றி ஒருநாளும் உனக்கு அக்கறை இருந்தது இல்லை. என் வீட்டாரிடமிருந்து என்னைப் பிரிக்க முயற்சி செய்தாய், உன்னால் எனக்கு எந்தச் சுகமும் கிடைக்காத போதும்,

இத்தனை நாள் பொறுத்துக்கொண்டு வந்தேன்.'' கடை
வார்த்தைகள் அழுத்தமாய் ஒலித்தன.

அவர் என்மீது சுமத்திய குற்றச்சாட்டுகள் தனக்கும் பொரு
தும் என்பதை அவர் மறந்துவிட்டதை நினைக்கும் போது, அந்த
சூழ்நிலையிலும் எனக்குச் சிரிப்பு வந்தது. மேலும் ரகளை
வளர்த்த விரும்பாமல் நயமாகச் சொன்னேன், ''இதோ பாருங்
என் நிலையில் இருந்து யோசித்துப் பாருங்க. புதிய மருமகளா
நான் உங்க வீட்டுக்கு வந்தேன். எனக்கும் சில விருப்பங்க
லட்சியங்கள் இருந்திருக்கும். கணவருடன் சுகமாக வா
வேண்டுமென்று எத்தனையோ கனவுகளுடன் இந்த வீட்டி
காலடி எடுத்து வைத்தேன். உங்களுக்கும் எனக்கும் இடையே
திரையாய் நிலவிய கருத்து வேற்றுமைகளை நீக்க நான் செய்
முயற்சிகளுக்கு உங்களிடமிருந்து எந்த ரியாக்ஷனும் தென்ப
வில்லை. நானும் மனுஷிதான். எனக்கும் சில பலவீனங்க
இருக்கு. என்னுடைய திறமையை என் கணவர் புரிந்து கொள்
வேண்டுமென்றும், பாராட்ட வேண்டுமென்றும் நான் எதி
பார்ப்பது தவறு இல்லையே. இந்தச் சூழ்நிலையில் வெளி
லிருந்து சின்ன பாராட்டு கிடைத்ததும் அந்தப் பக்கம் சாய்ந்
விட்டேன். இதெல்லாம் சரியா... தவறா என்பது பற்றி இப்பொ
நாம் வாதித்துக் கொள்ள வேண்டாம். மனதளவில் வளர்ந்து வி
டேன் என்று சொல்ல மாட்டேன். இப்பொ என்னால் யதார்த்த
களைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியும். நாம் இருவரும் சேர்
நம் குழந்தைக்கு நல்ல எதிர்காலத்தை அமைத்துத் தருவோம்

''சின்ன பற்றுக்கோல் கிடைத்தால் போய் விடுவதற்கு
மறுபடியும் திரும்பி வருவதற்கும் இது ஒன்றும் அரசி
கூட்டணி இல்லை.'' எகத்தாளமாய் வந்தது அவர் குரல்.
இருந்த அதே நிலையில்தான் நானும் இருந்தேன். ஆனால் உன்
போல் எவளாவது கிடைப்பாளா என்று வாய்ப்புத் தே
கொண்டு போகவில்லயே? எந்தப் பெண்ணையும் ஏறெடுத்
கூடப் பார்க்கவில்லையே?''



நிலைகுத்திப் போய் சிலையாய் நின்றுவிட்டேன். கொஞ்சம் கொஞ்சமாக அவர் சொல்வது புரியத் தொடங்கியது.

''அதாவது... உங்களுக்கு எந்தப் பெண்ணிடமும் நெருக்கம் ஏற்பட்டது இல்லை... அப்படித்தானே?'' என் குரல் எனக்கே விசித்திரமாய் ஒலித்தது.

அவர் தீவிரமாக என்னைப் பார்த்தார். ''உன் எண்ணம்தான் என்ன? என்னையும் உன்னை மாதிரி என்று நினைத்து விட்டாயா? வழி தவறி நடக்க நான் ஒன்றும் தறுதலை இல்லை. சமுதாய கட்டுப்பாடுகளை மதிப்பவன் நான். உன்னைப் போன்ற சிறுக்கியை என் மனைவியென்று சொல்லிக் கொள்ளவே வெட்கப் படுகிறேன். அவ்வளவு தூரம் போவானேன்! உன் கதையைப் பத்து பேரிடம் சொல்லிப் பாரு. ஒருத்தர் விடாமல் உன் முகத்தில் காறித் துப்பாவிட்டால் என் பெயரை மாற்றிக் கொள்கிறேன்.''

நான் அவர் முகத்தை ஆழ்ந்து நோக்கினேன். ''நடந்தது நடந்துவிட்டது... இனிமேலாவது...''

என் பேச்சு இன்னும் முடியக்கூட இல்லை. அவருடைய குரல் உயர்ந்து ஒலித்தது.

''எத்தனை தடவை சொல்வாய்... நடந்ததோ நடந்து விட்டதென்று? எதுவும் நடக்கவில்லை. இனிமேல்தான் நடக்கப் போகிறது. சோரம் போனவளை என்னால் மனைவியாய் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனானப்பட்ட ஸ்ரீராம சந்திரனே சீதையைச் சந்தேகப்பட்டு காட்டுக்கு அனுப்பி வைத்த போது நான் எந்த மூலைக்கு?'' எகத்தாளமாய் சொன்னார்.

''நீங்க ஸ்ரீராமரும் இல்லை... நான் சீதையுமில்லை...'' அதே வேகத்துடன் சொல்லி விட்டேன்.

''என்ன? உன் உத்தேசம்தான் என்ன?''

''அப்பாவி பெண் ஒருத்தியிடம் மனைவி பத்தி இல்லாததும் பொல்லாததுமாகச் சொல்லி இரக்கத்தைச் சம்பாதித்து,

அவளை உங்க சுயநலத்துக்குப் பயன்படுத்திக் கொண்டு... வயிற்றில் சுமையுடன் அவள் தற்கொலை செய்து கொள்வதற்குக் காரணமாக இருந்தவர் ஸ்ரீராம சந்திரராக எப்படி இருக்க முடியும்?''

முடிந்து விட்டது. எந்த டாபிக் எங்க இருவருக்கும் நடுவில் வரக்கூடாது என்று நினைத்திருந்தேனோ... அது வந்து விட்டது.

அதைக் கேட்டதும் அவர் திக்பிரமை அடைந்து விட்டார். முகம் வெளிறிப் போய்விட்டது. மனிதனின் மனம் என்பது எவ்வளவு விசித்திரமானது! தவறு செய்து இருந்தாலும், எதிராளிக்கு அது தெரியாதவரை, தன்னை உத்தம புருஷனாகக் காட்டிக் கொள்வதற்குத் தயங்க மாட்டான். ஆனால் எதிராளிக்கும் உண்மை தெரிந்துவிட்டதென்று புரியும்போது அவனுடைய நிலைமை...''

''நீ சொல்ல வந்தது என்ன?''

''ஒரே தவறைத்தான் இருவரும் செய்திருக்கிறோம். ஆனால் அவற்றை மறந்துவிட்டு, எஞ்சிய வாழ்க்கையை நன்றாக அமைத்துக் கொள்வோம்'' என்றேன்.

அவருக்குக் கொஞ்சம் புரிந்திருக்க வேண்டும். இருந்தாலும் சந்தேகம் தீரவில்லை போலும்... ''ஒரே தவறை இருவரும் செய்வதாவது?'' என்றார்.

''நான் பேசுவது உங்க அண்ணியின் தங்கையைப் பற்றி'' என்றேன்.

ஆனால் நான் எதிர்பார்த்ததுபோல் அவர் திடுக்கிடவில்லை. இந்த நிலைமை வருமென்று முன்னாடியே ஊகித்து, மனதில் அதற்குத் தயாராக இருந்திருக்கவேண்டும்.

''ஒஹோ! உனக்கு எல்லாம் தெரிந்துவிட்டதா? ஆமாம் நான் தவறு செய்தேன். அதனால் என்ன? கணக்கு சரியாகி விட்டதென்று சொல்கிறாயா?''



''கணக்கு சரியாகி விட்டதென்று நான் சொல்லவில்லை. ஒருவரை ஒருவர் சரியாகப் புரிந்து கொள்ளாததால் வந்த வினை இது. நாம் இருவரும் சேர்ந்து நல்ல முடிவாக எடுப்போம். ஒருவரை ஒருவர் மன்னித்துக் கொள்வோம்.''

''ஊம்... அப்புறம்...'' என்றார்.

''மேலும் சொல்ல என்ன இருக்கு? குழந்தைக்காக நாம் இருவரும் சேர்ந்து புது வாழ்க்கையைத் தொடங்குவோம். நம்முடைய எதிர்காலம் சுகமாக, இப்பொ இருக்கிறதைவிட உயர்வாக இருக்கும் விதமாய் அமைத்துக் கொள்வோம்.''

அவர் கேலியாகச் சிரித்தார். ''ஆரம்பத்திலிருந்தே உன் புத்தி சாதுரியத்தின்மீது உனக்கு அசாத்திய நம்பிக்கை. உன்னைப் போன்ற மேதாவி யாரும் இல்லை என்ற அகம்பாவம் உனக்கு. உன் படிப்பு, திறமைகளுக்கு முன்னால் கணவர், மாமியார், குடித்தனம் எல்லாமே தூசுக்கு சமம். நீயாகக் கொண்டு எல்லாம் தெரிந்தவளாக இருக்கிறாய் என்ற மமதை உனக்கு. அன்வணுடன் நீ நெருங்கிப் பழகும் விஷயம் அண்ணிக்கும் தெரியும். எனக்குத்தான் கடைசியாகத் தெரிந்தது. ஒரு பெண்ணுக்குத் திருமண வாழ்க்கையில் கிடைக்க வேண்டிய எல்லா சுகங்களையும் கொடுத்த பிறகும் நீ வேறு ஒருவனை நாடிப் போயிருக்கிறாய். நான் அப்படியில்லையே. மனைவியிடமிருந்து எந்தச் சுகமும் கிடைக்காத நிலையில் வேறு பெண்ணிடம் அடைக்கலம் தேடிக் கொண்டேன். நீயும் நானும் ஒன்றாகி விடுவோமா என்ன?''

சட்டென்று அவர் ப்ளேட்டை திருப்பிப் போட்டதும் என்னால் எதுவும் சொல்ல முடியவில்லை. இதுபோன்ற வாதனைகளால் எந்தப் பிரயோஜனமும் இருக்காது என்று எனக்குத் தெரியும். பிரச்னை இன்னும் தீவிரம் அடையுமே தவிர எந்த முடிவுக்கும் வர முடியாது.

'முதலில் தவறு செய்தது நீங்களாக இருந்தால், என்னை மன்னித்திருப்பீர்கள்?' இப்படிக் கேட்டு விடலாம் என்று நுனி

நாக்கு வரை வந்த வார்த்தைகளை வலுக்கட்டாயமாக அடக்கிக் கொண்டேன்.

''ஆமாம்! நான் தவறு செய்து விட்டேன். என் திறமையைப் புரிந்து கொண்டு பாராட்டிய நபரிடம் என்னை இழந்து விட்டேன். ஆனால் நீங்க மட்டும் செய்தது என்ன? குடும்பப் பாங்கான ஒரு அப்பாவி பெண்ணை உங்க சுயநலத்துக்குப் பயன்படுத்திக் கொண்டு, அவளுடைய தற்கொலைக்கு காரணமாகி விட்டீர்களே?''

பளாரென்று என் கன்னத்தில் அறை விழுந்தது. அவருடைய ஆணாதிக்கத்தை என்னால் புரிந்துகொள்ள முடியும். ஆவேசம் குறைந்தபிறகு சரியான முடிவை எடுக்க முயற்சி செய்வார் என்று காத்திருப்பதுபோல் மவுனமாக இருந்தேன்.

பற்களை நறநறவென்று அரைத்துக் கொண்டே கத்தினார். ''திமிர் பிடித்து ஊர் சுற்றியவளுடன் எனக்கு என்ன வேலை? பெண் என்றால் கொஞ்சமாவது பணிவாக இருக்கணும். மரியாதை, சம்பிரதாயம் எல்லாம் தெரிந்திருக்கணும். இதெல்லாம் உன்னுடைய அகராதியிலேயே இல்லாத வார்த்தைகள். உன்னுடன் குடும்பம் நடத்த என்னால் முடியாது.''

மரியாதை... சம்பிரதாயம் இதெல்லாம் பெண்ணுக்கு மட்டுமே ஏன் இருக்க வேண்டும்? எனக்குப் புரியவில்லை.

''போகட்டும்... நீங்க வேறு ஊருக்கு ட்ரான்ஸ்ஃபர் வாங்கிக் கொள்ளுங்கள். நாம் மூவரும் அங்கே போய் விடலாம். குழந்தையின் எதிர்காலத்தை நினைத்தாவது மற்றொரு முறை யோசித்துப் பாருங்கள்...'' கடைசி முறையாகக் கேட்டேன்.

''குழந்தை என்னிடம்தான் இருப்பாள்.''

சரேலென்று தலையை உயர்த்தினேன். ''நோ... குழந்தை இல்லாமல் என்னால் இருக்க முடியாது.''



''தாங்க்யூ... உன் வாயிலிருந்து அந்த வார்த்தை வரவேண்டுமென்று தான் அப்படிப் பேசினேன். குழந்தையைத் தாராளமாக நீயே வளர்த்துக்கொள். குழந்தைக்கு தந்தை வேண்டும் என்றால், என் அண்ணனையே இரண்டாவது திருமணம் செய்து கொள். அண்ணிக்கு மட்டும் அநியாயம் செய்து விடாதே...'' அவர் குரலில் எகத்தாளம் பொங்கி வழிந்து கொண்டிருந்தது.

இனிமேலும் இவருடன் பேசுவது வியர்த்தம். குழந்தையை எடுத்துக் கொண்டு, ''போகிறேன்'' என்று ஒரு வார்த்தையில் விடைபெற்றுக் கொண்டு வாசற்கதவைத் தாண்டப் போனேன்.

''நில்லு'' பின்னாலிருந்து குரல் கேட்டது.

என் பெயருக்கு வந்த கவரை எடுத்து என் கையில் கொடுத்தார். கவர் ஏற்கெனவே கிழிக்கப்பட்டிருந்தது. உள்ளே இருந்த கடிதத்தை எடுத்துப் பார்த்தேன். எனக்கு டாக்டரேட் கொடுக்கப் போவதாக யூனிவர்சிடீயிலிருந்து வந்த கடிதம் அது.

''கங்கிராட்ஸ்'' கேலி புரிவதுபோல் அவருடைய குரல் ஒலித்தது.

கவரை எடுத்து ஹேண்ட் பேக்கில் வைத்துக் கொண்டு குழந்தையுடன் அந்த இடத்தை விட்டு, சூழ்நிலையை விட்டு வெளியேறினேன், சாசுவதமாக.

* * *

## 21

''அவளுக்கு உடம்பு சரியாக இல்லையா என்ன? இரவு பத்து மணி ஆகிறது. சாப்பிட வரச் சொல்.'' அம்மா அண்ணியிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

''ரொம்பக் களைத்துப் போய் வந்திருக்கிறாள். கொஞ்ச நேரம் தூங்கட்டும். பசித்தால் தானே எழுந்து கொள்வாள். நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்க போய் தூங்குங்கள்'' அண்ணி பதிலளித்துக் கொண்டிருந்தாள்.

எனக்கு அண்ணியிடம் நன்றி உணர்ச்சி பெருகியது. என்ன நடந்தது என்று தெரியாவிட்டாலும், ஏதோ நடந்திருக்கும் என்று ஊகித்து, எனக்கு உடம்பு சரியாக இல்லையென்று மழுப்பி அம்மா என்னைச் சந்தித்து விடாமல் இருக்க எத்தனை அவஸ்தைப்படுகிறாள்?

அம்மா படுத்துக் கொள்ளப் போய்விட்டாள் போலும். அண்ணி என் அறைக்கு வந்து கட்டிலில் தலைமாட்டில் உட்கார்ந்து கொண்டாள்.

''அண்ணம் இன்னும் வரவில்லையா அண்ணி?''

''நீ விழித்துக் கொண்டுதான் இருக்கிறாயா? அவர் கேம்ப்புக்குப் போயிருக்கிறார். அவர் இருந்தால் உனக்குக் கொஞ்சம் தைரியமாக இருக்குமோ என்னவோ!'' ஆறுதல் அளிப்பது போல் சொன்னாள்.

வெறுமையாகச் சிரித்தேன். ''நீங்க இருப்பதைவிட அதிகமாக இருக்காது அண்ணி...''

''பாலை குடிக்கிறாயா?'' பேச்சை மாற்றிக் கொண்டே மேஜைமீது இருந்த பால் டம்ளரை எடுத்துக் கையில் கொடுத்தாள்.

மவுனமாகப் பெற்றுக் கொண்டு பால் குடித்து விட்டேன்.

''இப்பொ சொல்லு...'' அண்ணி சரியாக உட்கார்ந்து கொண்டாள்.

சற்று நேரம் மவுனமாக இருந்து விட்டு, நான் சொல்லத் தொடங்கினேன். நான் புகுந்த வீட்டில் காலடி எடுத்து வைத்தது முதல் அன்று வரை நடந்ததை எல்லாம் விவரமாகச் சொல்லி



விட்டேன். கணவருக்கும் எனக்கும் இடையே இருந்த கருத்து வேற்றுமைகள்... மச்சினருடன் எனக்கு ஏற்பட்ட நெருக்கம், ஒர்ப்படியின் தங்கையுடன் இவருக்கு ஏற்பட்ட உறவு, அந்தப் பெண்ணின் தற்கொலைக்குக் காரணம் இவர் என்று தெரிந்தது... கடைசியாக நடந்த ரகளை... எதையும் மறைக்கவில்லை.

நம்பிக்கையான ஒருவரிடம் நம்மை வெளிப்படுத்திக் கொள்வதில் பெரிய நிம்மதி ஏற்படுமென்று இதுவரை எனக்குத் தெரியாது. எல்லாம் சொல்லி முடித்த பிறகு இதயத்திலிருந்து பெரிய பாரம் நீங்கியதுபோல் நிம்மதியாக இருந்தது.

அண்ணி எல்லாவற்றையும் மவுனமாகக் கேட்டுக் கொண்டாள். அவள் சொல்லப் போகும் பதிலுக்காக நான் காத்திருந்தேன்.

''ரொம்ப நேரமாகி விட்டது. படுத்துக்கொள். காலையில் பேசிக்கொள்ளலாம்.'' – போர்வையைப் போர்த்திவிட்டு, நிசப்தமாக அறையைவிட்டு வெளியேறினாள்.

காலையில் விழிப்பு வந்தபோது மணி ஏழை தாண்டியது. அண்ணியின் குரல் கேட்டது.

''மாப்பிள்ளையிடம் ஏதோ விஷயத்தில் கோபித்துக் கொண்டு வந்துவிட்டாள் என்று நினைக்கிறேன். மாலையில் ஆஃபீசில் இருந்து வந்த பிறகு நானே அவளிடம் பேசுகிறேன். நீங்க எதையும் கேட்டு விடாதீங்க. உங்களிடம் சொல்ல அவளுக்குத் தயக்கமாக இருக்குன்னு நினைக்கிறேன்.''

''சரிம்மா... நான் எதையும் கேட்க மாட்டேன். இருந்தாலும் கல்யாணமாகி இத்தனை வருஷங்கள் ஆனபிறகும் சண்டை பூசல் என்று சொன்னால் நன்றாகவா இருக்கு.'' அம்மா முணுமுணுத்துக் கொண்டிருந்தாள்.

நான் அப்படியே படுத்துக் கொண்டிருந்தேன். அண்ணி ஆஃபீசுக்கு போகும்முன் என் அறைக்குள் வந்தாள்.

''இன்று உன் கணவரைச் சந்தித்துப் பேசிப் பார்க்கிறேன். ஏதாவது பலன் இருந்தால் சரி... இல்லாவிட்டால் விவாகரத்தைத் தவிர்க்க முடியாது. அதுவரை உங்க அம்மா அப்பாவுக்குத் தெரிய வேண்டாம்'' என்றாள்.

மனதில் எந்த யோசனைகளையும் வைத்துக் கொள்ளாமல் மாலைவரை பொழுதை போக்கிவிட்டேன். அண்ணி மாலை ஆறு மணிக்கு மேல் வந்தாள். அம்மா, அப்பாவை என் மகளுடன் கோவிலுக்கு அனுப்பிவிட்டு, டீயைத் தயாரித்து என்னிடம் தந்தாள். டீ குடித்து முடிக்கும் வரை இருவரும் எதையும் பேசிக் கொள்ளவில்லை. பிறகு சொல்ல ஆரம்பித்தாள்.

''நான் உன் மச்சினரை, உன் கணவரை இருவரையும் தனித்தனியாகச் சந்தித்துப் பேசினேன். உங்க மச்சினர் கொஞ்சம் தேவலைபோல் தோன்றுகிறது. அவருக்கு உன்னிடம் கொஞ்சம் சாஃப்ட் கார்னர் இருக்கு. உனக்கு நடந்துவிட்ட அநியாயத்துக்கு அவர் இரக்கப்படுகிறார்.''

வெறுமையுடன் சிரித்தேன். ''அதனால் அவருக்கு ஒரு நஷ்டமும் ஏற்படப் போவதில்லை... அதான்...'' சற்று நிறுத்தி, ''என் கணவர் என்ன சொன்னார்?'' என்று கேட்டேன்.

''உன் கணவர் எண்ணெயில் விழுந்த அப்பளமாய் குதிக்கிறார். சமரசமாகப் போவதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. உன்னை, உன்னைப் பெற்று வளர்த்தவர்களை, உங்க வம்சத்தை வாய்க்கு வந்தபடி திட்டித் தீர்த்தார். அவருடன் சமரசமாகப் போகணும்னு எதுக்காக நினைக்கிறாயோ எனக்குப் புரியவில்லை. டைவோர்ஸ் என்றால் பயப்படுகிறாயா? அம்மா அப்பா வருத்தப்படுவார்களே என்று யோசிக்கிறாயா இல்லை, அவரை இன்னும் நேசிக்கிறாயா?''

''என் மகளுக்காக, உங்களுக்குத் தெரியாதது என்ன இருக்கு அண்ணீ... பெற்றோர்கள் செய்துவிட்ட தவறுக்கு குழந்தைகள்



பலி ஆகக்கூடாது. என் மகளுக்கு தந்தையின் அன்பு கிடைக்காமல் போய்விடக் கூடாது. குழந்தைகள் நன்றாக வளரவேண்டுமென்றால் தாய் தந்தை இருவரின் அன்பும், அரவணைப்பும் அவசியம். அந்த ஒரு காரணத்துக்காகத்தான் நான் இப்படித் தவிக்கிறேன்.

அண்ணி என் பக்கம் தீவிரமாய் பார்த்தாள்.

''கீழ்த்தரமாகச் சண்டை போட்டுக் கொள்ளும் பெற்றோர்களிடம் குழந்தைகள் ஆரோக்கியமாக வளருவார்கள் என்று எப்படி எதிர்பார்க்கிறாய்? இப்படிக் கேட்பதற்கு என்னை மன்னித்துவிடு. உன் கணவருக்கு உன்மீது கொஞ்சம்கூட மதிப்பு இருப்பதாகத் தெரியவில்லை. கணவன் மனைவி ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு, மதித்துக் கொள்ளவேண்டும். அது இல்லாத சூழ்நிலையில் குழந்தைகள் வளர்ந்தால், அவர்களுடைய மனம் மேலும் பாதிக்கப்படும். அதைவிட, 'தந்தை' இல்லை என்ற உண்மையை ஏற்றுக் கொண்டு, வாழக் கற்றுக் கொண்டால், குழந்தைகள் நன்றாக வளர வாய்ப்பு இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.''

நான் மவுனமாக கேட்டுக் கொண்டிருந்தேன்.

அண்ணி மேலும் சொன்னாள், ''எனக்கு ஒன்று மட்டும் புரியவில்லை. நீயும் உன் மச்சினரும் சேர்ந்து செய்த தவறுக்கு உன் கணவர் உன்னை மட்டும் தூற்றிக் கொண்டிருக்கிறார். அண்ணனைப் பற்றி ஒரு வார்த்தைகூட சொல்லாததைப் பார்த்தால், அவருக்கு அண்ணனிடம் இருப்பது அளவுக்கு மீறிய நன்றி உணர்வா இல்லை... பக்தியா என்று புரியவில்லை.''

''அவர்களைக் குற்றம் சொல்லுவானேன்? இதையே ஒரு கதையாக எழுதினால்... சமுதாயத்தில் இருக்கும் எல்லோரும் முக்கியமாக பெண்கள் என்னைத்தான் முதலில் தூற்றுவார்கள். தாம்பத்தியத்தில் வெறுமை ஏற்பட்டால் எல்லோரும் இப்படித்

நான் சீர்கெட்டுப் போவார்களா என்று மூக்கின் மீது வி
வைத்துக் கொள்வார்கள். அதுவரைக்கும் போவானேன்? இ
யோசித்துப் பார்த்தால் எனக்கே நான் செய்தது ச
படவில்லை.''

''பெண் என்பவள் மனதளவில் தனித்திருக்க நேர்ந்த
ஆறுதலுக்காகத் தவித்துப் போவாள். 'அந்தத் தவிப்பு'
நிலைக்கு வழிவகுக்கும் என்பது, அவளைச் சுற்றி இருக்கும்
நிலை மீது ஆதாரப்படும்.''

''நான் சொல்ல வந்தது சமுதாயத்தால் வரையறுக்கப்
மாரல் வேல்யூஸ் பத்தி அண்ணி...''

''மாரல் வேல்யூஸையும் 'வாய்ப்பு'தான் தீர்மானிக்கு
காலங்காலமாக இந்தச் சமுதாயம் ஆண்களுக்கு அந்த 'வாய்ப்
அளித்து வந்ததால், பெண்களுக்கு ஒரு நியாயம் என்று ஏற்ப
விட்டது. ஆண், பெண் இருவரும் சேர்ந்து தவறு செய்
தாலும், பெண்ணுக்கு மன்னிப்பு கிடைக்காததற்குக் காரண
ஆதிகாலத்திலிருந்து நம் ரத்தத்தில் கலந்துவிட்ட கலாச்சா
தான்.''

திகைத்துப் போனவளாய் அண்ணியின் பக்கம் பார்த்து
கொண்டிருந்தேன். என்னைத் தேற்றுவதற்காக அவள் அ
வார்த்தைகளைச் சொல்லவில்லை. அவளுடைய மன
ஆழத்திலிருந்து வெளிவந்த கருத்துகள் அவை என்று பு
போது அண்ணியின் குணநலனை உணர்ந்து கொள்ள முடிந்

என் யோசனைகளைக் கலைத்துக் கொண்டே அண்
சொல்லிக் கொண்டிருந்தாள்.

''உன் கணவர் இவ்வளவு கீழ்த்தரமாக பேசுவார் என்று நா
எதிர்பார்க்கவில்லை. அதுவரை நீ தவறு செய்திருக்கிறா
என்ற நினைப்பு என் மனதில் எந்த மூலையிலோ இருந்தா
அது அவருடன் பேசிய அடுத்த நிமிடத்திலேயே போய்விட்ட



இனி அவருடன் பேசுவது அனாவசியம் என்ற முடிவுக்கு வந்த பிறகு அவருடன் சில ஒப்பந்தங்களைச் செய்துகொள்ள வேண்டி வந்தது. விவாகரத்தை எப்படியும் தவிர்க்க முடியாது. குறைந்த பட்சம் நடந்த விஷயங்கள் வெளி உலகிற்குத் தெரிய வேண்டிய அவசியமில்லாமல் பிரிந்து விடுவது நல்லது என்று தோன்றுகிறது.''

''விவாகரத்துப் பெற வேண்டியது அவ்வளவு அவசியமா? வெறுமனே பிரிந்து வாழ்ந்தால் போதாதா அண்ணி?''

''முதலில் நானும் அப்படித்தான் எண்ணினேன். ஆனால் உன் கணவர் பிடிவாதமாக இருக்கிறார். டைவோர்ஸுக்கு நாம் ஒத்துக் கொள்ளாவிட்டால் கோர்ட்டுக்குப் போவார். எல்லா விஷயங்களையும் வெளிப்படுத்துவார். அவரிடம் சாட்சியங்கள் இல்லா விட்டாலும், அதன் விளைவாக உன் வாழ்க்கை, உன் மகளின் எதிர்காலம் எல்லாமே பாதிக்கப்படும். உன் பெற்றோர்களும் வேதனைப்படுவார்கள். உன் ஓர்படி தங்கையின் தற்கொலைக்குக் காரணம் அவர்தான் என்று உறுதிப்படுத்தும் கடிதம் நம்மிடம் இருப்பதால், பரஸ்பர ஒப்பந்தத்தின் கீழ் விவாகரத்து பெறுவதற்கு உன் கணவரும் ஒப்புக் கொண்டுள்ளார். ஈகோ பிரச்னை, கருத்து வேற்றுமையின் காரணமாக இருவரும் பிரிந்து போவதாக இருக்குமே தவிர, வேறு விஷயங்கள் வெளியில் வரக் கூடாது என்ற நிபந்தனையின் பேரில், நானும் இதற்குச் சம்மதித்தேன். உன்னை அந்தப் புதை குழியிலிருந்து மீட்பதற்கு இது ஒன்றுதான் சரியான வழி என்று நினைக்கிறேன்.''

நான் அண்ணியைக் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தேன்.

மெதுவாக என் கையைப் பத்திக் கொண்டாள். ''என்ன யோசித்துக் கொண்டு இருக்கிறாய்? உங்கள் இருவரையும் சேர்த்து வைப்பதற்குப் பதிலாக, விஷயத்தை இன்னும் தீவிரமாக ஆக்கி விட்டேனே என்றா?'' தாழ்ந்த குரலில் கேட்டாள்.

என் விழிகளில் நீர் சுழன்றது. எதைச் செய்து இவளு... நன்றிக் கடனைத் தீர்த்துக் கொள்ளப் போகிறேன்? என்... பத்தி முழுவிவரம் தெரிந்த பிறகும், அருவருப்பாக உ... பேச்சிலும் செயலிலும் கடுகளவும் வெறுப்பு காட்டா... என்னையும் மதித்துக் கொண்டு, எனக்காக அம்மாவிடம் பே... சொல்லி, என் கணவரிடம் பேசி, சமாளித்து, அவர் கீழ்த்... மாகப் பேசினாலும் பொறுத்துக் கொண்டு, இது எல்லாம் எ... காகத் தானா?

''சொல்லும்மா... பயப்படுகிறாயா? அவரால் உனை... எதுவும் செய்ய முடியாது'' தைரியம் அளிப்பதுபோல் அண்... சொன்னாள்.

''பயப்படவில்லை அண்ணி... யோசிக்கிறேன்.''

''எதைப் பற்றி யோசிக்கிறாய்?''

''எதனால் உன்னை எல்லோரும் இந்த அளவுக்கு விரு... கிறார்கள் என்று இதுவரை புரியவில்லை. இப்போ புரிந்த...''

பதிலுக்கு அண்ணி புன்னகைத்துவிட்டு, ''தாங்க்யூ'' என்... வள், எழுந்து நின்று கொண்டாள். ''இன்னொரு விஷயம்...'' என்றாள்.

என்ன என்பதுபோல் பார்த்தேன்.

''இந்த விஷயங்கள் எதுவும் உன் அண்ணாவுக்குத்... தெரிய வேண்டிய அவசியம் இல்லை'' அறையை விட்டு வெ... யேறினாள்.

குளிர்ந்த தென்றல் காற்று என்னைத் தழுவியதுபோ... உணர்ந்தேன்.

* * *



# 22

டைவோர்ஸ் விஷயம் சீக்கிரமாகச் செட்டில் ஆகிவிட்டது அதனால் தனிப்பட்ட முறையில் எனக்கு எந்த வேதனையும் ஏற்படவில்லை. ஆனால் வயதான காலத்தில் என் பெற்றோர்கள் படும் வேதனையைப் பார்க்கும்போது எனக்கு வருத்தமாக இருந்தது. அண்ணாவுக்கு உள்ளூர வருத்தம் ஏற்பட்டாலும், வாழ்நாள் முழுவதும் எனக்கு துணையாய் இருப்பதாக உறுதிமொழி அளித்தான்.

நான் வழக்கம்போல் காலேஜுக்குப் போக ஆரம்பித்து விட்டேன். கடந்தகால வாழ்க்கையின் கசப்பை மறக்க வேண்டும் என்றால் ஏதாவது மாற்றம் வேண்டும் என்று தோன்றியது. இப்போ நான் பார்த்துக் கொண்டிருக்கும் வேலை, பொருளாதார ரீதியில் வசதியாக இருந்தாலும் மனதுக்குத் திருப்தியைத் தரவில்லை. முக்கியமாக என் பி.ஹெச்.டி. முடிந்து விட்ட பிறகு.

நான் யோசித்துக் கொண்டிருக்கும் போதே அண்ணா திடீரென்று ஒருநாள் கேட்டான், ''போஸ்ட் டாக்டரல் எக்ஸ்சேஞ்ச் புரோகிராமின் கீழ் இங்கிலாண்டுக்கு நீ ஏன் போகக் கூடாது?'' என்று.

முதலில் தயக்கமாக இருந்தது. மகளையும் அழைத்துக் கொண்டு வெளிநாட்டில் வாழ்க்கை நடத்த என்னால் முடியுமா என்று பயமாகவும் இருந்தது. அண்ணன் கொடுத்த உற்சாகத்தில் சில யூனிவர்சிடீகளுக்கு அப்ளை செய்தேன். முன்னாடியே சொன்னால் வருத்தப்படுவார்கள் என்று அப்பா அம்மாவிடம் எதுவும் சொல்லவில்லை.

ஜெனெடிக் இஞ்சினியரிங்கிற்கு நல்ல எதிர்காலம் இருக்கு என்று அண்ணன் சொன்னதை உறுதிப்படுத்தும் விதமாக, பதினைந்து நாட்களுக்குள் மூன்று யூனிவர்சிடீகளிலிருந்து எனக்கு அழைப்பு வந்தது. நான் இங்கிலாண்ட் போகும் விஷயம் முடிவு ஆன பிறகு அப்பா, அம்மாவிடம் தெரிவித்தேன். அவ்வளவு தான்... அம்மா அழத் துவங்கிவிட்டாள்.

''கல்யாணம் ஆனபிறகு மற்ற பெண்களைப் போல் ச
இருப்பாய் என்று எதிர்பார்த்தால், அதுவும் இல்லையெ
ஆகிவிட்டது. டைவோர்ஸ் விஷயத்திலும் உன் முடிவை ஏற்
கொண்டோம். டாக்டரேட் படித்த மகளுக்கு நல்லது கெட்
தெரியாதா என்ற நம்பிக்கையில் இதுநாள் வரை உன்னை எ
யும் கேட்டதில்லை. இப்பொ சின்ன குழந்தையைத் தூ
கொண்டு வெளிநாட்டுக்குப் போகிறேன் என்கிறாயே! நா
செத்து விட்டோம் என்று நினைத்தாயா, இல்லை உன் மேத
தனத்துக்கு இந்த நாட்டில் சரியான மதிப்பு கிடைக்காது என்
தீர்மானித்து விட்டாயா?'' அம்மா விசும்பிக் கொண்டே கேட்டா

மனதில் முள் தைத்ததுபோல் வலித்தது எனக்கு. அம்
வும் என் திறமை பற்றி எகத்தாளமாய் பேசுவது போல் தோ
யது.

''அம்மா!'' இடைமறிப்பது போல் அண்ணா அழைத்தா
ஏற்கெனவே அவள் வாழ்க்கையில் அடிபட்டு, நொந்து இரு
றாள். அத்தனை வேதனையிலும் டாக்டரேட் பெற்றாள் என்ற
அவளுடைய திறமையை நீ மதிக்கணும். அவளைப் போ
மகளைப் பெற்றதற்கு பெருமைப்படணும். நீ சொன்னது போ
அவள் படித்த படிப்புக்கு வெளிநாட்டில் நல்ல ஆதாவு இரு
கும். இங்கே இருந்தால் கடந்த கால வாழ்க்கையின் பாதிப்பு
அவளை மேலும் துரத்திக் கொண்டே இருக்கும். இந்த நிலை
யில் அவள் வெளிநாட்டுக்குப் போவது ரொம்ப அவசிய
முடிந்தால் சில வருடங்கள் கழித்து திரும்பி இங்கே வருவா
இல்லையா, நீங்க அங்கே போய் அவளுடன் சில மாதங்கள் த
விட்டு வரலாம். பழசை மறந்து புதிய வாழ்க்கையை அமைத்து
கொள்ள இது ஒரு நல்ல வாய்ப்பு.''

அண்ணன் சொன்னதைக் கேட்டு அம்மா ஓரளவுக்கு ச
தானமாகி விட்டாலும், கடைசி வரை அழுவதை மட்டும் நிறு



வில்லை. அப்பா, அம்மாவைத் தேற்றுவது போல் மவுனமாக இருந்தார். குழந்தையை வைத்துக் கொண்டு வெளிநாட்டில் எப்படி வாழப் போகிறோம் என்ற பயம் உள்ளூர இருந்தாலும், அண்ணன் கொடுத்த தைரியத்தில் எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கையை ஏற்படுத்திக் கொண்டேன்.

கிளம்புவதற்கு முதல் நாள் அன்னி என் அருகில் வந்து, என் கணவருக்குத் திருமணம் நிச்சயமாகி இருப்பதாகத் தகவலைத் தெரிவித்தாள். நான் யோசனையில் ஆழ்ந்து விட்டதைக் கவனித்து, ''என்ன யோசிக்கிறாய்?'' என்று கேட்டாள்.

''கணவனின் இரண்டாவது மனைவி'' இந்த டைட்டிலை ஏதாவது தமிழ் சினிமாவுக்கு வைத்தால் எப்படி இருக்கும் என்று யோசிக்கிறேன்?''

''அந்தச் சினிமாவைப் பார்க்கப் பெண்களின் கூட்டம் அலை மோதும்'' அன்னி சிரித்துக் கொண்டே சொன்னாள்.

அன்று மாலையில் என் மச்சினர் எங்கள் வீட்டுக்கு வந்தார். அவர் வருவார் என்று எதிர்பார்க்காததால் கொஞ்சம் வியப்பு அடைந்தாலும் சமாளித்துக் கொண்டேன்.

''வெளிநாட்டுக்குப் போகிறாயாமே! கேள்விப்பட்டேன். கங்கிராட்ஸ் அண்ட் பெஸ்ட் ஆஃப் லக்...'' நாற்காலியில் உட்கார்ந்து கொண்டே சொன்னார்.

''தாங்க்யூ'' என்றேன்.

''இந்தியாவுக்குத் திரும்பி வரும் யோசனை ஏதாவது இருக்கா?''

''பார்க்கணும்... இன்னும் எதையும் முடிவு செய்யவில்லை'' என்றேன்.

''குழந்தையை அங்கேயே படிக்க வைக்கப் போகிறாயா?''

''ஆமாம்.''

அண்ணி காபி கொண்டுவந்து கொடுத்தாள். "என்ன விசேஷம்?" என்று காஷுவலாக விசாரித்தாள்.

"ஒரு விசேஷமும் இல்லை... சொல்ல மறந்துவிட்டேன். எங்க வீட்டுக்குப் புதிதாக ஒரு பலி ஆடு வரப்போகிறது."

அண்ணியும், நானும் கல்லாய்ச் சமைந்துவிட்டோம். ஏதோ நாலு வார்த்தை சகஜமாகப் பேசி விட்டுப் போவார் என்று நினைத்தால், இப்படிப் பேசுவார் என்று எதிர்பார்க்கவில்லை. சூழ்நிலையில் ஏற்பட்ட மாறுதலை உணர்ந்தவர் போல் சட்டென்று எழுந்து விடைபெற்றுக் கொண்டு கிளம்பிவிட்டார்.

அவர் போன பிறகு அண்ணியின் குரல் கோபமாக ஒலித்தது. "பலி ஆடு வரப் போகிறதாமே! இப்படிப் பேச அவருக்கு வெட்கமாக இல்லை. இதைச் சொல்லவா இங்கே வந்தார்?"

"தான் இன்னும் நம் பக்கம் இருப்பதாகக் காட்டிக் கொள்ள அவர் செய்யும் முயற்சிதான்... வேறு என்ன இருக்க முடியும்?"

அண்ணி வியப்புடன் என்னை நோக்கினாள்.

"ஆமாம் அண்ணி... விவரம் தெரியாத அந்த நாட்களில் இவரைச் சிறந்த குணநலனைக் கொண்டவராக எண்ணி வியப்பு அடைந்த விஷயம் உண்மைதான். தங்கையின் திருமணத்துக்கு சல்லி காசு செலவழிக்க மாட்டேன் என்று சொன்னபோது, ப்ராக்டிகல் திங்கிங் பர்சனாலிடி என்று நினைத்தேன். பெண் என்பவள் ஒருவனை விரும்பினாள் என்றால், அவனுடைய குற்றம் குறைகள்கூட அவள் கண்களுக்கு உயர்வாகத் தெரியும் என்பதற்கு என் வாழ்க்கையே ஓர் எடுத்துக்காட்டு..." என்றேன்.

அன்று இரவு தூங்கும்போது நினைத்துக் கொண்டேன். "இது என் வீடு... இங்கே இருப்பவர்கள் என் நலனை விரும்புகிறவர்கள். கஷ்ட சுகங்களில் எனக்கு உறுதுணையாக நிற்பார்கள்." இந்த நினைப்பு வந்ததும் தைரியம் ஏற்பட்டது. என் மீதே எனக்கு நம்பிக்கை வந்துவிட்டதுபோல் உணர்ந்தேன்.



ஏர்போர்ட்டில் அம்மாவால் அழுகையை அடக்கிக் கொள்ள முடியவில்லை. பேத்தியைப் பற்றிய கவலை அவளுக்கு விடவில்லை. அப்பாவின் கண்களிலும் நீர் நிறைந்திருந்தது. அண்ணன், அண்ணி அவர்களைத் தேற்றிக் கொண்டிருந்தார்கள். என்னால் அங்கே இருக்க முடியாவிட்டால், கட்டாயம் திரும்பி வந்துவிடுவேன் என்று வாக்குக் கொடுத்துவிட்டு விமானத்தில் காலடி எடுத்து வைத்தேன். விழிநீர் பார்வையை மறைக்க, கைகளை அசைத்து விடைபெற்றுக் கொண்டேன்.

இதுதான் என் கதை...

இருபத்தைந்து வருடங்களுக்கு முன் நடந்த கதை. இங்கிலாண்ட் வந்த பிறகு என் கடந்த காலத்தைப் பற்றிக் கிட்டத்தட்ட மறந்துவிட்டேன். படிப்பு, வேலை இவை இரண்டும் நல்ல நண்பர்களாய் என் வாழ்க்கையில் முக்கிய பங்கு வகித்தன.

இருபத்தைந்து வருடங்கள் கழித்து, இந்த 2025வது ஆண்டில், என்னுடைய கடந்த காலம் என் மகளுடைய உருவத்தில் எனக்கு முன்னால் கேள்விக் குறியாய் நிற்கிறது.

பெண் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகப் போராட்டம் தொடங்கி இருநூறு வருடங்கள் தாண்டி விட்டன. முப்பது வருடங்களுக்கு முன்பு பி.வி. நரசிம்மராவின் பார்லிமெண்டில் எம்.பி.க்களாக இருந்த பெண்களின் எண்ணிக்கை இருபத்து ஐந்தாக இருந்தது. இப்போ அந்த எண்ணிக்கை முப்பதாக உயர்ந்திருக்கிறது. அவ்வளவுதான்... நாம் அடைந்த முன்னேற்றம் இதுதான்...

பெண் சுதந்திரம் என்றால் திமிர் பிடித்துப் போய் அலைவது இல்லையென்று வாதிக்கும் மகளிடம் என்ன பதிலைச் சொல்வேன்? எந்தச் சூழ்நிலையில் பலவீனப்பட்டு, அந்த மாதிரி நடந்து கொண்டேன் என்பதை அவளுக்குப் புரிய வைக்க என்னால் முடியுமா?

* * *

## அத்தியாயம் – 3

# ராக்காயி சொன்ன கதை

1

**ஆ**பத்து என்பது எப்பொ எந்தப் பக்கத்தில் இருந்து வருமென்று யாராலும் சொல்ல முடியாது. இங்கிலாண்டிலிருந்து அகல்யா செய்த போன், அந்த ஆபத்தை முன்கூட்டி தெரிவிப்பது போல் தோன்றியது.

''சியாமளா இந்தியாவுக்கு வருகிறாள்.'' அகல்யாவின் குரல் பதட்டமாக ஒலித்தது.

''என்ன திடீரென்று?'' என்று கேட்டேன்.

''அவளுடைய அப்பாவைச் சந்திப்பதற்காக.''

எனக்கு விஷயம் முழுவதும் புரிந்து விட்டது. என்றாவது ஒருநாள் இந்தக் கசப்பு உண்மை வெளிப்பட்டு விடுமென்று எதிர்பார்த்தாலும், இத்தனை சீக்கிரமாக அதைச் சந்திக்க வேண்டி வருமென்று நினைக்கவில்லை. கடந்த இருபத்தைந்து வருடங்களில் அகல்யா இந்தியாவுக்கு மூன்று தடவை வந்திருக்கிறாள்.

சியாமளா வருவது இதுதான் முதல் தடவை. அகல்யா கணவரின் குடும்பத்தினர் எங்கே இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. வேறு வேலை கிடைத்து விட்டதால் அவர் லக்னோவுக்கோ, அலகாபாதுக்கோ போய் விட்டாரென்று கேள்விப்பட்டிருந்தேன். அகல்யாவின் மச்சினர் பதினைந்து வருடங்களுக்கு முன் நடந்த ரகளையில் இறந்துவிட்டார்.

இருபத்து ஒராவது நூற்றாண்டில் பி.ஜெ.பி. பார்ட்டி அதிகாரத்துக்கு வந்ததும், முக்கியமான இரண்டு முடிவுகளை



எடுத்திருந்தது. காஷ்மீரில் சொத்துக்களைச் சம்பாதித்துக் கொள்ளும் உரிமை எல்லா இந்தியர்களுக்கும் அளிக்கப்பட்டதுடன், எல்லா மதங்களுக்கும் ஒரே சட்டத்தை அமலுக்குக் கொண்டு வந்தார்கள். *(காமன்சிவில் கோர்ட்)*

அவ்வளவுதான் நாடே கொந்தளித்துப் போய்விட்டது. ஆனாலும் அரசாங்கம் கடினமாகச் செயல்பட்டுப் பெரும் கொந்தளிப்பை அடக்கிவிட்டது. காமன்சிவில் சட்டத்தை அமலுக்குக் கொண்டுவர முயன்றபோது, மக்கள் இதுக்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள். முக்கியமாக இந்தியாவில் இருக்கும் முஸ்லீம் பெண்களிடமிருந்து இதற்கு எதிர்ப்பு அதிகமாக இருந்தது.

அதற்கு 25 வருடங்களுக்குமுன் பாகிஸ்தான் நாட்டில் ஒரு சின்ன நிகழ்ச்சி நடந்தது. ஜெஹாமினா என்ற பதினைந்து வயதுப் பெ'ணை அவளுடைய மாமாவும் வேறு ஒரு நபரும் சேர்ந்து பலவந்தமாகக் கற்பழித்து விட்டார்கள். இந்த விஷயத்தை அவளுடைய பெற்றோர்கள் போலீசில் புகார் செய்து இருந்தார்கள். பாகிஸ்தான் கோர்ட் இந்த கேசை தள்ளுபடி செய்துவிட்டது. அதற்கான காரணம் இதுதான். பாகிஸ்தான் சட்டத்தின் கீழ் கற்பழிப்பு குற்றத்தில் குற்றவாளிகளுக்குத் தண்டனை கிடைக்க வேண்டும் என்றால் சாட்சியாக ''ஆண்'' நபர்கள் இருக்கவேண்டும்.

அதே நாட்டில் வேறு ஒரு சட்டம் இருந்தது. இதை, ''ஜினா ஆர்டிநெஸ்'' என்பார்கள். எந்தப் பெண்ணுக்காவது கள்ளத் தொடர்பு இருந்ததாக உறுதியாகத் தெரிந்தால், அவளுக்கு தண்டனை கிடைக்கும். ஜெஹாமினா வழக்கில் கற்பழிப்பு குற்றம் நிரூபிக்க முடியாமல் போய்விட்டதால் குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்பித்து விட்டார்கள். ஆனால் முறையற்ற தொடர்பு இருந்ததற்காக அந்தப் பெண்ணுக்குப் பத்து கசையடிகளும், மூன்று வருடங்கள் சிறைவாசமும் தண்டனையாகக் கிடைத்தன. அதில

உலக மனித உரிமை சங்கங்களிடமிருந்து இதற்குக் கடும் எதிர்ப்பு வந்தாலும், யாராலும் எதுவும் செய்ய முடியவில்லை.

அகல்யா இன்று போனில் சொன்ன விஷயம் என்னை குழப்பத்தில் ஆழ்த்திவிட்டது. சியாமளா இங்கே வந்தால் அவளுடைய தந்தையிடம் அவளை அழைத்துக் கொண்டு போகணுமா வேண்டாமா என்று சொல்லாமலேயே அகல்யா போனை வைத்து விட்டாள்.

ஏர்போர்டில் சியாமளாவைச் சந்தித்து என்னை நானே அறிமுகம் செய்து கொண்டேன். அந்தப் பெண்ணின் முகத்தில் இன்னதென்று சொல்ல முடியாத உணர்ச்சி, எரிச்சலும் கலந்து வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. என்னை அங்கே எதிர்பார்க்காததால் கொஞ்சம் வியப்பு அடைந்து விட்டாள் என்பதையும் புரிந்து கொண்டேன்.

''நான் வரப்போவது உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''உங்க அம்மா போன் செய்தாள்'' புன்முறுவலுடன் சொன்னேன். அம்மாவைப் பற்றிய பேச்சு வந்ததும் அந்தப் பெண்ணின் முகம் களை இழந்ததைக் கவனித்து, பேச்சை மாற்றினேன்.

''நீ உன்னுடைய அப்பாவைச் சந்திப்பதற்காக வருகிறாய் என்று அகல்யா சொன்னாள். இப்போ அவர் எங்கே இருக்கிறார் என்று எனக்குத் தெரியாது. அவர் வேலை பார்த்த வங்கியில் விசாரித்தால், ஒருவேளை தெரிய வரலாம்'' என்றேன்.

நான் அவளுக்கு எதிரியில்லை என்பதை அவள் உணர வேண்டுமென்று நினைத்து அப்படிச் சொன்னேன். ஆனால் அந்தப் பெண் நான் சொன்னதைப் பொருட்படுத்தியதாய் தெரியவில்லை.

''என்னுடைய அப்பா எங்கே இருக்கிறார் என்று எனக்குத் தெரியும். நான் இந்த ஊருக்கு வந்ததே அவரைச் சந்திப்பதற்குத்தான்...'' எடுத்தெறிந்து பேசுவது போல் சொன்னாள்.



''அவர் இந்த ஊரிலேயா இருக்கிறார்?'' வியப்புடன் கேட்டேன்.

''உங்க வீட்டு மாஜி மாப்பிள்ளை உங்க ஊரிலேயே இருந்தாலும் உங்களுக்கு அந்த விஷயம் தெரியவில்லை. அடடா! ரொம்ப டிட்டாச்மெண்ட்தான்...'' சியாமளாவின் குரல் ஏகத்தாளமாய் ஒலித்தது.

அந்த விஷயத்தை மேலும் தொடர விரும்பாதவளாக ''வாம்மா... வீட்டுக்குப் போகலாம்'' என்று முன்னோக்கி நடந்தேன்.

''யார் வீட்டுக்கு? நான் என்னுடைய வீட்டுக்குப் போய்க் கொண்டிருக்கிறேன்'' என்றவள், டாக்ஸியை அழைக்கச் செய்து லக்கேஜை ஏற்றிக் கொண்டு போய்விட்டாள்.

* * *

வேகமாய் சுழன்று கொண்டிருந்த மின்விசிறியைப் பார்த்துக் கொண்டே கட்டிலில் சாய்ந்த வாக்கில் உட்கார்ந்து இருந்தேன். அருகில் என் கணவர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார். அகல்யா போனில் பேசியது என் மனதில் சுழன்றுக் கொண்டிருந்தது. மகளின் இந்தச் செயலால் அகல்யா மனதளவில் ரொம்ப நலிந்து போய் விட்டிருப்பாள். நாம் நம்பிய கொள்கைகளை, நம்முடைய நடத்தையை, கூட இருப்பவர்களே புரிந்து கொள்ளாவிட்டால், அதைவிட வேதனை என்ன இருக்க முடியும்?

என் கணவருக்கு விழிப்பு வந்துவிட்டது போலும். திரும்பிப் படுத்தவர் என்னைப் பார்த்து, ''என்ன? தூக்கம் வரவில்லையா?'' என்று கேட்டார்.

''இல்லை. சியாமளாவைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன்.''

''இதில் யோசிக்க என்ன இருக்கு? என்றாவது ஒருநாள் இப்படி நடக்கும் என்று எதிர்பார்த்ததுதானே!''

''உங்களுக்கு வருத்தமாக இல்லையா?''

''எதுக்கு?''

''உங்களுடைய தங்கை இவ்வளவு வேதனை அனுபவிக்கிறாளே என்று.''

''அகல்யா வேதனை அனுபவிக்கிறாளா? நான் அப்படி நினைக்கவில்லையே.''

எனக்கு வியப்பு ஏற்படவில்லை. இத்தனை வருட தாம்பத்திய வாழ்க்கையில் அவரை நன்றாகவே புரிந்து கொண்டிருக்கிறேன்.

''நீங்க என்ன சொல்ல வர்றீங்க என்று எனக்குப் புரியாமல் இல்லை. எத்தனை ப்ராக்டிகலாக யோசித்தாலும், இருபத்து ஐந்து வருடங்களுக்கு முன் கணவனையும், இப்போ மகளையும் இழப்பது என்றால் ரொம்ப வேதனையாக இருக்காதா? ஒரு பெண்ணாக, அவளுடைய வேதனையை என்னால் புரிந்து கொள்ள முடியும்.''

''ஒரு ஆணாக என்னாலும் புரிந்துகொள்ள முடியும். ஆனால் நீ யோசிக்காத விஷயம் வேறு ஒன்று இருக்கிறது. இன்று நடந்தாலும், இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னால் நடந்தாலும், அகல்யா தன் மச்சினருடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்ட அன்றே தன் குடும்பத்தை இழந்துவிட்டாள். மனதில் ஏற்பட்ட உறவாக அது இருந்திருந்தால், அவளுடைய வாழ்க்கை வேறு விதமாக இருந்திருக்கும். மற்ற பெண்கள் சந்தோஷமாக குடித்தனம் செய்வதுபோல், அவளுடைய தாம்பத்தியமும் நிலைத்து இருக்கும்.''



என்னால் வியப்பை அடக்க முடியவில்லை. என் கணவர் மனதில் தங்கையைப் பற்றி இந்த மாதிரி எண்ணங்கள் இருக்குமென்று இதுநாள் வரை எனக்குத் தெரியவில்லை.

சட்டென்று நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டேன். ''ஆணாதிக்கம் படைத்த நபர்போல், அந்தக் கண்ணோட்டத்தில் பிரச்னையை நீங்கள் பார்க்கிறீர்கள்...'' ஏதோ ஒரு வேகத்தில் சொல்லிவிட்டேனே தவிர, அவருக்குக் கோபம் வருமோ என்று பயந்தேன்.

அவர் சிரித்துவிட்டார். ''சரியாக நம் திருமணத்துக்கு ஒரு வருடம் முன்னால் இதே வார்த்தையை என்னிடம் சொன்னது நினைவு இருக்கா?'' என்றார்.

அந்த நிகழ்ச்சி நினைவுக்கு வந்ததும் வெட்கமாக உணர்ந்தேன். ''உங்களை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. புரிந்துகொண்டு விட்டேன் என்று நினைக்கும் போது அந்த எண்ணம் தவறு என்பதுபோல் வேறு விதமாக நடந்து கொள்வீங்க...'' என்றேன்.

''இதில் விசித்திரம் ஒன்றுமில்லை. அனுபவங்கள் ஆக ஆக அபிப்பிராயங்களில் மாற்றம் வருவது இயற்கைதானே. மாற்றம் வராவிட்டால் வாழ்க்கை அந்த இடத்திலேயே நின்றுவிடாதா?''

''அப்படின்னா சியாமளா செய்தது சரி என்கிறீர்களா? தாயை விட்டு அவள் வந்தது நியாயம்தானா?''

''அகல்யா செய்தது தப்பு என்று சொல்லவில்லை. சியாமளா செய்தது சரி என்று சொல்வதும் என்னுடைய எண்ணம் இல்லை. ஒரே லட்சியத்தை அடைய வெவ்வேறு வழிகள் இருக்கலாம் இல்லையா? அதனால்தான் பெண்களின் சார்பில் வாதாடிய சியாமளாவால், தன்னுடைய தாயின் செயலை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஒரே பிரச்னைக்குப் பல தீர்வுகள்,

எதிர்மறையான அபிப்பிராயங்கள் இருப்பதை உன்னால் புரிந்து கொள்ள முடியவில்லையா?''

''நீங்கள் சொல்வதை என்னால் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. தவறு செய்தது அகல்யாவா இல்லை சியாமளாவா?''

''நம்முடைய செயல்களால் நமக்கோ அல்லது மற்றவர்களுக்கோ இழப்பை அல்லது பாதிப்பை ஏற்படுத்துவதை வைத்துதான் அது தவறா இல்லையா என்பது தீர்மானிக்கப்படும். ஒரு கொள்கைக்காக கணவனை விட்டுப் பிரிந்து, எஞ்சிய வாழ்க்கை சுகமாக இருப்பதாக நினைக்கும் அகல்யா, அதே கொள்கைக்காக மகளின் பிரிவையும் தாங்கிக்கொள்ள முடிந்தால், அவள் வேதனைப்படத் தேவையில்லையே. தன்னுடைய தாய் 'எந்த சூழ்நிலையில் அப்படி நடந்து கொண்டாளோ' என்று சியாமளா புரிந்து கொண்டால், பிரச்னையே இருக்காது இல்லையா? இந்த உலகத்தில் எந்த ஒரு பிரச்னைக்கும் இதுதான் சரியான தீர்வு என்று வரையறுத்துக் கூற முடியாது. அப்படி இருந்தால் இந் நேரத்துக்கு எல்லா பிரச்னைகளுக்கும் தீர்வு கிடைத்திருக்கும்.

பெண்களின் பல பிரச்னைகளுக்குத் தீர்வு பெண்களிடமே இருப்பதை அவர்கள் மறந்து போய் விடுவது துரதிர்ஷ்டம்தான். ஐம்பது வருடங்களுக்கு முன் பெண்களும் ஆண்களுக்கு நிகரா வேலை பார்த்து, பொருளாதார ரீதியில் கால் ஊன்றி நிற்க முடிந்தால் பாதி பிரச்னைகள் தானே தீர்ந்துவிடும் என்று நினைத்தார்கள். ஆனால் இருபத்தி ஒராவது நூற்றாண்டில் காலடி எடுத்து வைத்து இருபத்தைந்து ஆண்டுகள் ஆனபிறகும், பெண்களின் நிலைமையில் சொல்லிக் கொள்ளும் அளவுக்கு முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதுதான் வேதனை.''

''எத்தனை நூற்றாண்டுகள் ஆனாலும் பெண்களின் நிலைமையில் மாற்றம் ஏற்பட வாய்ப்பு இல்லையா? மனிதனால் தீர்மானிக்கப்பட்ட சமுதாய கோட்பாடுகளுக்குப் பெண்



ணாகப் பிறந்தவள் பலியாக வேண்டியதுதானா? அவளுக்குத் தனித்தன்மை என்பதே இருக்கக் கூடாதா?''

''தான் பலி ஆடாக இருக்கிறோமா இல்லையா என்று ஒவ்வொரு பெண்ணும் தனிப்பட்ட முறையில் முடிவு செய்து கொள்ள வேண்டும். சமுதாயம், நியாயம், தனித்தன்மை என்று மூன்று வார்த்தைகளைச் சொன்னாயே... நியாயத்தின் கோட்பாடுகளை அகல்யா மீறினாள். தனித்தன்மைக்காகப் போராடுவதாக நினைத்துக் கொண்டு சியாமளா சுரேஷை புரிந்துகொள்ள மறுத்துவிட்டாள்'' மூச்சு எடுத்துக் கொள்வதற்காக சற்று நிறுத்தினார்.

''அப்பொ சமுதாயத்துக்கு எதிராகப் போராடியது?''

அவர் பேசவில்லை.

''சமுதாயத்தின் கோட்பாடுகளை எதிர்த்துப் போராடியது யாராம்?'' மறுபடியும் கேட்டேன்.

''நீதான்'' புன்னகைக்கு இடையில் பதில் வந்தது.

* * *

**ப**ள்ளிக்குத் தினமும் போனால் மதியச் சாப்பாடு போட்டு கையில் கொஞ்சம் பணமும் தருவார்கள் என்று யாரோ சொன்னதும் எங்க அய்யா என்னை பள்ளிக்கூடத்தில் சேர்த்தார். ஐந்தாவதுடன் நின்றிருந்த என் படிப்பு அந்த விதமாக மறுபடியும் தொடங்கியது. எங்க அய்யாவின் தொழில் செருப்பு தைப்பது. நாங்க இருந்தது குக்கிராமம். வகுப்பில் என்னைத் தவிர என் இனத்தைச் சேர்ந்தவர்கள் வேறு யாரும் இருக்கவில்லை. என்னை ஒரு மூலையில் தனியாக உட்கார வைத்தார்கள். சாப்பிடும் போதும் மற்றவர்களுடன் சேர்ந்து உட்கார வைக்காமல் தனியாக உட்கார வைத்து, தள்ளி நின்று பரிமாறுவார்கள்.

முதல் நாள் ஆஜர் பட்டியலைப் படிக்கும்போது எங்க வகுப்பு டீச்சர் சொன்ன வார்த்தைகள் இன்னும் என் மனதில் ஆழமாய்ப் பதிந்திருக்கின்றன.

''என்ன? உன் பெயர் ராக்காயியா? கலெக்டர் ஆக வி லாம்னு கனவு காண்கிறாயா? இலவசமாய் சாப்பாடு போடுவா கன்னதும் பரக்கூட்டம் எல்லாம் பாடசாலைக்குப் படை யெடுத்து கிட்டு வரத் தொடங்கியிருக்கு. மிஸ் ராக்காயி ஐ.ஏ.எஸ். டெ டிவிஷன் ஆஃபீசர்'' டீச்சர் எகத்தாளமாய் சொன்னபோது வகுப்பு முழுவதும் கொல்லென்று சிரித்தன.

அப்பொ புரிந்தது, என்னுடைய தகுதியின்மை என் ஜா மட்டுமே இல்லை... என் பெயரும்தான் என்று.

பட்டப்படிப்பு படித்திருந்த பெரிய அண்ணன், நி வேஷன் கோட்டாவில் வேலை கிடைத்ததும், எங்களையெல் லாம் நிர்தாட்சண்யமாய் உதறித் தள்ளிவிட்டுப் போய்விட்டான். அப்பொ நான் பத்தாவது படித்துக் கொண்டிருந்தேன். அய்யா வுக்கு நெஞ்சுவலி வந்துவிட்டதால் கட்டிலில் படுத்து விட்டார். அவர் காலி செய்த மரத்தடியை இரண்டாவது அண்ணன் எடுத்து கொண்டான். அவனுக்குப் படிப்பு சரியாக வரவில்லை. என் படிப்புக்கு முதலிலிருந்து ஆட்சேபணை தெரிவித்துக் கொண் டிருந்தான். ஆனால் ஹாஸ்டலில் இலவச சாப்பாட்டுடன் மற் சௌகரியங்களும் எனக்குக் கிடைத்து வந்ததால், எங்க அய்யா அதைப் பொருட்படுத்தவில்லை. என் ஸ்காலர்ஷிப் பணத்தை அப் படியே வீட்டுக்கு அனுப்பிவிட்டு, சின்ன வகுப்பு குழந்தைகளுக்கு ட்யூஷன் சொல்லிக் கொடுத்து என் படிப்பைத் தொடர்ந்தேன்.

எங்களுக்காக அரசாங்கம் ஒதுக்கும் நிதிகளில் பெரும் பகுதி அதிகாரிகளுக்குப் போய் விடும். இதனால் எங்களுடைய நிலைமை மோசமாகத்தான் இருந்து வந்தது. நான் ப்ளஸ் டூ படிக்கும் போது அக்காவுக்குத் திருமணம் நடந்தது. அத்தான் கலெக்டர் ஆபீசில் ப்யூனாக இருந்தார். பத்தாயிரம் ரூபாய் வரதட்சணையாகக் கொடுத்தோம். பெரிய அண்ணன் கல்யாணத் தில் தலையைக் காட்டிவிட்டு, இரண்டாயிரம் ரூபாய் கொடுத்து, தன்



பொறுப்பை முடித்துக் கொண்டார். அக்காவின் திருமணத் துக்காக எங்கள் வீட்டை விற்றுவிட்டோம்.

ப்ளஸ் டூ முடித்த பிறகு மறுபடியும் என் படிப்பைப் பற்றி பிரச்னை எழுந்தது. இந்தத் தடவை சின்ன அண்ணனின் எதிர்ப்பு ரொம்ப தீவிரமாய் இருந்தது.

''படிப்புக்காக நான் யாரையும் சார்ந்து இல்லையே? அரசாங்க உதவியுடனும், சுய முயற்சியிலும் படித்து வருகி றேன்'' என்றேன்.

அம்மா அண்ணன் பக்கம் சேர்ந்து கொண்டாள். ''நீ பாட்டுக்குப் படித்துக் கொண்டே போனால் யார் வந்து கல் யாணம் செய்து வைக்கப் போறாங்க? அக்காவின் கல்யாணத் துக்கு, இருந்த வீட்டை வித்தாச்சு... இனி உன்னுடைய கல் யாணம் என்றால் எங்களை விற்றுத்தான் செய்யணும்'' என்றாள்.

''நான் கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன். படித்து விட்டு, வேலைக்குப் போய் உங்களைக் காப்பாற்றுவேன்...'' ஆவேசத்துடன் சொன்னேன்.

அதைக் கேட்டதும் அய்யாவுக்குக் கோபம் வந்துவிட்டது. ''படித்து எங்களைக் காப்பாற்றப் போறானாம். பெரிதாகச் சொல்ல வந்துவிட்டாள். உன் அண்ணன் செய்ததை அதற்குள் மறந்துவிட்டாயா? இந்தக் கவர்ன்மெண்டைத்தான் கேட்கணும். பெத்தவங்களைக் காப்பாற்றுவாங்களான்னு பத்திரம் எழுதி வாங்கிக் கொண்டுதான் ரிசர்வேஷன் கோட்டாவில் வேலை போட்டுத் தரணும். இல்லாவிட்டால் எங்களைப் போன்ற பெற்ற வர்களின் பாடு திண்டாட்டம்தான்...''

''அப்படி நடந்து கொள்பவளாக இருந்தால், ட்யூஷனில் வர்ற பணத்தில் என் படிப்பை சமாளித்துக் கொண்டு, ஸ்காலர் ஷிப் பணத்தை உங்களுக்கு என் அனுப்புகிறேன்.''

''நாலு எழுத்து படித்தாளோ இல்லையோ, நம்மை
எதிர்த்துப் பேசுகிறாள்.'' அண்ணன் ஒத்து ஊதினான்.

''நான் ஒன்றும் எதிர்க்கவில்லை. உண்மையைச் சொ
கிறேன் அவ்வளவுதான்!''

''இனி நீ எதுவும் சொல்லத் தேவையில்லை. படித்த வரை
யில் போதும்... வீட்டில் உட்கார்...'' அய்யா முடிவாகச் சொ
விட்டார்.

அவ்வளவுதான்! இனிமேல் படிப்பை மறந்துவிட வே
டியதுதான் என்று நினைத்துக் கொண்டிருந்தபோது, அக்காவி
கணவர் எனக்குத் தைரியம் சொன்னார்.

''இதோ பாரும்மா! நான் அவ்வளவாக படிக்கவில்லை
ஆனால், கலெக்டர் ஆபீசில் ப்யூனாக வேலை செய்வ
நிறைய படித்தவர்களை, அரசியல்வாதிகளைப் பார்த்திரு
றேன். அடுத்தவனைச் சுயநலத்துக்குப் பயன்படுத்திக் கொ
தில் யாருமே தயங்குவதில்லை. நீ மேல் படிப்பு படித்
உனக்குத் தகுந்த புருஷனைக் கொண்டுவர முடியாதோ எ
பயம் உன் சின்ன அண்ணனுக்கு. படித்துவிட்டு நீ வேறு யா
யாவது காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டால் ஜா
லிருந்து தங்களைத் தள்ளி வைத்து விடுவார்களோ என்ற ப
உன்னைப் பெத்தவங்களுக்கு. இப்பொ படிப்பை நிறுத்தி வி
என்ன செய்யப் போகிறாய்? கல்யாணம் செய்து விடலாம் எ
லும் உன் பெற்றோரிடம் சல்லிக் காசு இல்லை'' என்று நி
மையை விளக்கிச் சொன்னார்.

என் முடிவை வீட்டில் சொன்னபோது, பிரளயமே வ
விட்டாற்போல் சூழ்நிலை மாறிவிட்டது. அண்ணன் முடி
பிடித்துக் கொண்டு, முதுகில் அடிக்கத் துவங்கினான். அ
அவனைத் தடுக்கும் முயற்சி எதுவும் செய்யவில்லை. அ
இரவே கட்டிய புடவையுடன் வீட்டை விட்டு வெளியேறினே



நேராகப் பெரிய அண்ணனிடம் சென்றேன். என்னுடைய
மேற்படிப்புக்கு உதவி செய்யும்படி வேண்டுகோள் விடுத்த
போது அண்ணன் தயங்குவதுபோல் பார்த்தான். அந்தத் தயக்கத்
தின் காரணம் புரிந்து கொள்வதற்கு எனக்கு மேலும் இரண்டு
நாட்கள் தேவைப்பட்டன. கலப்புத் திருமணம் செய்து கொண்ட
பெரிய அண்ணனின் மனைவி உயர் ஜாதியைச் சேர்ந்தவள்.
தன்னுடைய ஜாதியைப் பற்றி வெளியில் யாருக்கும் தெரிந்து
விடாமல் இருக்க அண்ணன் முயற்சித்து வருகிறான். மாம
னாரின் உதவியோடு சமுதாயத்தில் தலை நிமிர்ந்து வாழ
வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருப்பவன், தங்கைக்கு
உதவி செய்யத் தயங்குவதில் வியப்பு என்ன இருக்க முடியும்?
விஷயம் புரிந்ததும் நான் அந்த இடத்தைவிட்டு வெளியேறி
னேன். கணவனின் கடந்த கால வாழ்க்கையை நினைவுபடுத்தும்
விதமாக நான் அவர்களுடன் தங்கியிருப்பதை அண்ணியும்
விரும்பவில்லை.

அக்கா வீட்டில் எனக்கு எந்தப் பிரச்சனையும் இருக்க
வில்லை.

''ஏதாவது வேலை பார்த்துக் கொண்டே, பிரைவேட்டாகப்
பட்டப் படிப்பை படிக்கலாம்னு இருக்கேன்'' என என் மனதில்
இருப்பதை அக்கா, அத்தானிடம் தெரியப்படுத்தினேன்.

''எங்க வீட்டிலேயே இருந்து கொண்டு படித்துக் கொள்.
வர்ற சம்பளத்தில் வர்கிங் விமென்ஸ் ஹாஸ்டலில் தங்கிக்
கொண்டு, படிப்பையும் தொடருவது கஷ்டம்'' என்று அத்தான்
சொன்னதும் சரி என்றே பட்டது.

அக்காவின் வீட்டில் நிலைமை கொஞ்சம் வித்தியாசமாக
இருந்தது. அக்கா இயற்கையிலேயே அழகானவள். அவளுடைய
அறையில் தென்பட்ட டிரெஸ்ஸிங் டேபிளும், அதன் மீது இருந்த
அலங்காரப் பொருட்களும் எனக்கு வியப்பை அளித்தன.

அத்தானின் சம்பளத்தில் பாதிக்கு மேல் இதுக்கே செலவு செ
றாளோ என்று சந்தேகம் வந்தது. எதுவாக இருந்தால் என
எனக்கு சம்பந்தம் இல்லாத விஷயம் என்று அந்த நினை
ஒதுக்கினேன்.

மறுநாள் முதல் கண்ணில் பட்ட விளம்பரத்துக்கெல்ல
அப்ளை செய்து வைத்தேன். என் முதல் இண்டர்வ்யூ
இன்னிக்கும் என்னால் மறக்க முடியாது.

அந்தக் கம்பெனி மானேஜிங் டைரக்டர், கோட்டு சூட்
போட்டுக் கொண்டு நெற்றியில் நாமத்துடன் பார்க்க வித்தி
மாக இருந்தார். என்னுடைய சர்டிஃபிக்கேட்ஸை பரிசீலித்து
கொண்டே கேட்டார்.

''பர்சனல் செகரெட்ரீ என்றால் என்னுடன் வெளி ஊர்களு
செல்லாம் வர வேண்டியிருக்கும், உங்களுக்கு ஆட்சேபனை
இருக்காது இல்லையா?''

உலகத்தைப் பற்றி இன்னும் சரியாகப் புரிந்து கொள்ள
நிலையில் இருந்த நான், அந்தக் கேள்வியைத் தவறாக நினை
வில்லை.

''ஆட்சேபணை எப்படி இருக்க முடியும் சார்? அது
என்னுடைய வேலையில் ஒரு பகுதியாக இருக்கும்போது
என்றேன்.

அவர் என் முகத்தைக் கூர்ந்து பார்த்தார். ''உங்களுக்கு இல்
விட்டாலும், உங்கள் வீட்டில் ஆட்சேபிக்கலாம் இல்லையா''
என்றார்.

''நான் என் பெற்றோர்களுடன் வசிக்கவில்லை. அ
களுக்கு நான் வேலைக்குப் போவதில் விருப்பம் இல்லை.
போதைக்கு அக்கா வீட்டில் தங்கியிருக்கிறேன்.''

''வெரிகுட்... எங்களுக்கு உன்னைப் போன்ற நபர்
செகரெட்ரியாக இருக்கவேண்டும்...''



அப்ளிகேஷனை மறுபடியும் கவனித்துப் பார்த்து விட்டு
''என்ன? உன் பேர் ராக்காயியா? யார் வைத்தாங்க இந்தப்
பெயரை?''

''என்னுடைய அப்பா.''

''அவர் என்ன செய்கிறார்?''

''இப்பொ வேலை எதுவும் செய்வதில்லை. அவருடைய
உடல் நிலை சரியாக இல்லை.''

''வாலண்டரி ரிடையர்மெண்ட் வாங்கிக் கொண்டு விட்
டாரா?''

''இல்லை... அவருடைய தொழில் செருப்பு தைப்பது.''

மேனேஜிங் டைரக்டருடைய முகத்தில் சிரிப்பு மறைந்தது.
மறுபடியும் அப்ளிகேஷனைப் பார்த்துவிட்டு...

''அப்பொ நீ தலித் குலத்தைச் சேர்ந்தவளா?'' என்றார்.

அவர் சொன்ன அந்த வார்த்தைகளை, அதன்பிறகு என்
வாழ்க்கையில் வெவ்வேறு விதமாக, வெவ்வேறு குரல்களில்
வெவ்வேறு சூழ்நிலைகளில் சந்தித்து விட்டேன். முதன்முதலில்
பார்க்கும்போது என் அழகைக் கண்டதும் ஏற்பட்ட பிரமிப்பு,
பெயர் தெரிந்ததும் வியப்பாக மாறி, ஜாதி பற்றித் தெரிந்ததும்
முகச் சுளிப்பாக பரிணமிப்பது முதலில் வியப்பாக இருந்தது.
போகப் போக பழகிவிட்டது. ஆனால், அதை நான் அவமான
மாக நினைக்கவில்லை. கடவுள் கொடுத்த ஜாதியை, பெரியவர்
கள் வைத்த பெயரை ஒருநாளும் தாழ்வாக நான் எண்ணியதில்லை.

அதன் பிறகு சின்ன கம்பெனி ஒன்றில் ரிசெப்ஷனிஸ்டாகச்
சேர்ந்தேன். சம்பளம் முழுவதும் அக்காவிடமே கொடுத்து விடு
வேன். மாலை கல்லூரியில் பி.காம். படித்து வந்தேன். இரண்
டாவது வருடம் படித்துக் கொண்டிருந்தபோதுதான் அந்த நிகழ்ச்சி
நடந்தது.

காலேஜ் முடியும்போது மணி ஒன்பது ஆகிவிட்டது வெளியில் நல்ல மழை பெய்து கொண்டிருந்தது. ரிக்ஷாவில் போகலாம் என்றாலும் கையில் பணம் இல்லை. அத்தான் கலெக்டருடன் கேம்புக்குப் போயிருந்தார். அக்கா அம்மா வீ டுக்குப் போய் இரவு தங்கிவிட்டு மறுநாள் காலையில் வரு தாகச் சொல்லியிருந்தாள். வீட்டில் யாரும் இருக்க மாட்டார்கள்

காலேஜ் வராண்டாவில் நின்று கொண்டிருந்தபோது, கா வந்து பக்கத்தில் நின்றது. முன் சீட்டில் உட்கார்ந்து இருந் அத்தான் கார் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்துக் கொண்டே "இருக்கிறாயா? இந்த மழையில் எப்படிப் போயிருப்பாயோ என்று கவலையாக இருந்தது. சீக்கிரம் வா போகலாம்" என்றா

ஓடிப் போய் கார் பின் சீட்டில் உட்கார்ந்து கொண்டேன்.

"கலெக்டர் அய்யா வீட்டில் இறங்கிக் கொண்டு, மழை யாய் இருக்கேன்னு, என்னையும் வீட்டில் இறக்கி விட்டுப் போகச் சொல்லி டிரைவரிடம் சொன்னார். நீ இங்கே இருப் பாயோ என்று சந்தேகம் வந்தது. போகிற வழிதானே... பார்த்து விட்டுப் போகலாமே என்று இந்தப் பக்கமாய்க் காரை விட சொல்லி டிரைவரிடம் சொன்னேன்" அத்தான் சொல்லிக் கொண் டிருந்தார்.

குளிர் தாங்க முடியாமல் மூலையில் ஒதுங்கி உட்கார்ந்து கொண்டேன்.

மழை அதிகமாகிவிட்டது. சாலையில் வெள்ளமாய் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. திடீரென்று வண்டி நட்ட நடு சாலையில் நின்றுவிட்டது. டிரைவர் எத்தனை முயற்சி செய் தாலும் நகர மறுத்துவிட்டது.

அத்தான் காரை விட்டு இறங்கினார். "இங்கிருந்து வீ அருகில்தான் இருக்கு. நாங்க எப்படியோ போய்க் கொள் கிறோம். நீ காரை ரிப்பேர் செய்துகொண்டு கிளம்பு..."



காரை விட்டு இறங்கிய அடுத்த நிமிடமே நன்றாக நனைந்து விட்டோம். எதிரே ஹோட்டல் தென்பட்டது. அதன் ...ாவில் கார்களை நிறுத்துவதற்காக ஷெட் ஒன்று இருந்தது.

"அங்கே போய் நின்று கொள்வோம். மழை விட்டதும் ...ளம்பலாம்" அத்தான் சொன்னார்.

புடவை நன்றாக நனைந்துவிட்டதால், உடம்புடன் ஒட்டிக் கொண்டு, ரொம்ப இடைஞ்சலாக இருந்தது. ஏற்கெனவே மழைக் ...க ஷெட் கீழே ஒதுங்கியிருந்தவர்களின் பார்வை, இந்தப் ...க்கமே இருப்பதைக் கவனித்தபோது, சங்கடமாக உணர்ந்து, மேலும் ஒதுங்கிக்கொண்டு நின்றேன். மழை கொஞ்சம் விட் டாற்போல் இருந்தது.

"அக்கா பாவம்... வீட்டில் தனியாக இருப்பாள்... இல்லையா?" அத்தான் சொன்னார்.

"இல்லை... அக்கா அம்மா வீட்டுக்குப் போயிருக்கிறாள். ...ங்க கேம்பிலிருந்து இன்னிக்கு வருவீங்கன்னு நினைக்கவில்லை. அங்கேயே தங்கிவிட்டு காலையில் வருவதாகச் சொன்னாள்" விளக்கமளிப்பதுபோல் சொன்னேன்.

"போகட்டும் பாவம்! அதுதான் நல்லது. இந்த மழையில் இருட்டு வேளையில் தனியாக இருந்தால் பயப்படுவாள்" என்றவர், ஒரு நிமிடம் தாமதித்து, "அங்கே இன்னும் கஷ்டம் இல்லையா? இந்த மழையில் எல்லோரும் படுத்துக்கொள்ள ...டிசையில் இடம் போறுமோ போறாதோ" கவலைப்படுவது போல் அத்தான் சொன்னார்.

அதைக் கேட்டதும், அத்தானைப் பற்றிய மதிப்பு என் மனதில் மேலும் உயர்ந்தது. இங்கே மழையில் நனைந்து கொண்டு ... மனைவி பற்றிக் கவலைப்படும் அத்தானைப் பார்க்கும் போது பெருமையாக இருந்தது. அக்காவுக்குத் திருமணம் ஆகி ...ன்று ஆண்டுகள் முடிந்துவிட்டன. ஒன்பதரைக்கு ஆபீசுக்குக்

கிளம்பிப் போனால் மாலையில் ஐந்தரைக்கெல்லாம் வீட்டுக்கு வந்து விடுவார். கையில் பணம் இருந்தால் மனைவியை அழைத்து கொண்டு சினிமாவுக்குப் போவார். அக்காவுக்கு உடல் நல சரியாக இல்லாவிட்டால் சமையல் செய்யவும் தயங்க மாட்டா ஒரே வார்த்தையில் சொல்லணும் என்றால் திருமணமே வேண் டாம் என்று இருந்த என் எண்ணம், அத்தானைப் பார்த்த பிறகு மாறிவிட்டது.

''மழை குறைந்துவிட்டது, கிளம்பலாம் வா...'' அத்தா வின் குரலைக் கேட்டு, யோசனைகளிலிருந்து மீண்டவளாய் ஓரடி முன்னால் வைத்தேன். அப்பொழுது வேகமாய் உள்ளே நுழைந்த ஒரு கார் எங்கள்மீது சேற்றுத் தண்ணீரை வாரி இறைத்து கொண்டே போர்டிகோவில் போய் நின்றது. அத்தான் அந்தக் கா டிரைவரை அர்ச்சனை செய்துகொண்டே, சட்டையில் தெறித்த சேற்றை கையால் துடைத்துக் கொண்டிருந்தார். யதேச்சையா அந்தப் பக்கம் பார்த்த நான், ஓர் அடிகூட எடுத்து வைக்க முடி யாதவள்போல் அப்படியே காலுக்கு அடியில் நழுவியதுபோல இருந்தது. வானத்தில் மின்னிய மின்னலில் அந்தக் காட்சி தெளி வாகவே தெரிந்தது. சட்டென்று தலையைத் திருப்பி அத்தா பக்கம் பார்த்தேன்.

காரிலிருந்து முதலில் ஒரு பெண் இறங்கினாள். பின்ன டியே கோட்டு சூட்டு போட்டுக் கொண்டு இறங்கியவனுக் நாற்பது வயதுக்கு மேல் இருக்கும். அவளுடைய தோளைச்சுற் கையைப் போட்டு, அழைத்துச் சென்று கொண்டிருந்தான். அ மழைச் சாரலில் போர்டிகோவில் இருந்த மங்கலான வெளிச்ச லும் அவளை என்னால் அடையாளம் கண்டுகொள்ள முடிந்த அத்தானுக்கும் தெரிந்து விட்டதென்று, களை இழந்த அ குடைய முகத்திலிருந்து புரிந்துகொள்ள முடிந்தது.

★ ★ ★



உள்ளே அத்தான் அழுது கொண்டிருக்கிறாரோ என்ற சந்தேகம் வந்தது. கண்களை மூடிக்கொண்டு தூங்குவதற்கு முயற்சி செய்தேன். தூக்கம் வர மறுத்தது.

ஹோட்டல் வாசலில் அந்தக் காட்சியைப் பார்த்தபிறகு எப்படி வீட்டுக்கு வந்து சேர்ந்தோம் என்று எங்களுக்கே தெரிய வில்லை. மழைச் சாரலின் சத்தம் எங்கள் மவுனத்திற்குப் பின் னணியாக இருந்தது. பூட்டைத் திறந்துவிட்டு அத்தான் நேராகத் தன் அறைக்குள் சென்று விட்டார். அவர்களுக்குத் தனி அறை, எனக்குத் தனி அறை என்று இருக்க, அது ஒன்றும் பெரிய பங்களா இல்லை. இருக்கிற ஒரு அறையில் அக்காவும், அத்தா னும் படுத்துக் கொள்வார்கள். க்ரில் போட்ட வராண்டாவில் பாயைப் போட்டுக் கொண்டு நான் படுத்துக் கொள்வேன்.

நான் யோசித்துக் கொண்டிருந்தேன். அத்தானும், நானும் காலை வேளையில் சீக்கிரமாக வீடு திரும்பிய நாட்களில் சில சமயம் வாசலில் பூட்டு தொங்கும். அதன் காரணம் இன்று விளங் கியது. விலை உயர்ந்த புடவைகள், காஸ்மெடிக்ஸ் எல்லாம் எப்படி அவளுக்குக் கிடைத்தன என்பதும் புரிந்துவிட்டது. இதுவரை அத்தானுக்கு அக்காமீது சந்தேகம் வரவில்லையா?

வந்திருக்காது. கண்ணால் பார்க்கும்வரை எனக்கே சந் தேகம் வரவில்லையே! அக்காவை நினைக்கும்போது அருவருப் பாக இருந்தது. அவளுக்கு என்ன குறைச்சல்? அத்தானைப் போன்ற கணவன் கிடைப்பதற்கு எவ்வளவு கொடுத்து வைத் திருக்க வேண்டும்? இப்படிப்பட்ட புருஷன் வேண்டுமென்று தானே கன்னிப் பெண்கள் தவம் கிடப்பார்கள்?

உள்ளே அரவம் கேட்டது. அத்தான் விழித்துக் கொண்டு தான் இருக்கவேண்டும். இனி பொறுக்க முடியாதவளாய், உள்ளே போனேன். அத்தான் கட்டில் மீது சாய்ந்த வாக்கில் உட் கார்ந்துகொண்டு விட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். நான்

வந்த சந்தம் கேட்டு தலையைத் திருப்பிப் பார்த்தார். கட்டி விளிம்பில் உட்கார்ந்து கொண்டேன்.

''அத்தான்... நீங்க...'' அதன் பிறகு என்ன சொல்வது என் புரியவில்லை. அவர் என் பேச்சைக் கேட்கிறாரா இல்லை என்று புரியவில்லை. அவர் முகத்தில் எந்த உணர்ச்சியும் தெ படவில்லை.

''அக்காவை ஒன்றும் செய்து விடாதீங்க அத்தான் எப்படியோ சொல்லிவிட்டேன்.

''என்ன செய்ய முடியும்?'' உணர்ச்சியற்ற குரலில் சொ டார்.

அவர் சொன்னதன் அர்த்தம் புரியாமல், குழம்பிப் போ வளாய், அவர் முகத்தை ஆழ்ந்து நோக்கினேன்.

''இதுக்கு முன்பே காதில் விழுந்த சமாசாரம்தான். இன் கண்ணுக்கு நேராகப் பார்த்து விட்டேன். அவ்வளவுதான்!''

''அப்பொ அவளுக்குப் புத்தி சொல்லவில்லையா?'' வி புடன் கேட்டேன்.

''சொன்னால் கேட்டுக் கொள்ளும் சுபாவம் இல் அவளுக்கு.''

''இப்படி என்று தெரிந்தால் தன்னைத் தள்ளி வை விடுவீங்களே என்ற பயம்கூட இல்லையா அவளுக்கு.''

''தெரியாது! இதன் விளைவுகளை யோசித் மாட்டாள் என்று நினைக்கிறேன்.''

உண்மைதான் என்று தோன்றியது. நாம் ஒரு காரியத் செய்து கொண்டிருக்கும்போது அந்த உத்வேகத்தில் விளை பற்றி யோசித்துப் பார்க்க மாட்டோம். ஆனால், இன்



விஷயம் எனக்குப் புரியவில்லை. இப்படிப் பார்த்தும் பார்க்காததுபோல் இருந்தால், அது மேலும் அவளுக்கு ஊக்கமளிப்பது போல் ஆகாதா? நிலைமை இன்னும் மோசமாகி விட்டபிறகு வருத்தப்படுவதால் என்ன பிரயோஜனம்?

மனைவி பற்றிக் கேள்விப்பட்ட பிறகும் அத்தான் மவுனமாக இருக்கிறார் என்றால், ஒன்று ஊருக்குப் பயந்ததால் இருக்கலாம்... இல்லை... மனைவியை ரொம்ப நேசிப்பதாலும் இருக்கலாம். இது அவருடைய பலமா, பலவீனமா?

இரண்டிற்கும் வித்தியாசம் ரொம்ப சின்னது. அத்தானைத் தனிமையில் விட்டு, அறையிலிருந்து வெளியேறினேன்.

மறுநாள் காலையில் அக்கா வீட்டுக்கு வந்துவிட்டாள். அத்தான் கேம்பிலிருந்து இரவே திரும்பிவிட்டார் என்று தெரிந்த பிறகும் அக்காவிடம் எந்தப் பதட்டமும் தென்படவில்லை. அம்மா வீட்டில் எல்லோரும் நலம் என்றும், என்னை ஒரு தடவை வீட்டுக்கு வரச்சொல்லி அப்பா தெரிவிக்கச் சொன்னார் என்றும், காய்கறியை நறுக்கிக் கொண்டே ரொம்ப இயல்பான குரலில் அக்கா சொன்னபோது நானும், அத்தானும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டோம்.

மனிதர்களால்... முக்கியமாகப் பெண்களால் எப்படி இவ்வளவு பொருத்தமாகப் பொய் சொல்ல முடிகிறது.

இரண்டு நாட்கள் மேலும் கழிந்தன. என்னால் படிப்பில் மனதைச் செலுத்த முடியவில்லை. எனக்குச் சம்பந்தப்பட்ட விஷயம் இல்லை என்று தெரிந்தாலும் என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. மூன்றாவது நாள் தனியாக இருக்கும்போது அக்காவிடம் கேட்டுவிட்டேன்.

அவ்வளவுதான்! திகைத்துப் போனவளாய் ஒரு கணம் அப்படியே நின்று விட்டாள். உடனே சமாளித்துக் கொண்டு, ''நீ என்ன பேசுகிறோம் என்று புரிந்துதான் பேசுகிறாயா?'' அக்கா

என்ற மதிப்பு கொஞ்சமாவது உனக்கு இருக்கா? என்னை வேறு ஒருவனுடன் பார்த்தாயா? இப்படிச் சொல்ல உனக்கு வெட்க மாக இல்லை? என் குடித்தனத்தை நாசமாக்கத்தான் நீ இங்கு வந்தாயா?''

பொலபொலவென்று கண்ணீர் வடித்துக் கொண்டே அழுத் துவங்கி விட்டாள்.

கண்ணிமைக்காமல் அவளையே பார்த்தேன். ''நான்கு நாட் களுக்கு முன்பு, அத்தான் கேம்பிலிருந்து சீக்கிரமாக வந்துவிட்ட அன்று, நீ அம்மா வீட்டுக்குப் போகவில்லை. ஹோட்டல் சுப்ரபாத்தில் தங்கியிருந்தாய்'' என்றேன்.

அக்காவின் உடல் மெலிதாக நடுங்குவதைத் தெளிவாக உணர முடிந்தது. வாய் அடைத்து விட்டவள்போல் கல்லாய்ச் சமைந்துவிட்டாள். எப்படியோ சமாளித்துக் கொண்டு வாயைத் திறந்தாள், ''யாரைப் பார்த்தாயோ என்னவோ? இருந்தாலும் சொந்த அக்காமீது யாராவது இப்படிச் சந்தேகப்படுவாங்களா?'' என்று கேட்டாள்.

நான் விடவில்லை. ''வேணும்னா அன்று இரவு, நீ பிறந்த வீட்டில் தங்கினாயா இல்லையா என்று அம்மாவிடமே கேட்டு விடுவோமா...'' என்று கேட்டேன்.

ஒரு நிமிடம் மவுனமாக இருந்தாள். பிறகு ஏதோ முடிவுக்கு வந்து விட்டவள்போல், ''ஆமாம்! அன்று இரவு ஹோட்டலுக்குத் தான் போனேன். அதுக்கென்ன இப்போ?'' என்று சொன்னாள்.

இந்த முறை திகைத்துப் போவது என்னுடைய பங்கா யிற்று. இந்த அளவுக்கு அக்கா துணிந்துவிடுவாள் என்று நான் ஊகித்திருக்கவில்லை.

''அதனால் என்ன? அத்தானிடம் சொல்லப் போகிறாயா?'' அக்காவின் குரலில் பயம், துக்கம் எதுவுமில்லை.



''இப்படி நடந்து கொள்வதால் உன் குடித்தனம் நாசமாகி விடாதா? நீ செய்வது உனக்கே நன்றாக இருக்கா? மகிழ்ச்சியான வாழ்க்கையை...'' என் பேச்சு இன்னும் முடியக்கூட இல்லை.

''மகிழ்ச்சியான வாழ்க்கையா?'' ஹிஸ்டீரியா வந்தவள் போல் அக்கா கத்தினாள். ''இதுவும் ஒரு வாழ்க்கையா? உன் அத் தானைக் கல்யாணம் செய்து கொண்டு நான் என்ன சுகப்பட் டேன்? ஒரு நல்ல புடவை உண்டா? ஒரு நகை உண்டா? இந்த மாதிரி வாழ்க்கை இருந்தால் என்ன? நாசமாய்ப் போனால்தான் என்ன?'' சற்று நிறுத்தினாள். பிறகு என்ன நினைத்துக் கொண் டாளோ என்னவோ, ''காலையில் ஆபீசுக்குப் போய்விட்டு மாலையில் வீடு திரும்பும் ஆண்களுக்கு இதெல்லாம் எப்படித் தெரியப் போகிறது?'' அமைதியாகக் கேட்டாள்.

அக்கா இந்த அளவுக்குத் தரம் இழந்து நடந்து கொள்வாள் என்று எதிர்பார்க்காததால் திகைத்து விட்டேன்.

கோபமும், அருவருப்பும் நிறைந்த குரலில், ''தெரியாது என்று ஏன் நினைக்கிறாய்? அத்தானுக்கு எல்லாம் தெரியும்'' என் றேன்.

அக்காவின் முகம் வெளிறிப் போய்விட்டது.

''எப்படித் தெரியும்? ராட்சசி... அத்தானிடம் கோள் மூட்டி விட்டாயா? விழிகளால் சுட்டெரித்து விடுபவள்போல் பார்த் தாள்.

''இல்லை. அன்று இரவு ஹோட்டல் வாசலில் இன்னொரு வனுடன் உன்னைப் பார்த்தபோது, அத்தானும் என் பக்கத்தில் இருந்தார்.''

''அந்த இரவு நேரத்தில், மழையில் உங்கள் இரண்டு பேருக் கும் அங்கே என்ன வேலை?''

அந்தக் கேள்வி என்னை வந்து நேராகத் தாக்கியது. நான் சொல்வதை அக்கா சரியாகப் புரிந்து கொண்டாளா என்ற சந்தேகம்

வந்தது. என் உணர்வுகள் எதையும் அவள் பொருட்படுத்தி தாகத் தெரியவில்லை. தன் போக்கில் சொல்லிக் கொண்டு போனாள்.

''தெரிந்தால் மட்டும் என்ன செய்து விடுவான்? தள்ளி வைப்பான். அவ்வளவுதானே! இன்னும் நல்லது. இந்தப் பிடுங்கலே இல்லாமல் போய்விடும். அன்னிக்கு நீ என்னுடன் பார்த்தது யாரென்று தெரியுமா? ராஜேஷ் பட்டேல் என்ற குஜராத்தி வியாபாரி. கல்யாணம் முடிந்து பத்து வருஷம் ஆகியும் குழந்தை இல்லை. அவனுடன் வந்து விட்டால் கார், பங்களா எல்லாம் தந்து என்னை ராணியாகப் பார்த்துக் கொள்வதாகச் சொன்னான். உன் அத்தானுடன் நூறு வருடங்கள் குடித்தனம் செய்தாலும் இந்தச் சுகங்கள் எனக்குக் கிடைக்குமா? ஏதோ அம்மா, அப்பா கட்டி வைத்தாங்களேன்னு சேர்ந்து இருக்கேன். அதுக்கே அவன் என்னிடம் நன்றியுடன் இருக்கணும். என்னைத் தள்ளி வைத்துவிட்டால், மறுபடியும் என்னைப்போல் அழகான மனைவி இவனுக்குக் கிடைப்பாளா? வீட்டுவேலை முழுவதும் தனியாக நானே செய்து கொள்ளவில்லையா? என்னுடைய நல்ல தனத்தை யாராவது புரிந்து கொண்டார்களா? வரட்டும்... கேள்வி கேட்டால் நான் சும்மா ஒன்றும் இருக்க மாட்டேன். பதிலு கொடுக்க எனக்கும் தெரியும்.''

அக்காவிடம் நான் பேசியதை அத்தானிடம் சொல்லாமல் என்னால் இருக்க முடியவில்லை. அக்காவை அப்படிக் கேட்ட பிறகாவது அவள் தன்னுடைய போக்கை மாற்றிக் கொள்வாள் என்று அபிப்பிராயப்பட்டேன். ஆனால், இப்படி எதிர்மறை யான விளைவு ஏற்படும் என்று நினைக்கவில்லை. இந்தப் பிரச் னைக்குத் தீர்வு காணும் பொறுப்பை அத்தானிடம் விட்டு விடு வது நல்லது எனத் தோன்றியது. இந்த விவகாரத்துக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டுமென்ற எண்ணத்தில்தான், அக்காவிடம்



அப்படிப் பேசியதாக அத்தானிடம் சொன்னேன். அதற்கு அத்தான் சொன்ன பதில் என் எண்ணங்களில் மாறுதலை ஏற்படுத்தியது.

''நிஜம்தான்! அவளை என்னால் விட முடியாது. நம் ஜாதி யில் அறுத்து விடுவது என்பது பெரிய பிரச்னையில்லை. ஐயாயிரம் கட்டினால் பஞ்சாயத்திலேயே இந்தக் காரியத்தை முடித்துக்கொண்டு விடலாம். அதன் பிறகு? நான் வேறு திரு மணம் செய்து கொள்ளணுமா? அந்தப் பெண் எப்படி இருப் பாளோ? சரி! அது போகட்டும். உன் அக்காவின் நிலைமை என்ன? வேறு ஒருவனைக் கல்யாணம் செய்து கொள்வாளா? இல்லை, யாராவது பணக்காரனுக்கு வைப்பாட்டியாக இருந்து விடுவாளா? வயதும் அழகும் இருக்கிற வரைக்கும் பணக் காரனின் ஆதரவு கிடைக்கும். அதன் பிறகு என்ன? ஏதாவது ரெட் லைட் ஏரியாவுக்குப் போக வேண்டியதுதான். நான் எனக்காக யோசிக்கவில்லை. அவளுக்காகத்தான் யோசிக்கிறேன். கல் யாணம் என்றால் இதுதானா? குடித்தனம் என்றால் எத்தனையோ பிரச்னைகள் வரும், போகும். எல்லாவற்றுக்கும் பிரிந்து போய் விடுவதுதான் தீர்வு என்றால் எப்படி? அவள் என்னிக்காவது மாறுவாள். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கு. திருமணத்தின் போது அழகாக இருந்த மனைவிக்கு வைகுரி போட்டு விகார மாய் மாற்றி விட்டால், கணவன் அவளைத் தள்ளி வைத்துவிட்டு வேறு பெண்ணிடம் போய்விட மாட்டான் இல்லையா? இது வும் அப்படித்தான். அவளுடைய மனசுக்கு வைகுரி போட்டு இருக்கு. விரைவிலேயே அது போய்விடும் என்று நம்புவோம்.''

கிட்டத்தட்ட முப்பது வருடங்களுக்கு முன் அத்தான் சொன்ன வார்த்தைகள் அவை. இப்பொழுது அவர்களுக்கு இரண்டு மகன்கள். பெரியவன் வேலைக்குப் போய்விட்டான். அக்காவும் மாறிவிட்டாள். ஆனால், அது மனரீதியாக ஏற்பட்ட மாற்றம் இல்லை. அழகை... கவர்ச்சியை இழந்து விட்டதால் வந்த மாற்றம்...

* * *

தன்னைப் பற்றி, எங்களுக்குத் தெரிந்து விட்டதென்று தெரிந்தபிறகு அக்காவின் போக்கில் மாற்றம் ஏற்பட்டது. அத்தானின் நல்லதனத்தை இயலாமையாக எடுத்துக் கொண்டு விட்டதால், அவளுக்கு மேலும் துணிச்சல் வந்துவிட்டது. ஒருநாள் அந்த ராஜேஷ் படேலை அழைத்துக் கொண்டு நேராகவே ஆபீசுக்கு வந்து விட்டாள்.

''வாயேன், ஹோட்டலுக்குப் போய் காபி சாப்பிடுவோம். ராஜேஷ் ரொம்ப நல்லவர். அவரை உனக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன்.''

தலையைக் குறுக்காக அசைத்து, என் மறுப்பை திடமாய் தெரிவித்தேன். கோபித்துக் கொண்டு போய்விட்டாள்.

அன்று இரவு தனிமையில் இருக்கும்போது பிடித்துக் கொண்டாள். ''உனக்குப் புத்தி இல்லை. கல்யாணம் செய்து கொண்டு குடித்தனம் செய்யணும்னு கனவு காண்கிறாய். தாராளமாய் செய்து கொள். யார் இங்கே உன்னைத் தடுக்கப் போகிறார்கள்? நீ இப்போ இருக்கும் நிலைமைக்கு ஒரு குமாஸ்தா உனக்குக் கணவனாக வந்தால் அதுவே அதிகம். போறும் போறாமல் கிணற்றுத் தவளை மாதிரி வாழ்க்கையைக் கழிக்க வேண்டியதுதான்.''

''எனக்கு அந்த வாழ்க்கையே போதும்'' சுருக்கமாய் சொன்னேன்.

''ஏதோ கூடப் பிறந்தவளாச்சே என்று உன் நலன் மீது அக்கறை இருப்பதால் சொல்கிறேன். ஓர் ஆண் இரண்டாவது பெண்ணைத் தேடிப் போனால் வாயை மூடிக் கொண்டு வேடிக்கை பார்க்கும் இந்தச் சமுதாயம், அதே காரியத்தை ஒரு பெண் செய்தால் குரலை ஏன் உயர்த்துகிறது? பணம் படைத்தவன் வசதிகளை அனுபவிப்பதுபோல், என் அழகை மூலதன



மாக்கிச் சவுகரியமான வாழ்க்கையை அனுபவிக்கிறேன். கடவுள் என் கணவனுக்கு அழகையோ, பணத்தையோ தரவில்லை. அதனால் வாயை மூடிக் கொண்டு சும்மா இருப்பதைத் தவிர அவனுக்கு வேறு வழியில்லை. கணவனுக்கு வேறு பெண்ணுடன் உறவு இருக்கு என்று தெரிந்தபிறகும், அவர்களுடைய மனைவிகள் வாயைத் திறக்காமல் குடித்தனம் செய்யவில்லையா? அது போல் இவனும் இருக்க வேண்டியதுதான்'' என்றவள், சட்டென்று எழுந்து போய், பெட்டியின் அடியில் வைத்திருந்த விஸ்கி பாட்டிலை எடுத்து அதில் தண்ணீர் கலந்து குடித்தாள்.

ஏற்கெனவே இந்த வஷயத்தில் எனக்குச் சந்தேகம் இருந்தாலும், இன்று நேரடியாகப் பார்த்து விட்டதில் உறுதியாகி விட்டது.

அக்கா மேலும் சொல்லிக் கொண்டிருந்தாள், ''பெண்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு இதுதான். நான் சொல்வது போல் நடந்து கொண்டால் யாருக்கும் எந்தக் கஷ்டமும் இல்லை. உடல் வலிமையும், பண பலமும் இருப்பதால் ஒரு ஆணால் இந்தக் காரியத்தை வெளிப்படையாகச் செய்ய முடிகிறது. பெண்ணிடம் இது இரண்டும் இல்லாததால் ரகசியமாகத்தான் செயல்பட வேண்டும். கல்யாணம் ஆகாததால் கணவனைப் பற்றியும், தாம்பத்திய வாழ்க்கை பற்றியும் ஏதோ ஊகித்துக் கொண்டிருக்கிறாய். கழுத்தில் தாலி ஏறிய பிறகு தெரியும் எப்படிப்பட்ட புதை குழியில் இறங்கிவிட்டோம் என்று. அது வரைக்கும் போவானேன்? ரொம்ப உயர்வாக நீ எண்ணிக் கொண்டிருக்கும் அத்தானையே கல்யாணம் செய்து கொண்டாலும், ஆறு மாதம் முடிவதற்குள், நான் சொன்னது உண்மையென்று நீயே ஒப்புக் கொள்வாய்.''

குடித்துக் கொண்டிருந்த அக்காவைப் பார்த்து நான் பயப்படவில்லை. திசை மாறிக் கொண்டிருந்த அவளுடைய

எண்ணங்களை உணர்ந்தபோது முதுகுத் தண்டில் நடுக்கம் ஏற் பட்டது. நாளுக்கு நாள் பெண்களிடம் அதிகமாகிக் கொண்டு வரும் இவ்வித எண்ணங்களுக்கு அக்கா காட்டும் இந்த வழி தீ வாக பரிணமிக்கக் கூடாது என்று கடவுளை வேண்டிக் கொண் டேன்.

என் பிரார்த்தனை கடவுளுக்கு எந்த அளவுக்கு எட்டியதோ தெரியாது... மகேஷ் என் வாழ்க்கையில் நுழைந்தான்.

★ ★ ★

"உங்களை மேனேஜர் அய்யா வரச் சொன்னார்."

ப்யூன் வந்து சொன்னபோது, என் இதயம் ஒரு நிமிடம் நின்று மீண்டும் இயங்கியது. சாதாரணமாக என்னைப் போன்ற கடை நிலை ஊழியர்களுக்கு மேனேஜருடன் நேரடித் தொடர்பு இருக்காது. ரிசப்ஷனில் ஏதாவது தவறு செய்து விட்டேனோ என்று பயந்து கொண்டே, மேனேஜர் அறைக்குப் போனேன்.

"மேனேஜிங் டைரக்டர் உங்களைப் பார்க்க வேண்டுமாம். நாளை காலையில் மெயின் ஆபீசுக்கு உங்களை வரச் சொல்லி போன் செய்தார்" என்று மேனேஜர் சொன்னபோது மேலும் குழப்பம் அடைந்துவிட்டேன்.

எங்கள் கம்பெனியைத் தவிர, எம்.டிக்கு வேறு சில கம்பெனிகளும் இருந்தன. அவற்றின் மூலதனம் கிட்டத்தட்ட ஐம்பது கோடிகளுக்கு மேல் இருந்தன. சாதாரணமாக அவரைச் சந்தித்துவிட முடியாது. அப்பாயின்ட்மெண்ட் வாங்குவதற்கே ஒரு வாரம் ஆகிவிடும். அப்படிப்பட்டவர் என்னை வரச் சொன் னது ஏன் என்று எனக்குப் புரியவில்லை.

மறுநாள் காலையில் அவருடைய ஆபீசுக்குப் போனேன். அவருடைய அலுவலகம் பன்னிரண்டாவது மாடியில் இருந்தது. லிப்டில் ஏறி அங்கு சென்றேன். விசாலமான ஹால். விசிட்டர்ஸ் உட்கார்ந்துகொள்ள சோபாக்கள் இருந்தன. ஏற்கெனவே



...டியைச் சந்திப்பதற்காக நாலைந்து நபர்கள் அங்கே ...த்திருந்தனர்.

என்னைப் பார்த்ததும் ரிசப்ஷனிஸ்ட் புன்னகைத்து விட்டுச் ...ன்னாள். "எம்.டி. ப்ரீயாகத்தான் இருக்கிறார். உள்ளே ...ாய்ப் பாருங்க."

ஏற்கெனவே காத்திருந்தவர்களை விட்டு விட்டு, என்னை ...டனேயே உள்ளே அனுப்புவதைப் பெருமையாக உணர்ந்தா ...ம், இதயம் வேகமாகத் துடித்துக்கொண்டிருந்தது. கதவை ...மதுவாகத் தட்டிவிட்டு உள்ளே இருந்து "கமின்" என்ற குரல் ...த்ததும், கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனேன். ஏ.சி. ...ம் ஆனதால் சில்லென்று காற்று என்னைச் சூழ்ந்து கொண்டது. ...யத்தினாலோ இல்லை, குளிர் காற்றினாலோ என் உடல் ...லேசாக நடுங்கிக் கொண்டிருந்தது. எதிரே இருந்த பெரிய ...மேஜைக்குப் பின்னால், சுழலும் நாற்காலியில் எம்.டி. பிரசாந்த் ...ம்பீரமாக அமர்ந்திருந்தார்.

என்னைப் பார்த்ததும் நாற்காலியில் அமரும்படி ஜாடை ...காட்டினார். உட்கார்ந்து கொண்டேன்.

"உன் பெயர் ராக்காயி. சரிதானா?"

"ஆமாம் சார்."

"பி.காம் இரண்டாவது வருடம் மாலைக் கல்லூரியில் ...படித்துக் கொண்டிருக்கிறாய். அப்படித்தானே?"

ஆம் என்பதுபோல் தலையை அசைத்தேன்.

ஒரு நிமிடம் மவுனமாக இருந்தவர், "மேனேஜராக உன்னைப் ...பிரமோட் செய்தால், பிராஞ்ச் பொறுப்புகளை உன்னால் சரியாக ...நிர்வகிக்க முடியுமா?" என்று கேட்டார்.

ஒரு நிமிடம் நான் கேட்டது நிஜமா இல்லை கனவா ...என்பது புரியவில்லை. "சார்!" குழப்பம் அடைந்தவளாய் அவர் ...பக்கம் பார்த்தேன்.

என் நிலைமையை உணர்ந்தவர்போல் சிரித்துவிட் ''நான் சரியாகத்தானே கேட்டேன்'' என்றார்.

நான் திக்குமுக்காடி விட்டேன். வாயைத் திறந்து பதி சொல்ல முடியவில்லை. காற்றில் மிதப்பதுபோல் உணர்ந்தேன்

எதிரில் இருந்த ஃபைலை பார்த்துக் கொண்டே, ''ஜூனி மேனேஜ்மெண்ட் லெவலில் பின் தங்கிய வகுப்பைச் சேர் வர்களுக்கு வாய்ப்புத் தர வேண்டும் என்று அரசாங்கத்தில் இருந் நோட்டிஃபிகேஷன் வந்தது. வெளி ஆட்களை எடுப்பதைவி ஏற்கெனவே வேலையில் இருப்பவர்களுக்கு அந்த வாய்ப்பை தரலாம் என்று, நிறுவனம் தேர்ந்து எடுத்தவர்களில் உன் பெ ரும் இருக்கிறது'' என்றார்.

காற்றுப் போன பலூனாக என் உற்சாகம் வடிந்துவிட்டது

''என்ன யோசிக்கிறாய்?''

அவர் கேட்டதற்குப் பதில் சொல்ல ஒரு நிமிடம் யோசி தேன். அப்படிச் சொல்வதால் ஒரு நல்ல வாய்ப்பை இழந்து வி வேன் என்றும், மேலதிகாரிகள் என்னைத் திமிர் பிடித்தவளா எண்ணிவிட வாய்ப்பு இருக்கு என்று தெரிந்ததாலும் மனதில் ப டதைச் சொல்லாமல் என்னால் இருக்க முடியவில்லை.

''சாரி சார்! என் ஜாதியை உத்தேசித்து நீங்க இந்தப் பத உயர்வைக் கொடுப்பதாக இருந்தால், என்னால் அதை ஏற் கொள்ள முடியாது. மன்னித்துக் கொள்ளுங்கள். ஜாதியை ஏ யாகப் பயன்படுத்தி பதவி உயர்வை அடைவதை நான் விரும்ப வில்லை'' தாழ்வான குரலில் திடமாகச் சொன்னேன்.

அடம் பிடிக்கும் குழந்தையைச் சமாதானப்படுத்துவ போல் புன்னகையுடன் பார்த்தார்.

''இப்போ நீ வேலை செய்து கொண்டிருக்கும் பிராஞ் மேனேஜர் என்னுடைய நெருங்கிய உறவினர் என்ற விஷ உனக்குத் தெரியும் இல்லையா?''



தெரியும் என்பதுபோல் தலை அசைத்தேன்.

''அவர் ஒருமுறை பேச்சு வாக்கில் உன்னைப் பற்றிச் சொன் னார். ராக்காயி என்ற பெயர் நன்றாக இல்லை என்றும், மாற்றிக் கொள்ளச் சொல்லி அவர் உனக்கு அறிவுரை வழங்கியபோது பதிலுக்கு நீ சொன்னதை அப்படியே என்னிடம் சொல்லிவிட் டார். 'பெரியவங்க வைத்த பெயர் பற்றி நான் ரொம்பப் பெருமை யாக உணருகிறேன். அதை மாற்றிக்கொள் என்று சொல்வதற்கு உங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது'' என்று முகத்தில் அடித்தாற்போல், எந்தத் தயக்கமும் இல்லாமல் பதில் சொன்னி யாம். உன்னைப் பற்றி விசாரித்ததில் சிறப்பான விஷயம் ஒன்று தெரிய வந்தது. கடந்த பதினெட்டு மாதங்களாக, அதாவது வேலையில் சேர்ந்தது முதல், நீ ஒரு நாள்கூட விடுமுறை எடுத்துக் கொண்டது இல்லை. அது மட்டுமில்லை. ஒரு நாள்கூட லேட்டாக ஆபீசுக்கு வந்தது இல்லை. இந்த அளவுக்கு 'பங்க்சு வாலிடி'யைத் தீவிரமாய்க் கடைபிடிக்க சிலரால்தான் முடியும்.''

வியப்படைந்தவளாய் அவரையே பார்த்துக் கொண்டிருந் தேன்.

''உன்னுடைய சர்டிஃபிகேட்களை வரவழைத்துப் பார்த் தேன். இதுவரை எல்லாப் பரீட்சைகளிலும் நல்ல மதிப்பெண் களையே பெற்று இருக்கிறாய். ஏதாவது ஒரு சாக்கு வைத்து உன்னை டிபார்மெண்டில் போட்டு உன் திறமையைப் பரி சோதிக்க ஏற்பாடு செய்தேன். அக்கவுண்ட்ஸ் டிபார்ட்மெண்டில் மேனேஜர் விடுமுறையில் போனபோது, உன்னைத் தற்காலிக மாய் அந்த இடத்தில் போட்டார்கள். ஆறு மாதமாக அட்ஜெஸ்ட் ஆகாத ட்ரயல் பேலென்ஸை பத்து நாட்களில் சரி செய்து விட் டாய்.''

நான் இன்னும் வியப்பில் இருந்து மீளவில்லை.

''இப்போ புரிகிறதா நான் உன்னை செலக்ட் செய்தது என் ன்று?'' புன்னகை மாறாமல் கேட்டார்.

என் கண்கள் பனித்தன. குரல் தழுதழுக்க, ''தாங்க்யூ சா தாங்க்யூ வெரிமச்'' என்றேன்.

அவர் போனில் யாரையோ வரச் சொல்லி ஆணை பிற பித்துக் கொண்டிருந்தார்.

''வர்றேன். தாங்க்யூ சார்...'' எழுந்து நின்று கொண்டே

என்னை இருக்கச் சொல்லி சைகை செய்தார். அதற்குள் ஒ இளைஞன் உள்ளே வந்தான்.

''வாங்க. மகேஷ். நான் சொன்னது இந்தப் பெண்ணை பற்றித்தான்...'' என்றவர் என் பக்கம் திரும்பி, ''இவர் மிஸ் மகேஷ். இங்கே ஹெச்.ஆர். டிபார்மெண்டில் எக்ஸிக்யூடிவ் இருக்கிறார். மூன்று மாதங்கள் இவரிடம் பயிற்சி எடுத்து கொண்டபிறகு, நீ சொந்தமாகப் பொறுப்புகளை ஏற்றுக் கொள் லாம்'' என்றார்.

வாயடைத்துப் போனவளாய், பிரமிப்புடன் அப்படி நின்று விட்டேன்.

★ ★ ★

3

**எனக்குப்** பெரிய வேலை கிடைக்கப் போகி றது என்று தெரிந்ததும், வீட்டில் நிலவரம் தலை கீழாக மாறிவிட்டது. அம்மாவும் சின்ன அண்ண னும் சுயமாக வந்து என்னை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போனார்கள். அய்யாவும் அன்புடன் குசலம் விசா தார். பெரிய வீடாக வாடகைக்கு எடுத்துக் கொண்டால் அ



வும், அத்தானும் எங்களுடன் சேர்ந்து இருக்கலாம் என்ற பேச்சும் எழுந்தது. ஆச்சரியப்படும்விதமாக அய்யாவின் உடல் நிலை யிலும் நல்ல முன்னேற்றம் தெரிந்தது.

ஆனால் இந்த மாற்றங்கள் எதுவும் எனக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை. பெற்றோருக்கும், குழந்தைகளுக்கும் இடையே இருக்கும் உறவு, அக்காவின் குடித்தனம் பெரிய அண்ணனின் சுயநலம் இதெல்லாம் எனக்கு எரிச்சலை ஏற்படுத்திக் கொண் டிருந்தன. சுயநலமற்ற அன்புக்காக என் மனம் ஏங்கிக் கொண் டிருப்பதை என்னால் உணர முடிந்தது.

இதுவரை வாழ்வதற்காகப் போராடிக் கொண்டே இருந்து விட்டதால், இந்தக் காதல், அன்பு, நேசம் பற்றி நான் அதிகமாக யோசித்ததில்லை. ஒரு தேவை தீரும்போது மற்றொன்று அந்த இடத்தில் முளைத்து விடுமோ என்னவோ!

ஆனால், இந்த நிலையில் நான் ஒரு விஷயத்தை மறக்க வில்லை. பெரிய அண்ணன் ஜாதியை ஆதாரமாக வைத்து வாழ்க் கையை மேம்படுத்திக் கொண்டான். அக்கா தன் இளமையை, அழகை உபயோகித்து வசதிகளைப் பெறுவதில் குறியாக இருந் தாள். இந்த இரண்டு வழிகளையும் பயன்படுத்திக் கொள்ள நான் விரும்பவில்லை. என்னுடைய திறமையைப் பயன்படுத்தி, வாழ்க்கையில் முன்னேற நினைத்தேன். அதற்காகக் கஷ்டப் பட்டு வேலை செய்தேன். படிப்பில் மனதைச் செலுத்தினேன். பெரிய வேலையில் அமர வேண்டுமென்றோ, எதையோ சாதித்து விட வேண்டும் என்ற எண்ணமோ எனக்கு ஏற்படவில்லை. நல்ல இல்லத்தரசியாய், குடும்பத்தை நிர்வாகம் செய்துகொண்டு, கணவனின் அன்பில், ஆதரவில் கரைந்துவிட வேண்டுமென்ற நினைப்பு அடிக்கடி ஏற்படத் தொடங்கியது.

ஒருநாள் மகேஷ் என்னிடம் கேட்டான்.

''உங்க வகுப்பில் யாராவது நல்ல பையன் இருக்கிறானா?''

எனக்குச் சரியாகப் புரியவில்லை. "எதுக்கு?" என்றேன்.

"நான் நாடகங்களை எழுதி, டைரக்ட் செய்து வருகிறேன் என்று உனக்குத் தெரியும் இல்லையா?"

இந்த விஷயம் எனக்கு முன்னாடியே தெரியும். மகேஷ் ஆபீசுக்குச் சரியாக வர மாட்டான். சில நாட்கள் பன்னிரண்டு மணிகூட ஆகிவிடும். முதல் நாள் இரவு ரிகர்ஸல் இருந்ததால் லேட்டாகி விட்டதாக யாரிடமோ சொல்லிக் கொண்டிருந்த போது கேட்டிருக்கிறேன். ஆபீஸ் வேலையைத் திறமையாகவும், நேரத்திற்குள் முடித்து விடுவதால், நிர்வாகத்தில் இருந்து எந்தப் புகாரும் வந்தது இல்லை.

"தொலைக்காட்சியில் ஒரு சீரியல் எனக்கு அலாட் ஆகி இருக்கு. அந்தத் தொடரில் வில்லனாக நடிக்க ஓர் ஆள் வேண்டும். இருபத்தெட்டிலிருந்து முப்பது வயதுக்குள் இருக்கணும்."

"அப்படிப்பட்டவர்கள் கிடைப்பதில் சிரமம் இல்லையே"

"சிரமம் இல்லைதான். ரொம்பக் கஷ்டப்பட்டு அந்தக் காரெக்டரை எழுதி இருக்கிறேன். வெளியில் பார்பதற்கு ஹீரோவாகத் தோற்றமளித்தாலும், உள் சொரூபம் வேறு விதமாக இருக்கும். இந்தக் காரெக்டரில் நடிக்கணும் என்றால் பார்ப்பதற்கு புத்திசாலியாக, கம்பீரமாக, பெண்களிடம் மதிப்பு வைத்திருப்பவனாக இருக்கணும்."

"நாடகத் துறையே எனக்குப் புதுசு. அப்படி இருக்கும் போது காரெக்டருக்குத் தகுந்த ஆளை என்னால் எப்படி கண்டு பிடிக்க முடியும்?"

"நீ மாலைக் கல்லூரியில் படிக்கிறாய் இல்லையா? நான் சொன்னாற்போல் முப்பது வயதுக்குள் இருக்கும் ஆள் யாராவது கிடைக்காமல் போக மாட்டார்கள். கொஞ்சம் முயற்சி செய்து தேடணும். டி.வி. டிராமாவில் நடிப்பதற்கு வாய்ப்பு கிடைக்கும் போது, அதுவும் உன்னைப் போன்ற அழகான பெண் கேட்டால் யாரால் மறுக்க முடியும்?"



எனக்கு நம்பிக்கை வரவில்லை. ஆனால், மறுநாளே அது ான்ற குண நலனைக் கொண்ட இளைஞர் (?) கண்ணில் ட்டார். அவர் எங்க காலேஜில் லெக்சரர் ஆக இருக்கிறார். யது முப்பதுக்குள் இருக்கும். வெளியில் எங்கேயோ வேலை ர்த்துக் கொண்டே இங்கே பார்ட் டைம் லெக்சரர் ஆக வேலை ய்து வருகிறார். வகுப்பில் பாடம் சொல்லிக் கொடுக்கும் ோது ரொம்ப சீரியசாக இருப்பாரே தவிர, வெளியில் வந்து ிட்டால் கலகலப்பாகப் பழகுவதைப் பார்த்திருக்கிறேன். ஒரு கனுக்கு இருக்க வேண்டிய முக வசீகரம் அவரிடம் இருந்தது.

எதைப் பற்றியும் யோசிக்காமல் நேராக அவரிடம் போய்க் ேட்டுவிட்டேன்.

திக்பிரமை அடைந்து விட்டவர் போல் ஒரு நிமிடம் ன்னைப் பார்த்துவிட்டு, "நீங்க என்ன செய்துகிட்டு இருக் ங்க?" என்று கேட்டார்.

நான் வேலை பார்க்கும் கம்பெனியின் பெயரைச் சொல்லி, "பிராஞ்ச் மேனேஜர் டிரைனியாக இருக்கிறேன்" என்றேன்.

"அப்பொ! இதென்ன கேடுகாலம் உங்களுக்கு?" என் முகத்தைக் கூர்ந்து நோக்கிக்கொண்டே கேட்டார்.

கோபத்தில் என் முகம் சிவந்துவிட்டது. மாலை கல்லூரி களில் மாணவர்களும், லெக்சரர்களும் கிட்டத்தட்ட சம வயதின ாக இருப்பதால், பக்தி, மதிப்புகளைவிட உறவுமுறை வேறு விதமாக அதாவது நட்பு அளவில், உரிமையுடன் இருக்கும்.

"நாடகத்தில் நடிக்கிறவங்க எல்லோரும் கேடுகாலம் வந்த வங்க இல்லை" கோபமாகச் சொன்னேன்.

"முதலில் பட்டப் படிப்பை முடிக்கிற வழியைப் பாரு. பிராஞ்ச் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளப் போகிறாய். வேலை யில் கவனத்தைச் செலுத்த வேண்டியிருக்கும்; இந்த நாடகம், டி.வி. சமாசாரங்களை விட்டு விட்டு, படிப்பு வேலை மீது உன்

மனதைச் செலுத்து. உன்னைவிடப் பெரியவன் என்ற முறையில் நான் சொல்ல விரும்பும் அறிவுரை இதுதான்.''

''உங்க அறிவுரைக்கு ரொம்ப நன்றி'' வேகமாக அங்கிருந்து நகர்ந்து விட்டேன்.

மறுநாளே மகேஷிடம் சொன்னேன், ''நீங்க கேட்டாற் போலவே ஒரு ஆள் கிடைத்தான். பார்த்ததுமே அந்த காரெக்டருக்குத் தகுந்த நபர் என்று தோன்றியது'' என்று நடந்ததை விவரமாகச் சொன்னேன்.

''உங்களிடம் அப்படிப் பேசிவிட்டானா? என்னதான் சரியான நபராக இருந்தாலும், உங்களிடம் இப்படிப் பேசியவனை நாடகத்துக்கு எப்படி எடுத்துக் கொள்ள முடியும்?''

''அவர் என்னை ஏதோ சொன்னார் என்பதற்காக நீங்க இந்த முடிவுக்கு...''

நான் இன்னும் முடிக்கக்கூட இல்லை. இடைமறிப்பது போல் மகேஷ் சொன்னான், ''உன்னைச் சொன்னால் என்ன என்னைச் சொன்னால் என்ன? இரண்டும் ஒன்றுதான்.''

மகேஷ் அப்படிச் சொன்னது எனக்கு ரொம்ப பிடித்திருந்தது. எப்படியாவது அவனுக்கு உதவி செய்ய வேண்டுமென்று நினைத்துக் கொண்டேன்.

அந்த லெக்சரர் பெயர் ஸ்ரீகாந்த். மறுநாள் வகுப்பை விட்டு வெளியேறும்போது வழி மறித்து என்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

''ஐயாம் சாரி! நேற்று நான் உன் மனதைப் புண்படுத்தி விட்டேன்.''

''இப்பொ மன்னிப்புக் கேட்பதால் என்ன பிரயோஜனம்?''

''என்னுடைய திருப்திக்காக.''



''மன்னிப்புக் கேட்டுவிட்டால், என் மனதில் பட்ட காயம் ஆறிவிடுமா என்ன? ஆனாலும், நீங்க ரொம்ப ஹார்ஷாகப் பேசி விட்டீர்கள்.''

''போய் கங்கையில் குதித்துவிடு என்று நான் உன்னைக் கோபித்துக் கொண்டேன் என்று வைத்துக்கொள். கங்கையில் குளிப்பதால் உனக்கும் புண்ணியம் கிடைக்கும் என்பதுகூட என்னுடைய எண்ணமாக இருக்கலாம் இல்லையா? ஒவ்வொரு வார்த்தைக்கும் சூழ்நிலையைப் பொறுத்து வெவ்வேறு அர்த்தங்கள் இருக்கும். ஒரு பக்கம் வேலையை, மறுபக்கம் படிப்பை வைத்துக் கொண்டு இந்த நாடகங்கள் எதுக்கு என்று சொல்வது தான் என்னுடைய உத்தேசம். அஃப் கோர்ஸ்! கொஞ்சம் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்திவிட்டேன். வேணும்னா நாடகப் பாணியிலேயே மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். தாங்கள் என்ன தண்டனைக் கொடுத்தாலும் சரி, முழு மனதுடன் ஏற்றுக் கொள்கிறேன் அம்மணி. நாடகத்தில் நடிக்க மட்டும் சொல்லி விடாதீர்கள்'' சிரித்துக் கொண்டே சொன்னார்.

அவர் அப்படிக் கிண்டல் செய்வதுபோல் பேசியதைக் கேட்டு எனக்கு உடல் பற்றி எரிவதுபோல் இருந்தது. பிடிவாதம் அதிகரித்தது, ''அப்பொ எனக்கு ஒரு கப் ஐஸ்கிரீம் வாங்கித் தரணும்'' துடுக்காகச் சொன்னேன்.

''மன்னிக்கணும். என் மனைவியைத் தவிர வேறு பெண்ணுடன் ஐஸ்க்ரீம், சாரி, உ எதுக்கும் போகக்கூடாது என்ற கொள்கையை வைத்துக் கொண்டிருக்கிறேன். இன்னும் வேறு ஏதாவது கேள். நாடகத்தில் வேஷம் போடுவதைத் தவிர.''

''உங்க ஸ்கூட்டரில் எங்க வீடு வரைக்கும் எனக்கு லிஃப்ட் கொடுங்க.''

''மறுபடியும் மன்னிக்கணும். எங்க அம்மாவை, தங்கையை, மனைவியாக வரப் போகிறவளைத் தவிர வேறு எந்தப் பெண்

னுக்கும் லிஃப்ட் கொடுக்கக் கூடாது என்பதும் என் கொள்கைகளில் ஒன்று.''

கொஞ்சம்கூட தயக்கம் இல்லாமல் அவர் அப்படி சொன்னபோது, எரிகிற எண்ணெயில் எண்ணெய் வார்த்தாற் போல் என்னுடைய கோபம் அதிகரித்தது.

''உங்களுக்கு மனைவியாக வரப் போகிறவளுடன் என்ன செய்ய நினைத்துக் கொண்டீர்களோ, மற்றவர்களுக்காக எதை ஒதுக்கி இருக்கிறீர்களோ ஒரு லிஸ்ட் தனியாகக் கொடுத்தால் அதில் ஒன்றை டிக் செய்கிறேன்'' சூடாகச் சொல்லிவிட்டேன்.

என்னுடைய கோபம் அவரை எந்த விதமாகவும் பாதித்ததாகத் தெரியவில்லை.

''திருமணம் ஆன பிறகு உன் கணவர் மற்ற பெண்களுடன் எதையெல்லாம் செய்யக்கூடாது என்று நினைக்கிறாயோ அந்த காரியங்களைச் செய்ய மாட்டேன்.''

இழுத்து கன்னத்தில் ஒரு அறை விட்டாற்போல் இருந்தது. மவுனமாக இருந்துவிட்டேன்.

சூழ்நிலையை எளிதாக்க முயன்று கொண்டே, ''சீக்கிரமாகக் கேட்டுவிடணும். இல்லாவிட்டால் என்னை மன்னித்து விட்டதாக எடுத்துக் கொண்டு விடுவேன்'' என்றார்.

''அப்பொ நாடகத்தில் நடிக்க ஒப்புக் கொள்ளுங்கள்.''

திடுக்கிட்டாற்போல் பார்த்துவிட்டு, ''அதை மட்டும் கேட்க வேண்டாம் என்று சொன்னேனே!'' என்றார்.

''கடைசியாகச் சொன்னபோது அப்படிச் சொல்லவில்லையே! சாவித்திரி–சத்யவான் கதையில் யமன் ஏமாந்தாற் போல் ஏமாந்து போய் விட்டீர்களே...'' கிண்டல் செய்வது போல் சொன்னேன்.



பதில் எதுவும் சொல்லாமல் சற்று நேரம் மவுனமாக இருந்து விட்டார். நான் இந்த வாய்ப்பை நழுவவிடுவதாக இல்லை.

''எனக்கு மட்டும் திருமணம் ஆகியிருந்தால், கணவர் ஏதாவது நாடகத்தில் நடிப்பதாகச் சொன்னால், 'என்ன கேடு காலம் வந்துவிட்டது உங்களுக்கு?' என்று சத்தியமாகக் கேட்க மாட்டேன். கங்கையில் குதிப்பதற்கும், குளிப்பதற்கும் இருக்கும் வித்தியாசத்தைப் பற்றி விவாதம் செய்ய மாட்டேன். என்னுடைய கொள்கைகளைப் பற்றி ஒப்புவித்துக் கொண்டு எதிராளியை மணிக்கணக்காக இப்படி நடுத்தெருவில்...''

மூச்சு விடாமல் சொல்லிக் கொண்டே போனவளை தடுத்து நிறுத்தினார்.

''போதும்! தாயே நிறுத்திக் கொள். நாடகத்தில் நடிக்க ஒப்புக் கொள்கிறேன். இனி என்னை மன்னித்துவிடு'' பயந்து விட்டாற்போல் நடித்தார்.

* * *

மகேஷ் ஒருமனதாக கவனம் செலுத்தி வேலை செய்வது எனக்கு ரொம்பப் பிடித்திருந்தது. நாடக ரிகர்சல் தொடங்கும் முன் பூஜை நடத்தினார்கள். நாடகத்துக்காக மகேஷ் ஒரு மாதம் விடுமுறை எடுத்துக் கொண்டதால், என்னுடைய பயிற்சிக் காலமும் மேலும் ஒரு மாதம் நீடிக்கப்பட்டது.

இது நடந்த இரண்டு நாட்கள் கழித்து, மகேஷும் ஸ்ரீகாந்தும் எங்க வீட்டுக்கு வந்தார்கள்.

''குடி முழுகி விட்டது'' மகேஷ் தலையில் கையை வைத்துக் கொண்டே சொன்னான்.

''என்ன ஆச்சு?'' பதட்டத்துடன் கேட்டேன்.

''ஹீரோயினுக்கு நான்காவது மாதமாம். அட்வான்ஸ் வாங்கிய பிறகு நிதானமாகச் சொல்கிறான்.''

''அதனால் என்ன? பார்த்தால் தெரியவில்லையே'' என்றேன்.

''போதுமே! இரண்டாவது ஷெட்யூலை மூன்று மாதங்கள் கழித்து வைத்திருக்கிறேன். முதலிரவு காட்சியை அப்போ எடுத்துக் கொள்ளலாம்னு திட்டம் போட்டிருந்தேன். அப்போ ஹீரோயினுக்கு ஏழாவது மாதம் ஆகிவிடும்'' எரிச்சலுடன் சொன்னான் மகேஷ்.

''அதனால் என்ன? அவளை எடுத்துவிட்டு வேறு பெண்ணை செலக்ட் செய்யலாமே'' காபி டம்ளரை கையில் கொடுத்துக் கொண்டே சொன்னேன்.

''ஒண்ணு பிடிக்காவிட்டால் வேறு ஒண்ணை செலக்ட் செய்ய இது ஒன்றும் புடவை விவகாரம் இல்லை. அந்த ஹீரோயினைப் பற்றி எப்படியெல்லாம் ஊகித்து வைத்திருந்தேன் தெரியுமா?'' மகேஷ் சட்டென்று கண்களை மூடிக் கொண்டு கனவு உலகில் மூழ்கிவிட்டான்.

நாங்க இருவரும் பதட்டமடைந்து விட்டோம்.

''மகேஷ்! மகேஷ்!'' தட்டி எழுப்ப முயன்றேன்.

''என்னால் இந்த ஏமாற்றத்தைத் தாங்கிக் கொள்ள முடியாது. இந்த உலக பந்தங்களைத் துறந்து எந்தக் காட்டுக்கோ தவம் புரியப் போய் விடுவேன்'' கண்களைத் திறக்காமலேயே மகேஷ் சொன்னான்.

''கொஞ்சம் ஓவர் ஆக்ஷனாக இருக்கும் போலிருக்கு மகேஷ். கண்களைத் திறந்து ஒரு தடவை யோசித்துப் பார்'' என்று ஸ்ரீகாந்த் அறிவுரை கூறினார்.

நான் குழம்பிப் போனவளாய் இருவரையும் மாறி மாறி பார்த்தேன்.

''உண்மையில் விஷயம் என்னவென்றால் அந்தக் காரெக்டரில் நீ நடித்தால் நன்றாக இருக்கும் என்பது எங்களுடைய



அபிப்பிராயம்...'' மோன நிலையிலிருந்து எழுந்து கொண்ட முனிவர்போல் கண்களைத் திறந்தான் மகேஷ்.

வீலென்று கத்தப் போனவள், கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு, ''நடக்காத காரியம்!'' உரத்த குரலில் சொன்னேன்.

''ஏன் நடக்காது?''

''நானாவது... ஹீரோயினாக நடிப்பதாவது!''

''ஏன்? அது ஒன்றும் விபச்சாரம் இல்லையே?'' என்றார் ஸ்ரீகாந்த்.

சரேலென்று தலை உயர்த்தி அவர் பக்கம் பார்த்தேன். கோபத்துடன் ஏதோ சொல்ல முற்படுவதற்குள் ஸ்ரீகாந்த் சொன்னார்.

''நீ என்னைக் கேட்டபோது நடிக்க நான் மறுத்துவிட்டேன். அப்பொ நீயும் இந்த மாதிரி ஏதோ ஒரு வார்த்தையைச் சொன்னதாக நினைவு...''

என்னுடைய ஆவேசம் அடங்கிவிட்டது. அன்று ஸ்ரீகாந்த் சொன்னது என் மனதைக் காயப்படுத்தினாலும், நிதானமாக யோசித்துப் பார்க்கும்போது அதில் உண்மை இருப்பது புரிந்தது.

மகேஷ் இடைபுகுந்து சொன்னான், ''அந்தப் பெண்ணால் நடிக்க முடியாமல் போனதும் நல்லதாகிவிட்டது. அந்தக் காரெக்டருக்கு நீ ரொம்பப் பொருத்தமாக இருப்பாய். இப்பொ காலேஜுக்கு விடுமுறைதானே. ஹீரோயின் சம்பந்தப்பட்ட காட்சிகளை மாலை நேரங்களில் வைத்துக் கொள்வோம். அந்தப் பெண்ணுக்குக் கொடுப்பதாக இருந்த இருபத்தைந்தாயிரத்தை உனக்கே தந்து விடுவோம்.''

நான் இருக்கும் நிலைமைக்கு இருபத்தைந்தாயிரம் ரூபாய் என்பது கணிசமான தொகைதான். விடுமுறை நாட்களில் செய்வதற்கும் ஒன்றும் இல்லாததால் நடிப்பதற்கு ஒப்புக் கொண்டேன்.

* * *

நான் நடிக்கப் போவதாகத் தெரிந்ததும், ஏதோ கொலைக் குற்றம் செய்துவிட்டதுபோல் அம்மா வாய்க்கு வந்தபடி கத்தி னாள். அக்காவும் தன்னுடைய பங்கிற்குக் கத்தித் தீர்த்தாள்.

''போயும் போயும் உன் புத்தி இப்படிப் போவானேன், ஏதோ படித்துக்கொண்டு வேலை செய்கிறாய் என்று நினை தால், முகத்துக்கு அரிதாரம் பூசிக்கிட்டு நடிக்கப் போகிறாயா அங்கே யாரும் ஒழுங்காக இருக்க மாட்டார்களாமே! குடும்ப மானத்தைக் கப்பலேற்றத்தான் நீ பிறந்திருக்கிறாய்...'' அக்கா திட்டியபோது வியப்படைந்து விட்டவள்போல் பார்த்தேன்.

'அப்படிப்பட்ட காரியங்கள் விளக்கு வெளிச்சத்தில் நடக் காது. இருட்டில்தான் நடக்கும்...' நாக்கின் நுனிவரை வந்து விட்ட சொற்களைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டேன்.

நிறைய பணம் வரும் என்று கேள்விப்பட்டதும், அவர்க ளுடைய எதிர்ப்பு பெரும்பாலும் குறைந்து விட்டது. அந்தவித மாக நான் காமெராவின் முன்னால் நின்றேன். எதிர்பாராத சூழ் நிலையில், அவர்களுடைய வேண்டுகோளுக்கு மறுப்புச் சொல்ல முடியாத தயக்கத்தினால், நடிக்க வந்தேனே தவிர, என்னுடைய லட்சியமெல்லாம் படிப்பிலும், புதிதாக ஏற்கப் போகும் வேலையிலும்தான் இருந்தன.

அந்தத் தயக்கம்தான் என் வாழ்க்கையில் புதிய திருப்பு முனையை ஏற்படுத்தப் போகிறதென்று அந்த நிமிடம் எனக்குத் தெரியாது.''

★ ★ ★

மகேஷ் எழுதிய அந்தக் கதை நன்றாகத்தான் இருந்தது. ஏழை வீட்டுப் பையனும், பணக்கார வீட்டுப் பெண்ணும் காத லித்துத் திருமணம் செய்து கொள்வார்கள். துரதிர்ஷ்டவசமாக அந்தப் பையன் ஒரு விபத்தில் இறந்துபோய் விடுகிறான்.



அந்தப் பிரிவைத் தாங்க முடியாத அந்தப் பெண் தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்வாள். ஒரு டாக்டர் அவளைக் காப்பாற்றுவார். அவளைத் திருமணம் செய்து கொள்ள விருப்பு வதாகச் சொல்லுவார். அவளுக்கு அதில் விருப்பம் இல்லாவிட் டாலும், பெற்றோரின் திருப்திக்காக அவரைக் கல்யாணம் செய்து கொள்கிறாள். திருமணம் ஆனபிறகு அந்த டாக்டருக்கு எல்லாக் கெட்டப் பழக்கங்களும் இருக்கு என்றும், சொத்துக் காகத்தான் தன்னைத் திருமணம் செய்து கொண்டார் என்றும் தெரிந்து கொள்கிறாள். அவளுடைய பெற்றோர்கள் இறந்து விடு கிறார்கள். கணவன் அவளைத் துன்புறுத்துவது நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போகிறது. இந்தச் சமயத்தில் நல்ல இதயம் படைத்த ஓர் இளைஞன் அவளுக்கு அறிமுகமாகிறான். தன்னுடைய நேசக் கரத்தை அவளுக்காக நீட்டுகிறான். அவனிட மிருந்து பெற்ற மாரல் சப்போர்ட்டில், அவள் கணவனை எதிர்த்துப் போராடுவாள். கோர்ட்டில் கணவன் செய்த அநியாயங்களை நிரூபித்து, அவனுக்குத் தண்டனை கிடைக்கும்படிச் செய்கிறாள். தன்னைப் போன்று துர்பாக்கிய நிலையில் இருக்கும் பெண் களின் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்காக, உதய சூரியனை நோக்கி நடந்து போகிறாள். இதுதான் கதை.

''இவ்வளவு முட்டாள்தனமான கதையை நான் இதுவரை கேட்டதில்லை... படித்ததும் இல்லை'' ஸ்ரீகாந்த் சொன்னார்.

''இந்தக் கதையில் முட்டாள்தனமாய் என்ன இருக்கு?'' தீவிரமாய்ப் பார்த்துக் கொண்டே கேட்டேன்.

''காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டவன் இறந்து போனால், கதாநாயகி தற்கொலை செய்து கொள்ள முயற்சிப்பா னேன்?''

''அவர்களுடைய காதல் அவ்வளவு பலமானதாக இருப்ப தால். நீங்க யாரையாவது காதலித்து இருந்தால் அந்த விஷயம் உங்களுக்குப் புரிந்திருக்கும்.''

''அடுத்தவர் இறந்து போனால், நாமும் இறந்து போவது தான் காதல் என்றால் செத்தாலும் நான் யாரையும் காதலிக்க மாட்டேன்'' ஸ்ரீகாந்த் முகத்தில் அடித்தாற்போல் சொன்னார். ''நல்ல வேளை! இந்த விஷயம் முன்னாடியே சொல்லி விட்டாய். எனக்கு மனைவியாக வரப் போகும் பெண்ணைக் காதலிக்கணும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். நாளைக்குத் திருமணம் ஆனால், முதல் காரியமாக அவளிடமும் சொல்லணும், என்னைக் காதலித்துவிடாதே என்று. தப்பித் தவறி என்னைக் காதலித்து விட்டால், நான் இறந்து போனால் அவளும் உடன் கட்டை ஏற வேண்டியிருக்கும் இல்லையா! அதனால் என்னைக் காதலிக்க வேண்டாமென்று முதலிரவிலேயே கச்சிதமாகச் சொல்லிவிட வேண்டும்.''

அந்தப் பேச்சில் இருந்த எகத்தாளம் புரிந்தபோது என் முகம் மேலும் சிவந்துவிட்டது. ''ரோமியோ-ஜூலியட், அம்பிகாபதி அமராவதி கதைகளை இதுவரை கேட்டதே இல்லையா?'' என்று கேட்டேன்.

''தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்குத் துணிந்து விட்ட அந்தப் பெண், மறுபடியும் எப்படிப் பிழைத்துக் கொண்டாளாம்?''

''வயதான பெற்றோருக்காக...''

''ஓஹோ! காதலனிடம் வைத்திருந்த காதல் தற்கொலைக்குக் காரணமானதுபோல், பெற்றோரிடம் வைத்திருக்கும் அன்பு அவளை வாழ்க்கையின் பக்கம் இழுக்கிறது. அப்படித் தானே... ப்ச்! எத்தனைக் கஷ்டம் வந்துவிட்டது அவளுக்கு! அடடா! கேட்க மறந்து விட்டேனே. கடைசியாக வந்த ஆளுடன் புனிதமான நட்பு என்று புதுக் கதை ஏதோ வருகிறதே, அந்த விஷயம் என்ன?''

''அய்யா... மஹா பிரபோ... எனக்குத் தெரியாது. உங்களுக்கு நடிக்கணும் என்று தோன்றினால் நடிங்க. இல்லா





ட்டால் விடுங்க. கதை பற்றி ஏதாவது சந்தேகங்கள் இருந்தால் கேஷிடம் கேட்டுக் கொள்ளுங்கள்'' எரிச்சலுடன் சொன்னேன்.

''வேண்டாம்... வேண்டாம்... யமதர்மராஜன் சாவித்திரிக்கு வரம் கொடுத்து மாட்டிக் கொண்டதுபோல், நடிப்பதாக உங்களிடம் மாட்டிக் கொண்டுவிட்டேன்'' என்றவர் முகவாய்க்கட்டையைத் தடவிக்கொண்டே, ''அந்தப் பதிமூன்றாவது எபிசோட் முழுவதும் ஒரே ஷாட்... அப்படித்தானே...'' என்றார்.

ஒன்றும் புரியாமல் அவரைப் பார்த்தேன். ''முழு எபிசோட் ஒரே ஷாட்டில் எப்படி எடுக்க முடியும்?''

''கதையின் முடிவில் நீங்கள் உதயமாகும் சூரியனை நோக்கிப் போவீங்க இல்லையா... எபிசோட் முடியும் வரை நடந்து போய்க் கொண்டே இருப்பீங்க. அதற்குள் மேற்குப் பக்கம் சூரியன் அஸ்தமனம் ஆகிவிடும்.''

இழுத்து கன்னத்தில் ஓர் அறை விடவேண்டுமென்ற கோரிக்கையைப் பலவந்தமாகக் கட்டுப்படுத்திக் கொண்டு அங்கிருந்து நகர்ந்து விட்டேன்.

கதை பற்றி ஸ்ரீகாந்த் வெளியிட்ட அபிப்பிராயத்தை மகேஷிடம் சொல்லவில்லை. அவர்கள் இருவருக்கும் இடையே கருத்து வேற்றுமை ஏற்படுத்துவது என் உத்தேசம் இல்லை.

''கடைசி சீனில் கதாநாயகி அப்படிச் சூரியனை நோக்கி நடந்து போவது சரியில்லையோ என்று நினைக்கிறேன் மகேஷ்...'' என்றேன்.

''வெளிச்சத்துக்கு மறுபெயர் சூரியன். அந்தகாரத்தில் நலிந்து போய்க் கொண்டிருக்கும் பெண் இனம் வெளிச்சத்தை நோக்கிப் பயணிப்பதைத்தான் சிம்பாலிக் ஆக அப்படி அமைத்தேன்'' மகேஷ் ஆவேசமாகச் சொன்னான்.

''நிஜம்தான். இந்த விஷயம் இதுவரைக்கும் என் புத்திக்கு எட்டவில்லை'' மன்னிப்பு கேட்கும் தொனியில் சொன்னேன்.

மகேஷ் என்னைச் சந்தேகமாகப் பார்த்தான். ''இந்தக் கதை பற்றி உனக்கு மாறுபட்ட கருத்து ஏதோ இருப்பது போல் தோன்றுகிறது'' என்றான்.

''ச்ச! ச்ச! அப்படி எதுவும் இல்லை'' மனப்பூர்வமாய் சொன்னேன்.

ஆனால், மகேஷ் அதைப் பொருட்படுத்தியதாகத் தெரி வில்லை.

''நாடகத்தில் இருக்கும் ஒவ்வொரு வசனமும் என் இதயத்தின் ஆழத்திலிருந்து எழுதப்பட்டவை. என்னுடைய அப்பா, அம்மாவை எப்படி ஹிம்சித்து வந்தாரென்று பிரத்யட்ச மாய் நான் பார்த்திருக்கிறேன். சமுதாயத்துக்குப் பயந்து, நான்கு சுவர்களுக்கு நடுவில் பெண் என்பவள் எப்படி மறுகிக் கொண் டிருக்கிறாள் என்று எனக்குத் தெரியும். உண்மையான அன்புக் காக அவள் தவித்துக் கொண்டிருப்பதை என்னால் உணர முடியும்.''

தன்னிச்சையாய் என் கண்கள் பனித்தன. மகேஷ் சொன்ன முற்றிலும் உண்மை. சமுதாய விழிப்புணர்வுடன் எழுத்தாளர்கள் எழுதும் கதைகளை, படைக்கும் காவியங்களைச் சாதாரணமா வர்களால் புரிந்துகொள்ள முடியாது. விரைவில் வெளிவர இருக் கும் இந்த நாடகத்தைப் பார்த்துச் சிலராவது பயன் பெறுவது நிச்சயம்.

இந்த எண்ணம் வந்ததும், என்னுடைய காரெக்டரை புரிந்து கொண்டு, நடிப்பில் மேலும் கவனம் செலுத்தினேன். டாக்டரா ஸ்ரீகாந்தும், நண்பனாக மகேஷும் நடித்துக் கொண்டிருந்தார்கள் பத்து நாட்கள் எந்த இடையூறும் இல்லாமல் தொடர்ந்து ஷூட் டிங் நடந்தது. பதினோராவது நாள் ஹெட் ஆபீசிலிருந்து எனக்கு அழைப்பு வந்தது.

''உட்கார்'' என்றார் மேனேஜிங் டைரக்டர். ''ஹெட் ஆபீ சிலிருந்து அனுமதியைப் பெறாமல் நாடகங்களில் நடிப்பது



போன்ற வெளி வேலைகளைச் செய்யக்கூடாது என்று உனக்குத் தெரியாதா?'' யாரோ போட்ட மொட்டைக் கடுதாசியை என் பக்கமாய் தள்ளிவிட்டுக் கொண்டே கேட்டார்.

எதிர்பாராத இந்தப் பரிணாமத்துக்கு நான் திகைத்து விட் டேன்.

''அது வந்து...'' என்று விளக்கமளிக்க முற்பட்ட என்னை, ஜாடை காட்டி நிறுத்தினார்.

''புதிதாக உன்னிடம் பொறுப்புகளை ஒப்படைத்தால், அதைத் திறமையாக நிர்வகிப்பதை விட்டு விட்டு, விடுமுறை எடுத்துக் கொள்வதும், ஆபீசுக்கு லேட்டாக வருவதும், இப்படிப் பொறுப்பில்லாமல் செயல்படுகிறாய் என்று உன்மீது புகார் வந்திருக்கிறது. செய்த தவறுக்குத் தண்டனையாக உனக்குக் கொடுத்த பிரமோஷனை ரத்து செய்ய முடிவு செய்திருக்கிறோம். இனி நீ போகலாம்.''

தலையைக் குனிந்து கொண்டு மவுனமாக வெளியில் வந்து விட்டேன். சில நாட்களுக்கு முன்பு இதே இடத்தில் காற்றில் மிதப்பதுபோல் உற்சாகமாக உணர்ந்தேன். இன்று... அதற்கு நேர்மாறான உணர்ச்சியை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். வாழ்க்கை என்றாலே ஏற்றமும் இறக்கமும்தானோ!

* * *

கண்ணாடி ஜன்னல் கதவு சில்லென்று உடைந்தது. மகேஷ் கையில் கண்ணாடித் துண்டுகள் குத்தி ரத்தம் வந்து கொண்டிருந் தது. ஹெட் ஆபீசில் நடந்த விஷயத்தைக் கேட்டதும் மகேஷ் செய்த காரியம் அது. அவன் அப்படி ஆவேசமாக நடந்து கொள்வான் என்று எதிர்பார்க்கவில்லை. சட்டென்று அவனுடைய கையைப் பற்றிக் கொண்டேன்.

''என்ன மகேஷ்? ஏன் இப்படிச் செய்தாய்?'' பதட்டம் அடைந்தவளாகக் கேட்டேன்.

''ஹெட் ஆஃபீசிலிருந்து அனுமதி வாங்க வேண்டுமென்ற விஷயத்தை எப்படி மறந்து போனேன்? எனக்காக முன்னாடியே அனுமதி பெற்றுவிட்டேன். இந்தச் சின்ன விஷயத்தை மறந்து போய் ஒளிமயமான உன் எதிர்காலத்தை நாசமாக்கி விட்டேன். என்னைப் போன்ற முட்டாள் வேறு யாரும் இருக்க மாட்டார்கள்.''

''இப்பொ என்ன நடந்துவிட்டது. இன்று இல்லாவிட்டால் இன்னொரு நாள் பிரமோஷன் கிடைக்கும். அப்படி கிடைக்காவிட்டாலும் இந்தக் கம்பெனியை விட்டு விட்டு வேறு வேலையைத் தேடிக் கொள்ளவும் என்னால் முடியும். கஷ்டங்கள் வந்தபோதுதான் தைரியமாக இருக்கணும். நம் ட்ராமாவின் மெஸேஜ் அதுதானே. அப்படி இருக்கும்போது சின்ன கஷ்டம் வந்து விட்டதற்கு இப்படி உணர்ச்சி வசப்படுவானேன்?'' அவன் உள்ளங்கையில் குத்தியிருந்த கண்ணாடித் துண்டுகளைக் கவனமாக எடுத்துக் கொண்டே சொன்னேன்.

மகேஷ் என் மடியில் தலையை வைத்துக் கொண்டு ரொம்ப நேரம் அழுதான். அதன் பிறகு நாங்கள் இருவரும் நிறைய பேசிக் கொண்டோம். எனக்கு ஒரு விஷயம் புரிந்தது. ஆண்களும் தனிமையினால் துன்பம் அனுபவித்துக் கொண்டிருப்பார்கள் என்று.

விஷயம் தெரிந்ததும் ஸ்ரீகாந்த் சொன்னான், ''நான் தான் முன்னாடியே சொன்னேனே?''

''என்ன சொன்னீங்க?''

''விநாச காலே விபரீத புத்தி. அதாவது கெட்டகாலம் வந்தால் விவேகத்தை இழந்துவிடுவோம்.''

''செத்துப் போன பாம்பை இன்னும் அடிக்க வேண்டாம்.''

''இல்லை... இன்னொரு அடி விழுவதற்கு முன்பே சுதாரித்துக்கொள் என்று எச்சரிக்கிறேன்.''



''உங்க உத்தேசம்தான் என்ன?''

''காலேஜுக்கு விடுமுறை கிடைத்தால் ராப்பகல் கஷ்டப்பட்டு உன் பிராஞ்சைப் பத்தி மேலும் விவரங்களைத் தெரிந்து கொண்டிருக்கலாம். பிராஞ்ச் மேனேஜர் என்றால் பொறுப்புகள் ரொம்ப ஜாஸ்தி. ஜாதி அடிப்படையில், எந்த முயற்சியும் இல்லாமல் கிடைத்து விட்டதால், உனக்கு அதனுடைய மதிப்பு தெரியவில்லை. உங்க எம்.டி.யைச் சந்தித்து வாழ்த்துக்கள் தெரிவிக்க வேண்டும். உனக்குச் சரியான பாடம் கற்பித்தார்.''

''நிறுத்துங்கள்'' கத்திவிட்டேன்.

''ஏன்? உன் அடிமனதில் இருப்பதைத் தொட்டு விடுவேன் என்று பயமாக இருக்கிறதா? ஒரு தடவை பிரமோஷன் வரப் போவதாகச் சொன்னதும் வந்து விட்டதாகவே முடிவு கட்டி விட்டாய். ஒரே சமயத்தில் இரண்டு படகுகளில் பயணம் செய்ய முடியாது என்ற விஷயத்தை மறந்துவிட்டாய். ஐடென்டிடி கிரைஸிஸில் அதாவது மற்றவர்களால் கவனிக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் உன் அடிமனதில் இருந்திருக்க வேண்டும். அதோடு பணமும் கிடைக்கும் என்றதும் முன் பின் யோசிக்கும் திறமையை இழந்துவிட்டாய்.''

சரேலென்று எழுந்து கொண்டேன். ''நான் உங்களை வெறுக்கிறேன்'' என்று சொல்லிவிட்டு வேகமாய் அந்த இடத்தைவிட்டு வெளியேறினேன். அவர் சொன்னது எல்லாமே உண்மையாக இருக்கலாம். அது வேறு விஷயம். தடிக்க ஒப்புக் கொள்ளும் வரை, என்னை விடாமல் துரத்தியவர்கள்... இன்று இப்படிப் பேசியது எனக்கு மேலும் வருத்தத்தை ஏற்படுத்தியது.

* * *

என்னுடைய பதவி உயர்வு ரத்து செய்யப்பட்ட விஷயம் ஆஃபீசில் எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. மறுபடியும்

பழைய சீட்டில் உட்கார்ந்து கொண்டேன். எல்லோரும் என்னைப் பார்த்து மறைவில் கேலியாகச் சிரித்துக் கொள்வதை என்னால் உணர முடிந்தது. வீட்டிலும் நிலைமை தலைகீழாக மாறி விட்டது. எல்லோருடைய நடத்தையிலும் மாறுதல் பளிச்சென்று தெரிந்தது. இருபத்தைந்தாயிரம் வந்தால் எப்படிச் செலவு செய்யலாமென்று திட்டம் போட்டுக் கொண்டிருந்தவர்கள் இன்று நான் ஏதோ செய்யக் கூடாத தவறைச் செய்துவிட்டதாகக் குத்திக் காண்பித்தது எனக்கு விசித்திரமாகத் தோன்றவில்லை.

மறுநாள் ஸ்ரீகாந்த் என் அருகில் வந்து, ''சாரி! நேற்று நான் அப்படிப் பேசி இருக்கக்கூடாது'' என்றார்.

''சொல்வதையெல்லாம் சொல்லிவிட்டு இப்போ மன்னிப்பு கேட்டுக் கொள்வானேன்?''

''அதனால் என்ன? தவறு செய்துவிட்டேன் என்று உணர்ந்து கொண்டதும் மன்னிப்பு கேட்டுக் கொள்வதில் தவறு இல்லையே! நடிப்பதற்காக மகேஷ் உங்களைக் கேட்டபோது, பக்கத்தில் நானும் இருந்தேன் இல்லையா!''

''நானும் அதைத்தான் நினைத்துக் கொண்டேன்.''

''என்னிடம் இருக்கும் பலவீனம் அதுதான். எதிராளியிடம் எனக்குப் பிடிக்காத விஷயம் தென்பட்டாலோ, அவர்களுடைய போக்கு சரியில்லை என்று என் மனதுக்குப் பட்டாலோ எரிச்சல் வந்துவிடும். அவர்கள் மனதைக் காயப்படுத்தும் எண்ணம் இல்லா விட்டாலும், கடினமாகப் பேசிவிடுகிறேன். இந்தப் பலவீனத் தில் இருந்து விடுபட முயற்சி செய்கிறேன்.''

அதற்குள் கொஞ்சம் சமாளித்துக் கொண்டு விட்டேன். ''நீங்கள் சொல்வதில் உண்மை இருப்பது தெரிந்தாலும், அதை ஏற்றுக் கொள்ள முடியாமல் ஈகோ என்னைத் தடுத்துவிட்டது'' என்றேன்.



நாங்கள் இருவரும் பேசிக் கொண்டிருக்கும்போதே மகேஷ் ...ப் பக்கமாக வந்தான். ஸ்ரீகாந்த் கிளம்பிப் போவதும், அந்தப் ...கமே பார்த்துக் கொண்டு நெற்றியைச் சுளித்தான்.

''ஸ்ரீகாந்த் என்ன சொல்லிக் கொண்டிருந்தான்?'' என்று கேட்டான்.

நடந்ததைச் சொன்னேன்.

''அதெல்லாம் உதட்டளவில் பேசிய வார்த்தைகள். உண்மையில் அவன் ஒரு பழமைவாதி. அப்படிப்பட்டவர் ...ளுக்குப் பெண்கள் முன்னேறுவது பிடிக்காது.''

பொங்கி வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டேன். ''ஸ்ரீகாந்த் பற்றி இவ்வளவு நன்றாக எப்பொழுது தெரிந்து கொண்டாய் மகேஷ்?''

''நம் சீரியலைப் பற்றி அவன் ஏதோ உளறிக்கொண்டு இருந்தான். யதார்த்தத்துக்குக் கொஞ்சமும் சம்பந்தம் இல்லாமல் இருக்கிறதாம்.''

ஸ்ரீகாந்த் என்னிடமும் இந்த விஷயத்தைப் பற்றிப் பேசி ...பதைச் சொல்லிவிடலாம் என்று நினைத்தாலும், வீண் ரகளை வேண்டாமென்று மவுனமாக இருந்துவிட்டேன்.

''சொல்ல மறந்துவிட்டேன். வந்த விஷயத்தை மறந்து விட்டு எதையோ பேசிக் கொண்டிருக்கிறேன். உனக்கு இருபத்து ஐந்தாயிரம் ரூபாய் கொடுப்பதற்குப் பதிலாக லட்ச ரூபாயைக் கொடுக்க முடிவு செய்து விட்டேன். எனக்கு ஒரு ரூபாய்கூட வேண்டாம். எனக்குக் கிடைக்கும் பணத்தை அப்படியே உன் ...விடம் கொடுத்துவிடுகிறேன். என்னால் உனக்கு ஏற்பட்ட இழப் ...பிற்குக் கொஞ்சமாவது பரிகாரம் தேடிக் கொள்ளணும்னு நினைக் ...கிறேன்.''

என் மனம் பனிக்கட்டியாய் கரைந்துவிட்டது. ''வேண் ...டாம் மகேஷ். என்மீது இரக்கம் காட்டுவது நீ ஒருவன்தான். அந்த

இரக்கமே எனக்கு லட்ச ரூபாய்க்குச் சமம். அதுவே எனக்குப் போதும். இது பற்றியெல்லாம் யோசிப்பதை விட்டுவிட்டு, நீ வேலை மீது கவனத்தைச் செலுத்து'' என்றேன்.

''உன்னுடைய ஒத்துழைப்பு இருக்கும்போது எனக்கு என்ன கவலை?'' என்றவன் ஒரு நிமிடம் கழித்து, ''ஒரு விஷயம் சொன்னால் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டாயே? அந்த ஸ்ரீகாந்திடமிருந்து கொஞ்சம் விலகியே இரு. அவனுடைய போக்கு எனக்குக் கொஞ்சம்கூட பிடிக்கவில்லை'' என்றான்.

''என்ன நடந்தது மகேஷ்? ஸ்ரீகாந்த் என்னிடம் என்றுமே தவறாக நடந்து கொண்டதில்லையே?''

''உனக்குத் தெரியாது. நீ ரொம்பவும் இன்னொசென்ட்'' ஜன்னல் வழியாக வெளியில் பார்த்துக் கொண்டே மேலும் சொன்னான், ''இந்த மாதிரி ஆட்களைச் சட்டென்று கண்டு கொள்ள முடியாது. அவனுடைய கருத்துகள் தெரிந்த பிறகும் எதுக்காக நீ அவனுடன் பேசணும்? வெளிப்படையாகச் சொல்லணும் என்றால், அவனுடன் நீ நெருங்கிப் பழகுவதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.''

''என்ன மகேஷ்? பெண் சுதந்திரம் பற்றிச் சற்று முன் பேசியது நீதானே?'' அப்பாவியாகக் கேட்டேன்.

ஜன்னலுக்கு வெளியில் பார்த்துக் கொண்டிருந்தவன், மெதுவாகத் திரும்பி என் பக்கம் பார்த்தான். ''ஆமாம்... பெண் சுதந்திரம் பற்றி அவ்வளவு தீவிரமாக இருந்த எனக்கு, உன் விஷயத்தில் இப்படித் தோன்றுவானேன் என்று என்னை நானே கேட்டுக் கொண்டேன். ஒரு விஷயம் தெளிவாகப் புரிந்தது. எங்கே காதல் இருக்குமோ, அங்கே பொறாமை இருக்குமாம். நான் உன்னைக் காதலிக்கிறேன்.''

தலையைக் குனிந்து கொண்டேன். இந்தப் பேச்சு வரும் என்று எதிர்பார்த்திருந்தாலும், இவ்வளவு சீக்கிரமாக வரும் என்று நினைக்கவில்லை.



என் மவுனத்தை வேறு விதமாகப் புரிந்துகொண்டு விட்டான் போலும். ''லைப் பார்ட்னரைப் பற்றி உனக்கு வேறு விதமான எதிர்பார்ப்புகள் இருந்தால், இந்த டாபிக்கை இத்துடன் விட்டு விடுவோம்'' என்றான்.

''அப்படி எதுவும் இல்லை, எனக்குக் கொஞ்சம் அவகாசம் வேண்டும் மகேஷ். நான் இன்னும் டிகிரிகூட முடிக்கவில்லை. வேலையிலும் கொஞ்சம் கால் ஊன்றிய பிறகு இது பற்றிப் பேசுவோம்'' என்றேன்.

''உனக்காக வாழ்நாள் முழுவதும் காத்திருக்க நான் தயார்'' மகேஷ் என் கையில் மென்மையாக முத்தம் பதித்துவிட்டு அங்கிருந்து போய்விட்டான்.

* * *

அக்கா வீட்டில் என்னுடைய நிலைமை மோசமாக இருந்தது. அத்தானுக்கும் எனக்கும் நெருக்கம் இருக்குமோ என்று அவளுக்குச் சந்தேகம் வந்துவிட்டது. ஜாடை மாடையாக என்னைத் தாக்கிப் பேசத் தொடங்கினாள். எனக்குப் பிரமோஷன் கிடைக்காமல் போனது அதற்கு மேலும் துணை புரிந்தது.

அந்தச் சூழ்நிலையில் ஒரு நிகழ்ச்சி நடந்தது.

இடைவிடாமல் ஷூட்டிங் நடந்து வந்ததில் ஆறு நாளாக நான் சரியாகத் தூங்கவில்லை. ஏழாவது நாள் ஷூட்டிங் நடந்து கொண்டிருந்தபோது நான் மயக்கம் போட்டு கீழே விழுந்து விட்டேன். யூனிட்டில் இருப்பவர்கள் பதட்டமடைந்து உடனே ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள். வேளைக்குச் சாப்பிடாமல், சரியாகத் தூங்காமல் இருந்ததால் பலவீனம் ஏற்பட்டதாகவும், ஆபத்து எதுவும் இல்லையென்றும் டாக்டர்கள் தெரிவித்தார்கள். மறுநாளே டிஸ்சார்ஜ் ஆகி வீட்டுக்கு வந்துவிட்டேன். ஆனால், ஆபத்து வேறு விதத்தில் என் வீட்டாரிடமிருந்து வந்தது.

ஆஸ்பத்திரியிலிருந்து வந்த பிறகு அன்று இரவு எங்கள் வீட்டில் பெரிய ரகளை நடந்தது. என்னைக் குற்றவாளியாக நிறுத்தி விட்டார்கள். ஆஸ்பத்திரியில் யாரோ நர்ஸ் சொன்னாளாம்.

''இதில் பதட்டப்பட ஒன்றுமே இல்லை. கல்யாணம் ஆகாத பெண்கள் எத்தனையோ பேர் இப்படி ஆஸ்பத்திரிக்கு வருவது வழக்கம்தான். பத்து பேருக்கு நடுவில் மயக்கம் போட்டு விழுந்ததால் உங்கள் வரைக்கும் விஷயம் வந்துவிட்டது. இல்லாவிட்டால் அவர்களே யாருக்கும் தெரியாமல் இங்கே வந்து சுத்தம் செய்து கொண்டு போய்விடுவாங்க.''

அவ்வளவுதான்! எங்கள் வீட்டில் எரிமலை வெடித்து விட்டது. அக்கா வாய்க்கு வந்தபடி பேசினாள்.

''பத்து நாட்களுக்கு முன் சினிமா ஹாலில் அந்த மகேஷுடன் உன்னைப் பார்த்தபோதே நினைத்துக் கொண்டேன் இப்படி ஏதாவது நடக்கும் என்று. ஹோட்டலில் யாருடனோ டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்தாய் என்று வீட்டுக்காரங்க சொன்னபோது, படித்து வேலையில் இருப்பவளுக்கு இதெல்லாம் சகஜம்தானே என்று நினைத்தேன். இப்படிக் குடியைக் கெடுக்கப் போகிறாய் என்று தெரிந்திருந்தால் அப்போதே உன்னை எச்சரித்திருப்பேன்.''

''உன்னை எவனுடனோ ஸ்கூட்டரில் போகும்போது பார்த்தேன் என்று என் நண்பன் சொன்னபோது, அவனை அடிக்கும் அளவுக்குப் போய்விட்டேன். அவன் சொன்னது உண்மைதான் என்று இப்பொ புரிகிறது'' சின்ன அண்ணன் சொன்னான்.

''நம் குடும்பத்தின் மரியாதையைக் குழிதோண்டிப் புதைத்து விட்டாயே! பிறந்தபோதே நீ செத்துப் போய் இருந்தாலும் நன்றாக இருந்திருக்கும்'' அம்மா பிலக்கணம் பாடத் தொடங்கி விட்டாள்.

வாயடைத்துப் போனவளாய் நான் இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தேன். உண்மையில் நடந்தது என்னவென்று



தெரிந்து கொள்ளாமல் எல்லோரும் என்னைத் தூற்றியதற்குக் கோபமும், துக்கமும் ஏற்பட்டன.

''நீங்க நினைத்துக் கொண்டிருப்பதுபோல் எதுவும் நடக்கவில்லை'' அமைதியான குரலில் விளக்கம் அளிக்க முயன்றேன்.

சின்ன அண்ணன் வேகமாய் வந்து, என் கன்னத்தில் பளார் என்று அறைந்தான்.

''எதுவும் நடக்கவில்லையா? உனக்கு எதுவும் தெரியாதா? அவனுடன் ஹோட்டலுக்குப் போனது, ஊரைச் சுற்றியது எல்லாமே பொய்தானா?''

ஸ்கூட்டரில் போனது உண்மைதான். ஆனால், ஊரைச் சுற்றவில்லை. ஒரே ஒரு தடவை ஹோட்டலில் காபி சாப்பிட்டு விட்டு, வரும்போது வீட்டு வாசலில் இறங்கிக் கொண்டேன். அதுவும் அக்கா பார்த்துக் கொண்டிருக்கும்போதே இறங்கினேன். எனக்குப் பின்னால் இவ்வளவு கதைகள் பின்னிருப்பதை இன்றுதான் புரிந்துகொண்டேன். எல்லையில்லாத வெறுப்பு ஏற்பட அன்று இரவே வீட்டைவிட்டு வெளியேறினேன்.

* * *

## 4

மகேஷுடன் என் வாழ்க்கை அந்த விதமாகத் தொடங்கியது. நள்ளிரவு நேரத்தில் தனியாக வீட்டுக்கு வந்த என்னைப் பார்த்து, மகேஷ் கொஞ்சம் கூட பதட்டப்படவில்லை. தன்னுடைய அண்ணன் அண்ணிக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தான். ஏற்கெனவே என்னைப் பற்றி அவர்களிடம் சொல்லியிருக்க வேண்டும்.

நடந்ததை எல்லாம் சுருக்கமாக அவர்களிடம் சொன்னேன். அனாவசியமாகக் கேள்வி கேட்டு என்னைச் சங்கடத்தில் ஆழ்த்தாமல், ''போகட்டும்... நடந்தது நடந்துவிட்டது. முதலில் கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கொள். மற்ற விஷயங்களை அப்புறமாய் பேசிக் கொள்ளலாம்'' மகேஷின் அண்ணன் தைரியம் சொன்னார்.

அன்று இரவு மகேஷ் அண்ணியுடன் படுத்துக் கொண்டிருந்தேன். அன்று இரவு அவள் ரொம்ப நேரம் பேசிக் கொண்டிருந்தாள். ரொம்ப நல்ல மாதிரியாக, வெகுளியாக இருந்தாள்.

''எங்க மகேஷ் ரொம்ப நல்லவன். கொஞ்சம் ஆவேசம் தான் அதிகம். அவனுடைய எண்ணங்கள் எல்லாமே விசித்திரமாக இருக்கும். ஆனால், நான் சொல்வதைக் கேட்க யாருக்கும் பொறுமை இருக்காது. என்னை உட்கார வைத்துப் பேசிக் கொண்டேயிருப்பான். அவன் சொல்வதில் பாதிக்குமேல் எனக்குப் புரியாது. இருந்தாலும் சரியாக இருப்பதுபோல் தோன்றும். அவனை வளர்த்து ஆளாக்கியது நான்தான்.''

அன்று இரவு நிம்மதியாகத் தூங்கிவிட்டேன். என் வாழ்க்கைக்கு முழுமை கிடைத்து விட்டாற்போல் தோன்றியது. மறுநாளே மகேஷின் அண்ணாவுக்குப் பிரமோஷன் கிடைத்திருப்பதாக மேலிடத்திலிருந்து தகவல் கிடைத்தது. அவ்வளவு தான்... எல்லோரும் என்னைப் புகழ்ந்தார்கள். நான் அவர்கள் வீட்டில் காலடி எடுத்து வைத்த வேளை, அவர்களுக்கு நல்ல செய்தி கிடைத்ததாகப் பெருமைப்பட்டுக் கொண்டார்கள்.

ஆஃபீசிலும் எங்கள் விஷயம் பரவிவிட்டது. மகேஷ் அன்று மாலையில் எல்லோருக்கும் ஹோட்டலில் டின்னர் ஏற்பாடு செய்தான். மகேஷ் நல்ல செலவாளி. அந்த விஷயத்தை நான் ஷூட்டிங் நடக்கும்போதே கவனித்து இருந்தேன். எல்லோரும் நான்கு நாட்களில் எடுத்து முடித்ததால், அவனுக்குப் பத்து நாட்களாவது தேவைப்படும். நன்றாகச் செலவு செய்து, அற்புதமா



எடுப்பான். அதனால் நற்பதாயிரம் ரூபாயில் முடிக்க வேண்டிய முதல் எபிசோட் லட்ச ரூபாயைத் தாண்டிவிட்டது.

பதவி உயர்வு பெற்று கல்கத்தா போயிருந்த மகேஷின் அண்ணாவுக்கு ஹோட்டல் சாப்பாடு ஒத்துக் கொள்ளாமல், உடல்நலம் கெட்டுவிட்டதாகத் தகவல் வந்தது. மகேஷின் அண்ணி அவசரமாகக் கிளம்பிப் போனாள். எனக்கு ரொம்ப சங்கடமான நிலைமை ஏற்பட்டது. மகேஷிடம் இந்த விஷயமாகப் பேசினேன்.

''நாம் இருவரும் சீக்கிரமாகத் திருமணம் செய்துகொண்டால் நன்றாக இருக்குமில்லையா?''

''ஏன்? இப்பொ நாம் இருவரும் கணவன் மனைவி இல்லையென்று சந்தேகமாய் இருக்கா?'' மகேஷ் சிரித்துக் கொண்டே கேட்டான்.

''அப்படி இல்லை மகேஷ். கொஞ்சம் என் இடத்தில் இருந்து யோசித்துப் பாரு. திருமணம் ஆகாமல் ஒரே வீட்டில் எப்படியிருக்க முடியும்? கழுத்தில் தாலிச்சரடு இல்லாமல் என்னால் வெளியில் எப்படி நடமாட முடியும்? ஏற்கெனவே என்னைப் பற்றி ஆஃபீசில் ஒரு மாதிரியாகப் பேசிக் கொள்கிறார்கள்.''

நான் இன்னும் சொல்லி முடிக்கவில்லை. ஷேவ் செய்து கொண்டிருந்தவன், சட்டென்று தலையைத் திருப்பிப் பார்த்தான்.

''யார் சொன்னாங்க? எவனாவது ஏதாவது சொன்னானா? சொல்லு. எல்லோரையும் ஒன்றாக நிற்க வைத்து ஷூட் செய்து விடுவேன். என்னைப் பற்றி என்ன நினைக்கிறாங்க? பெண்ணைக் கடத்திக்கொண்டு வந்து விட்டவன்போல் தென்படுகிறேனா?''

அந்த ஆவேசத்தைப் பார்த்து நான் பயந்துவிட்டேன்.

''என்ன இருந்தாலும், சமுதாயக் கோட்பாடுகளைப் பற்றி நாமும் கொஞ்சம் யோசிக்கணும் இல்லையா?'' என்றேன்.

மகேஷ் என் அருகில் வந்தான். ''சமுதாயக் கோட்பாடுகளா? அப்படி என்றால் என்ன? எத்தனை ஆண்கள் தாம் கட்டிய தாலிக்கு மதிப்பைத் தருகிறார்கள்? பாதிக்கப்பட்ட பெண்ணுக்குச் சமுதாயம் எந்த அளவுக்கு உதவி செய்கிறது?'' அதட்டுவதுபோல் கேட்டான்.

என்னால் பதில் சொல்ல முடியவில்லை.

''என்ன? பதிலையே காணும்?'' இரட்டிப்பதுபோல் கேட்டான்.

தலையைக் குனிந்துகொண்டு அங்கிருந்து நகர்ந்து விட்டேன்.

அன்று மாலை ஆஃபீசிலிருந்து வரும்போதே உற்சாகத்துடன் வந்தான்.

''உனக்காக நான் என்ன வாங்கி வந்தேன் தெரியுமா'' கையில் இருந்த நகைப் பெட்டியைத் திறந்தான். திருமாங்கல்யச் சரடு... நான் ஏதோ சொல்வதற்குள், அதைக் கையில் எடுத்து என் கழுத்தில் கட்டப் போனான்.

பதட்டத்துடன் இரண்டடி பின்னால் நகர்ந்தேன்.

''தாலி கட்டிவிட்டால் திருமணம் முடிந்து விட்டதாக அர்த்தமா?'' என்றேன்.

''கழுத்தில் தாலிச்சரடு இருக்கணும்னு சொன்னது நீதானே''

''புரோகிதர் மந்திரங்களைச் சொல்ல வேண்டாமா? ஹோமம் வளர்க்க வேண்டாமா? நாலு பேருக்கு நடுவில்...''

என் பேச்சு இன்னும் முடியக்கூட இல்லை. கையில் இருந்த தாலிச் சரடை மேஜை மீது வீசுவதுபோல் போட்டான்.

''ஓஹோ! சாட்சியங்கள் வேண்டுமென்று சொல்கிறாய் அப்படித்தானே! அப்பொ பதிவுத் திருமணம் செய்து கொள்



வோம். ஒருவேளை நாம் பிரிந்து போக நேர்ந்தாலும் உனக்கு என் சொத்தில் பங்கு கிடைக்கும்.''

நான் நொந்து கொள்வதுபோல் சொன்னேன், ''என் உத்தேசம் அது இல்லை மகேஷ்.''

''பின்னே என்னவாம்? வேலை வெட்டி இல்லாதவர்களை அழைக்கச் செய்து, அவர்களுடைய ஆசிகளைப் பெற்றால்தான் திருமணம் ஆனதாக உனக்கு நம்பிக்கை வருமா?''

''அப்படி இல்லை. ஒரு நல்ல நாளாகப் பார்த்து, குறைந்தபட்சம் உங்க அண்ணன் அண்ணி இருவரையாவது அழைக்கச் செய்து, திருமணச் சடங்கை முடித்துக் கொண்டால் நன்றாக இருக்கும் என்பது என்னுடைய எண்ணம்'' என்றேன்.

ஒரு நிமிடம் மவுனமாக இருந்துவிட்டு, ''சரி. உன் இஷ்டம்'' என்று திரும்பினான்.

''நில்லுங்கள்...'' என்றேன். மேஜைமீது இருந்த தாலிச் சரடை எடுத்து, அவர் கையில் கொடுத்தேன்.

''கட்டி விடுங்கள்'' என்றேன்.

சுவற்றில் மாட்டியிருந்த சுவாமி படத்தை எடுத்து மேஜை மீது வைத்தான். ''மனிதனைவிட கடவுள்தான் உயர்வானவர் என்பது தானே உன் அபிப்பிராயம். அதை அப்படியே வைத்துக்கொள். ஆனால், ஒரு விஷயத்தை மட்டும் நன்றாக யோசித்துப் பாரு. கழுத்தில் தாலிச் சரடு இல்லாவிட்டால் நாலு பேருக்கு நடுவில் சங்கடமாக இருக்கு என்று காலையில் சொன்னது நீதான். உன் சங்கடத்தைப் புரிந்து கொண்டு தாலிச் சரடை வாங்கி வந்தேன். அதைக் கழுத்தில் கட்டிவிடப் போனால், புரோகிதர், ஹோமம், சாட்சிகள் எதுவும் இல்லாமல் தாலி கட்டினால் அது திருமணம் எப்படி ஆகும் என்று கேள்வி கேட்கிறாய்? பார்த்தாயா... உன்னுடைய ஆசைகள் எப்படி வளர்ந்து கொண்டே போகிறது என்று. ஆசைகள் வளர வளர திருப்திக்கு இடமில்லாமல்

போய்விடும். இந்த நான்கு சுவர்களுக்கு நடுவில் இந்தச் சரடை நான் கட்டினால் என்ன? நீயே கட்டிக் கொண்டால் என்ன? யாருக்கு என்ன தெரியப் போகிறது? நம்முடைய திருமணத்துக்கு நம்முடைய மனங்கள்தான் சாட்சி. இந்தத் தாலிச் சரடு இல்லை. என்னை யாரும் புரிந்துகொள்ள மாட்டார்கள். நீயும் என்னைப் புரிந்துகொள்ளவில்லை என்றால் எனக்கு வருத்தமாக இருக்கு. அது வரைக்கும் போவானேன்? இந்த வீட்டுக்கு நள்ளிரவில் தனி யாக வந்தாய். இப்பொ இந்த வீட்டில் நாம் இருவரும் தனியாகத் தானே இருக்கிறோம். என்றாவது நான் உன்னிடம் உரிமை எடுத்துக் கொண்டு பழகினேனா? எப்படியும் மனைவியாக வரப் போகிறவள்தானே என்று எல்லை மீறி நடந்து கொண்டேனா? இல்லையே! உன்னுடைய கொள்கைகளை என்னுடைய வாழ்க்கையில் செயல்படுத்த வேண்டும் என்று நினைத்தேன். ஆனால், அதற்கு உன்னிடமிருந்தே ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. பெண்ணுக்குத் திருமணம் ஆனதற்குச் சாட்சியாக தாலிச் சரடு கழுத்தில் இருக்க வேண்டுமென்பதும், அதை ஒரு ஆண்தான் கட்ட வேண்டும் என்பதும் சம்பிரதாயமாக இருந்தால், என்னுடைய தோல்வியை ஒப்புக்கொண்டு இந்தத் தாலிச் சரட்டை... உன் கழுத்தில்...

மகேஷ் வார்த்தைகளை முடிக்கும் முன்பே தாலிச் சரடை எடுத்து என் கழுத்தில் கட்டிக் கொண்டுவிட்டேன்.

* * *

**அ**ன்று இரவு மகேஷ் என்னை நெருங்கியபோது சற்றுத் தொலைவுக்கு நகர்ந்து கொண்டேன். ''ஒரு சின்ன விருப்பத்தைச் சொன்னால் தவறாக நினைக்க மாட்டீங்களே'' என்றேன்.

''ஒண்ணு என்ன? பத்து கேளு. என்னை அதிகாரம் செய்ய உனக்கு முழு உரிமையும் இருக்கு.''



''அவ்வளவு பெரிய வார்த்தைகள் எதுக்குங்க? நீங்க சொன்னதையெல்லாம் யோசித்துப் பார்த்தேன். எல்லாம் சரி என்று தோன்றினாலும், மந்திரங்கள் ஒலிக்கும்போது, ஹோமப் புகைக்கு நடுவில், கழுத்தில் மாலையுடன், நீங்க என் கழுத்தில் தாலியைக் கட்டும்போது, என் கழுத்துக்குப் பின்னால் உங்க விரல்களின் அசைவுகள்... இந்த உணர்வுகளையெல்லாம் இழக்கிறேனோ என்றுதான் எனக்கு வருத்தமாக இருக்கு.''

மகேஷ் சரேலென்று எழுந்து உட்கார்ந்து கொண்டான்.

''நீ ஒரு முட்டாள்...'' உரத்த குரலில் சொன்னான்.

நான் பயந்து போய் பின்னால் நகர்ந்து கொண்டேன். ''என்ன நடந்தது?'' என்று கேட்டேன்.

''இத்தனை ஆசைகளை மனதில் வைத்துக் கொண்டு எதுக்காக சும்மா இருந்தாய்?''

எனக்குச் சிரிப்பதா, அழுவதா என்று தெரியவில்லை.

''சரி... சரி... நாளைக்கே கல்யாண பத்திரிகையை அச்சடிக்க ஏற்பாடு செய்கிறேன். அந்தப் புரோகிதர்... ஹோமம் விஷயத்தை நீ கவனித்துக் கொள்'' விஷயத்தைச் செட்டில் செய்வது போல் சொன்னான்.

''போதுமே... கழுத்தில் தாலிச் சரடைக் கட்டிக் கொண்டு கல்யாண பத்திரிகையை கொடுத்தால் நன்றாக இருக்குமா?''

''ஏன்? இதில் தப்பு என்ன இருக்கு? ஹோமப் புகையின் நடுவில் தாலிச் சரடை கட்டிக் கொள்ளும் அனுபவத்தை உணருவதற்காக மறுபடியும் கல்யாணம் செய்து கொள்கிறேன் என்று சொல்வேன்.''

''உங்களுக்கு இதெல்லாம் வேடிக்கையாக இருக்குன்னு நினைக்கிறேன்...'' கோபமாகச் சொன்னேன்.

''இல்லை! நீகூட என்னைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லையே என்று வருத்தப்படுகிறேன். தாலி பற்றி என்

னுடைய அபிப்பிராயத்தைச் சொன்னபோதே நீ உன் மனதி
இருப்பதைச் சொல்லியிருந்தால் அதன்படியே செய்திருப்பேன்
அதனால் எனக்கு வந்த நஷ்டம் எதுவும் இல்லையே" நா
சொன்னதில் கன்வின்ஸ் ஆன பிறகுதான் அந்தத் தாலியை
நீயாகக் கட்டிக் கொண்டாய் என்று நினைத்தேன். விளக்கமாக
சொல்லா விட்டால் எனக்கு எப்படித் தெரியும்? இந்தச் சம்பி
தாயம் முதலியவற்றில் எனக்கு நம்பிக்கை இல்லை. போகட்
டும். உன்னுடைய விருப்பம் என்னவென்று சொல்லு."

"திருமண விஷயத்தில் உங்க அபிப்பிராயத்துடன் உடன்
படுகிறேன். ஆனால், நம் முதலிரவையாவது இப்படிச் சாதாரண
மாக இல்லாமல், வாழ்நாள் முழுவதும் நினைவில் இருப்பது
போல்... நாளைக்குக் கொண்டாடுவோம்..."

"ஏன்? இன்னிக்கு அமாவாசையா?"

"அது இல்லை... தலையில் மல்லிகைப்பூ... கையில் பால்
டம்ளர்... கொஞ்சம்... வெட்கம்... தயக்கம்..."

"ஓ.கே." புரிந்துவிட்டாற்போல் விசில் அடித்தான்.

★ ★ ★

## 5

"ஹலோ... சௌக்கியமா?" பின்னால் இருந்து குரல் கேட்டதும், மல்லிகைப் பூவை வாங்கிக் கொண்டிருந்தவள் திடுக்கிட்டுப் பின்னால் திரும்பிப் பார்த்தேன். ஸ்ரீகாந்த் நின்றிருந்தார்.



"கங்கிராட்சுலேஷன்ஸ்... யாரையுமே அழைக்காமல்
ல்யாணத்தை முடித்துக் கொண்டீங்க போலிருக்கே!" புன்னகை
டன் கேட்டார்.

வெட்கத்துடன் தலை குனிந்து கொண்டே "அது அப்படி
நேர்ந்துவிட்டது" என்றேன்.

அவருடைய பார்வை என் கையில் இருந்த மல்லிகைப் பூக்
டையின்மீது விழுந்தது. விஷயம் புரிந்திருக்க வேண்டும்.
'வீட்டில் பெரியவங்க யாரும் இல்லையா?" மென்மையான
குரலில் கேட்டார்.

மவுனமாகத் தலையைக் குனிந்து கொண்டேன்.

அவரே ரிக்ஷாவை அழைக்கச் செய்து மல்லிகைப் பூக்
டையை ரிக்ஷாவில் ஏற்றிவிட்டார்.

அந்த அறையை அலங்கரிக்க கிட்டத்தட்ட இரண்டு மணி
நேரம் பிடித்தது. மகேஷை ஆஃபீஸிலிருந்து நேரம் கழித்து
வரச்சொல்லி இருந்தேன். அதனால், எட்டு மணிக்கு மேல் வந்
தான். குளித்து, உடை மாற்றிய பிறகு, இரவு உணவையும்
முடித்துக் கொண்ட பிறகுதான் படுக்கை அறையில் நுழைய
அனுமதி கிடைக்கும் என்றேன். மறுபேச்சு பேசாமல் சொன்ன
தற்குக் கீழ்ப்படிந்தான்.

இரவு உணவை முடித்துக் கொண்டு படுக்கை அறைக்குள்
நுழைந்தவன், அப்படியே திகைத்துப்போய் நின்றுவிட்டான்.
அவ்வளவு அழகாக அந்த அறையை அலங்கரித்ததற்கு என்னை
வாயோ பாராட்டிக் கொண்டேன். கையில் பால் டம்ளருடன் உள்ளே
நுழைந்த என்னை அருகில் இழுத்து அணைத்துக் கொண்டான்.

ஒவ்வொரு நிமிடமும் மணிக் கணக்கில் நகருவதுபோல்
தோன்றியது. அந்த நெருக்கம் ஏற்படுத்திய மயக்கத்தில் சுய
நினைவு இல்லாதவள்போல் இருந்தேன்.

திடீரென்று "ப்ச்" என்ற குரல் கேட்டதும், திடுக்கிட்டு கண்களைத் திறந்தேன்.

"என்ன ஆச்சு?" பதட்டத்துடன் கேட்டேன்.

"அந்தக் கடவுள் பெண் இனத்துக்கு ரொம்ப அநியாயம் செய்து விட்டார்."

என் பதட்டம் மேலும் அதிகரித்தது. "என்ன நடந்து விட்டது?" பயந்து கொண்டே கேட்டேன்.

"பிறந்தது பெண் குழந்தை என்று தெரிந்ததுமே பெற்றோருக்கு ரொம்ப ஏமாற்றமாக இருக்கும். சின்ன வயதிலிருந்தே வீட்டு வேலைகளுக்குப் பழகிக் கொண்டு உழைக்க வேண்டிய கட்டாயத்தை பெண்களின் நெற்றியில் அந்தக் கடவுள் எழுதி விட்டார். திருமணம் என்ற போராட்டத்திலும் பெண்களுக்கு நியாயம் கிடைப்பதில்லை. மனைவியின் சுதந்திரத்துக்கு முதல் இரவிலேயே கணவன் தடைகளை ஏற்படுத்துவான். மனைவி படித்தவளாக, கணவனுக்குச் சமமாக சம்பாதிக்கும் திறமை படைத்தவளாக இருந்தபோதும், முதலிரவில் பால் டம்ளரை மனைவிதான் கொண்டு வரணும்னு சட்டமா என்ன?"

நான் திகைத்துப் போய்விட்டேன். "நீங்க சொல்வது எதுவும் எனக்குப் புரியவில்லை" என்றேன்.

"இதில் புரியாமல் போவதற்கு என்ன இருக்கு? பெண்களுக்கு அநியாயம் நடக்கக் கூடாது என்கிறேன்."

"இதில் அநியாயம் என்ன இருக்கு? காலங் காலமாய் கடைப்பிடித்து வரும் சம்பிரதாயம்தானே இது."

"எத்தனை பெண்கள் தம் கணவர்களால் ஒவ்வொரு இரவும் கற்பழிக்கப்படுகிறார்கள் என்று உனக்குத் தெரியாது. மனைவியின் விருப்பத்திற்கு மாறாக—"

மகேஷ் சொல்லிக் கொண்டிருந்தபோதே காலிங்பெல் ஒலித்த சத்தம் கேட்டது.



இந்த இரவு நேரத்தில் வந்தது யாராக இருக்கும்? மகேஷ் போய்க் கதவைத் திறந்தார். வந்தது ப்ரொடக்ஷன் மேனேஜர். இரண்டு நிமிடங்கள் பேசிவிட்டுக் கிளம்பிப் போனார்.

மகேஷ் உள்ளே வந்தார். அவர் முகம் களை இழந்து தென்பட்டது.

"என்ன நடந்தது?"

"டி.வி. சீரியல்ஸ் செலக்ட் செய்வதில் மோசடி நடந்திருப்பதாக யாரோ கேஸ் போட்டு இருக்காங்களாம். ஸ்டே ஆர்டர் போட்டிருக்கிறார்கள். நம் சீரியல் ஒளிபரப்பு ஆவதற்கு இன்னும் ஒரு வருடமாவது காத்திருக்கணும்" கவலையுடன் சொன்னார்.

அதிர்ச்சியாக இருந்தது எனக்கு. உடனே சமாளித்துக் கொண்டு, "அதனால் என்ன? ஒரு வருடத்துக்குப் பிறகாவது ஒளிபரப்பு ஆகும் இல்லையா—நீங்கள் கவலைப்படாதீங்க" ஆறுதல் அளிப்பதுபோல் சொன்னேன்.

"உனக்குத் தெரியாது... நான் ரொம்ப மென்மையானவன். நடந்தது நடந்து விட்டதென்று... என்னால் மெட்டீரியலிஸ்டாக வாழ முடியாது" கண்களில் நீர் பளபளக்க மகேஷ் சொன்னபோது எனக்கும் வருத்தமாக இருந்தது.

எங்கள் முதலிரவு அந்த விதமாக முடிந்தது.

* * *

## 6

மகேஷுக்கு ஒரே ஒரு கெட்ட பழக்கம் இருந்தது. காலை வேளையில் ரொம்ப நேரம் கழித்துத்தான் எழுந்துகொள்வார். இதுபோன்று கலைத்

துறையில் இருப்பவர்களுக்கு இது சகஜமாக இருக்கலாம். ஆனால், என்னுடைய பிரச்னை இதிலிருந்துதான் தொடங்கியது. காலையில் சீக்கிரமாக எழுந்து, வீட்டு வேலைகளைச் செய்துவிட்டு, சமையலை முடிக்கும் நேரம் அவர் எழுந்து கொள்வார். சாப்பாடு ஆனதும் இருவரும் ஆஃபீசுக்குப் போய் விடுவோம். ஆஃபீஸ் முடிந்ததும் நேராக காலேஜுக்குப் போய் விடுவேன். வீடு திரும்ப இரவு பத்து மணி ஆகிவிடும்.

''இரவு சமையலை நான் பார்த்துக் கொள்கிறேன். கணவன் மனைவி இருவரும் பொறுப்புகளைச் சமமாகப் பகிர்ந்து கொள்ளவேண்டும்'' மகேஷ் சொன்னார்.

இரண்டு நாட்கள் போனபிறகு தெரிந்தது, மகேஷுக்கு உப்புக்கும் சர்க்கரைக்கும் வித்தியாசம் தெரியாது என்று. மூன்றாவது நாள் நான் வீட்டுக்கு வந்தபோது, வாசலில் பூட்டு தொங்கியது. என்னிடம் டூப்ளிகேட் சாவி இருந்ததால் வெளியில் காத்திருக்க வேண்டிய தேவையில்லை. சமையலை முடித்துவிட்டு ஹாலில் உட்கார்ந்து புத்தகத்தைப் படித்துக்கொண்டு உட்கார்ந்தேன். மகேஷ் வரும்போது பதினோரு மணி ஆகிவிட்டது.

''நான் வெளியில் சாப்பிட்டுவிட்டேன்'' என்றார்.

அந்தக் குரலில் எரிச்சல் இருந்ததைக் கவனித்து, என்ன நடந்ததென்று விசாரித்தேன்.

''அந்தச் சீரியல் இப்போதைக்கு வர்ற மாதிரி தெரியவில்லை. நம் பணமெல்லாம் அதில் முடங்கிவிட்டது. அந்த விஷயம் பற்றிப் பேசிக் கொண்டிருந்ததில் லேட்டாகிவிட்டது...'' கவலையுடன் சொன்னவன், அந்தப் பக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டார்.

''இந்த நாடகம், சீரியல் இதெல்லாம் நமக்கு எதுக்குங்க? இருவரும் நல்ல வேலையில் இருக்கிறோம். எதுக்காக இன்னும் சிரமப்படணும்?'' என்றேன்.



சட்டென்று என் பக்கம் தலையைத் திருப்பிப் பார்த்தான். அவன் முகத்தில் தென்பட்ட கோபத்தை அதுவரை நான் பார்த்ததில்லை.

''ஒரு கலைஞனுக்கு இருக்கும் கலை ஆர்வம் ஆரம்பத்திலேயே நலிந்து போவதற்கு உன்னைப் போன்ற மனைவிகள் தான் காரணம். இனி ஒருநாளும் இப்படிப் பேசாதே... புரிந்ததா?'' கத்தினார்.

அன்று இரவு ரொம்ப நேரம் நான் தூங்கவில்லை. ஏனோ கவலையாக இருந்தது.

மறுநாள் நான் வீட்டுக்கு வந்தபோது வாசலில் பூட்டு தொங்கவில்லை. ஹாலில் மகேஷ் தன்னுடைய நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். அவர்கள் மகேஷின் யூனிட்டில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள்தான். கோர்ட்டில் கேஸ் போட்டவனைப் பற்றி வாய்க்கு வந்தபடி பேசிக் கொண்டிருந்தார்கள். யாரோ ஒரு ஹீரோயின் பற்றிக் கீழ்த்தரமாகப் பேசி சிரித்துக் கொண்டிருந்தார்கள். கொஞ்சம்கூட உபயோகம் இல்லாத இந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டே சமையலை முடித்தேன்.

அரைமணி கழித்து மகேஷ் உள்ளே வந்தார். மவுனமாக சாப்பிட்டு முடித்தோம்.

''ஐயாம் சாரி! வந்ததுமே சமையல் செய்து விடலாம்னு தான் இருந்தேன். இவங்க வந்துவிட்டதால்...'' நடுவிலேயே நிறுத்தினார்.

''பரவாயில்லை'' சுருக்கமாகச் சொன்னேன்.

மறுநாளிலிருந்து இரண்டு வேளைக்கும் சேர்த்து சமையலைச் செய்துவிட்டு ஆஃபீசுக்குப் போகத் தொடங்கினேன். கிட்டத்தட்ட ஒரு மாதம் ஆனபிறகு ஸ்ரீகாந்த் என்னை ஸ்டாஃப் ரூமுக்கு அழைக்கச் செய்தார்.

மார்க் லிஸ்டை என் முன்னால் தள்ளிவிட்டு, ''என்ன இது'' என்று கேட்டார்.

பதில் பேசாமல் தலையைக் குனிந்து கொண்டு உட்கார்ந்து இருந்தேன்.

''நன்றாகப் படித்துக் கொண்டிருந்தவளுக்கு இந்தத் தடவை மதிப்பெண்கள் இவ்வளவு குறைச்சலாக வரக் காரணம் என்ன?''

அவர் கேட்ட பிறகுதான் நினைவுக்கு வந்தது... நான் புத்தகத்தைக் கையிலெடுத்து ஒரு மாதத்திற்கு மேலாகிவிட்டதென்று.

வீட்டுக்கு வந்த பிறகு யோசித்துப் பார்த்தேன். சாப்பிடும் போது மகேஷிடம் கேட்டேன். ''நான் வேலையை விட்டு விட்டால் எப்படி இருக்கும்?''

நான் சொன்னது சரியாகக் கேட்காததுபோல் ''என்ன சொன்னே?'' என்றான்.

''ஆஃபீசுக்குப் போய்க் கொண்டே படிப்பது கஷ்டமாக இருக்கு... முதலில் படிப்பை முடித்து விடலாம்னு நினைக்கிறேன்.''

''நாம் வேலை செய்வது எவ்வளவு பெரிய கம்பெனி என்று தெரியுமா உனக்கு?''

''எந்த குவாலிஃபிகேஷனும் இல்லாதபோதே எனக்கு அதிக வேலை கிடைக்கவில்லையா? படிப்பை முடித்தால் இதை விட நல்ல வேலை கிடைக்காமல் போகாது.''

''எதிர்ப்பேச்சு பேசாதே...'' நெற்றியைச் சுளித்துக் கொண்டே கோபமாகச் சொன்னார். ''இதற்கு முன்பும் வேலை செய்துகொண்டே படித்தவள்தான். இப்பொ வீட்டு வேலை உன் தலையில் விழுந்து விட்டது என்று மறைமுகமாகச் சொல்கிறாய். அப்படித்தானே... நாளையிலிருந்து நீ சமையல் செய்



வேண்டாம். ஹோட்டலிலிருந்து சாப்பாடு வரவழைத்து விடு வோம்.''

வியப்படைந்தவளாகப் பார்த்தேன். ''இரண்டு வருடங்க ளுக்குக் கேரியரை வரவழைக்க முடியுமா?''

''இரண்டு வருடங்கள் என்ன? நீ எம்.காம். படிக்க ஆசைப் பட்டால் நான்கு வருடங்கள்கூட கேரியரை வரவழைக்க என் னால் முடியும். சாதாரணமாகக் கணவன்மார்கள் எப்படி இருப் பார்கள் என்று உனக்குத் தெரியுமா? திருமணம் ஆனதும் மனை வியை வேலைக்குப் போகவிடாமல் தடுத்து, வீடே உலகம் என்பது போல் பிரமையை அவளுக்கு உண்டாக்கி, தங்களுடைய ஆணாதிக்கத்தை நிரூபித்துக் கொள்வார்கள். நானாக இருப்ப தால் நீ ஆஃபீசிலிருந்து அப்படியே காலேஜுக்குப் போய் இரவு பத்து மணிக்குமேல் வந்தாலும், உன்னை உற்சாகப்படுத்து கிறேனே தவிர, ஒருநாளும் கோபித்துக் கொண்டதில்லை. நான் மட்டும் கஷ்டப்படவில்லையா? மாலையில் ஆஃபீசில் இருந்து வந்ததும் மனைவியின் கையால் ஒரு கப் காபி குடிக்க வேண்டும் என்று எனக்கு மட்டும் தோணாதா? என் ஆசைகளை உனக்காக நான் தியாகம் செய்யவில்லையா? பெண் சுதந்திரத்தை, உரிமையை மதிப்பவன் நான். இனி ஒருநாளும் வேலையை விட்டு விடுகி றேன் என்று மட்டும் சொல்லாதே...'' என்று சொல்லி முடித்தவர் தட்டிலேயே கையை அலம்பிவிட்டு போய்ப் படுத்துக் கொண் டார்.

அவர் சொல்வதில் லாஜிக் இருப்பதுபோல் தோன்றினா லும், என்னுடைய பிரச்னைக்குத் தீர்வு என்ன சொன்னார் என்று மட்டும் புரியவில்லை. கட்டிலில் படுத்துக் கொண்டே யோசிக் கும்போது திடீரென்று ஓர் ஐடியா வந்தது. உடனே மகேஷை எழுப்பினேன்.

''என்னங்க... எனக்கு ஒரு நல்ல ஐடியா வந்திருக்கு'' என்றேன்.

கண்ணிமைகளை வலுக்கட்டாயமாகத் திறக்க முயற்சி செய்து கொண்டே "என்ன?" என்றார்.

"பைனல் எக்ஸாமுக்கு இன்னும் நான்கு மாதங்கள்தான் இருக்கு. இந்த நான்கு மாதங்களுக்கு ஆபீசுக்கு லீவ் போட்டு பரீட்சைக்குப் படிக்கிறேன். எம்.பி.ஏ. படிக்கணும் என்றால் இந்த மதிப்பெண்கள் போறாது."

"ஆனால் மாதக் கணக்காக விடுமுறையை ஆஃபீசில் தர மாட்டார்களே?"

"லாஸ் ஆஃப் பேயில் விடுமுறை எடுத்துக் கொள்கிறேன்" என்றேன்.

அவ்வளவுதான்! அவருடைய தூக்கம் கலைந்துவிட்டது.

"லாஸ் ஆப் பேயில் விடுமுறை எடுத்துக் கொள்ளப் போகிறாயா? உனக்கு விஷயம் தெரியாதா?" என்று கேட்டார்.

"என்ன விஷயம்?" புரியாதவள்போல் கேட்டேன்.

"சீரியலுக்காகக் கிட்டத்தட்ட ஒரு லட்சம் வரை செலவு செய்திருக்கிறேன். மாத வட்டியே மூவாயிரம் கட்டிக் கொண்டிருக்கிறேன். ஏதோ இரண்டு மாதங்களுக்குள் முடிந்துவிடும் என்று பார்த்தால், எவனோ கோர்ட்டில் கேஸ் போட்டுவிட்டான்."

என் முகம் களை இழந்ததைக் கவனித்தவர், "நாளை காலையிலிருந்து, நான் ஐந்து மணிக்கே எழுந்து கொண்டு வீட்டு வேலை... சமையல் எல்லாம் நானே பார்த்துக் கொள் கிறேன் உனக்கு ஃபஸ்ட் கிளாஸ் வந்துதான் ஆகணும்."

அது நடக்காத காரியம் என்று எனக்குத் தெரியும். நான் பதில் எதுவும் சொல்லவில்லை.

"ஏன்? ஆண்கள் வீட்டு வேலைகளைச் செய்வதாவது என்று நினைக்கிறாயா? பெண்களுடன் சமமாக வீட்டுப் பொறுப்பு



களை எடுத்துக் கொள்ள, வீட்டைப் பெருக்கவும் நான் தயங்க மாட்டேன். ஆண்கள் சம்பாதித்துப் போட்டால், வீட்டு வேலை முழுதும் பெண்கள்தான் செய்யணும் என்பது பழமைவாதிகளின் அபிப்பிராயம். நான் அப்படி இல்லை. இருவரும் சம்பாதித்துக் கொண்டு உரிமைகளை மகிழ்ச்சிகளைச் சமமாக அனுபவிக்க வேண்டும் என்பதுதான் புதுமைவாதிகளின் கொள்கை" லெக்சர் கொடுத்துக் கொண்டே போனார்.

"கடன்களையும்" என்று மனதில் நினைத்துக் கொண்டேன்.

வேறு விதமாக யோசித்துப் பார்த்தேன். இப்படிப் படித்துக் குறைந்த மதிப்பெண்களைப் பெற்று, தேர்வில் வெற்றி பெறுவதைவிட, அந்தக் கடன் தீர்ந்த பிறகு படிக்கலாம் இல்லையா! வேலையை விட முடியாது. ஆனால் படிப்பைத் தற்காலிகமாக நிறுத்தலாம் இல்லையா...!

* * *

## 7

"பத்து நாட்களாய் கவனித்து வருகிறேன். அடென்டென்ஸ் எடுக்கும் வரையில் இருந்து விட்டு போய் விடுகிறாயே? என்ன காரணம்?" ஸ்ரீகாந்த் காலேஜ் ப்ளே க்ரவுண்டில் கேட்டார்.

நடந்ததை விவரமாகச் சொல்லிவிட்டு, "இந்தச் சூழ்நிலையில் என்னால் நல்ல மதிப்பெண்களை வாங்க முடியாது. அடுத்த வருடம் லீவ் எடுத்துக் கொண்டு படிப்பை முடித்து விடலாம்னு நினைக்கிறேன்" என்றேன்.

''உனக்கு மூளை கலங்கிவிட்டதா? குறைந்தபட்சத் தகுதியாக பட்டப் படிப்பு இருப்பது அவசியம் என்று உனக்குத் தோன்றவில்லையா?''

நான் பதில் சொல்லவில்லை.

''ஒரு தடவை படிப்பை நிறுத்தினால், மறுபடியும் படிப்பைத் தொடருவது என்பது நடக்காத காரியம். குடித்தனம் என்றாலே புதைகுழி மாதிரி... 'விவாஹோ வித்யா நாசாய:' என்பதை நிரூபிக்கிறாயா?''

நான் சிரிக்க முயற்சி செய்தேன். ''போகட்டும்... பெண் என்பவள் நல்ல இல்லத்தரசியாக இருக்கவேண்டும் என்ற உங்களுடைய கொள்கையைக் கடைபிடிப்பதாக வைத்துக் கொள்ளுங்கள்'' என்றேன்.

ஸ்ரீகாந்த் என் கண்களை நேராகப் பார்த்தார். ''பெண்கள் படிக்கக் கூடாது என்று நான் ஒரு நாளும் சொல்லவில்லையே? எதிர்பாராத சூழ்நிலை ஏற்பட்டு கணவனை இழந்து விட்டாலோ, கருத்து வேற்றுமை வந்து வீட்டைவிட்டு வெளியேற வேண்டி வந்தாலோ, பெண்களுக்குத் துணையாக நிற்கப் போவது படிப்பு ஒன்றுதான். இந்தச் சின்ன விஷயம் உனக்குத் தோன்றவில்லையா?'' ஒரு நிமிடம் நிறுத்தியவர், திடீரென்று ஏதோ நினைவுக்கு வந்தாற்போல், ''பரீட்சைகள் எழுதாதபோது காலேஜுக்கு மட்டும் வருவானேன்?'' என்று கேட்டார்.

''அடென்டென்ஸ் இல்லா விட்டால் ஸ்காலர்ஷிப் பணம் தர மாட்டார்களே!'' தலையைக் குனிந்துகொண்டு தாழ்வான குரலில் சொன்னேன்.

அவருக்கு ஒரு கணம் நான் சொன்னதன் அர்த்தம் விளங்கவில்லை. புரிந்ததும், ஆவேசத்துடன் என் தோள்களைப் பலமாகப் பற்றி வேகமாய் தன் பக்கத்தில் திருப்பிக் கொண்டார். என் கண்களுக்குள் ஊடுருவி பார்த்துக் கொண்டே, ''உனக்கு



உனக்கு உன்மீதே அருவெறுப்பு ஏற்படவில்லையா? ஜாதி அடிப்படையில் பிரமோஷன் கொடுப்பதாக இருந்தால் வேண்டாம் என்று எம்.டி.யிடமே மறுப்பைத் தெரிவித்த பெண் நீதானா... ச்சீ... ச்சீ...'' அவர் கண்கள் எல்லை இல்லாத வெறுப்பை பிரதிபலித்துக் கொண்டிருந்தன.

என் விழிகளில் கிர்ரென்று நீர் சுழன்றது. ஏதோ சொல்ல முற்படுவதற்குள், ஸ்கூட்டர் ஹெட் லைட்டின் வெளிச்சம் எங்கள்மீது விழுந்தது. ஸ்கூட்டர்மீது உட்கார்ந்து இருந்த மகேஷ் இந்தப் பக்கமே பார்த்துக் கொண்டிருந்தார். ஸ்ரீகாந்த் என் தோள்கள் மீது படிந்திருந்த கைகளை மெதுவாக விலக்கிக் கொண்டார்.

நான் மகேஷ் பக்கம் திரும்பி ஒரு அடி எடுத்து வைக்கப் போனேன். அதற்குள் மகேஷ் வண்டியை ஸ்டார்ட் செய்து அங்கிருந்து வேகமாய்ப் போய்விட்டார்.

ஆளரவம் இல்லாத ப்ளே கிரவுண்டில் நானும், ஸ்ரீகாந்தும் தனியாக நின்றுவிட்டோம். எங்கும் இருள் பரவி இருந்தது. ஸ்ரீகாந்த் என் அருகில் வந்து, ''ஐயாம் சாரி'' என்றார்.

பதில் எதுவும் சொல்லாமல் அங்கிருந்து நகர்ந்து விட்டேன்.

வீட்டுக்கு வந்தபோது கதவு திறந்துதான் இருந்தது. என்ன ரகளை நடக்கப் போகிறதோ என்று பயந்து கொண்டே உள்ளே காலடி எடுத்து வைத்தேன். ஹாலில் யாரும் இல்லை? மகேஷ் எங்கே போயிருப்பார்? சமையல் அறைக்குள் எட்டிப் பார்த்தேன். எங்கும் நிசப்தமாக இருந்தது. மறுபடியும் ஹாலுக்கு வரும்போது, நிசப்தத்தைச் சிதறடித்துக் கொண்டு ஒரு பெண்ணின் சிரிப்புச் சத்தம், எங்கள் படுக்கை அறையிலிருந்து கேட்டது.

* * *

படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை ஸ்டவ் பக்கத்தில் வைத்துவிட்டு முன் அறையில் எட்டிப் பார்த்தேன். இனி இந்தச் சூழ்நிலையில் படிப்பைத் தொடர முடியாது என்று எனக்குப் புரிந்துவிட்டது.

அந்த வருடம் எப்படியாவது பரீட்சைகளை எழுத வேண்டுமென்று முடிவு செய்தேன். ஸ்காலர்ஷிப் பணத்துக்காகத்தான் காலேஜுக்கு வருகிறாயா என்று ஸ்ரீகாந்த் கேட்டபோது யாரோ என் கன்னத்தில் பளாரென்று அறைந்தது போல் உணர்ந்தேன். இன்னும் சொல்லப் போனால் அந்த வார்த்தைகள் என்னுடைய பிடிவாதத்தை அதிகரிக்கச் செய்தன. எந்தப் பிரச்னைக்கும் தீர்வு இல்லாமல் இருக்காது. அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றால் நாம் யோசிக்கும் முறையில்தான் தவறு இருப்பதாக அர்த்தம். காலேஜுக்குப் போவதால் வீட்டு வேலைகள் சரியாகச் செய்ய முடியாமல் போவதுதான் தற்போதைய பிரச்னை. ப்ரைவேட்டாக பரீட்சை எழுதி, நல்ல மதிப்பெண்களைப் பெற முடியும் என்ற யோசனை வந்தது. வீட்டின் நிலைமை சாதகமாக இல்லாவிட்டாலும், நன்றாகப் படித்து முதல் வகுப்பில் வெற்றி பெற வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டேன்.

அன்று இரவு படுத்துக்கொள்ளும் முன் சொன்னேன், "நீங்க இப்படி இரவு பதினோரு மணி வரையில் நண்பர்களுடன் வீட்டில் அரட்டை அடித்துக் கொண்டிருப்பது என் படிப்புக்கு இடைஞ்சலாக இருக்கிறது."

ஒரு நிமிடம் சீரியஸாக யோசித்துவிட்டு, "நிஜம்தான். இந்த விஷயத்தை நான் யோசிக்கவில்லை. நாளையிலிருந்து நண்பர்களை வெளியில் சந்தித்துக் கொள்கிறேன்" என்றார்.

என்னால் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. "உங்களை வெளியில் போகச் சொல்வது என்னுடைய எண்ணம் இல்லை. இருவரும் வீட்டுப் பொறுப்புகளை



சமமாகப் பகிர்ந்து கொள்ளணும் என்று முடிவு செய்திருந்தோம். உங்களால் முடியவில்லை. மாலை வேளையில் சினேகிதர்களுடன் பேசவே உங்களுக்கு நேரம் போதவில்லை. அந்த வெட்டிப் பேச்சுகளுக்கு 'க்ரியேட்டிவ் வர்க்' என்று பட்டம் வேறு. காலேஜ் போவதை நிறுத்திவிட்டு அடுப்பங்கரையில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருக்கிறேன். இந்தச் சூழ்நிலையில் என் அருகில் இருந்து உதவி செய்வதை விட்டுவிட்டு, எனக்குத் தொந்தரவாக இருக்கக் கூடாது என்ற சாக்கில் வெளியில் போவது நியாயம்தானா?"

என்னாலும் இவ்வளவு ஆவேசமாகப் பேச முடியும் என்று அதுவரை எனக்குத் தெரியாது.

அவருக்குக் கோபம் வந்துவிட்டது. "நான் வெளியே போகிறேன் என்று சொன்னது எனக்காக இல்லை. என்னுடைய நல்லதனத்தைப் புரிந்துகொள்ள ஏன் மறுக்கிறாய்? சமையல் செய்வதற்காகக் காலேஜுக்குப் போவதை நிறுத்திவிட்டாய். அதுதானே உன் வருத்தம். நாளையிலிருந்து நீ காலேஜுக்குப் போகலாம். சமையலுக்கு ஒரு ஆளை ஏற்பாடு செய்கிறேன்."

"சமையல்காரிக்கு சம்பளம் யார் கொடுப்பாங்க. வர்ற சம்பளம் முழுவதும் வட்டி கட்டவே சரியாக இருக்கே" குரலை உயர்த்தாமல் என்னால் இருக்க முடியவில்லை.

"ஓஹோ! கணக்கு வைத்துக் கொண்டுதான் இருக்கிறாயா? நான் வட்டி கட்டியது என்னுடைய சம்பளத்தில். உன் பணத்தில் இருந்து இல்லை."

திகைத்துப் போய் நின்றுவிட்டேன்.

மகேஷ் மேலும் சொன்னார். "என்னுடைய சீரியல் ஒளிபரப்பு ஆகத் தொடங்கிவிட்டது. விஷயம் இதுவரைக்கும் வந்துவிட்டதால் சொல்கிறேன். உனக்குச் சம்பளமாக வரும் ஆயிரம் ரூபாயை வீட்டுக்காகச் செலவு செய்துகொள். என்னுடைய

பங்காக ஆயிரம் ரூபாயை நானும் தருகிறேன். வீட்டு வேலை களை நான் செய்வதில்லை. ஆனால், சமையல்காரியின் சம்பளத் துக்காக ஐந்நூறு ரூபாயை நானே தந்து விடுகிறேன். கணக்குப் படி இருநூற்று ஐம்பது ரூபாய் கொடுத்தால் போதும். போகட்டும் பாவம் என்று ஐந்நூறு ரூபாய் கொடுப்பதாகச் சொல்கிறேன்; அந்த விஷயத்தை நினைவில் வைத்துக்கொள். என்னுடைய பாக்கி சம்பளத்தை என்ன வேணும்னாலும் செலவு செய்து கொள் வேன்.''

''குடித்தனம் என்றால் உழைப்புக்கு விலையை நிர்ணயிப்ப தும், வரும்படியில் பங்கு போட்டுக் கொள்வதும் இல்லை'' சமாதானப்படுத்துவதுபோல் சொன்னேன்.

''இல்லா விட்டால் என்ன? நான் மற்ற ஆண்களைப் போல் இல்லை. என் மனைவியின் உழைப்புக்குக்கூட கூலியை முடிவு செய்து, கச்சிதமாகக் கொடுத்து விடுவேன். நீ கவனித்திருக்கி றாயோ இல்லையோ, தொடக்கத்தில் இருந்தே சில கொள்கை களைக் கடைப்பிடித்து வருகிறேன். உன்னைப் போல் நேரத் துக்குத் தகுந்தாற்போல் பேச்சை மாற்ற மாட்டேன்.''

''பேச்சை மாற்றினது நீங்கதான். வட்டி கட்டிக் கொண் டிருந்த நாட்களில் என் சம்பளத்தில் காலத்தைத் தள்ளினீங்க. வீட்டுப் பொறுப்புகளை என் தலையில் கட்டினீங்க. இன்று பொருளாதார வசதி வந்ததும் என் உழைப்புக்கு விலை போட்டு, சமையல்காரியை வைப்பதாகச் சொல்றீங்க.''

''நானாக இருப்பதால் உனக்காக யோசிக்கிறேன். இன் னொரு ஆணாக இருந்தால் 'ஆமாம்... நான் அப்படித்தான் இருப் பேன். விருப்பமிருந்தால் இரு... இல்லாவிட்டால் போய்க் கொள்' என்பான். என் நண்பர்கள் வீட்டுக்கு வருவதால் உனக்கு இடைஞ்சலாக இருக்கு என்று நீ சொன்னபோது, நான் மறுக்க வில்லை. உனக்கு இடைஞ்சல் இல்லாமல் வெளியில் போவ



தாகச் சொன்னால், அதற்கும் மறுப்புத் தெரிவிக்கிறாய். என் னிடமிருந்து நீ எதை எதிர்பார்க்கிறாய்? பெண் உரிமைகளை மதிப்பவன் நான். நான் என்னுடைய நண்பர்களுடன் பேசி னாலே உன்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ஆனால், இரவு ஒன்பது மணிக்கு காலேஜ் ப்ளே கிரவுண்டில் எவனோ ஒருவன் உன் தோளில் கையைப்போட்டுக் கொண்டு நெருக்க மாக நின்று கொண்டிருந்தபோதும், நான் உன்னை எதுவும் கேட்கவில்லை. அதை நீ புரிந்து கொண்டால் நம் குடித்தனம் நிம்மதியாக இருக்கும்'' என்று சொல்லிவிட்டு அந்தப் பக்கம் திரும்பிப் படுத்துக்கொண்டார்.

நேற்று இரவு நடந்த நிகழ்ச்சி, மறுபடியும் என் கண்களுக்கு முன் நிழலாடியது.

* * *

**எ**ங்களுடைய படுக்கை அறையிலிருந்து பெண்ணின் சிரிப்புச் சத்தம் கேட்டபோது கல்லாய்ச் சமைந்து நின்றுவிட் டேன். கால்களில் வலிமை இல்லாததுபோல் அப்படியே நாற் காலியில் சரிந்துவிட்டேன். எத்தனை நேரம் அப்படி உட்கார்ந்து இருந்தேனோ எனக்கே தெரியவில்லை.

அந்தப் பெண்ணை வாசல் வரை கொண்டுவிட்டு மகேஷ் உள்ளே வந்தார். என் எதிரில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டே சொன்னார்:

''இப்போ புரிந்ததா... என்னுடைய வாதனை என்ன வென்று?''

அவர் பக்கம் வெறுமையாகப் பார்த்தேன். வாய் திறந்து பேசவும் என்னிடம் திராணி இருக்கவில்லை.

''நான் அந்தப் பெண்ணை எதுவும் செய்யவில்லை. உன் காதில் விழற மாதிரி சிரிக்கச் சொன்னேன். அவ்வளவுதான்...

அதற்கே எல்லாம் இழந்துவிட்டவள்போல் உட்கார்ந்து விட் டாய். அதேபோல் வேறு ஆணுடன் நீ நெருங்கிப் பழகாவிட்டா லும், சாதாரணமாகப் பேசிக் கொண்டிருந்தாலும் எனக்கும் அப்படித்தானிருக்கும். அதை உனக்கு உணர்த்துவதற்காகத்தான் இந்த ப்ராக்டிகல் ஜோக் செய்தேன்.''

''நீங்கள் சொல்ல வந்தது என்னவென்று எனக்குக் கொஞ் சம் கொஞ்சம் புரிகிறது. ஆனால், என்ன நடந்தது என்று...''

''எந்த விளக்கமும் எனக்குத் தேவையில்லை. உன் உலகம் உன்னுடையது. என் உலகம் என்னுடையது. என்னுடைய உலகத்திற்குள் நீ காலடி எடுத்து வைக்கணும் என்றால் நீ சில தியாகங்களைச் செய்ய வேண்டியிருக்கும்...''

உண்மையிலேயே கன்வின்ஸ் ஆகிவிட்டேன். என்னுடைய எண்ணங்களும் தலைகீழாக மாறி இருக்கும். எங்கள் கட்டிலுக்கு அடியில் அந்தப் பெண்ணின் உள்ளாடைகள் மட்டும் என் கண்ணில் படாமல் இருந்திருந்தால்!

* * *

அந்த உள்ளாடைகளைக் கண்ணிமைக்காமல் மகேஷ் ஒரு நிமிடம் பார்த்துவிட்டு, எதுவும் நடக்காததுபோல், கண்களைப் பாதி மூடிய நிலையில் சொன்னார்.

''ஆமாம்... அந்தப் பெண்ணுடையதுதான். நடந்தது எல் லாம் சொன்னால் உன் மனம் வேதனைப்படுமே என்று மறைத் தேன். ஒரு ஆணும், ஒரு பெண்ணும் தனிமையில் சந்தித்துக் கொள்ள நேர்ந்தால், அதன் விளைவு என்னவாக இருக்குமென்று இப்போ உனக்குப் புரிந்திருக்கணுமே!''

எனக்குச் சிரிப்பதா, அழுவதா என்று புரியவில்லை.

* * *



# 8

வாழ்க்கையில் எதையோ இழந்துகொண்டு இருக்கிறேன் என்ற உணர்வு நாளுக்கு நாள் என்னுள் வலுப்பட்டுக் கொண்டிருந்தது. வேடிக்கை என்ன வென்றால் எங்கள் இருவரின் வாதங்களைக் கேட் டால், யாருக்குமே மகேஷ் பக்கம்தான் நியாயம் இருப்பதாகத் தோன்றும்.

மகேஷ் டைரக்ட் செய்த சீரியல் சூப்பர் ஹிட்ஆனதில், மக்கள் அவரைப் புகழ்ந்து தள்ளிவிட்டார்கள். ஸ்ரீகாந்த் என்ன கையாடிய அந்தக் கடைசி ஷாட் மக்கள் மனதில் ஆழமான முத்திரையைப் பதித்துவிட்டது. அவருடைய சர்கிள் இப்போ மாறிவிட்டது. கடிதங்கள், தொலைபேசி அழைப்புகள்... நண் பர்கள்... பார்ட்டிகள் என்று வாழ்க்கையின் போக்கே மாறி விட் டதுபோல் தோன்றியது. இந்த நேரத்தில் நான் கருவுற்றேன்.

* * *

''**வாழ்த்துக்கள்**. நீங்கள் தாயாகப் போகிறீர்கள்'' என்று டாக்டர் சொன்னபோது, என் கால்கள் தரையில் நிற்கவில்லை. ஒரு பெண்ணால் மட்டுமே புரிந்து கொள்ளக் கூடிய அற்புதமான உணர்வு அது!

உடனே மகேஷிடம் விஷயத்தைச் சொன்னேன். ஆனால், நான் எதிர்பார்த்தாற்போல் அவர் மகிழ்ச்சி அடையவில்லை.

''சில நாட்கள் ஒத்திப் போட முடியாதா?'' என்று மட்டும் கேட்டார்.

''அப்படின்னா! அபார்ஷன் செய்துக்கச் சொல்றீங்களா?''

''அதுக்காக இல்லை. இப்போதான் நாம் கொஞ்சம் வசதி யாக வாழ்ந்து வருகிறோம். ஹனிமூனுக்குக்கூட இன்னும் போக வில்லை. இருந்தாலும் இந்தக் குழந்தையைப் பெற்றுக் கொள் வதா, வேண்டாமா என்று முடிவு செய்ய வேண்டியது நீதான்.

உன்னுடைய உரிமையைத் தடைசெய்ய நான் ஒன்றும் ஆதிக்கம் படைத்தவன் இல்லை.''

எங்கள் பந்தத்தை நிலைக்கச் செய்யும் கடைசி முயற்சியாக நான் தாயாவதற்கு முடிவு செய்தேன்.

★ ★ ★

## 9

''தாய்மை அடைந்த பிறகுதான் ஒரு பெண்ணின் வாழ்க்கைக்கு முழுமை கிடைக்கும்'' என்று எந்த எழுத்தாளர் எழுதினாரோ தெரியவில்லை! ஆனால் கருவைச் சுமந்துகொண்டிருக்கும் அந்த ஒன்பது மாதமும் பெண்களுக்குக் கஷ்டமான காலமாக இருக்கும் என்பதை சுய அனுபவத்தில் என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. மார்னிங் சிக்நெஸ் இருந்ததால் எதையுமே சாப்பிட முடியாமல் உடலில் தளர்ச்சி ஏற்பட்டது. சம்பளம் நஷ்டமானாலும் பரவாயில்லை என்று இரண்டு மாதங்கள் விடுமுறைக்கு ஆஃபீசில் விண்ணப்பம் கொடுத்தேன்.

லீவ் கொடுக்க மேனேஜர் லேசில் ஒப்புக் கொள்ளவில்லை. ஆஃபீஸ் ரூல்ஸ்படி மூன்று மாதங்கள் மெடர்னடீ லீவ் இருக்கே என்று நான் கேட்டதற்கு, ''அது டெலிவரி சமயத்தில்தான்'' என்று அவர் தனியாகச் சட்டங்களைச் சுட்டிக் காட்டினார்.

என் விஷயத்தில் மகேஷ் கொஞ்சம்கூட அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. அவர் தன் நண்பர்களுடன் சேர்ந்து ''மருந்து''க்காகச் செலவு செய்யும் பணத்தில் பத்தில் ஒரு பங்காவது



ன் மருந்துகளுக்காகச் செலவு செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று தோன்றியது.

நான் வாழ்ந்து வரும் வாழ்க்கையின்மீது எனக்கே வெறுப்பு தோன்றிய நேரம் மகேஷ் வேறு ஒரு பெண்ணிடம் தீவிரமான காதலில் மூழ்கியிருக்கிறார் என்ற செய்தி என்னை வந்து தாக்கியது.

★ ★ ★

மகேஷ் ரொம்ப நிதானமாக, தெளிவான குரலில் சொன்னார்:

''ஆமாம்! நான் ஒரு கலைஞன். என் திறமையை மற்றவர்கள் கண்டுகொள்ள வேண்டும் என்று நான் விரும்புவதில் தவறு எதுவும் இல்லையே. மனைவியான நீ ஒருநாளும் என்னுள் இருக்கிற கலைஞனைப் புரிந்து கொண்டதில்லை. நாம் இருவரும் வெவ்வேறு சூழ்நிலையில் வளர்ந்ததால், எண்ணங்களிலும் மாறுபாடு வந்துவிட்டது. இனி தாம்பத்திய வாழ்க்கையை எடுத்துக் கொண்டால், ஒருநாளும் உன்னிடம் எனக்குத் திருப்தி ஏற்பட்டதில்லை. நானாக இருப்பதால் உன்னுடன் இன்னும் சேர்ந்து வாழ்கிறேன். நம் இருவருக்கும் திருமணமே நடக்கவில்லை. ஆனாலும், கொடுத்த வார்த்தைக்குக் கட்டுப்பட்டு உன்னுடன் இருக்கிறேன். உன்னைவிட திறமையாக வீட்டை நிர்வாகம் செய்து, படுக்கையிலும் திருப்தி தரும் பெண்கள் எனக்காக வரிசையில் நிற்கும்போது, நான் இன்னும் உன்னுடன் இருக்கிறேன் என்றால்... வாக்குக் கொடுத்துவிட்டேன் என்ற ஒரே ஒரு காரணத்தினால்தான். பெண் உரிமைகளைப் பெரிதும் மதிக்கும் நான் ஒருநாளும் உன்னை எதுவும் கேட்கவில்லை. இப்பொ நீயாக என்னைக் கேட்டதால் சொல்கிறேன். ஆமாம்! அந்தப் பெண்ணை நான் காதலிக்கிறேன். அவளிடம் எனக்குத் தேவையான மகிழ்ச்சியைத் தேடிக் கொள்கிறேன்.''

நான் கல்லாகச் சமைந்துவிட்டேன். அவருக்கு என்மீது இவ்வளவு தாழ்வான அபிப்பிராயம் இருப்பதை முதல் முறையாகத் தெரிந்து கொண்டதால் இல்லை... எந்தக் கோர்ட்டுக்குப் போனாலும் தோற்றுப் போக முடியாத அளவுக்குத் தன் வாதத்தை எடுத்துச் சொன்னதற்கு.

மகேஷ் குரல் மேலும் ஒலித்தது, ''குழந்தைகளைப் பெற்றுத் தளர்ந்துபோய்விட்ட மனைவிகளைப் புறக்கணிக்கும் கணவர்களும் இந்த உலகத்தில் இருக்கிறார்கள். அவர்களை நான் வெறுக்கிறேன். அதனால் குழந்தையைப் பெறுவதற்கு முன்பே உன்னிடமிருந்து விலகிப் போய்விட்டேன். உனக்கு விருப்பம் இருந்தால் இதே வீட்டில் இருந்து கொள்ளலாம். உன் சுதந்திரத்தில் குறுக்கிட மாட்டேன். உன் சம்பளத்தில் பங்கு கேட்கவும் மாட்டேன். போதுமா... நன்றாக யோசித்து முடிவு செய்து கொள்.''

அன்று இரவே என்னுடைய துணிமணிகளைச் சூட்கேசில் எடுத்துக்கொண்டு வர்கிங் விமென்ஸ் ஹாஸ்டலுக்குப் போய் விட்டேன்.

* * *

ஹாஸ்டலில் சேர்ந்த இரண்டு நாட்கள் கழித்து என்னுடைய ஆவேசம் தணிந்துவிட்டது. எப்படித் தெரிந்ததோ தெரியவில்லை. என் விஷயம் ஹாஸ்டலில் எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. வேடிக்கை என்னவென்றால் எல்லோரும் மகேஷ் பக்கம் நியாயம் இருப்பதாகப் பேசினார்கள். மகேஷ் ஒரு நாளும் என்னை அடித்ததில்லை. திட்டியதும் இல்லை. அப்படி இருந்தும் நான் அவரைவிட்டு வெளியில் வந்துவிட்டது என்னுடைய முட்டாள்தனம் என்று அவர்களுடைய ஏகோபித்த அபிப்பிராயமாக இருந்தது. எல்லோரும் சேர்ந்து புத்தர் லெவலில் எனக்கு அறிவுரைகள் வழங்க ஆரம்பித்தார்கள்.



நாரதருடைய உபதேசங்களைக் கேட்டு லீலாவதியின் வயிற்றில் இருந்த பிரகலாதன் (பிறக்கும் முன்பே) விஷ்ணு பக்தனாகி விட்டானாம். அதுபோல் என்னைச் சுற்றி இருக்கும் மேதாவிகள் செய்த அறிவுரைகளைக் கேட்டு என் வயிற்றில் இருந்த குழந்தை வெளி உலகிற்கு வர விருப்பம் இல்லாமல் முடித்துக் கொண்டது. மூன்றாவது மாதம் முடியும் நேரம் எனக்கு அபார்ஷன் ஆகிவிட்டது.

ஹாஸ்டலில் இருந்த தனிமை எனக்கு மேலும் வேதனையைத் தந்தது. ஒரு துணை வேண்டுமென்ற விருப்பம் என் மனதில் பலமாக வேரூன்றத் தொடங்கியது. கஷ்டமோ, நஷ்டமோ மகேஷுடனே இருந்துவிடலாம் என்ற நினைப்புகூட ஏற்பட்டது.

ஹாஸ்டலில் இருக்கும்போதே மகேஷ் அந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டதாகச் செய்தி தெரிந்தது. அன்று இரவே தற்கொலை செய்துகொள்ள முயற்சித்தேன்.

மகேஷை திருமணம் செய்துகொள்ளாமல் அவருடன் சேர்ந்து வாழ்ந்ததில் தவறு செய்து விட்டேனோ என்று தோன்றியது. ஆனால், அது உண்மையில்லை. திருமணம் ஆகியிருந்தால் கோர்ட் மூலம் எனக்கு ஜீவனாம்சம் கிடைத்திருக்கும். அதைக் கொடுக்க மகேஷ் இப்பவும் தயாராகத்தானே இருக்கிறார்.

அப்போ என்னுடைய பிரச்னைதான் என்ன? ஒன்று மட்டும் புரிந்தது. தன்னுடைய பிரச்னை என்னவென்று தனக்கே புரியாமல் இருப்பதைவிட பெரிய பிரச்னை வேறு இல்லை. இதற்குத் தீர்வாக தூக்க மாத்திரைகளைத் தேர்ந்தெடுத்தேன்.

கதவைச் சாத்திவிட்டு, தண்ணீர் டம்ளரைக் கையில் எடுத்துக் கொண்டேன். முதல் மாத்திரையை எடுத்து வாயில் போட்டுக் கொள்ளப் போகும் நேரம்! கதவை யாரோ தட்டினார்கள்.

சினிமாவிலும், நாடகங்களிலும் வழக்கமாக நடக்கக்கூடிய இந்த நிகழ்ச்சி, என்னுடைய வாழ்க்கையிலும் நிகழக்கூடும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

உள்ளே வந்த ஸ்ரீகாந்த் என் கையில் இருந்த தூக்க மாத்திரைகளையும், தண்ணீர் டம்ளரையும் பார்த்து, பதட்டப்படவும் இல்லை. 'என்ன காரியத்தைச் செய்யத் துணிந்து விட்டாய். கடவுள் நமக்கு வாழ்க்கையைக் கொடுத்தது, இப்படிப் பாதியிலேயே முடித்துக் கொள்வதற்காக இல்லை. கஷ்டங்கள் வரும்போது தான் தைரியமாக இருக்கணும்' இதுபோன்ற பொன்மொழிகளை உதிர்க்கவும் இல்லை.

''ஆஸ்பத்திரியில் தற்கொலை செய்துகொள்ள முயற்சி செய்தால் காப்பாற்றக்கூடிய வாய்ப்புகள் அதிகம். உன் ப்ரோகிராமை ஒருநாள் தள்ளிப்போடக் கூடாதா? அதுவும் இல்லாமல் பதினாறு மாத்திரைகள்தான் இருக்கும்போல் இருக்கு. நாற்பதாக இருந்தால் பெட்டராக இருந்திருக்கும்'' என்றார்.

ஸ்ரீகாந்த் பக்கம் இயலாமையுடன் பார்த்தேன். ''செத்த பாம்பை இன்னும் அடிக்காதீர்கள்'' என்று சொல்ல நினைத்தாலும், ரொம்பவும் நாடகப் பாணியில் இருக்கும் என்று மவுனமாக இருந்துவிட்டேன்.

ஸ்ரீகாந்த் சொன்னார். ''இந்த உலகில் ஆயிரத்துக்கு தொள்ளாயிரம் பேர் தற்கொலை செய்துகொள்ள வேண்டுமென்று ஒரு தடவையாவது நினைத்திருப்பார்கள். அந்த அளவுக்குத் தைரியம் கூட இல்லாததால் அவர்களால் அந்தக் காரியத்தைச் செயல்படுத்த முடியவில்லை. செத்துப் போவதால் உனக்கு நிம்மதி கிடைக்கும் என்றால் தாராளமாகத் தற்கொலை செய்து கொள். ஒவ்வொரு மாத்திரையாகப் போட்டுக் கொண்டிரு. அதற்குள் இன்னும் இருபத்தைந்து மாத்திரைகளை வாங்கிக் கொண்டு வருகிறேன்.''



என் பதிலுக்காகக் காத்திருக்காமல் வெளியேறினார்.

கால்மணி நேரம் கழித்து அவர் திரும்பி வந்தபோது, அப்படியே உட்கார்ந்திருந்தேன். அதைப் பார்த்து அவர் வியப்பு அடையவில்லை. 'பார்த்தாயா? இந்தப் பத்து நிமிடங்களில் உன் எண்ணங்களின் தீவிரம் எப்படிக் குறைந்து விட்டதென்று? நம் எண்ணங்கள் எப்போதும் மாறிக்கொண்டே இருக்கும். அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுப்பது அனாவசியம். எதிர்காலம், மகிழ்ச்சி... பாதுகாப்பு இவையெல்லாம்தான் வாழ்க்கையில் முக்கியமானவை. நமக்காகத்தான் நாம் வாழ வேண்டும். நன்றாக யோசித்துக் கொள்'' சொல்ல நினைத்ததைச் சொல்லி முடித்துவிட்டவர்போல் ஸ்ரீகாந்த் அங்கிருந்து போய்விட்டார்.

அதன் பிறகு அவரை ரொம்ப நாட்கள் வரை சந்திக்கவில்லை.

அன்று இரவு ஸ்ரீகாந்த் சொன்னதை மறுபடியும் யோசித்துப் பார்த்தேன். இத்தனை நாட்களும் என் வாழ்க்கை இப்படி ஆவதற்கு நான் ''செய்த'' தவறு என்னவென்று யோசித்து வந்தேனே தவிர, எதை ''செய்ய''வில்லையென்று யோசிக்கவில்லை. மகேஷ் உதட்டளவில் சொல்லும் பெண் உரிமை வாதங்கள், செயல்முறையில் பெண்களுக்கு எந்த விதத்திலும் பயன்படப் போவதில்லை என்று புரிவதற்கு இத்தனை நாட்கள் பிடித்தது.

பெண்ணைவிட ஆண் உடல் ரீதியாக பலசாலியாக இருப்பது உண்மைதான். ஆனால், மன உறுதியை வளர்த்துக் கொண்ட பெண்களுக்கு வாழ்க்கையை எதிர்கொள்வதில் எந்தப் பிரச்னையும் இருப்பதில்லை. இந்த உண்மையைப் புரிந்துகொண்ட பிறகு என்னுடைய எண்ணங்களில் பெரிய மாற்றம் ஏற்பட்டது.

இரண்டு நாட்கள் கழித்து எங்களுடைய எம்.டி.யைச் சந்தித்தேன்.

நான் சொன்னதையெல்லாம் எம்.டி. பொறுமையுடன் கேட்டுக் கொண்டார். தற்காலிகமான புகழ்ச்சிக்கு மயங்கி, என்

னுடைய வேலையை அலட்சியப்படுத்தி விட்டதாகவும், மற்றொரு முறை வாய்ப்பு தர வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்தேன். ஆனால் அவர் உடனே எந்த முடிவையும் தெரிவிக்கவில்லை.

மறுபடியும் படிப்பில் ஆழ்ந்துவிட்டேன். ஹாஸ்டலில் தங்கிக்கொண்டு, ஒரு பக்கம் வேலைக்குப் போய்க் கொண்டே படிப்பையும் தொடருவதில் எனக்கு எந்தக் கஷ்டமும் இருக்கவில்லை. மகேஷின் பேச்சுக்கள் எவ்வளவு அர்த்தமில்லாதவை என்று தெளிவாகப் புரிந்தது. ஆயிரம் ரூபாய் கொடுத்தால் ஹாஸ்டலில் தங்குவதற்கு இடமும், உணவும் கிடைத்து விடும். மேலும் எந்த வேலையும் செய்யத் தேவையில்லை. கணவன், மனைவிக்கு இடையில் அன்பு என்ற பிரஸ்தாபனையே இல்லாத போது—எந்த வேலையை யார் எப்பொ, எதுக்கு, எப்படி செய்வது என்ற பிரச்னை, வேலைக்குப் போகும் பெண்ணுக்கு ஏற்பட்டால் அதுக்குச் சரியான தீர்வு இதுதான் எனத் தோன்றியது. ஒரு நல்ல இல்லத்தரசியாக இருக்க வேண்டும் என்ற என்னுடைய விருப்பம் இப்படித் தோல்வியில் முடிந்து விட்டதே என்ற வருத்தம் சில சமயம் இருந்தாலும், குழந்தை என்ற பந்தம் ஏற்பட்ட பிறகு இந்த நிலைமை வந்திருந்தால் இப்படி ஹாஸ்டலில் தங்கியிருக்க முடியாது.

ஒரே சிட்டிங்கில் டிக்ரியை முடிக்கத் தீர்மானித்துக் கொண்டேன். அது அவ்வளவு சுலபமானது இல்லை என்று தெரியும். ஆனால், கஷ்டமான வேலைகளை வெற்றிகரமாய் முடிக்கும் போது எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும் என்பதை ரிசல்ட்ஸ் வெளியான அன்று அனுபவபூர்வமாக உணர்ந்தேன்.

ரிசல்ட்ஸ் வந்த இரண்டாவது நாள் எம்.டி.யிடமிருந்து மறுபடியும் எனக்கு அழைப்பு வந்தது.

''சொன்ன சொல்லைக் காப்பாற்றிக் கொண்டாய். வெரி...குட்'' என்று வாழ்த்துக்கள் தெரிவித்தார்.



''தாங்க்யூ சார்'' என்றேன்.

''நிறைய பேர் ஆவேசத்தில் பெரிய பெரிய முடிவுகளை எடுத்துக் கொள்வார்கள். ஆனால் செயல்முறைக்கு வரும்போது அந்த ஆவேசம் காணாமல் போய்விடும். அந்தக் கூட்டத்தில் ஒருத்தியாக நீ இல்லாததற்கு ரொம்ப சந்தோஷம்'' என்றவர் என் கையில் ஒரு கவரைக் கொடுத்தார்.

பிராஞ்ச் மேனேஜராக என்னைப் பிரமோட் செய்து இருப்பதாக அந்தக் கவரில் ஆர்டர்ஸ் இருந்தன.

* * *

## 10

**நான்** எம்.பி.ஏ.வில் சேர்ந்தேன். முதல் வருடத்தில் நல்ல மதிப்பெண்களையும் பெற்றேன். பிராஞ்ச் மேனேஜர் பொறுப்பில் இருந்ததால் மூச்சு விடவும் நேரமில்லாமல் வேலைகள் என்னைச் சூழ்ந்திருந்தன. ஒரு பக்கம் வேலை... மறுபக்கம் படிப்பு... இந்த இரண்டிற்கும் இடையே என்னுடைய தனிமை, மன வேதனைகளைப் பற்றி யோசிக்கவும் எனக்கு நேரமில்லை.

இரண்டாவது வருடத் தொடக்கத்தில் புதிய லெக்சரர் வரப் போவதாகத் தெரிந்தது. வந்தது வேறு யாரோ இல்லை. ஸ்ரீகாந்த்... என்னைப் பார்த்துப் புன்னகையுடன் அருகில் வந்தார். ''நான் எதை உன்னிடமிருந்து எதிர்பார்த்தேனோ, அந்த வழியைப் பின்பற்றி வருகிறாய்... குட்...'' என்றார்.

''இத்தனை நாட்கள் எங்கே காணாமல் போய் விட்டீங்க?''

குரலில் நிஷ்டூரம் தொனிக்கக் கேட்டேன்.

''அந்தக் காலேஜில் பார்ட் டைம் லெக்சரர்களுக்குச் சம்பளம் அதிகமாகத் தர மாட்டார்கள். ஐ.சி.டப்ள்யூ.ஏ. முடிந்து விட்டேன். இந்தக் காலேஜில் வேலை கிடைத்தது. சம்பளமும் அதிகம்'' என்றார்.

''என் கேள்விக்குப் பதில் அது இல்லை. நாம் இருவரும் சந்தித்துக் கொண்டு, கிட்டத்தட்ட ஒரு வருடம் ஆகி இருக்கும். ஆஸ்பத்திரியில் இருந்து டிஸ்சார்ஜ் ஆன பிறகு உங்களைச் சந்திக்கக் காலேஜுக்குப் போயிருந்தேன். நீங்க ராஜினாமா செய்துவிட்டதாகத் தெரிந்தது. நான் வேலை செய்யும் ஆஃபீஸ் உங்களுக்குத் தெரியும் என்பதால், குறைந்த பட்சம் போனி லாவது என்னுடன் தொடர்பு கொள்வீர்கள் என்று எதிர்பார்த்தேன்'' என்றேன்.

''எதுக்கு?''

அந்த மூன்று எழுத்துக்களும் கூர்மையான அம்பைப் போல் என் மனதைத் தாக்கின. குழப்பம் அடைந்தவளாய் அவர் பக்கம் பார்த்துக் கொண்டே, ''என்ன சொன்னீங்க?''

''அப்பொ ஆஸ்பத்திரியைத் தேடிக் கொண்டு வந்து என்னைச் சந்தித்தது மட்டும் எதுக்காகவாம்?'' கோபத்துடன் கேட்டேன்.

''அப்பொ நீ கஷ்டங்களில் இருந்தாய்.''

''என்மீது இரக்கம் காட்ட வந்தீர்களா?''

''இல்லை. உன்னுடைய எண்ணங்களைச் சரியான பாதையில் திருப்ப வேண்டும் என்றுதான் வந்தேன். தற்கொலை செய்து கொள்வதாக இருந்தாலும் சரியான அளவு தூக்க மாத்திரைகளைப் போட்டுக் கொள்ளச் சொன்னதும் அதுக்காகத்தான்.''

என்னால் பதில் சொல்ல முடியவில்லை. ஸ்ரீகாந்த் மேலும் தொடர்ந்தார்.

''கணவனால் இன்னல்களை அனுபவிக்கும் ஒரு பெண், வேறொரு ஆணுடைய உதவியாய் அந்தக் கஷ்டங்களில் இருந்து



விடுதலை பெறுவதாக எழுதுவதுதான் நவீன இலக்கியத்தின் டிரெண்ட். வேறு விதமாகச் சொல்லணும் என்றால், பெண் என்பவள் எப்போதும் ஒரு ஆணைச் சார்ந்துதான் வாழவேண்டும் என்ற கருத்தை பிரதிபலிக்கச் செய்வதுதான் இதனுடைய நோக்கம். உன் கஷ்டங்களில் இருந்து நீயாக, சுய முயற்சியால் விடுபட வேண்டும் என்பதுதான் என் விருப்பம். அதனால்தான் அதற்குப் பிறகு உன்னைச் சந்திக்கவில்லை.''

''சுற்றி வளைக்காமல் நேராகவே சொல்லலாம் ஸ்ரீகாந்த். நீங்க கையை நீட்டியதும், அதைப் பற்றிக் கொண்டு வெளியே வருவதற்கு பெண்கள் என்ன தனித்துவம் இல்லாதவர்கள் என்று நினைத்து விட்டீர்களா?''

இதழ்களில் புன்னகை மாறாமல் ஸ்ரீகாந்த் சொன்னார்:

''சுற்றி வளைத்துச் சொன்னாலும், நேராகச் சொன்னாலும், கடைசியில் நடப்பது அதுதான். நீ கஷ்டங்களில் இருக்கும்போது ஆறுதல் சொல்லும் சாக்கில் அடிக்கடி நான் உன்னைச் சந்தித்து வருவேன். அதனால் உனக்கு என்பால் நன்றி உணர்ச்சி ஏற்படும். புனிதமான நட்புடன் தொடங்கிய இந்த உறவு கடைசியில் வேறு விதமான நோக்கத்தில் போய் முடியும். உன் பிரச்னை அப்படியே இருக்கும். உன்னுடைய சுதந்திரம் அதுக்காகத்தான் பயன் படும்.''

என் முகம் கன்றிவிட்டது. ''பெண்களின் சுதந்திரம் பற்றி உங்களுக்கு இவ்வளவு தாழ்வான அபிப்பிராயம் இருப்பதற்கு ரொம்ப வருத்தப்படுகிறேன்.''

''நான் சொன்னது பெண்கள் பற்றி இல்லை. தங்களுடைய பலவீனங்களை ஒப்புக் கொள்ளாத ஹிபோகிரடிக் மனிதர்களிடம் எனக்கு ரொம்ப தாழ்வான அபிப்பிராயம் இருக்கு. இரண்டு மனிதர்களுக்கு நடுவில் நட்பு தொடரவேண்டும் என்றால், எண்ணங்களில், தொழிலில் ஒற்றுமை இருக்கவேண்டும். ஆண்

பெண்ணுக்கு இடையில் நட்பு மலர இவை எதுவும் தேவை யில்லை. அவர்களுக்கே தெரியாத இனக் கவர்ச்சி அந்த நட்பை நெருக்கத்தில் கொண்டுபோய்விடும். சமுதாயக் கோட்பாடு களிடம் மதிப்பு கொண்டவர்களாக இருந்தால், இந்த நெருக்கம் மனதளவில் நின்றுவிடும். சமுதாயம் சில கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியது இதற்காகத்தான். சுதந்திரம் என்பது நெருப்பு போன்றது. சரியாகப் பயன்படுத்திக் கொண்டால் வாழ்க்கையை ஒளிமயமாக்கிக் கொள்ளலாம். இல்லாவிட்டால் அந்த அக்னி நம்மையே எரித்துச் சாம்பலாக மாற்றிவிடும். இஷ்டம்போல் வாழ்வதும் நெறிமுறைகளைத் தவறுவதும்தான் சுதந்திரத்தின் வெளிப்பாடு என்று நினைத்தால் குற்ற உணர்ச்சி எதுவும் இல்லாமல், மனதை ஏமாற்றிக் கொள்ளாமல் வாழ்வது ஒரு தியரி... இல்லையா அந்தத் தேவையே இல்லாமல் வாழ முடி யும் என்றாலும் ஓகே! ஆனால் சுதந்திரமாக வாழ்வதாக நினைத்துக் கொண்டு நெறிமுறையற்ற வாழ்க்கையை வாழ்ந்து கொண்டே, தங்களை நல்லவர்களாக வெளி உலகிற்குக் காட்டிக் கொள்ள முயற்சி செய்வது ரொம்ப கேவலம். இப்பொ சொல்லு... பெண் சுதந்திரத்தை வரையறுத்து உன்னால் சொல்ல முடியுமா?''

* * *

''நாம் இருவரும் திருமணம் செய்து கொள்வோமா?''

எம்.பி.ஏ. இரண்டாவது வருடம் முடியும் நேரத்தில் ஸ்ரீகாந்த் என்னிடம் கேட்டார்.

வெறுமையாக அவர் பக்கம் பார்த்தேன்.

''அவசரமில்லை. நிதானமாக யோசித்து... பதில் சொல்லு...'' என்றார்.

''யோசிப்பதற்கு என்ன இருக்கு? கஷ்டங்களில் இருக்கும் எந்தப் பெண்ணின் கதையும் ஆணின் ஆதரவு கிடைத்த பிறகு



...ான் நல்ல முடிவுக்கு வரும் என்பதை நிரூபிக்க இஷ்டம் ...இல்லாமல்தானே என்னைச் சந்திக்கவில்லை என்று சொன்னீர் ...ளே! இப்பொ என்ன வந்துவிட்டது என்று யோசிக்கிறேன்?''

''நான் சொன்னதைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. அன்று நீ வீடே இல்லாமல் ஆதரவற்று இருந்தாய். இன்று ...ாருடைய உதவியும் இல்லாமல் உன் வீட்டை, அதாவது உன் வாழ்க்கையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறாய். அதுதான் வித்தி ...ாசம். அந்த வீட்டை அலங்கரிக்கும் வாய்ப்பை எனக்குத் தர முடியுமா என்று கேட்கிறேன். ஒருவேளை என்னால் உனக்கு ...தாவது இழப்பு ஏற்பட்டாலும் உன் வீடு உனக்கு எஞ்சி ...ிருக்கும். அந்த வீட்டின் பெயர் சுயகௌரவம்.''

யோசித்துப் பார்த்தபோது ஸ்ரீகாந்த் சொன்னதில் இருந்த உண்மை புரிந்தது. ஒரு காலத்தில கனவுகளையே என் எதிர்கால ...மாய் எண்ணி மகிழ்ந்து வந்தேனே தவிர, அது போன்ற எதிர் காலத்தை அடைவதற்கு என்ன செய்யவேண்டுமென்று ஒரு நாளும் யோசித்ததில்லை. மேம்போக்காகப் பார்த்தால் மகேஷின் வாதங்கள் சரியாக இருப்பதாகத் தோன்றினாலும், அந்த வாதங் களுக்குச் சரியான அஸ்திவாரம் இல்லை என்பதை நான் புரிந்து கொள்ளவில்லை. அந்த அஸ்திவாரத்தின் பெயர் ''அன்பு''.

* * *

## 11

ஸ்ரீகாந்துடன் என் திருமணத்துக்கு அவர் பக்கத்திலிருந்து அவ்வளவாக எதிர்ப்பு வர வில்லை. ஆனால், மகேஷிடமிருந்து எனக்கு வந்தது

மகேஷுடன் சேர்ந்து இருந்த பெண்ணுக்கு எதிர்பாராமல் சினிமாவில் சான்ஸ் கிடைத்து, ஒரே வருடத்தில் புகழின் உச்சிக்குப் போய்விட்டாள். அவரும் அவளைப் பின்பற்றி அந்தப் பில்டில் நுழைய முயற்சி செய்தார். ஆனால், அதற்குள் அவள் வேறொரு டைரக்டருக்கு இரண்டாவது மனைவியாக செட்டில் ஆகிவிட்டாள்.

ஒருநாள் இரவு மகேஷ் நன்றாகக் குடித்துவிட்டு என்னிடம் வந்து அழுதார். அவர் சொன்னதில் பெரும் பகுதி எனக்குப் புரியவில்லை.

''நீங்க சொல்வதை என்னால் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆண்-பெண் சேர்ந்து இருப்பதற்குத் திருமணம் என்ற சடங்கு தேவையில்லை என்று சொன்னது நீங்கதான். உங்களிடம் பணமும் புகழும் வந்து சேர்ந்ததும், ஏதோ ''இரக்கப் பட்டு'' என்னுடன் சேர்ந்து இருப்பதாகச் சொன்னதும் நீங்கதான். வேறு ஒரு பெண்ணின் அறிமுகம் கிடைத்ததும் நான் உங்களுக்கு லாயக்கு இல்லாதவளாகப் போய்விட்டேன். இன்று உங்களுடைய இரண்டாவது மனைவி அதே வழியைப் பின்பற்றினால் அதில் தவறு என்ன இருக்கு? வேணும்னா அவளுடைய வீட்டில் போய் சமையல்காரனாக இருந்துகொள். உங்க உழைப்புக்குத் தகுந்த ஊதியத்தை அவள் தருவாள்.''

ரொம்ப நாளாக அடக்கி வைத்திருந்த கோபம் என்னை மவுனமாக இருக்க அனுமதிக்கவில்லை.

''நம் குடித்தனத்தைச் சரிப்படுத்திக் கொள்வோம் என்று நான் தவித்துக் கொண்டிருக்கும்போது, நீ இப்படிப் பேசுவது நன்றாக இல்லை'' ஆவேசமாகச் சொன்னார்.

''கு...டி...த்...த...ன...த்...தைப் பற்றி நீங்க பேசுகிறீர்களா? முதலில் இந்த இடத்தைவிட்டுப் போய் விடுங்கள்...'' கோபத்தில் கத்தி விட்டேன்.



மகேஷ் வீட்டுக்குப் போன பிறகு தற்கொலைக்கு முயற்சி செய்தார் என்று தகவல் வந்தது. நண்பர்கள், தெரிந்தவர்கள் தாமாக முன்வந்து எங்கள் இருவரையும் சேர்த்து வைக்க பேச்சு வார்த்தைகளை நடத்தினார்கள். சமுதாயக் கோட்பாடுகளைச் சுட்டிக் காட்டி என்னைக் கன்வின்ஸ் செய்ய முயற்சி செய்தார்கள்.

இது போறாது என்று மகேஷ் எங்க ஆஃபீசுக்கே வந்து ரகளை செய்ய ஆரம்பித்தார். ஸ்ரீகாந்த் வரைக்கும் இந்த விஷயத்தைக் கொண்டு போவதை நான் விரும்பவில்லை.

'விமென்ஸ் ப்ரொடெக்ஷன் செல்'லில் புகார் கொடுப்பதற்காகப் போயிருந்தபோது, இன்ஸ்பெக்டர் ராஜலக்ஷ்மி சொன்னார், ''இதோ பாரம்மா... கணவன்-மனைவி என்றால் சின்னச் சின்ன சச்சரவுகள் வந்துகொண்டே இருக்கும். அவசரப்பட்டு வாழ்க்கையை வீணாக்கிக் கொள்ளாதே.''

''நான் ஒன்றும் அவசரப்படவில்லை. நாங்க இருவரும் பிரிந்து போய் ரொம்ப நாட்கள் ஆகிவிட்டது. இப்பொ அவராக வந்து ரகளை செய்கிறார்'' எரிச்சலுடன் சொன்னேன்.

''விவாகரத்து செய்து கொண்டதாக சர்டிபிகேட் ஏதாவது இருக்கா!''

''நாங்கள் திருமணமே செய்து கொள்ளவில்லை...''

''திருமணம் நடக்கவில்லை என்பதற்குச் சாட்சியங்கள் ஏதாவது இருக்கா?''

வியப்படைந்து விட்டேன். ''நடக்காததற்குச் சாட்சியங்கள் இருப்பதாவது? திருமணம் ஆனதற்குத்தானே சாட்சியங்கள் இருக்க முடியும்?'' என்றேன்.

''நீங்க இருவரும் சேர்ந்து வாழ்ந்திருக்கீங்க. திருமணம் ஆகாவிட்டாலும் ஆனதுபோல்தான். உங்களுக்கு எந்த வகையில் பாதுகாப்பு வேண்டும்? கத்தியால் குத்த வந்தானா? இல்லை மண்ணெண்ணை ஊற்றிக் கொளுத்த முயற்சி செய்தானா?''

என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் வீட்டுக்கு வந்து விட்டேன். வீட்டு ஓனர் எனக்காகக் காத்திருந்தார்.

''நீங்க ஏதோ சாதாரணமாக வேலைக்குப் போகும் பெண் என்று நினைத்து வீட்டை வாடகைக்குக் கொடுத்தேன். கணவனோடு தகராறு செய்துகொண்டு தனியாக வந்துவிட்டவள் என்று தெரியாது. அவன் வேறு ராத்திரி நேரத்தில் வந்து கலாட்டா செய்கிறானாம். அக்கம் பக்கத்தில் இருக்கிறவங்க போன் செய்து சொன்னாங்க. இந்த மாதக் கடைசியில் வீட்டைக் காலி செய்து விடுங்க...'' சுருக்கமாகச் சொல்லிவிட்டு எழுந்தார்.

எனக்கு ஆத்திரமும், கோபமும் ஒன்றாக வந்தன. ''நான் எதுக்குக் காலி செய்யணும்? எவனோ வந்து ரகளை செய்தால் அதற்கு நான் பொறுப்பு இல்லை. வீட்டைக் காலி செய்ய மாட்டேன்'' என்றேன்.

மறுநாள் காலையிலேயே பேட்டை ரவுடிபோல் தோற்றம் அளித்த ஒருவன் வந்தான். அவனை வீட்டு ஓனர்தான் அனுப்பி இருக்கிறார் என்று புரிந்தது. இரண்டு நாட்களில் வீட்டைக் காலி செய்ய வேண்டுமென்று மிரட்டலுடன் கலந்த எச்சரிக்கையைச் செய்துவிட்டுப் போனான். போகும் முன், ''தனியாக இருக்கிறாய் போலிருக்கு... விருப்பம் இருந்தால் சொல்லு... இதைவிட நல்ல வீட்டில் உன்னைக் குடி வைக்கிறேன்... யோசித்துப் பாரு...'' என்று சொல்லிவிட்டுப் போனான்.

அன்று மாலையில் எங்க ஆஃபீஸ் லாயரைச் சந்தித்துப் பேசினேன். முழுவதுமாகக் கேட்ட பிறகு, அவர் சொன்னார்.

''அவன் உன்னை அடிக்காத வரை, திட்டாத வரை நீ அவன் மீது கேசைப் போட முடியாது. கிரிமினல் ட்ரெஸ்பாஸ் கீழே அரெஸ்ட் செய்ய வேண்டுமென்றால் அவன் உன் கணவன் இல்லை என்று நிரூபிக்கணும். இல்லை விவாகரத்துக்காக விண்ணப்பித்துக் கொண்டாலும் அவன் அதற்கு ஒப்புக் கொள்ளாத பட்சத்தில், விவாகரத்து பெறுவதற்கான பலமான காரணத்தைத்



தெரிவிக்க உன்னால் முடியணும். பொருளாதார ரீதியாக நீ வசதியாக இருப்பதால் அவனுக்கு நீ ஜீவனாம்சம் தர வேண்டும் என்று கோர்ட்டார் உனக்கு ஆணை இடவும் வாய்ப்பு இருக்கிறது. எது எப்படி இருந்தாலும் விவாகரத்து கேசில் முடிவு தெரிய ஆறு மாதங்களாவது ஆகும்.''

இந்த ஆறு மாதங்களும் மகேஷ் எவ்வளவு இன்னல்களை ஏற்படுத்துவாரோ என்று நினைக்கும்போதே எனக்கு முதுகுத் தண்டில் சிலிர்த்தது.

வீட்டைக் காலி செய்துவிட்டு பழையபடி வர்கிங் விமென்ஸ் ஹாஸ்டலுக்குப் போய்விட்டேன். மறுநாள் மாலையில் மகேஷ் ஹாஸ்டலுக்கு வந்தார்.

அவரைச் சந்திக்கவோ, பேசவோ விருப்பமில்லை என்று வேலைக்காரியிடம் தகவல் அனுப்பிவிட்டேன்.

''அவள் என்னுடைய மனைவி – எங்களைப் பிரிக்கும் அதிகாரம் உங்களுக்குக் கிடையாது!'' வாசலில் நின்று கத்தி ரகளை செய்து கொண்டிருந்தார்.

ஹாஸ்டலில் இருப்பவர்களுக்கு இந்தக் காட்சி வேடிக்கையாக இருந்திருக்க வேண்டும். அவர்கள் கண்களில் என்ன நடக்குமோ பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் தெரிந்தது. இரக்கப்படுவதுபோல் சிலர் உதட்டளவில் பேசினாலும் உள் மனதில் ஏற்பட்ட குதூகலம் அவர்களுடைய முகத்தில் வெளிப்படையாகத் தெரிந்தது.

சமுதாயம் என்றால் என்னவென்று என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

* * *

இந்தத் தடவை விமென்ஸ் ப்ரொடெக்ஷன் செல்லின் மேலதிகாரியான A.S.P.யைச் சந்தித்தேன்.

''உங்க வேதனையை என்னால் புரிந்துகொள்ள முடியும். இதைவிடக் கஷ்டங்களில் மூழ்கி இருக்கும் பெண்களின் கதை களை நான் கேட்டிருக்கிறேன். வெளியில் சொல்ல முடியாத கஷ்டங்கள்... சொன்னாலும் யாராலும் நம்ப முடியாத கஷ்டங் கள். இதற்கு என்னால் முடிந்த ஒரு தீர்வைச் சொல்கிறேன். அவன் குடித்துவிட்டு வந்து ரகளை செய்வதாகச் சொன்னீங்க இல்லையா! அடுத்த தடவை அவன் அந்த நிலையில் வந்தால் எனக்கு ஃபோன் செய்து சொல்லுங்க. அவனை லாக்கப்பில் வைக்க அந்த ஒரு காரணம் போதும். ஒரு தடவை அவனுடைய முட்டியைப் பெயர்த்து விட்டால் உன் பக்கம் திரும்பிப் பார்க்க வும் துணிய மாட்டான்'' என்றார்.

மறுநாளே டைவோர்ஸுக்காக அப்ளை செய்தேன். இரண்டு நாட்கள் கழித்து எம்.டி.யிடமிருந்து அழைப்பு வந்தது.

''மகேஷ் என்னைச் சந்தித்துப் பேசினான். மறுபடியும் வேலையில் எடுத்துக் கொள்ளச் சொல்லி கேட்க வந்திருப் பானோ என்று நினைத்தேன். ஆனால், அவன் அந்தப் பேச்சையே எடுக்கவில்லை. அவனைப் பிரிந்து நீ தனியாகப் போய்விட்ட தற்கு ரொம்ப வேதனைப்படுகிறானாம். உனக்கு வேறு யாரு டனோ தொடர்பு இருப்பதாகக் குற்றம் சாட்டினான். அவ னுடைய குடும்ப வாழ்க்கையை மறுபடியும் அமைத்துத் தர வேண்டிய பொறுப்பு என்னுடையதாம். அஃப்கோர்ஸ் உங்க ளுடைய பர்சனல் விவகாரங்களில் தலையிடுவது என்னுடைய உத்தேசம் இல்லை. ஆனால், அந்தப் பிரச்னைகளின் பாதிப்பு உன்னுடைய வேலை மீது விழாமல் பார்த்துக்கொள். இனி நீ போகலாம்!'' என்றார்.

என்னுடைய வேதனையைப் புரிந்து கொண்டவள் என் கொலீக் மேரி ஒருத்திதான்.

''டைவோர்ஸ் கிடைக்கும்வரை இந்தக் கஷ்டங்களை உன் னால் தவிர்க்க முடியாதுன்னு தோன்றுகிறது. ஆறு மாதம் கழித்து



விவாகரத்து கிடைத்துவிட்டால், அதன் பிறகாவது, நீ நிம்மதி யாக இருக்க முடியும். என்னுடைய நிலைமை அப்படி இல்லை. கல்யாண வயதில் இரண்டு பெண்கள் எனக்கு இருக்கிறார்கள். என் கணவருக்கு என்மீது சந்தேகம். இருவரும் சமமாகச் சம்பா திக்கிறோம். என் சம்பளத்தை அப்படியே அவரிடம் கொடுத்து விட வேண்டும். அவருடைய குடிக்குப் போக எஞ்சிய சம்பளத் தில் குடுத்தனத்தை நடத்தணும். ஒரு வார்த்தை எதிர்த்துப் பேசக் கூடாது. கண்மண் தெரியாமல் அடித்துவிடுவார். அவரை விட்டுப் பிரிந்து வெளியே வந்து விடலாம்தான். ஆனால், மகள் களுக்கு எப்படித் திருமணம் ஆகும்? வயதான என் பெற்றோர் களுக்கு வேதனையைத் தர நான் விரும்பவில்லை. என் காரண மாக என் கடைசி தங்கைக்குக் கல்யாணம் நடக்காமல் போய் விடுமோ என்ற பயமும் இருப்பதால், வாயை மூடிக் கொண்டு அவருடைய அட்டூழியங்களைச் சகித்துக் கொண்டு வருகிறேன். எங்க ஏரியா இன்ஸ்பெக்டர் பக்கத்து வீட்டில்தான் குடியிருக் கிறார். என் கணவர் என்னை அடிக்காமல் இருக்கும் விதமாகக் கொஞ்சம் மிரட்டி வைக்கச் சொன்னேன். கேஸ் புக் செய்து நான்கு நாட்கள் உள்ளே தள்ளி விடுவதாக அந்த இன்ஸ்பெக்டர் என் கணவரை மிரட்டியபோது, என் கணவர் பயந்து போனது உண்மைதான். அந்தப் பயத்தைப் போக்கிக் கொள்வதற்காக மேலும் குடித்துவிட்டு, என்னைப் பந்தாடியதுதான் மிச்சம். அதோடு இல்லாமல் ஆபத்து வேறு இடத்திலிருந்து வந்தது. என் நிலைமையைத் தெரிந்து கொண்ட இன்ஸ்பெக்டர் இரக்கம் காட்டுவதாகச் சொல்லி அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள முயற்சி செய்தார். உன் பிரச்னையுடன் ஒப்பிட்டால், என் பிரச்னை பெரியதென்று ஒப்புக் கொள்கிறாயா?''

எந்தப் பிரச்னையும் பெரிசு, சிறிசு என்று தனித் தனியாக இருக்காது. மேம்போக்காகப் பார்த்தால் எந்தப் பிரச்னைக்கும் தீர்வு இல்லாததுபோல்தான் தோன்றும்.

* * *

என் பிரச்னைக்குத் தீர்வு விரைவில் தானாகக் கிடைத்தது.

ஒருநாள் இரவு மகேஷ் குடித்துவிட்டு வீட்டுக்கு வந்திருந்தார். நடிகையாக இருக்கும் அவருடைய இரண்டாவது மனைவி (?) புதிதாக ஒரு ப்ரபோஸல் செய்தாளாம்.

''வேணும்னா என்னுடைய கால்ஷீட் விவகாரங்களைக் கவனித்துக் கொண்டு இந்த வீட்டிலேயே தங்கியிரு. ஒரு ஆண் துணை இருந்தால் எனக்கும் கௌரவமாக இருக்கும். ஆனால், என்னுடைய பர்சனல் விவகாரங்களில் மட்டும் தலையிடக் கூடாது. அதுக்குப் பதிலாக உனக்காக ஆகும் செலவுகளை நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று அவள் சொன்னாளாம்.

மகேஷ் சொன்னார், ''எப்படிப் பேசுகிறாள் பார்த்தாயா? அவள் என்ன செய்தாலும் நான் பொறுத்துக் கொண்டு போகணுமாம். நான் என்ன ப்ரோக்கர் வேலை செய்பவனா?''

அதைக் கேட்டதும் எனக்குச் சிரிப்பு வந்தது. கண்களில் நீர் வரும் அளவுக்கு நான் சிரித்ததைப் பார்த்து அவருக்கு எதுவும் புரியவில்லை.

''நீங்க கடைசியாகச் சொன்னது மட்டும் உண்மையாக இருந்தால் நம் நாட்டில் திருமணம் ஆன பெண்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் குடித்தனம் செய்வதைவிட விபசாரம் செய்வதுமேல் என்ற முடிவுக்கு வந்திருக்க வேண்டும். நம் சமுதாயத்தில் நிறைய ஆண்கள் தம் மனைவிகளிடம் மறைமுகமாகச் செய்யும் பிரபோஸல் இதுதானே! 'சமுதாயத்தில் மனைவி என்ற ஹோதா கிடைக்கும். ஆயுள் பூராவும் காப்பாற்றும் பொறுப்பு எங்களுடையது. அதற்குப் பதிலாக நாங்க எதைச் செய்தாலும் எதிர்த்துப் பேசாமல் வாய் மூடிக் கொண்டு இருக்கணும்'. இயலாமையாலோ, காலங்காலமாய் ரத்தத்தில் கலந்து விட்ட கலாச்சார பாதிப்பினாலோ மனைவியாக இருப்பவள் அந்தப் பிரபோஸலை ஏற்றுக் கொள்கிறாளே! அதைவிட ப்ரோக்கர்



வேலை நல்லது என்று சொல்றீங்களே, சத்தம் போட்டுச் சொல்லாதீங்க. எந்தப் பெண்ணின் காதுகளிலேயாவது விழுந்து விடப் போகிறது'' என்றேன்,

ஏற்கெனவே குடி மயக்கத்தில் இருந்த மகேஷ், இதைக் கேட்டதும் எரிச்சல் அடைந்து விட்டார். ''இந்த மாதிரி இடக்காகப் பேச எனக்கும் தெரியும்'' வேகமாய்ப் போய் வாசற் கதவைத் தாள் போட்டார்.

நான் அந்த வீட்டுக்குக் குடி வந்து ஒரு வாரம்தான் ஆகி இருந்தது. அக்கம் பக்கத்தில் வீடுகள் இல்லை. அவர் என்னை நோக்கி ஒரு அடி முன் வைத்தார்.

சட்டென்று படுக்கை அறைக்குள் ஓடிப் போய் கதவைத் தாள் போட்டுக் கொண்டுவிட்டேன். வெளியிலிருந்து கதவைப் பலமாகத் தட்டிக் கொண்டிருந்தார். ஐந்து நிமிடங்கள் கழித்துக் கதவைத் திறந்தேன்.

''மகேஷ்! இன்னும் ஐந்து நிமிடங்களில் போலீசார் இங்கே வரப் போகிறார்கள். இந்த வீட்டில் போன் இருக்கும் விஷயம் உங்களுக்குத் தெரியாது'' என்றேன்.

அவரிடம் எந்தப் பதட்டமும் தென்படவில்லை. ''கணவன் மனைவிக்குள் நடக்கும் சண்டையில் அவர்களால் என்ன செய்ய முடியும்?'' எகத்தாளமாய் சிரித்தார்.

அதற்குள் வாசற்கதவு தட்டிய சத்தம் கேட்டது. அவரே போய் கதவைத் திறந்தார்.

வந்தது ஏ.எஸ்.பி. ''இதோ பாருங்க மிஸ்டர்! இந்தப் பெண்ணுக்குக் கூடிய சீக்கிரத்தில் விவாகரத்து கிடைக்கப் போகிறது. அனாவசியமாக ரகளை செய்ய வேண்டாம். ஏதாவது இடைஞ்சல் செய்வதாகத் தெரிந்தால், அப்புறமாய் நடப்பதே வேறு...'' மகேஷை மிரட்டினார்.

''அவள் என்னுடைய மனைவி. குடும்பத்தைச் சீர்படுத்…
வதை விட்டுவிட்டு, நீங்களே இப்படிப் பேசலாமா?''

''உன்னைப்போல ஏமாற்றுப் பேர்வழிகள் ஆயிரம்
பேரைப் பார்த்திருக்கிறேன். மறுபடியும் இந்தப் பக்கம் வந்தால்
காலை ஒடித்து விடுவேன்.''

''காலை ஒடிக்கப் போறீங்களா? நான் செய்த தவறு என்ன?
நான் வருவேன். மறுபடியும் வருவேன். எவன் வந்து என்னைத்
தடுப்பானோ, அதையும் பார்த்து விடுகிறேன்!''

மகேஷ் சொல்லி முடிக்கவில்லை. ஏ.எஸ்.பி. வேகமாக
என் அருகில் வந்தார். தன்னிடமிருந்த பேனா கத்தியால் என்
முழங்கையில் லேசாகக் கீறினார்.

''குடித்துவிட்டு ரகளை செய்ததற்கு ஒரு கேஸும், கொலை
செய்ய முயற்சி செய்ததற்கு மற்றொரு கேஸும் உன் மீது புக் செய்
திருக்கிறேன்!'' ஏ.எஸ்.பி. மகேஷை தள்ளிக் கொண்டு போனார்.

ஜீப்பில் ஏறிய பிறகு என் பக்கம் திரும்பிய ஏ.எஸ்.பி.
''இந்தக் கேசை வைத்துக் கொண்டு உங்களுக்குச் சீக்கிரமாக
விவாகரத்து கிடைக்கும்படிச் செய்துவிடலாம். மற்ற விஷயங்
களை லாயர் உங்களுக்கு விவரமாகச் சொல்லித் தருவார்.
லாக்கப்பில் இருந்து இவன் வெளியே போய்விடாமல் பார்த்துக்
கொள்ளும் பொறுப்பு என்னுடையது.''

''இந்தச் சமுதாயத்தில் பெண்களுக்குக் கிடைக்கும் நியாயத்
தின்மீது எனக்கு இருந்த தவறான எண்ணத்தைப் போக்கியதற்கு
நன்றி.'' இரு கரங்களையும் குவித்து அவருக்கு வணக்கம்
தெரிவித்தேன்.

''பெண்ணின் எல்லாப் பிரச்னைகளுக்கும் இவ்வளவு எளி
தில் தீர்வு கிடைத்துவிடும் என்று மட்டும் எண்ணி விடாதீர்கள்.''
புன்னகைத்து விட்டு விடைபெற்றுக் கொண்டார் ஏ.எஸ்.பி.

★ ★ ★



## அத்தியாயம் - 4

## சியாமளா சொன்ன கதை

**1**

ஹோட்டல் அறையில் பொறுமை இன்றி நடை பயின்று கொண்டிருந்தேன். திரும்பிப் போக ப்ளேனில் டிக்கெட் உடனடியாகக் கிடைக்காததால் மேலும் இரண்டு நாட்கள் தங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

என்னுடைய தந்தை வீட்டில், சித்தி உள்பட எல்லோரும் நன்றாகவே பழகினார்கள். ஆனால், அதில் நெருக்கமோ, அன்போ இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

யாராவது வீட்டுக்கு வந்தால், ''எங்களுடைய பெண்தான். பி.பி.சி.யில் பார்த்து இருப்பீர்களே! லண்டனில் புகழ் பெற்ற லாயராக இருக்கிறாள்'' என்று அறிமுகப்படுத்துவார்கள்.

அவர்களுடைய அந்தஸ்தை உயர்த்திக் கொள்ளும் நோக்கத்தில் என்னைச் சொந்தம் கொண்டாடிக் கொண்டு இருப்பதை எல்லாம் உணர முடிந்தது. என் தாய் பற்றி அவர்கள் பேசிய முறை எனக்கு மேலும் எரிச்சலைத் தந்தது.

நான் எதை எதிர்பார்த்து வந்தேனோ அது முழுமையாகக்
கிடைக்கவில்லை. என்னால் மேலும் அந்தச் சூழ்நிலையில் தங்க
முடியவில்லை. என்னைப் பார்க்கப் பல நிறுவனங்களின் பிரதி
நிதிகள் வருவார்கள் என்றும், அவர்களுடன் உரையாடுவதற்குச்
சௌகரியமாக இருக்கும் என்ற சாக்குச் சொல்லி, ஹோட்ட
லுக்கு ஷிஃப்ட் செய்துவிட்டேன்.

இங்கிலாந்திற்குப் போன பிறகு என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தபோது, என்னைச் சந்திக்க யாரோ

வந்திருப்பதாக ரிசெப்ஷனில் இருந்து போனில் செய்தி தெரிவித்தார்கள். செய்வதற்கு வேறு வேலையும் இல்லாததால் வரச் சொன்னேன்.

★ ★ ★

''தி.விமென்'' என்ற புத்தகத்தை தடை செய்யக் கோரி, பெண் உரிமை இயக்கங்கள் சார்பில் வாதாடிய லாயர் இங்கே தங்கி இருக்கிறாள் என்று தெரிந்து, உங்களைச் சந்திக்கும் ஆர்வத்தில் இங்கு வந்தேன். என்னுடைய நண்பன் இதைத் தமிழில் மொழி பெயர்க்கும் எண்ணத்தில் இருக்கிறான். தற்போது அவன் ஊரில் இல்லை. அதனால் அவன் சார்பில் உங்களுடன் சற்று நேரம் பேச வேண்டும் என்று வந்தேன். உங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால்...''

''ஒரு புத்தகத்தைத் தடைசெய்ய வேண்டுமென்று வாதாடிய லாயருடன், அந்தப் புத்தகத்தை மொழிபெயர்க்கும் விஷயமாக உங்களால் என்ன பேச முடியும்?''

''அதனால் என்ன? சொல்லுக்கும், செயலுக்கும் சம்பந்தம் இல்லாமல் இந்த உலகத்தில் நிறையப் பேர் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள். நீங்களும் அந்தக் கும்பலைச் சேர்ந்தவர்களாக இருந்தால், அவர்களைப் பற்றி நாம் இஷ்டம் போல் பேசி, பொழுதைப் போக்கலாம்.''

நான் நெற்றியைச் சுளித்தேன். ''நீங்க என்ன பேசுகிறீர்கள் என்று உங்களுக்கே புரிகிறதா?'' கோபமாகக் கேட்டேன்.

''ஒரு பெண் முன் பின் யோசிக்காமல் ஒரு காரியத்தைச் செய்து விட்டாள். பிறகு அதன் விளைவுகளை ஏற்றுக் கொண்டு, இந்தச் சமுதாயத்தை விட்டு விலகி, தனக்கென்று ஒரு லட்சியத்தை ஏற்படுத்திக் கொண்டு வேறு தேசத்தில் அமைதியாக வாழ்ந்து வருகிறாள். அவளை இன்னமும் குற்றவாளியாகக் கருத வேண்



டிய அவசியம் என்ன? அந்தப் பெண்ணை இரக்கத்துடன் மன்னிக்கணும். இரக்கம் என்ற வார்த்தையைப் பெண்களுக்காக உபயோகப்படுத்தினால் உங்களுக்குக் கோபம் வருமோ என்னவோ! அந்தப் பெண்ணை விட்டு விட்டு, நீங்களும் மற்றப் பெண்களைப் போல் நடந்து கொள்கிறீர்கள். அதான் நீங்களும் அந்தக் கும்பலில் ஒருத்தர் என்று சொன்னேன்.''

அதைக் கேட்ட என்னால் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை... ''நீங்க யாரைப் பற்றிப் பேசுகிறீர்கள்?''

''உன் தாயிடம் நீ நடந்து கொண்ட முறையைப் பற்றித்தான் பேசுகிறேன்'' சட்டென்று ஒருமையில் அழைத்த அவரை வியப்புடன் பார்த்தேன்.

''என்னுடைய தாயைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?''

''நன்றாகத் தெரியும். இன்னும் சொல்லப் போனால் உன்னை விடவே நன்றாகத் தெரியும்.''

''அதான் எப்படி என்று கேட்கிறேன்?''

''தாயின் பிறந்த வீட்டைப் பற்றித் தாய் மாமனிடமே கேட்கிறாயா சியாமளா?'' என்றார்.

அதிர்ச்சி அடைந்து விட்டேன். ஒரு நிமிடம் கழித்து சுய உணர்வுக்கு வந்தவளாக, ''நீங்க... நீங்க ஸ்ரீகாந்த் மாமா தானே?'' என்று கேட்டேன்.

''ஆமாம்'' என்பதுபோல் தலையை அசைத்தார்.

''போனில் இரண்டு மூன்று தடவைகள் பேசி இருக்கிறேனே தவிர, உங்களைப் பார்ப்பது இதுதான் முதல் தடவை. நிஜமாகவே உங்கள் நண்பர் புத்தகத்தை மொழிபெயர்க்கப் போகிறாரா?''

''இல்லை! அப்படிச் சொன்னால் தவிர உன்னுடைய இண்டர்வ்யூ கிடைக்காது என்று நினைத்தேன். முதலில் சூடாக டீயைக் குடித்துவிட்டு, நிதானமாகப் பேசிக் கொள்வோம்.''

* * *

''நீங்க எவ்வளவு சொன்னாலும், என் தாய் செய்தது சரி என்று என்னால் ஒப்புக் கொள்ள முடியவில்லை.''

''சரி என்று நானும் வாதிக்கப் போவதில்லை. ஆனால், ஒரு சின்ன தவறைச் செய்துவிட்ட அவளிடம் நீ இத்தனை வெறுப்புடன் இருக்க வேண்டிய அவசியம் இல்லை.''

''சின்ன தவறா அது? ஒரே வீட்டில் இருந்துகொண்டு தந்தையைப் போன்ற மச்சினருடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்வது...''

என் வார்த்தைகள் இன்னும் முடியக்கூட இல்லை. முஷ்டியை இறுக்கி மேஜைமீது பலமாகக் குத்தினார்.

''என்ன பேசுகிறாய் நீ? இதைத்தான் நான் ஹிபோகிரஸி என்கிறேன். தந்தையைப் போன்றவர் என்று இல்லாமல் வேறு நபராக இருந்தால் பரவாயில்லையா?''

திகைப்புடன் அவரைப் பார்த்தேன். ''நீங்க லாயராக இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்'' என்றேன்.

''ஒரு விஷயத்தை லாஜிக்காக அணுகுவதற்கு லாயராகத்தான் இருக்கணும் என்ற அவசியமில்லை. கணவனுடன் குடித்தனம் செய்துகொண்டே மனத் திருப்திக்காக வேறு ஆணுடன் உறவை ஏற்படுத்திக் கொண்டது தவறுதான். ஆனால், அன்றைய சூழ்நிலையில் உன் தாய் இருந்த மன நிலையைப் பற்றிக் கொஞ்சம் யோசித்துப் பார். அந்த வளையத்தைவிட்டு வெளியில் வந்த பிறகு உன் தாய் தனக்கென்று ஒரு லட்சியத்தை ஏற்படுத்திக் கொண்டாள். கஷ்டப்பட்டுப் படித்து, உன்னை



வளர்த்து ஆளாக்கி இருக்கிறாள். தனிமையில் வாழ்ந்து வந்தாள். அது போறாதா? உன் தந்தையும் தவறு செய்தவர்தானே! ஆணுக்கொரு நியாயம், பெண்ணுக்கு ஒரு நியாயம் இருக்கக் கூடாது என்று வாதிப்பது நீங்கள்தானே! இதற்கு உன்னுடைய பதில் என்ன?''

அவர் கடைசியாகச் சொன்னது என் காதில் சரியாக விழவில்லை. உலகமே தலைகீழானதுபோல் அவர் பக்கம் பார்த்தேன்.

''என் தந்தை தவறு செய்தாரா?''

என் தாயின் கடந்த கால வாழ்க்கையின் மறுபக்கத்தை அது வரை நான் அறிந்திராத கதையை மாமா சுருக்கமாகத் தெரிவித்தார்.

ரொம்ப நேரம் என்னால் எதுவும் பேச முடியவில்லை. என் மனநிலையை உணர்ந்து கொண்டாற்போல் மாமாவும் மவுனமாக இருந்தார். சற்று நேரம் கழித்துத் தேறிக் கொண்டேன்.

''இதெல்லாம் எனக்கு ரொம்பக் குழப்பமாகத் தோன்றுகிறது. மனித உறவுகள் பற்றி ரொம்ப உயர்வாக நினைத்திருந்தேன். முக்கியமாக கணவன் மனைவிக்கு இடையில் புனிதமான உறவு இருக்கவேண்டும் என்று எண்ணிய எனக்கு இன்று அருவெறுப்புதான் ஏற்படுகிறது.''

''நோயைக் குணப்படுத்த வேண்டும் என்றால் சில சமயம் அறுவை சிகிச்சை செய்துதான் ஆகவேண்டும். நம்மை நாமே அனலைஸ் செய்து பார்த்தால் எத்தனையோ குறைகள் இருப்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். ஆனால், அப்படிச் செய்ய விருப்பப்பட மாட்டோம். இலக்கியத்திலும் அப்படித்தான். கதாநாயகன், கதாநாயகி எல்லோரும் நல்லவர்கள். வில்லன்கள் எப்போதுமே கெட்டவர்களாக இருப்பார்கள். ஆனால், நிஜ வாழ்க்கையில் ஹீரோ, ஹீரோயின், வில்லன்

என்று தனித்தனியாக இருக்க மாட்டார்கள். இந்தக் கதையில் உன் தாய் கதாநாயகி இல்லை. முன்பின் யோசிக்காமல் தவறான பாதையில் காலடி எடுத்து வைத்தாலும், அதை உணர்ந்த பிறகு புதிதாக லட்சியத்தை ஏற்படுத்திக் கொண்டு அதை நோக்கி வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொண்ட பெண்மணி அவள்.''

''குடும்ப வாழ்க்கையில் அதிருப்தி ஏற்பட்டால் மட்டும், ஒரு பெண் மாரல் வேல்யூஸை புறக்கணிப்பது எப்படி நியாயம் ஆகும்?''

''நீ சொல்வது முற்றிலும் உண்மை. அதிருப்திக்குப் பரிகாரம் இந்த வழி இல்லை என்பதை யாராலும் மறுக்க முடியாது. சமுதாயத்தில் நாளுக்கு நாள் நல்லொழுக்கங்கள் நலிந்து போகின்றன என்று புலம்பும் சீர்திருத்தவாதிகள்கூட, தம் வீட்டிலேயே மாறிக் கொண்டிருக்கும் மதிப்புகளை உணர மறுக்கிறார்கள்!''

''நிஜம்தான்... முன் காலத்தில் பெண்களுக்குப் படிப்பும், அதனால் கிடைக்கக் கூடிய ஞானமும் கிடையாது. ஆணாதிக்கத்துக்குப் பணிந்து போவது தங்களுடைய வாழ்க்கையின் ஒரு பகுதியாக மனப்பூர்வமாக நம்பி வந்தார்கள். ஞானம் வளர வளர அதிருப்தியும் வளருவது இயற்கைதானே. இந்தப் பிரச்னைக்குச் சரியான தீர்வுதான் என்ன? பெண்களின் உரிமைகளை, அவர்களுடைய சுதந்திரத்தை மதிக்க வேண்டியது சமுதாயத்தின் கடமை இல்லையா!''

இதழ்களில் புன்முறுவல் மாறாமல் ஸ்ரீகாந்த் மாமா சொன்னார், ''நீ திரும்பிப் போவதற்கு இன்னும் இரண்டு நாட்கள் பாக்கி இருக்கே. இந்த ஹோட்டலில் தங்குவானேன்? உங்க வெளிநாட்டு சம்பிரதாயத்தை மறந்து இந்த இரண்டு நாட்களும் எங்கள் வீட்டில் தங்கிக் கொள்ளலாம். என்ன இருந்தாலும் அது உன் மாமாவின் வீடு தானே!''

* * *



ஸ்ரீகாந்த் மாமாவின் வீட்டுச் சூழ்நிலை எனக்கு ரொம்பப் பிடித்திருந்தது. அது வெறும் ஹவுஸ் இல்லை, ஹோம்! ஸ்வீட் ஹோம்! மாமா மாமிக்கு இரண்டே குழந்தைகள். பெண் இஞ்சினியரிங் படிக்கிறாள். பையன் சுபாஷ் டெக்னாலஜி இரண்டாவது வருடத்தில் இருந்தான். தாத்தாவுக்குப் பூஜை அறைதான் உலகமே. பாட்டியின் உடல்நிலை அவ்வளவு சரியாக இல்லை. தாத்தா, பாட்டி இருவரும் சேர்ந்து மாலை வேளைகளில் கோவிலுக்கோ, பாட்டுக் கச்சேரி கேட்பதற்கோ வெளியில் போய் வருவதைப் பார்க்கும்போது ரொம்ப மகிழ்ச்சியாக இருந்தது. மாமாவின் குழந்தைகள் இருவரும் என்னிடம் சட்டென்று பழகி விட்டார்கள். ஆண்டாண்டு காலமாக என்னைத் தெரியும் என்பது போல் அவர்கள் என்னிடம் காட்டிய அன்பு என்னை வியக்க வைத்தது.

மாமாவைவிட மாமிக்குச் சம்பளம் அதிகம். இருந்தாலும் மாமாவிடம் எந்தத் தாழ்வு மனப்பான்மையும் இருப்பதாக நான் உணரவில்லை. இந்தியாவிலிருந்து வரும் பத்திரிகைகளைப் படித்துப் படித்து என் மனதில் ஏற்கெனவே ஒரு அபிப்பிராயம் ஏற்பட்டிருந்தது. ஆண்கள் இரண்டு மூன்று திருமணங்கள் செய்து கொள்வது இந்தச் சமுதாயத்தில் ரொம்ப சகஜம் என்றும், வீட்டு வேலைகளைச் செய்வதை ஆண்கள் மதிப்புக் குறைவாக நினைப்பார்கள் என்று இதுநாள் வரை எண்ணியிருந்தேன். ஆனால், என் எண்ணங்களுக்கு நேர் மாறாக மாமா வீட்டில் சூழ்நிலை வித்தியாசமாக இருந்தது. ஞாயிற்றுக்கிழமை வந்தால் போதும். தந்தையும் மகனும் சேர்ந்து வாஷிங் மிஷினில் துணிகளைத் தோய்ப்பது, வீட்டைச் சுத்தப்படுத்துவது போன்ற காரியங்களில் ஈடுபட்டால், தாயும் மகளும் சமையல் அறையில் மதிய உணவுக்கான ஏற்பாடுகளைக் கவனித்துக் கொள்வார்கள்.

மாமாவின் மகள் ஸ்வேதாவுக்கு இருபத்திரண்டு வயது இருக்கும். கல்யாணத்தைப் பற்றி அந்தப் பெண்ணின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொண்டபோது ஆச்சரியப்பட்டேன்.

''நான் வேலைக்குப் போக மாட்டேன். காலை பத்து மணியிலிருந்து மாலை ஐந்து மணி வரை ஒருத்தர் கீழே வேலை செய்வது ரொம்ப போர்'' என்றாள்.

''பின்னே என்ன செய்யப் போகிறாய்? கணவனின் வருகைக்காக மாலை ஐந்து மணியிலிருந்து வாசலில் தவம் கிடக்கப் போகிறாயா?'' என்று கேட்டேன்.

''ஆமாம்! கணவருக்காகச் சமைப்பது, வீட்டைப் பராமரிப்பது, குழந்தைகளுக்குப் பாடம் சொல்லித் தருவது... இந்த மாதிரி வேலைகள் என்றால் எனக்கு ரொம்பப் பிடிக்கும்.''

''உனக்கு என்று தனித் தன்மை எதுவும் இல்லையா? இத்தனை பெரிய படிப்பு படித்தது சமையல் அறையில் புழுங்கிப் போவதற்கா?''

''படிப்புக்கும், அறிவுக்கும் அளவுகோல் வேலை பார்ப்பது இல்லை. யாருக்காகவோ ஆறு மணி நேரம் வேலை பார்ப்பதைவிட, என் வீட்டுப் பொறுப்புகளைச் சுயமாக நிர்வகிப்பதில்தான் எனக்குத் திருப்தி கிடைக்கும்.''

''சில வருடங்களுக்குப் பிறகு ஏதாவது கருத்து வேற்றுமை ஏற்பட்டு கணவன் மனைவி பிரிய வேண்டிய நிலைமை ஏற்பட்டால்?''

அதற்கு அந்தப் பெண் சொன்ன பதில் என்னை வியப்பில் ஆழ்த்தியது.

''ஒரு நல்ல இல்லத்தரசியாக இருப்பதுதான் என்னுடைய ஃபஸ்ட் ப்ரிஃபரென்ஸ். ஓய்வு நேரத்தில் எத்தனையோ வேலைகள் செய்யலாம். கம்ப்யூட்டர் புரோகிராமில் இருந்து, ரெடிமேட் துணிகளை டிசைனிங் செய்வது வரை, திட்டமிட்டு வேலை செய்து நேரத்தை என் கைக்குள் வைத்துக் கொள்வேன். திருமணம் ஆன ஓரிரு வருடங்களுக்குள் கணவர் எப்படிப்பட்டவரோ தெரிந்துவிடும். திருமண வாழ்க்கை சரியாக அமையா



விட்டால் அழுதுகொண்டு மூலையில் உட்கார மாட்டேன். சொந்தக் கால்களில் நிற்க என்னால் முடியும். ஒருகால் நல்ல பையன் யாராவது என்னைத் திருமணம் செய்து கொள்வதாகச் சொன்னால் கட்டாயம் ஒப்புக் கொள்வேன். என்மீது நம்பிக்கையை வளர்த்துக் கொள்வதுதான் என்னுடைய பிரச்னைக்குச் சரியான தீர்வு.''

''எதிர்காலத்தைப் பற்றி அழகான கனவுகளை வைத்திருக்கிறாய். வாஸ்தவத்தில் வாழ்க்கை அவ்வளவு இனிமையாக அமைந்துவிடாது.''

''வாஸ்தவத்தை எதிர் கொள்ளும் தைரியம் எனக்கு இருக்கும் பட்சத்தில், கனவுகள் திருப்தி தரும்போது, அந்த மாதிரி ஊகித்துக் கொள்வதில் எந்தத் தவறும் இல்லையே?''

அந்தப் பதிலை என்னால் அப்படியே ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

''எத்தனை படித்திருந்தாலும், அழகு இருந்தாலும் ஒரு ஆணை நம்பி, அவனுடன் சேர்ந்து வாழ்ந்த பிறகு, ஏதாவது காரணத்தால் அந்த வாழ்க்கையை இழந்துவிட்டால், மறுபடியும் அவ்வளவு மகிழ்ச்சிகரமான வாழ்க்கை அமைவது கஷ்டம் என்பது என் அபிப்பிராயம். முக்கியமாக ஃப்ரெஷ்நெஸ்ஸை இழந்து விட்ட பிறகு!''

''நடக்காததை நடத்திக் காட்டணும் என்றால் பெண்கள் தனித் தன்மையை வளர்த்துக் கொள்ளணும். அதற்காக நிறையப் படிக்கணும். படிப்பு இருந்தால் தனித் தன்மை தானாக வரும். பெண்ணாகப் பிறந்தவள் மறுபடியும் வாழ்க்கையைப் புதிதாக ஆரம்பிக்க முடியாது என்ற உங்கள் வாதங்களை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது.''

''ஏன் ஏற்றுக் கொள்ள மாட்டாய்?''

''என் தாயின் கடந்த கால வாழ்க்கை பற்றி எனக்குத் தெரிந்திருப்பதால்...!'' ஸ்வேதா திடமான குரலில் சொன்னாள்.

* * *

# முடிவுரை

விமான நிலையம் கூட்டமாக இருந்தது. நானும் மாமியும் காபி குடித்துக் கொண்டு நின் திருந்தோம். ஸ்வேதா புத்தகக் கடையில் புத் தங்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தாள்.



''மாமி! உங்க மகள் சொல்வதைக் கேட்டால் கொஞ்சம் வித்தியாசமானவளாக இருப்பாள் என்று தோன்றுகிறது. கல் யாணம் செய்து கொண்டு நிம்மதியாகக் குடித்தனம் செய்வது தான் அவளுடைய முதல் விருப்பமாம்.''

மாமி புன்முறுவல் செய்தாள். ''அந்த மாதிரி விருப்பம் இல்லாதவர்கள் காதல் தோல்வி அடைந்தவர்களாக இருப் பார்கள். அல்லது திருமண வாழ்க்கையில் ஏமாற்றத்தை சந்தித்த வர்களாக இருப்பார்கள். தங்களுடைய ஏமாற்றங்களைக் கொள்கை களாக மாற்றிக் கொண்டு, அதையே பின்பற்றி எஞ்சிய வாழ்க்கை யை வெறுமையில், விரக்தியுடன் கழித்துவிடுவார்கள். அது போகட்டும், நேற்று இரவு முழுவதும் விழித்துக் கொண்டு நோட்ஸ் எழுதிக் கொண்டு இருந்தாய் போலிருக்கே. அங்கே போனதும் அந்தக் கேஸ் விஷயமாக மேல் கோர்ட்டில் அப்பீல் செய்யப் போகிறாயா என்ன?''

''இல்லை! அந்தக் கேஸை இனி நான் வாதிக்கப் போவ தில்லை.''

மாமி திகைத்துப் போனவளாக, ''ஏன்? அப்போ அந்தப் புத்தகத்தில் எழுதியிருந்த கருத்துகள் சரியென்று ஏற்றுக் கொள் கிறாயா?'' என்று கேட்டாள்.

''இல்லை! அந்தப் புத்தகத்தில் எழுதி இருப்பதைவிட, இந்தக் காலத்துப் பெண்கள் இன்னும் நிறைய விஷயங்களை தெரிந்து கொள்ள வேண்டுமென்ற முடிவுக்கு வந்திருக்கிறேன். இந்தியாவுக்கு வந்ததில் முற்றிலும் மாறுபட்ட இரண்டு பெண் களின் வாழ்க்கையைப் பற்றித் தெரிந்துகொள்ள முடிந்தது.''

''இரண்டு பெண்களின் வாழ்க்கையா? யாரு அவுங்க?''

''அம்மாவும்—நீங்களும்தான்.''

''எங்க இருவரின் வாழ்க்கையில் அவ்வளவு மாறுபாடு இருக்கா என்ன?'' மாமி கேட்டாள்.

''நிறைய இருக்கு. சில பெண்கள் சின்ன கஷ்டங்களையே பெரிதாக நினைத்துக் கொண்டு, விரக்தியில் மூழ்கிப் போவார்கள். யாரோ வந்து தங்களைக் கஷ்டங்களில் இருந்து மீட்க வேண்டும் என்று நினைப்பார்களே தவிர, சுய முயற்சியால் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும் என்ற எண்ணம் அவர்களுக்கு வராது. சில சமயம் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதாக நினைத்துக் கொண்டு முன்பின் யோசிக்காமல் செயல்பட்டு நிம்மதியைத் தேடிக் கொள்வார்கள். ஆனால், இந்த மகிழ்ச்சி தற்காலிகமானதுதான் என்றும், எதிர்காலத்தில் இதன் விளைவுகள் பயங்கரமாக இருக்கும் என்றும் ஊகித்துக்கூடப் பார்க்க மாட்டார்கள்.''

ஒரு நிமிடம் நிறுத்தி, மீண்டும் சொல்லத் தொடங்கினேன். ''ஆமாம் மாமி! நான் என் தாயைப் பற்றித்தான் பேசுகிறேன். ஆதி காலத்தில் இருந்தே பெண்ணைத் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வதற்காக ஆண்கள் சில சமுதாய விதிமுறைகளை ஏற்படுத்தியிருந்தார்கள். அவர்கள் மட்டும் எந்தக் கட்டுத்திட்டங்களுக்கும் உட்படாமல் சுதந்திரப் பறவைகளாக இருந்து வந்தார்கள்.

ஆணாதிக்கம் படைத்த இந்தச் சமுதாயம்தான் தன் வேதனைகளுக்குக் காரணம் என்று நினைத்த என் தாய் ஆறுதல் பெற ஆணிடம் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டதுதான் வேடிக்கை. இதற்கு நேர்மாறானது உங்கள் வாழ்க்கை. உங்கள் பிரச்னைகள் எல்லாமே சமுதாயத்தால் ஏற்படுத்தப்பட்டவை. சின்ன வயது முதல் வாழ்க்கையே ஒரு போராட்டமாக நடத்தி வந்தீங்க. அப்பாவியான உங்களை ஒரு ஆண் திருமணமே தேவையில்லை என்று கன்வின்ஸ் செய்து, சுயநலத்துக்காக உங்களைப் பயன்படுத்திக் கொண்டான். படிப்பைப் பாதியிலேயே நிறுத்த வேண்டிய சூழ்நிலை உங்களுக்கு ஏற்பட்டது.



துரதிர்ஷ்டவசமாக பெண் உரிமை இயக்கங்கள் ஆண் இனத்தையே தமக்கு எதிரியாகக் கருதுகின்றன. ஆண் என்பவன் சமுதாயத்தில் ஒரு அங்கம் மட்டும்தான்.

ஆஃபீசில் இருந்து களைத்துப் போய் வீட்டுக்கு வரும் மனைவிக்குச் சூடாக காபி கலந்து தரும் கணவர்கள் ரொம்பக் குறைவு. மகனைப் படிக்க வைப்பதுபோல் மகளுக்கும் படிப்பில் முன்னுரிமை தர வேண்டும் என்று தந்தைகள் நினைத்தாலும், அதைச் செயல்படுத்த விடாமல் தடுப்பது யாரோ இல்லை, ஒரு பெண்தான்! ஆமாம்! அந்த மகளுடைய தாயே மகனுக்குச் சமமாய் மகளைப் படிக்க வைப்பதை விரும்ப மாட்டாள். இரவு முழுவதும் விழித்துக் கொண்டு என்ன எழுதிக் கொண்டிருந்தேன் என்று கேட்டீர்களே. இல்லாத கஷ்டங்களை ஊகித்துக் கொண்டு சாமி அறையே கதியாகக் கிடப்பவர்களுக்காகவோ, புடவைக் கடைகளுக்குப் படை எடுத்துக்கொண்டு, பார்ட்டிகளுக்குப் போவதில் மகிழ்ச்சியைத் தேடிக்கொள்ளும் பெண்களுக்காகவோ நான் வாதிக்கப் போவதில்லை.

நிஜமாகவே கஷ்டங்களில் மூழ்கி இருக்கும் பெண்களுக்காகப் போராடுவேன். கணவன் கேட்ட புது வண்டியைச் சீர் வரிசையாகக் கொண்டு தர முடியாமல் மண்ணெண்ணைக்கு பலியாகி விட்ட மனைவிகளுக்காகப் போராடுவேன். எல்லாப் பெண்களுக்கும் தங்களுடைய உரிமைகளைப் பற்றி முழு விவரமும் தெரிந்திருக்க வேண்டும். குறைந்த பட்சம் பத்தாவது வரையிலாவது ஒவ்வொரு பெண்ணும் படித்திருக்கணும். அரசாங்கம் பெண்களுக்கு இலவச கல்வி வசதியைச் செய்து தரவேண்டும். விவாகரத்து ஆன பெண்களுக்கு அரசாங்கமே வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டும்.

முக்கியமாக ஒரு ஹீரோ இரண்டு ஹீரோயின்களுடன் டூயட் பாடும் சினிமாக்களுக்குத் தடை விதிக்கணும். இதெல்

லாம் கேட்டால் உங்களுக்குச் சிரிப்பு வருகிறதோ என்னவோ ஒரு நிமிடம் யோசித்துப் பாருங்கள். கணவன் எத்தனை கொடுமைப்படுத்தி வந்தாலும் மனைவியாக இருப்பவள் எந்த எதிர்ப்பும் தெரிவிக்காமல் மவுனமாகச் சகித்துக் கொண்டு வாழ்வாளே தவிர, விவாகரத்து பெற்றுக் கொண்டு நிம்மதியாக வாழலாம் என்ற யோசனை அவளுக்கு வரவே வராது. விவாகரத்து பெற்றால் சமுதாயத்தில் தன்னுடைய மதிப்பு தாழ்ந்து விடுமோ என்ற பயம்தான் அவளை அப்படிச் செய்யவிடாமல் தடுக்கிறது. டைவோர்ஸ் ஆன பெண்களுக்கு அரசாங்கமே பாது காப்பு அளிப்பதாக இருந்தால், அடியும், உதையும் வாங்கிக் கொண்டு கணவனிடம் அடிமையாக இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் அந்தப் பெண்ணுக்கு இருக்காதே! இந்த மாதிரி உரிமைகளுக் காகத்தான் நான் போராடப் போகிறேன்.''

சொல்லி முடிக்கும்போது விமானம் கிளம்பப் போவதாக அறிவிப்பு ஒலிபெருக்கியில் கேட்டது. மாமி ஸ்வேதாவிடம் விடைபெற்றுக் கொண்டு, விமானத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்த போது மாமி கடைசியாகக் கேட்டாள்.

''கேட்க மறந்து விட்டேன். சுரேஷ் விஷயத்தில் என்ன முடிவு செய்திருக்கே?''

போய்க் கொண்டிருந்தவள், சட்டென்று நின்று தலையைத் திருப்பிப் பார்த்தேன். ''அது பற்றி இப்பொ பேச வேண்டியது அவசியம் இல்லை என்று நினைக்கிறேன்...' புன்முறுவலுடன் சொல்லிவிட்டு நகர்ந்தேன்.

நிறைந்தது